# காதல் தேன்நிலா

அகிலா கோவிந்த்



◆

இனிய முடிவு

கொண்ட

சுகமான நாவல்...

◆

# காதல் தேன் நிலா...

## 1



வழக்கம் போல் அன்றும் தன் முன்னால் கரஸ்பாண்டன்ஸ் கோர்ஸில் வந்த புத்தகக் குவியல்களை அடுக்கிக் கொண்டாள் மதுமதி.

டிகிரி முடித்த கையோடு தனது எம்.ஏ. படிப்பை அஞ்சல் வழிக் கல்வியில் ஆர்வமாய்த் தொடங்கியிருந்தாள் அவள். அத்தை ஊருக்கு, தந்தை கோவிலுக்கு, தங்கை சிங்காரி கல்லூரி முதல் வருட படிப்பிற்கு என் ஆள் ஆளுக்கு வெளியே சென்று விட்டதால், காலைப் பொழுது, பிரமாதம் என சொல்லும் படியாக இல்லாவிட்டாலும் பெரும் அமைதியாகவே அவளுக்கு கழியும்.

தோட்டத்து மரங்களில் இருந்து பறவைகளின் கீச் கீச் சப்தங்கள் தவிர வேறு எதுவும் அவளை டிஸ்டர்ப் செய்யாததால் உற்சாகமாகவே கொஞ்ச நேரம் படிப்பாள். எழுந்து நடமாடுவாள். பிடித்த சினிமாப் பாட்டுகளை முணுமுணுப்பாள். ஏன் சில சமயம் சின்னதாய் டான்ஸ் கூட ஆடுவது உண்டு.

அதுபோன்ற சமயங்களில் வகுப்பு முடிந்து சீக்கிரமாக சிங்காரியும் வந்து விட்டால் பின் வீட்டில் ஒரே ரகளைதான். பாட்டும் ஆட்டமுமாய் தூள் பறக்கத்தான் செய்யும். அன்றும் அவ்வாறே பொழுதைத் தொடங்கியவளுக்கு எல்லாம் நல்லபடியாகத்தான் சென்று கொண்டிருந்தது. படிக்க ஆரம்பித்திருந்தவள் முன்புற வாசல் பக்கம் திடீரென ஆள் அரவம் கேட்டு படிப்பை நிறுத்தினாள். மெல்ல கொலுசு கால்கள் சிலுசிலுக்க நடந்து வந்தாள். யாரோ ஒருவன் நிற்பது நிழலாய்த் தெரிந்தது.

"யாரும் இல்லையோ?" என வந்த அவனும் கேட்டுக் கொண்டு நின்றதில் முதல் முறையாக எரிச்சல் கொண்டாள். அவனுக்கும் சந்தேகம்தான்.

அதனால் அவள் எரிச்சலை அதிகப்படுத்தும் வண்ணம் மறுபடியும் மெல்ல கதவைத் தட்டினான் அவன். தட்டியவன் அப்போதுதான் கவனித்தான்.

லேசான சலங்கை சப்தம். மெல்ல கதவுக்கு கீழ்புறமாக இரண்டு கொலுசுக் கால்கள் நிற்பது தெரிந்தது. நிமிர்ந்து அவன் மேலே பார்க்க... சட்டென இரண்டு மைவிழிகளும் தெரிந்துவிட்டு மறைந்தது.

அப்பாடா! யாரோ இருக்கிறார்கள் என அவன் நினைப்பு.

ஓடியதும், "ஹலோ... உங்களைத்தான்!" என்றான் அழைப்பது போல்.

அவன் குரலுக்கு யாரும் செவிசாய்க்கவில்லை. மறுபடியும் அந்த மரக் கதவை ஒரு ஜோடி வளையல் கைகள் பிடித்துக் கொண்டு பேசாமல் நிற்பது தெரிந்தது.



யாரோ ஒரு பெண் நிற்கிறாள்.

ஒருவேளை ஊனம்.. அல்லது.. ஊமை.. அப்படி இருக்குமோ?

முதன் முறையாய் அவனுள் அப்படி ஒரு சந்தேகம் துளிர்த்ததும் மெல்ல வீட்டுக்குள் நுழையவே செய்தான் பக்கத்தில் போய்விட்டான் அவன்.

ஆனால் மதுமதி பயந்து விட்டாள்.

ஆள் இல்லை என்று போய் விடுவான் என பார்த்தால் வீட்டினுள்ளே நுழைகிறானே... இனி தலையைக் காட்டா விட்டால் அவ்வளவுதான்!

சட்டென கதவு மறைவிலிருந்து வெளிப்பட்டு அவன் முன் வந்தாள் மதுமதி.

மின்னல் வெட்டியது போல் அவனுக்கு இருந்தது. கதவு மறைவிலிருந்து இப்படியா?

மைவிழிக் கண்கள், வில் புருவங்கள், வரிசையான முத்துப் பற்கள், செவ்விதழ்களுக்கிடையே பளிச்சிடும் புன்னகை கீற்று என சட்டென மறைவிலிருந்து ஒரு அழகு தேவதை அப்படி வெளிவந்தது கண்டு ஒரு கணம் பிரமித்துதான் போனான்.

இவளையா இந்த தங்கச் சிலையையா ஊமை, ஊனம் என்று நினைத்தோம்?

"யார் நீங்கள்?"

தங்கச் சிலையின் செவ்விதழ்கள் அசைந்து அவன் காதில் இன்பத் தேன் குரல் பாய்ந்தது போல் பரவசமானவன்

ஒரு கணம் பேச வார்த்தைகள் வராமல் அந்த பிரமிப்பு பார்வையும் பார்த்தான்.

அவளது கண்களும் படபடத்தன.

வந்தவனும் சாதாரணமானவன் அல்ல.

நல்ல ஆறடி உயரத்தில் நெடுநெடுவென கம்பீரமாய் நின்று கொண்டிருந்தான். தீர்க்கமான பார்வை. களையான வசீகர முகம். முரட்டு மீசையின் கீழ் இறுக்கமில்லாமல் சிரித்தபடி இருக்கும் உதடுகள். நல்ல உடற்கட்டுடன் கூடிய திடமான தேகம்... என தன்னையறியாமல் அவனை அளவெடுத்துக் கொண்டிருந்தவள் சட்டென குனிந்தாள்.

என்ன இது.. எவனோ.. ஒரு அந்நியன்.. இவனைப் போய் இந்தப் பார்வை பார்க்கிறேன்?

குனிந்த பார்வையோடு தரை தாழ்த்தி விட்டு மெல்ல பார்வையை நிமிர்த்தியபோது அவன் அவளையே குறுகுறுப்பாய் ரசித்துக் கொண்டிருந்தான்.

என்ன தைரியம்! அவள் வீட்டுக்குள்ளே வந்து அவளையே இந்தப் பார்வை பார்த்துக் கொண்டிருக்கிறானே!

''என்ன வேண்டும் உங்களுக்கு?'

குரலை உயர்த்தித்தான் கேட்டாள் அவள்.

'அட' என்பது போல் அவனது புருவம் உயர்ந்தது. தனது புன்னகையை பெரிதாக்கியவன், ''இவ்வளவு தெளிவாய் பேசுகிற நீங்கள் எதற்காக... கதவு மறைவில் ஒளிந்து கொண்டு எனக்கு பதில் சொல்லாமல்..'' என்று இழுத்தவன், ''எதற்காக இந்தப் பயம்?'' என கேட்கவும் அவள் துணுக்குறத்தான் செய்தாள்.



''அது... அது...'' என்று திணறியவள், ''எனக்கு பயம் ஒன்றும் இல்லை...'' என்றாள் ரோஷத்துடன்.

''பின்.. என்ன என்னைப் பார்க்க வெட்கமா?'' அவள் இம்முறை திகைத்துத்தான் போனாள். இவன் என்ன அவள் கட்டிக் கொள்ள இருக்கும் மாப்பிள்ளையா? என்ன துணிச்சல்? வெட்கப்படுகிறாயா.. என வெட்கமில்லாமல் கேட்கிறானே?

''ஹலோ மிஸ்டர்..'' என மறுபடியும் குரலை உயர்த்தி முறைத்தவள், ''நீங்கள் யார்? என்ன விஷயம்?' என்றாள் கறாராய்.

அவள் கோபமாய் கண்களை உருட்டி கேட்டதற்கு, ''ஹப்பா..! இப்போதுதான் டிரெய்ன் தண்டவாளத்தில் ஏறி இருக்கிறது'' எனச் சொல்லியபடி நிதானமாய் பெருமூச்சு ஒன்றை விட அவள் திகைத்தாள்.

டரெய்னா... தண்டவாளமா? என்ன உளறுகிறான் இவன்?

அவள் விழிகள் விரிய திகைத்துப் பார்ப்பதை உற்றுப் பார்த்து விட்டு விளக்கம் கொடுத்தான் அவன்.

''இந்த ஊர்... மலையம்பட்டி... ஓரளவு பட்டிக் காடுதான். ஆனால், பள்ளி, கல்லூரி, கணினி மையம், இன்டர்நெட் சென்டர் என விஞ்ஞான வளர்ச்சிகள் எல்லாம் இங்கு வந்துவிட்டதுதானே? இன்னமும் கிராமப்புற பைங்கிளி போல்.. ஒரு ஆணைப் பார்த்துப் பேச பயப்படுவதும் ஏதோ கட்டிக் கொள்ளப் போகிற மாப்பிள்ளை போல் அவனைப் பார்த்து நாணிக் கோணி வெட்கப்படுவதும்' என அவன்

பாட்டுக்குச் சொல்லிக் கொண்டு போக அவள் சட்டென இடைமறித்தாள்.

''நான் ஒன்றும் பயப்படவோ வெட்கப்படவோ இல்லை..''

''பின் எதற்காக அப்படி கதவு மறைவிலேயே பதில் சொல்லாமல் நின்று கொண்டிருந்தீர்களாம்?''

''அப்பா வீட்டில் இல்லை. சத்தம் இல்லை என்றதும் நீங்கள் புரிந்து போய் விடுவீர்கள் என்ற எண்ணத்தில்...'' என்றவள் அவசரப்பட்டு தான் உண்மையை உளறி விட்டோமே என உதட்டையும் கடித்தாள்.

''ஏன்.. அதை தாங்கள் தங்கள் திருவாயைத் திறந்து சொல்லிவிட வேண்டியதுதானே. அதற்குத்தான் என்ன தயக்கம்? என்ன வெட்கம்?''

என்ன இவன்? யாரோ முன்பின் தெரியாமல் வீட்டினுள் நுழைந்து கொண்டு.. விட்டால் பெரிய வாத்தியார் போல் அவளுக்கே புத்தி சொல்லி... பாடம் நடத்திக் கொண்டு... யாரிவன்...? எதற்காக இப்படி லெக்சர் அடித்து அறுக்கிறான்?

''ஹலோ.. யார் நீங்கள்? முதலில் அதைச் சொல்லுங்கள்!'' என்றாள் ஏறக்குறைய மிரட்டலாகவே.

அவள் நினைப்பு போலவே பேசினான் அவன்.

''உங்களுக்குப் பாடம் நடத்தும் அளவுக்கு நான் வாத்யார்தான். இந்த ஊர்க் கல்லூரி லெக்சரர்தான். போதுமா?''



அவன் சொல்வது உண்மையோ.. பொய்யோ..! எப்படியும் போகட்டும். ஆனால் அவளிடம் யாரோ ஒருவன் வந்து இப்படி வம்பிழுப்பது போல் பேசிக் கொண்டு! சுர்ரென கோபம் தாக்க, ''ஹலோ மிஸ்டர் நீங்கள் யாராக வேண்டு மானாலும் இருந்துவிட்டுப் போங்கள். ஆனால் இங்கு..'' என துடித்தவள் மறுபடியும் பேச விடாமல் இடைமறித்தான்.

''என் பெயர் மிஸ்டர் இல்லை. தினகரன். அதுவும் பொன். தினகரன்.,''

''பொன். தினகரன்... என அவன் உச்சரித்தது அவளது கோபத்தை மீறி அவளுக்கு சிரிப்பை வரவழைத்து விட்டது. வெறும் தினகரன் கிடையாதாம். பொன் தினகரனாம்! அது என்ன பொன்?''

''என்ன சிரிக்கிறீர்கள்?'' என்றான் அவள் குபீர்ச் சிரிப்பைப் பார்த்து.

''அது.. என்ன பொன். தினகரன்? இந்த பொன்னை வைக்க வேண்டிய இடத்தில் பூவை வைக்க வேண்டும் என்பார்களே.. அந்தப் பொன்னா?'' என்றாள் அது அவன் தந்தையின் முதலெழுத்துப் பெயராய் இருக்கும் என்று தெரிந்தும் வேண்டுமென்றே.

அவன் மறுப்பான் என நினைத்தவளுக்கு அவன் அழகாய் தலையாட்டியது ஆச்சரியப்படுத்தியது.

''கரெக்ட்! நீங்கள் சொல்லும் அதே பொன்தான்!'' என்றான் அவன்.

அவனும் வேண்டுமென்றே அவள் சொன்ன தொனியிலேயே சொல்லிவிட்டுச் சிரிக்க... அப்போதுதான் சொடேர் என மண்டையிலடித்தது போல் உணர்ந்தாள்.

அவன்தான் ஏதேதோ சொல்லி பேச்சை வளர்க்கிறான் என்றால்.. அவளும் அதற்கேற்ப முன்பின் தெரியாத அவனிடம் இப்படி லூசுத்தனமாய் ஏதேதோ உளறி சிரிக்க ஆரம்பித்து விட்டாளே!

சட்டென நிறுத்தி பற்களைக் கடித்தாள்.

''ஹலோ யார் நீங்கள்? என்ன விஷயம்?' அவன் மறுபடியும் அவள் சீறி முதல் கேள்விக்கு போவதைக் கேலியாய் பார்த்தான்.

''ம்ம்.. முதலில் அதைச் சொல்லுங்கள்'' என்றாள் மீண்டும் ஒரு மிரட்டல் குரலில்.

அவனும் இம்முறை சீரியஸாகியது போல் முகத்தை வைத்துக் கொண்டு ''மதிப்பிற்குரிய மேடம், என் பெயர் பொன். தினகரன். புதிதாய் மாற்றலாய் வந்திருக்கும் கல்லூரி லெக்சரர். பள்ளித் தமிழாசிரியரான உங்கள் தந்தையிடம் பேசிவிட்டுத்தான் வருகிறேன். உங்கள் வீட்டு மாடிப் போர்ஷனைப் பார்க்க வேண்டும். அதற்கு சாவி வேண்டும். எடுத்துத் தருகிறீர்களா?''

''அப்படியானால் மாடிப் போர்ஷன் வாடகைக்கு?'' அவள் இழுத்தபடி நிறுத்தினாள்.

அவன் தலை வேண்டுமென்றே டான்ஸ் ஆடியது.

''அதே... அதேதான்! இப்போது புரிந்ததா?''

''இதை முதலிலே நீங்கள் சொல்லியிருக்கலாமே?''

''நீங்களும் முதலிலேயே கேட்டிருக்கலாமே?'' அவளைப் போலவே இழுத்துப் பேசிக் காட்டினான்.



இனி இவனிடம் ஒரு வார்த்தை கூட பேசி விழித்து நிற்கக் கூடாது என்பதுபோல் உள்புறம் திரும்பிப் போனவள் மின்னல் வேகத்தில் வந்து சாவியை நீட்டினாள்.

சாவியை வாங்கிக் கொண்டான்.

போவது போல் கிளம்பி விட்டு அப்படியே சட்டென திரும்பினான்.

''உங்கள் பெயரை நான் தெரிந்து கொள்ளலாமா?''

மறுபடியும் கொக்கி போட்டு பேச்சை இழுக்கப் பார்க்கிறான். மாட்டிக் கொள்ளக் கூடாது. முகத்திலடித்தாற் போல் சொல்லி விரட்டி விட வேண்டும்.

''என் பெயர் மக்குப் பிளாஸ்திரி!''

சொல்லியபடி டப்பென உள் கதவை சாத்திக் கொண்டு மறைந்தாள் அவள்.

''மக்குப் பிளாஸ்திரியா? பொருத்தமான பெயர்தான்!'' அவன் முணுமுணுத்து விட்டு அகலும்போது அவன் காதுகளில் அந்த க்ளுக்! சிரிப்பொலி கேட்டது.

## 2



பொன். தினகரன் சென்று அரை மணி நேரம் ஆகிவிட்டது. மதுமதிக்குத்தான் இருப்புக் கொள்ளவில்லை. பிஞ்சு விரல்களை முழுவதும் குவித்து மறு கையில் ஓங்கிக் குத்திக் கொண்டபடி குறுக்கும் நெடுக்குமாய் நடமாடினாள்.

இந்த அப்பாவிடம் எவ்வளவு முறை சொல்லியாயிற்று. மாடிப் போர்ஷனை எல்லாம் வாடகைக்கு விட வேண்டாம் என்று!

கேட்டால்தானே? அப்படி என்ன வாடகையை அந்த... அந்த... எதுவோ சொன்னானே... ஆங்.. பொன். தினகரன் கொடுத்து விடப் போகிறான்? ஒரு ஆயிரம்.. இல்லை ஆயிரத்து ஐநூறு.. அவ்வளவு அவ்வளவுதானே?

அதற்காக தினம் தினம்... அவளும் காலேஜ் பர்ஸ்ட் இயர் படிக்கும் தங்கை சிங்காரியும் ஆடிப் பாடிக் கொட்டமடிக்கும் மாடிப் பகுதியை வாடகைக்கு விட்டு விடுவதா? பின்.. அவர்கள் சுதந்திரம் பறி போய்விடுமே? அப்பாவுக்குத் தெரியாமல் இத்தனை 'லூட்டிகள்' பண்ண முடியாதே. செஸ் ஆட்டத்தில் ராணிக்கு செக் வைப்பது போல் இந்த தினகரன் வாடகைக்கு வந்து அவர்களது மொத்த சந்தோஷத்திற்கும் செக் வைக்கப் பார்க்கிறானே!

விட்டு விடுவாளா.. அவள்?

விடக் கூடாது!

எரிச்சல் மிகுதியாய் யோசித்தவளுக்கு இன்னும் பாட்டுக் கிளாஸ் சென்ற தங்கை சிங்காரி திரும்பாதது மேலும் எரிச்சலைக் கிளப்பியது.

விழிகள் மேலேற உதட்டைக் கடித்தபடி யோசித்திருந்த வளுக்கு வாசல் கேட்டின் 'கிர்ர்ரெங்' சப்தம் உற்சாக மூட்டியது.

சிங்காரிதான் கேட்டை எப்போதும் இப்படி இழுத்து திறப்பாள்.. சாத்துவாள்.



ஜன்னல் போல் இருந்த சிறிய மாடக் கதவை திறந்து பார்த்தாள்.

சிங்காரியேதான்!

என்ன அநியாயம் இது! அவள் ஆசை ஆசையாய் பிறந்த நாளுக்கு அப்பாவிடம் சண்டை போட்டு வாங்கிய பளபளப் பான மயில் நிற சுடிதாரை அவளுக்குத் தெரியாமல் போட்டுக் கொண்டு... இந்த சிங்காரி சென்றிருக்கிறாள்? அதுவும் பாட்டுக் கிளாஸுக்கு! அவளே இதுவரை இரண்டு முறைதான் உடுத்தி விட்டு பத்திரமாய் பீரோவில் பாதுகாத்து வருகிறாள். அதை அவளுக்குத் தெரியாமல்..?

கோபம் கோபமாய் கொதித்து இதற்காக சிங்காரியுடன் சண்டை போட நினைத்தவள் மறுகணமே மாறினாள்.

சண்டை போட இது சமயமல்ல! முதலில் முக்கியம் மிக மிக அவசரமானது. இந்த தினசரன் விஷயம்! ஒரு புறம் அவர்களது இனிய சுதந்திரம் பறிபோகிறது. மறுபுறம், தினகரன் பார்த்தாலே சரியான லொட லொட கேஸாய் அறுவையாய் தெரிகிறான். அவன் மட்டும் மாடிப் போர்ஷனுக்கு வந்துவிட்டால்.. அவ்வளவுதான்!

அதனாலே கதவைத் திறந்தவள் சிங்காரியை இன்முக மாகவே வரவேற்றாள்.

அவளை விட மூன்று வயது இளையவள். கல்லூரியில் முதல் வருடம் கால் வைத்திருப்பவள். அக்காவைப் போல் அபார அழகு இல்லாவிட்டாலும் பார்த்து மெச்சும்படியான வசீகர அழகுதான் சிங்காரிக்கு. ஆனால் குறும்பில் சுட்டித் தனத்தில் அக்காவையே மிஞ்சி விஞ்சித்தான் விடுவாள்

சிங்காரி! அதனாலே உள்ளே போலியாய் பயத்தில் நடுங்குவது போல் பொங்கிய சிரிப்பை அடக்கியபடி நடந்துக் கொண்டே நுழைந்தவள், அக்காள் சுடிதாரை கபளீகரம் செய்ததற்கு கோபப்படாமல் சிரிப்பதைப் பார்த்து அதிரத்தான் செய்தாள்.

அந்தச் சிரிப்பை நம்ப முடியாதவளாய் மதுமதியின் கையைப் பற்றி கிள்ளிப் பார்க்கவும் செய்தாள். ''ஐயோ.. அக்கா! நடப்பது நிஜமா? உனக்கு கோபம் வரவில்லை? உன் புது சுடிதாரை எடுத்ததற்கு குதிகுதியென குதிக்காமல் ஈயென இளித்துக் கொண்டு நிற்கிறாய்? வெயில் அதற்குள் உன் நடுமண்டைக்கு வந்து விட்டதா?'' என்றபடி வெளியே தலை திருப்பி ஆகாயத்தைக் கேலியாய் பார்த்து.. அவள் பின்னல் தலையில் லேசாக ஒரு தட்டு தட்டிச் சிரித்தாள் மதுமதி.

கூடவே கண்களை உருட்டி லேசான எச்சரிக்கை ஒன்றையும் விடுத்தாள்.

''இந்த முறை சரி. இனியொரு முறை என்றால் என்னிடம் கேட்டுக் கொண்டுதான் சுடியைத் தொட வேண்டும். அதுதான் நல்ல பிள்ளைக்கு அடையாளம்.''

''சரியக்கா! இனி நல்ல பிள்ளையாய் நடந்து கொள்கிறேன்!''

இருபுறமும் தலையைச் சாய்த்து உடம்போடு ஆட்டினாள் சிங்காரி.

அவள் குறும்பை ரசித்துச் சிரித்த மதுமதி மறுகணமே சீரியசானாள்.



''வேறொரு முக்கியமான விஷயம் இருக்கிறது சிங்காரி!''

''என்ன விஷயம் அக்கா?''

''பொன். தினகரன்..''

அவள் சொன்னதும் சட்டென, ''யார் அந்த லூசு?'' என்றாள் சிங்காரி.

''அப்படிச் சொல்! கரெக்ட்டாகச் சொல்லிவிட்டாய். அவன் சரியான லூசுதான்!'' என்றபடி சிங்காரிக்கு கை கொடுத்து மகிழ்ச்சியானவள் மடமடவென விஷயத்தையும் சொன்னாள்.

சிங்காரி வாய்பிளக்கும் அதிர்ச்சியானவள் மறுகணமே பற்களைக் கடித்தாள்.

''இந்த அப்பாவிடம் எத்தனை முறை சொல்லியாயிற்று? வாடகைக்கெல்லாம் மாடிப் போர்ஷனை விட வேண்டாம் என்று.. கேட்காமல் இப்படி பிடிவாதம் செய்கிறாரே!''

கைகளைப் பிசைந்தபடி சிங்காரி சொல்ல அவள் தோள்களைத் தட்டினாள் மதுமதி.

''அப்பாவைச் சொல்லி பிரயோஜனமில்லை. நாம் சொன்னாலும் கேட்க மாட்டார். வேறு ஏதாவது செய்தாக வேண்டும்.''

''வேறு என்ன செய்ய?''

''ஏதாவது யோசி.''

''என்னால் அதைத்தான் செய்ய முடியாதே!'' கைகளை விரித்து சிங்காரி சிரித்தாள்.

"என்ன சொல்கிறாய் நீ?"

"அப்பாதான் அடிக்கடி என்னைத் திட்டுவாரே... படிப்பு ஏறாத மரமண்டை என்று. அதனால் இந்த மரமண்டையில் அப்படியெல்லாம் யோசிக்க முடியாது. நீயே யோசி!"

இம்முறை கைகளைத் தட்டியபடி சிங்காரி சிரிக்க கோபமாகி அவளை முறைத்தாள் மதுமதி.

"ஏய்.. விளையாடாதே! கொஞ்சம் யோசி. மாடிப் போர்ஷன் மட்டும் வாடகைக்குப் போய்விட்டால் அப்புறம் நம் ஞாயிற்றுக்கிழமை கொண்டாட்டம் என்னாவது? அதை நினைத்துப் பார்த்தாயா?"

சிங்காரி சட்டென மௌனமானாள்.

அக்கா சொல்வது உண்மைதான். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை லீவிலும் அப்பா வீட்டில் தங்காமல் காலையிலேயே எழுந்து கோயில் குளம் என சென்று விடுவார். அதன் பின் வீட்டில் அல்லி ராஜ்ஜியம் போல் பெண்கள் தர்பார்தான்! அதிலும் பக்கத்து வீட்டு குமுதா, எதிர் வீட்டு ரஞ்சனி, மூணாம் வீட்டு ஜோதி.. என ஒரு கூட்டம் சேர்ந்து விட்டால் நிஜமான ஒரு தர்பார் போலவே ஆகிவிடும்.

எல்லோரும் மாடிப் போர்ஷனுக்குச் சென்று உட்கார்ந்தால் நேரம் போவது தெரியாமல் மணிக் கணக்கில் விளையாட்டு நடக்கும். சீட்டுக்கட்டு, செஸ், கேரம் போர்ட், ஸ்நூக்கர் என இன்டோர் கேம்ஸ்ஸில் இருந்து பாட்டுக்கு பாட்டு, மிமிக்ரி, நடன போட்டி, யார் முட்டாள்? போட்டி என பல வகையான போட்டிகள் கூத்துகள் நடத்தப்பட்டு சிரிப்பும் கும்மாளமுமாய் அந்த இடமே அமர்க்களப்படும்.



மீனா தன் வீட்டிலிருந்து சுடச்சுட சீடை முறுக்கு என பல வகை ஸ்நாக்ஸ்களை ஒரு சட்டியில் தூக்கி வந்து விடுவாள். அதனால் மதிய உணவு கூட தேவையில்லாமல் எல்லோரும் கொறித்து கொறித்து நேரம் போவது தெரியாமல் மாலை வரை ஆட்டம்தான்!

மாலை ஐந்தை நெருங்கியதும், சாதுக்களாய் கீழே இறங்கி விடுவர். அவரவர் வீட்டிற்குத் தோழிமார்கள் போய்விட மதுமதியும் சிங்காரியும் அப்பா வரும் அந்த நேரத்தில் நல்ல பிள்ளைகளாய் மாறி விடுவர். அதிலும் சிங்காரி ஒரு படி மேலே போய் தனது பாட புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு சத்தமாய் படித்து படிப்பாளியாகவே ஆகி விடுவாள்.

எத்தனை கத்தி படித்தாலும் இவள் மரமண்டைக்குள் ஒன்றும் ஏறப் போவதில்லையே? என அப்பா மெல்லிய குரலில் மதுமதியிடம் சொல்லிச் சிரிப்பது வேறு தனிக்கதை!

மறுபடியும் சிங்காரியின் தலையை பட்டென தட்டி, "என்ன மறுபடியும் யோசனைக்குப் போய் விட்டாயா?" என்றதும் அவள் உணர்வுக்கு வந்தாள்.

"நீயே சொல்லக்கா... என்ன செய்ய?" என்றாள்.

"எனக்கு ஒரு நல்ல ஐடியா தோன்றுகிறது..." என்றாள் மதுமதி பிரகாசமாய்.

"என்ன ஐடியா?"

"அந்தப் பொன். தினகரன் மாடிப் போர்ஷனை திறந்து பார்த்து இடம் பிடித்து விட்டது போல்தான் சென்றிருக்

கிறான். அவன் திரும்ப பெட்டியை தன் மூட்டை முடிச்சு களை தூக்கிக் கொண்டு வரும்போது இடத்தைப் பிடிக்காதபடி செய்து விட வேண்டும்.. நம் காரியம் ரொம்பவும் சுளுவாகி விடும்."

"எப்படியக்கா?"

"ரொம்பவும் சுலபம் அது! முதலில் குப்பைகளை எல்லாம் பொறுக்கிக் கொண்டு போய் மேலே போடுவோம். இடம் முழுவதையும் தூசி துப்பட்டையாய் ஆக்குவோம்.. கதவு திருகுகளை எல்லாம் உடைந்தது போல் கல்லால் தட்டி உடைத்து வைப்போம். அப்புறம்.." என்றபடி பார்வையைத் திருப்பி சுழற்றியவளின் கண்களில் சமையலறையில் வைக்கப்பட்டிருந்த எலிப் பொறி தெரிய மேலும் குஷியாய் பிரகாசமானாள். "அதோ அந்த எலிப்பொறி உள்ளே இரண்டு எலிகள் வேறு. அதை அப்படியே கொண்டு போய் மேலே திறந்து விடுவோம். சுவரோரமாய் ஒரு பொந்தைப் போட்டு.. பெருச்சாளியைப் பொந்து போல் ஆக்கி.."

மதுமதி பாட்டுக்கு சொல்லிக் கொண்டே போக சிங்காரி ஒரு கணம் அதிர்ந்தவள், கைகளை உயர்த்தி, "அக்கா என்ன இருந்தாலும் அது நம் வீடு அக்கா... அதைப் போய் இப்படி பாழ்படுத்த.." என சிங்காரி இழுக்க, "அட.. இதெல்லாம் அவனை விரட்ட நாம் போடும் ஒரு ஒப்பனைதானே? திட்டம் வெற்றி பெற்றதும் பார். திரும்ப சுத்தப்படுத்த இருவருக்கும், ஒரு அரை மணி நேரம் கூடத் தேவை யில்லை. பத்து நிமிடமே போதும். என்ன சொல்கிறாய்?"

"ஓகே!" கைகளைத் தூக்கினாள் சிங்காரி.



அடுத்த ஐந்தாவது நிமிடத்தில்...

"ரெடி ஜூட்!" எனச் சொல்லியபடி இருவரும் மளமள வென காரியத்தில் இறங்கினர்.

மதுமதி குப்பைகளை எல்லாம் பொறுக்கிப் போட, பலசாலியான சிங்காரி, உடைக்கும் பொறுப்பை, பொந்துகள் போல் பொந்தலிடும் பொறுப்பை ஏற்றுக் கொண்டாள்.

நினைத்தது போலவே பத்து நிமிடத்தில் இருவரும் வேலையை முடித்து விட்டனர். அவ்வளவு செய்தும் திருப்தி வராத சிங்காரி ஒரு பக்கெட் வாளித் தண்ணீரைக் கொண்டு வந்து சுவர் ஓரங்களிலும், கீழ் புறமாகவும் விசிறி அடித்தாள். காரணம் ஒழுகும் வீடாம்!

"சூப்பர்தான்!' என அவளை மெச்சிய மதுமதி, "சரி சீக்கிரம், கீழே போவோம். அப்பா வருகிற நேரம்.." என அவளைக் கூட்டிக் கொண்டு நடந்தாள்.

இருவரும் கீழே வந்து நல்ல பிள்ளைகளாய் நடுக்கட்டில் அமர்ந்து - சிங்காரி படிப்பது போல் நோட் புக்கை விரிக்க... மதுமதியும் தபால் வழியில் தான் படிக்கும் எம்.ஏ. படிப்பிற்கான பிராக்டீஸ் புக்கை திறந்து கொண்டாள்.

"மது, அப்பா உள்ளே நுழைகிறவர் நம்மை அப்படியே நம்பி, சே.. நம் கண்மணிகள் என்னமாய் படிக்கிறார்கள்? என அசரத்தான் போகிறார்!" என்றபடி பாவமாய் உச்சும் கொட்டினாள்.

அவளை உற்று நோக்கிய மதுமதி அடிப்பது போல் கைகளை ஓங்கிக் கொண்டு, "நீ அப்பாவுக்கு உச்

கொட்டுவது இருக்கட்டும். முதலில் நீ கையில் வைத்திருக்கும் நோட்புக்கை நேராய் பிடி. அப்பா உனக்கு திரும்பவும் 'மரமண்டை பட்டம் கொடுப்பதற்கு ஏற்ப தலைகீழாய் பிடித்துக் கொண்டிருக்கிறாய்!'' என்றாள்.

''ஓ.. ஸாரி! ஸாரியக்கா..!'' என்றபடி சிங்காரி அசட்டுச் சிரிப்பு சிரித்தவள் நோட் புக்கை நேராக்கினாள். பின் கண்களில் குறும்பு மின்ன ''அக்கா, எனக்கு ஒரு சந்தேகம்..'' என்றாள்.

''என்ன?''

''எனக்கு இருப்பது மரமண்டை என்றால் என்னை விட மூன்று வயது மூத்தவளான உனக்கு, நாற்பது வயது மூத்தவரான தந்தைக்கு எல்லாம், ஸ்டீல், பித்தளை, செம்பு என விதவிதமான மண்டைகள் இருக்குமோ?''

சொல்லியபடி குபுக்கென சிரிக்கப் போனவளை பதிலுக்கு முறைத்த மதுமதி மெல்லிய குரலில், ''ஏய், வாயை மூடு. அப்பா வரும் சப்தம். படிப்பது போல் நடி!'' எனச் சொல்லியது தான் தாமதம், சிங்காரி டக்கென குனிந்து மந்திரம் ஓதுவது போல் முணுமுணுக்கவே ஆரம்பித்து விட்டாள்.

ஆனால் கேட்டைத் திறந்து உள்ளே நுழைந்தது தந்தை இல்லை. தினகரன் தினகரன்தான்!

கம்பீரமாய் உள்ளே நுழைந்தவனின் கையில் இருந்த 'அதைப்' பார்த்து தங்களை மீறி 'யம்..மா..டி!' என ஒரே குரலில் அலறினர் இருவரும்.



## 3



இருவரும் அலறும்படிதான் தினகரன் கையில் அந்த பாம்பைப் பிடித்துக் கொண்டு வந்திருந்தான். சிறு வகை சாரைப் பாம்பு அது.

'ஐயோ... பா.. ம்.. பு!' அலறலுடன் இருவரும் அதிர்ந்து எழுந்தே விட்டனர். அதிலும் சிங்காரி ஒரு படி மேலே போய் நடுங்கவே ஆரம்பித்து விட்டாள்.

''அக்.. அக்கா.. நீ.. சொன்ன.. தி..தி.. தி...னகரன்.. இவர்தானா?'' என்றாள் பற்கள் தந்தியடிக்க.

மதுமதியும் அரண்டுதான் போயிருந்தாள். தினகரன் கையில் பாம்புடன் வந்து நிற்பான் என அவள் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. வார்த்தைகள் வராமல் சிங்காரியின் கேள்விக்கு தலையசைப்புதான் செய்தாள்.

ஆனால் தினகரன் அவர்கள் இருவரையும் பார்த்து இயல்பாகச் சிரித்து, ''ஒன்றும் பயப்பட வேண்டாம். இது பல் பிடுங்கிய சாரைப் பாம்புதான். நான் உயிரியல் துறை லெக்சரர் என்பதால் கல்லூரி ஆய்வுக் கூடத்திற்கு இப்படி ஒரு பாம்பு தேவைப்பட்டது. வழியில் பாம்புப் பிடாரன் ஒருவனைப் பார்த்தேன். அதான் விலை பேசி அவனிடம் வாங்கி விட்டேன். நீங்கள் ஒரு பழைய சாக்குப் பை இருந்தால் கொடுங்கள். இதை பேக் செய்து வைத்துக் கொள்கிறேன்..''

என கடையில் கேக் வாங்கியதைப் போல் சர்வ சாதாரண மாய் பேசியபடி அவன் கேட்க.. நடுங்கி வெளிறியிருந்த

சிங்காரி ஒரே தாவலில், உள்ளே ஓடி ஒரு அரிசிச் சாக்குப் பையை எடுத்து அவனிடம் நீட்டினாள்.

தினகரன் அதை வாங்கி விரித்தவன் நிதானமாய் அந்த சாரைப் பாம்பை அதனுள் லாவகமாய்ப் போட்டு சாக்கின் முனையை முறுக்கினான். மதுமதி இம்முறை தேவையை யறிந்து கயிறு ஒன்றை எடுத்து நீட்டினாள்.

அதை வாங்கி இறுக கோணியைக் கட்டியவன், நிமிர்ந்து ''ஆமாம்... இது யாரென்று சொல்லவே இல்லையே.. உங்கள் தங்கையா?'' என்றான் குசலம் விசாரிப்பது போல். மதுமதிக்கோ ஒரே எரிச்சல்!

''ஹலோ, முதலில் அதை எடுத்துக் கொண்டு கிளம்புங்கள்... உங்களுக்குப் போய் மாடிப் போர்ஷனை வாடகைக்கு விட அப்பா நினைத்தாரே..'' கத்திய மதுமதி முடித்திருக்கவில்லை. அதே புன்னகையுடன் குறுக்கிட் டான். அவன், ''ம்ம்.. சொல்ல மறந்து விட்டேன். கோயில் வாசல் படிக்கட்டில் அப்பா உட்கார்ந்திருந்தார். அவரைப் பார்த்து எல்லாம் பேசி விட்டேன். வீடு பிடித்திருக்கிறது என்று அட்வான்ஸும் கொடுத்து விட்டேன். மாதம் ஆயிரத்து ஐநூறு வாடகையாம். ஐந்தாம் தேதிக்குள் வாடகையை கொடுத்து விட வேண்டுமாம். அப்பா சொன்ன எல்லாவற்றுக்கும் ஓகே சொல்லி விட்டேன். ஆக இன்று முதல் நான் உங்கள் மாடிப் போர்ஷனின் வாடகைதாரர்.. அதனால்..'' என மறுபடியும் நிறுத்தி இருவரையும் ஒரு பார்வை பார்த்து விட்டு, ''அந்த மரியாதையுடன் என்னை நடத்துங்கள். நடந்த கொள்ளுங்கள்..'' என்றான் அழுத்தமான குரலில்.



ஐயோ! அப்பா நினைத்தது போல் அட்வான்ஸ் வாங்கி விட்டாரே!

மதுமதி திகைக்க, ''என்ன நான் சொல்கிறது புரிகிறதா?'' என்றான் அதே குரலோடு.

இம்முறை சிங்காரி சுதாரித்து விட்டாள்.

''புரிகிறது.. வாடகைதாரர் சார். இனி நாங்கள் உங்களை மரியாதையோடு நடத்துவோம். வாடகைதாரர் சார். நீங்கள் உங்கள் மாடிப் போர்ஷனுக்குச் செல்லலாம். வாடகைதாரர் சார். இந்த மரியாதை உங்களுக்குப் போதுமல்லவா வாடகை தாரர் சார்?'' என ராகம் தொனிக்க கேலி குரலில் சொல்லி சிங்காரி முடிக்க தினகரனுக்கு திகைப்புதான்.

'அக்காவிற்கு தங்கை தப்பாமல் பிறந்திருக்கிறாளே!' என மனதுள் நினைத்தவன் நிமிர்ந்து, ''இந்த மரியாதை போதும். உங்கள் பெயர் என்ன. அதையாவது தெரிந்து கொள்ள லாமா?'' என்றான்.

சிங்காரி சிரிப்பை அடக்கிக் கொண்டு, ''அக்கா ஏற்கனவே சொன்னது போல் அக்கா பெயர் மக்கு பிளாஸ்திரி. என் பெயர் மக்காத பிளாஸ்திரி. இந்த விவரங்கள் போதுமா வாடகைதாரர் சார்?'' என்றதும்,

''ம்..ம்.. போதும்.. போதும்!'' இவர்களிடம் பேசி ஜெயிக்க முடியாது என்பதுபோல் தினகரன் நடந்தான்.

அவன் அப்படி தலையைத் தொங்கப் போட்டவாறு நடப்பதைப் பார்த்த சிங்காரி, ''அக்கா, பார்த்தாயா? நான் போட்ட பிளேடில் ஆள் என்னமாய் பயந்துவிட்டான் பார்..!'' என்றாள் கெக்கலிப்பு பார்வையுடன்.

''ம்ம்... இதற்கு பயந்தால் போதாது. மேலே நாம் செய்து வைத்திருக்கும் திருவிளையாடல்களுக்கு ஆள் பயப்பட வேண்டும். பயப்படுவானா?''

''ஏனக்கா... அதில் சந்தேகம்?''

''இல்லை... சிங்காரி... நாம் எலியையும், பெருச்சாளியையும் காட்டி பயமுறுத்தப் பார்க்கிறோம். அவன் என்னடான்னா பாம்பையே பிடித்துக் கொண்டு வந்து நிற்கிறான். அவனாவது இதற்குப் பயப்படுவதாவது?''

''ம்ம்.. பார்ப்போம்... என்னதான் நடக்கிறது என்று!''

இருவரும் அரை மணி நேரம் உன்னிப்பாய்க் காதுகளைத் தீட்டியபடி காத்திருந்தார்கள்.

படபடவென உருட்டல் சப்தம். டம் டம் இடி சப்தம். கிறீச் கிறீச் என இழுபடும் சப்தம். கடைசியாய் 'நங்'கென்று இடிச் சப்தம். அத்தோடு எல்லாம் நின்று விட்டது.

பின்புறம் ஏதோ விழுவது போல் சொத்தென கேட்க... கொல்லைப்புற கதவைத் திறந்து பார்த்தார்கள்.

ஒரு பெரிய குப்பைக் கிடங்கை மூட்டைபோல் கட்டி மேலிருந்து பின்புற சேரிப் பகுதியில் வீசியிருந்தான். எல்லாமே இரு சகோதரிகளும் பொறுக்கியெடுத்து சேகரித்த குப்பைதான்! முப்பது நிமிடங்களில் அவ்வளவையும் சுத்தம் செய்து விட்டான்.

அடடா.. என்ன இது!

அவர்கள் திகைத்துக் கொண்டிருக்கையிலே மேலிருந்து படபடவென்று இறங்கி வந்தவன், ஈயென இளித்தபடி



மறுபடி தரிசனம் கொடுக்க எரிச்சலாய்த்தான் ஆனார்கள் இருவரும்.

''என்ன விஷயம்?''

''ம்ம்.. குப்பைகளை சுத்தப்படுத்தி விட்டேன். கதவு திருகுகளை ஸ்குரு டிரைவர் வைத்து ரிப்பேரும் பார்த்தாயிற்று. பண்ணியாயிற்று. நான் பிடித்து வந்த பாம்பிற்கு உணவாய் அருமையான மூணு பருத்த எலிகள் வேறு கிடைத்தது. அவைகளைப் பிடித்து பாம்பிற்குப் போட்டு விட்டேன். இனி..''

அவன் நிறுத்த, ''ஐயோ! நம் எல்லா பிளான்களையும் உடைத்து தவிடு பொடியாக்கி விட்டானே!'' என திகைத்தவர்கள் பேச்சு வராத அளவுக்கு மூர்ச்சையாகியும் போனார்கள்.

அவன் தினகரன் விட்டபாடில்லை.

''இனி.. என் உணவிற்கு... தான் சமையல் செய்தாக வேண்டும். அரிசியெல்லாம் ரெடியாக இருக்கிறது. கொஞ்சம் புளியும், மிளகாயும் கொடுத்தால் சிம்பிளாக ரசம் வைத்து விடுவேன். தருகிறீர்களா?'' என்றான்.

அவர்களுக்கு பலத்த அதிர்ச்சி!

என்ன இவன்... ரொம்ப நாள் பழகியது போல்.. உரிமையுடன்.. ஏதோ கொடுத்து வைத்தது போல்?

இருவரும் ஆத்திரத்துடன் அரிசிப் பற்களை கடிக்க.. சிங்காரி மறுபடியும் முந்திக் கொண்டு ''நீங்கள் கேட்டாய் மிளகாய் இல்லை. ஆனால் புளி இருக்கிறது'' என்றாள் குறும்பு மின்ன.

என்றான் ஆவலாய்.

"அப்படியா! தாருங்கள்.." என்றான் ஆவலாய்.

"அதுவும் நீங்கள் நினைக்கிற புளி இல்லை. இது புலி! காட்டில் அலைந்து திரிந்து ரொம்பவும் சேட்டை பண்ணிக் கொண்டு இருந்ததைப் பிடித்து வீட்டின் பின்புற மரத்தில் கட்டி வைத்திருக்கிறோம். வேண்டுமானால் நீங்கள் எடுத்துக் கொண்டு போகலாம் வாடகைதாரர் சார்."

மதுமதி குபுக்கென சிரிக்க.. அவனும் சேர்ந்துதான் சிரித்தான்.

"நல்லதொரு நகைச்சுவை உங்களுக்கு இருக்கிறது.." என்றான் அந்த சிரிப்பினூடே.

"உங்கள் பாராட்டுப் பத்திரத்திற்கும், மிக மிக நன்றி வாடகைதாரர் சார்" என மறுபடியும் சொல்லி அந்த இடத்தையே குலுங்க வைத்தாள் சிங்காரி.

பின் தினகரன் சிரிப்பை நிறுத்தி தோள்களை குலுக்கி முடியைச் சிலுப்பிக் கொண்டவன் அவர்கள் இருவரையும் ஒருவித அலட்சியப் பார்வை பார்த்தவாறே நடக்க ஆரம்பித்தான்.

"இந்த ரெண்டு வாண்டுகளும் எந்த வண்டுகளிடம் வசமாய் சிக்கப் போகிறதோ? ம்ம்..!"

அவன் அலுத்தபடி முணுமுணுத்தது காதில் அரைகுறையாய் விழுந்தாலும், அதற்கும் பதிலடியாய், "அப்படி ஏதாவது கரு வண்டுகளிடம் வசமாய் சிக்கியதும் உங்களுக்கு கண்டிப்பாய் சொல்லியனுப்புகிறோம் வாடகைதாரர் சார்...!" என மீண்டும் கத்த.. வெளியே



கேட்டைத் தாண்டிக் கொண்டிருந்த தினகரன் அதற்கும் ஒரு முறுவலிப்பு செய்தபடி அகன்றான்.

அவன் போனதும் இருவரும் ஒருவரையொருவர் நெருங்கி கட்டிக் கொண்டனர்.

"ஐயோ.. என்னக்கா இது! இவன் பொல்லாத அசகாய சூரனாய் இருப்பான் போல! நம் திட்டத்தையெல்லாம் தவிடுபொடியாக்கி விட்டானே! இனி நம் ஞாயிற்றுக் கிழமை கொண்டாட்டம் அவ்வளவுதானா? மறந்து விட வேண்டியதுதானா?"

அவள் கேட்டதற்கு மதுமதி பதில் சொல்லாமல் தனது மைவிழிகளை விரித்து வில்லான புருவங்கள் மேலேந்தி சிந்தனைக்குப் போனாள். பின் சிங்காரியை நம்பிக்கையுடன் பார்த்தவள், "இன்னமும் ஒரு வழி இருக்கிறது.. சிங்காரி" என்றாள்.

சிங்காரி கொஞ்சம் வளைந்து அவள் கழுத்தை அப்படியே கட்டிக் கொண்டவள் மதுமதியின் கழுத்தில் ஊசலாடியபடியே "அது என்னக்கா? அப்படி ஒரு வழி? எனக்குத் தெரியாத வழி?" என்றாள்.

"அப்பாவிடம் கேட்டுப் பார்ப்போம். அவன் பாம்பெல்லாம் வைத்திருக்கிறான். பயங்கரமானவன் என சொல்லிப் பார்ப்போம்..'

அவள் முடிப்பதற்குள்ளேயே 'ம்ஹூம்! நோ சான்ஸ். அதெல்லாம் நடக்காத காரியம். அப்பாவின் பிடிவாதத்தைப் பற்றி உனக்குத் தெரியாதா? அப்பா இதையெல்லாம் காது கொடுத்தே கேட்க மாட்டார்."

"பின் என்னதான் செய்வது?"

"எனக்கு ஒரு வழி தோணுகிறது."

"என்ன வழி சொல்லு?"

"இப்படி வழியைத் தேடி யோசிப்பதற்குப் பதில் பேசாமல் சண்டைக்காரன் காலிலே விழுந்து விட்டால்..?" சிங்காரி நிறுத்த ஆத்திரமானாள் மதுமதி.

"என்ன அவன் அவனிடம் போய் கெஞ்சச் சொல்கிறாயா... நீ?" சினமாய் கேட்டவளின் தோள்களை தட்டினாள் சிங்காரி.

"கெஞ்சிப் பார்த்தால்தான் என்ன?" என்றவள் கூடவே, "எத்தனையோ வேஷம் போடுகிறோம். இப்படி ஒரு கெஞ்சல் வேஷம் போட்டால் குறைந்தா போய்விடுவோம்?" என்றதும் மதுமதி யோசித்தபடி தலையாட்டத் தான் செய்தாள்.

ஆனால் அன்று மாலை அவர்கள் போட்ட கெஞ்சல் நாடகத்திற்கு அவன் தினகரன் சம்மதித்து அதற்கு விலையாய் ஒன்றைக் கேட்க... அதை கேட்டவர்கள் அப்படியே கொதித்துத்தான் போனார்கள்!

## 4



சிங்காரி சொன்னது சரியாகத்தான் இருந்தது.

ஒரு மணி நேரத்தில் சிவ.. சிவா.. என்றபடி சிவ பழமாய் கோயிலில் இருந்து வீடு திரும்பியிருந்தார் தந்தை தில்லை நாயகம்.



மதுமதிக்கு ஒரு நப்பாசைதான்!

"அப்பா.. மாடிப் போர்ஷனுக்கு நீங்கள் அனுப்பிய ஆள்.." என ஆரம்பித்ததுமே, தில்லை நாயகம் தலையை தட்டிக் கொண்டு, "அடடா.. சொல்ல மறந்து விட்டேனே? அந்தத் தம்பி வந்து சாவி வாங்கிக் கொண்டு போயாயிற்றா? ரொம்பவும் நல்ல தம்பியாய் தெரிகிறது. பெயர் தினகரனாம். கல்லூரி லெக்சரர் வேலை. ஆனால் ஆன்மீகத்தில் அவருக்கு மிகுந்த ஈடுபாடு. என்னைப் பார்க்க வந்தவர் அப்படியே பிரகாரத்தில் மனமுருக இறைவனை நினைத்து அரை மணி நேரம் உட்கார்ந்து விட்டார். அட்வான்ஸ் பணம் ஐயாயிரத்தையும் உடனே கையில் கொடுத்து விட்டார். அதனால் அவருக்கு வேண்டிய உதவிகள் எதுவானாலும் இருவரும் தயங்காமல் செய்யுங்கள். புரிகிறதுதானே?"

தந்தை கணீர்க் குரலில் சொல்லி கேட்க மதுமதி தன் திகைப்பை மறைத்துக் கொண்டு பலமாய் தலையாட்டினாள்.

இந்த தினகரன் பலே ஆள்தான். தந்தையையே குல்லா போட்டு ஆன்மீகத்தில் நாட்டம் இருப்பது போல் காட்டி... அவரை தினகரன் புராணம் பாட வைத்து விட்டானே...! இவனை சும்மா விடக் கூடாது. இவனுக்கு சரியான பாடம் புகட்டியாக வேண்டும்!

பற்களை ஆத்திரமாய் கடித்தபடி சிங்காரி பக்கம் போனாள்.

மாலை தந்தை வெளியே செல்லும் சமயத்தில் தினகரன் மீது அடுத்த தாக்குதலை நடத்த சகோதரிகள் இருவரும் திட்டமிட்டனர்.

அதன்படி வழக்கம் போல் மணி ஐந்து அடித்ததும் தில்லைநாயகம் காலாற நடந்துவர கிளம்பி விட்டார்.

அவர் அகன்றதும் சிங்காரி திரும்பி மதுமதியிடம் பஞ்சரிக்க... மதுமதி ஒருவித தயக்கத்தோடு, ''போயும்.. போயும் அவனிடம் கெஞ்சுவதா?'' என்றாள் புதுவித யோசனை தோன்றியவளாய்.

''அட..'' என அவள் தோள்களை தன் தோள்களாலேயே இடித்த சிங்காரி, ''என்னக்கா நீ... இந்தப் பயம் பயப்படு கிறாய்? நாம் என்ன நிஜமாவா கெஞ்சப் போகிறோம்? எத்தனை சினிமாக்கள், டிவி நாடகங்கள் பார்த்திருப்போம். அதிலிருந்து சின்னதாய் ஒரு பிட்டை எடுத்து வெளியே விட்டால் ஆள் அப்படியே நம்மை நம்பி விடுவான். அத்தோடு அப்படி நாம் கெஞ்சுவது நம்மைத் தவிர வேறு யாருக்கும் தெரியப் போவதில்லை என்பதால் பெரிதாய் நம் மானம் ஒன்றும் கப்பலேறியும் விடாது. ஆகையால் கூட்டிக் கழித்துப் பார்த்தால் இதுதான் சரியான வழி. அப்படி எப்பாடு பட்டாவது கெஞ்சிக் கிஞ்சி அவனை மாடிப் போர்ஷனி லிருந்து வெளியே தள்ளி விட்டால் நம் சுதந்திரமும் பறிபோகாது. வழக்கம் போல் நாமும் ஞாயிற்றுக்கிழமை களில் ஜாலியாய் கொட்டமடிக்கலாம். என்ன?''

சிங்காரியின் நீண்ட லெக்சருக்கு, ''ம்ம்.. சரி..'' என அரை மனதோடு தலையாட்டிக் கிளம்பினாள் மதுமதி.

இருவரும் கொஞ்சம் கண்களில் மை, முகத்தில் பேஸ் கிரீம், உதடுகளில் லிப்ஸ்டிக் சாயம் என ஒரு சின்ன மேக்கப்புடனே (அழகாய் போய் கெஞ்சினால்தான் ஆள் மயங்குவான் என்ற சிங்காரியின் யோசனைப்படி) கிளம்பினர்.



படிகளில் ஏறிப் போனவர்கள், மாடிப் போர்ஷனின் முன்புறத் திண்டில் கண்களை மூடி அமர்ந்தபடி டேப் ரிக்கார்டரில் பாட்டுக் கேட்டுக் கொண்டிருந்த அவனது 'ஹாய்'யான நிலையைக் கண்டு அதிரவே செய்தனர்.

என்ன துணிச்சல்! ஏதோ அவன் வாங்கி கட்டிய சொந்த வீடு போல் அல்லவா திண்டில் உருண்டு புரண்டு கொண்டிருக்கிறான்! ஆத்திரமாய் அவர்கள் பற்களைக் கடிக்கும்போதே, கேட்ட கொலுசு சப்தத்தில் கண்களைத் திறந்த தினகரன் டக்கென பாட்டை நிறுத்தி விட்டான்.

அவன் கண்களில் மின்னல் வெட்டியதுபோல் ஓர் ஆச்சரியம். புருவங்கள் உயர்த்தி அவர்கள் இருவரையும் பார்த்தான்.

''அடடா.. இரண்டு அழகுப் பதுமைகள் என்னைத் தேடி..'' என ஆரம்பித்தவன், சட்டென நிறுத்தி குறும்புப் பார்வையாய், ''அதற்குள் இருவரும் கருவண்டு வேட்டைக்குக் கிளம்பி யாயிற்றா?'' என்றான்.

அவர்கள் இருவரும் புரியாமல் விழிக்கவே செய்தனர்.

''புரியவில்லை? நான் காலையில் சொன்னேனே வாண்டுகள்... வண்டுகளிடம் சிக்கப் போவதாய்... அது'' என ஞாபகப்படுத்தி விட்டு, ஹாஸ்யத்தைக் கண்டது போல் பெரும் சிரிப்பொன்றையும் சிரித்தான்.

''பார்.. இவனை...! இவனிடம் போய் கெஞ்சவா?'' என்பதுபோல் மதுமதி சிங்காரியின் பக்கம் திரும்பி முறைத்தாள்.

அவளைப் பார்வையாலே அமைதிப்படுத்திய சிங்காரி, தினகரன் பக்கம் திரும்பி,. "கனம் மதிப்பிற்குரிய வாடகை தாரர் சார் அவர்களே.. நாங்கள் இருவரும் உம்மிடம் ஒரு உதவி கேட்டு வந்திருக்கிறோம். செய்வீர்களா?" என்றாள் நேரிடையாய் விஷயத்திற்கு வந்தவளாய்.

ஆயினும் தினகரன் குறும்பை விடவில்லை.

"ஆஹா.. உதவியா? தாராளமாகக் கேளுங்கள்! பெண்கள் அதுவும் உங்களைப் போன்ற அழகான பெண்கள் உதவி கேட்டால் என் நெஞ்சுப் பகுதியில் இருக்கும் இந்த இதயத்திற்கு தாங்காது. அப்படியே கண்ணீர் விட்டு அழுது விடும்.. பார்க்கிறீர்களா?" அவன் தன் டீ ஷர்ட்டை உயர்த்திக் காட்டியபடி மறுபடியும் சிரிக்க.. மதுமதி விரல்களால் உள்ளங்கையை அழுந்தக் குத்தி ஆத்திரத்தை அடக்கினாள்.

சிங்காரியோ, "வாடகைதாரர் சார் நாங்கள் விஷயத்தைச் சொல்லலாமா?" என்றாள் அதே பவ்யத்துடன்.

"ம்ம்.. சொல்லுங்கள்.." என்றான் அவன் அணையிடுவது போல்.

மடமடவென விஷயத்தைக் கொட்டினாள் சிங்காரி. எவ்வித சலனமில்லாமல் கேட்டுக் கொண்டிருந்த தினகரனின் முகம் நிமிர்ந்து பெரும் யோசனைக்குப் போனது.

இருவரும் தேர்தல் முடிவை எதிர்பார்க்கும் வேட்பாளர் போல் அவன் முகத்தையே ஆவலாய் பார்த்துக் கொண்டிருக்க... மௌனம் கலைந்தாள் தினகரன்.



"ஆக.. நான் மாடிப் போர்ஷனில் இருப்பது உங்களுக்கு இடைஞ்சல்... காலி செய்ய வேண்டும். அப்படித்தானே?"

"அதேதான்... அதேதான்.. வாடகைதாரர் சார்.."

"ம்ம் சரி... ஞாயிற்றுக்கிழமை நீங்கள் எப்படி எல்லாம் கொட்டமடிப்பீர்கள். அதைச் சொல்லுங்கள்.." என்றான் நேர் பார்வையுடன்.

"ம்ம்... அது.. அது..." என சிங்காரி தயங்கியவள், "அதுவெல்லாம் எதற்கு வாடகை தாரர் சார்? ஏதோ.. நாங்கள் பெண் பிள்ளைகள்... எங்களுக்கு ஏற்றாற் போல் எதை யாவது விளையாடிக் கொண்டு.." என இழுத்தாள் சிங்காரி.

"அதை நானும் என்னதான் என்று தெரிந்து கொள்கிறேனே.."

அவன் குறுக்கிட்டுக் கேட்டதும், இதைத் தெரிந்து இவன் என்ன செய்யப் போகிறான்? என நினைத்தவள் மதுமதியைப் பார்த்தாள்.

"சொல்கிறோம். சொன்னால், நீங்கள் காலி பண்ணி விடுவீர்களா?" என்றாள் மதுமதி கறாக் குரலில்.

"ம்ம்.. முதலில் சொல்லுங்கள். நானும் உடனேயே என்னுடைய நல்ல முடிவை பதிலாய் சொல்லி விடுகிறேன்.."

சிங்காரி மறுபடியும் மடை திறந்தாள்.

செஸ், ஸ்நூக்கரில் ஆரம்பித்து பாடுவது, விதவிதமான உடைகளை உடுத்தி டான்ஸ் ஆடுவது, நாயர் கடையில் திருட்டுத்தனமாய் புரோட்டா வாங்கிச் சாப்பிடுவது வரை ஒன்று விடாமல் சொல்லி முடித்தாள்.

"அவ்வளவுதான் வாடகைதாரர் சார். எங்கள் ரகசியத்தை எல்லாம் சொல்லிவிட்டோம். உங்கள் முடிவைச் சொல்கிறீர் களா?"

சிங்காரி கேட்டும் தினகரன் எவ்வித பதிலும் சொல்லாத வனாய் அவர்கள் இருவரையம் மாறி மாறி ஒருவித பார்வை பார்த்துக் கொண்டிருந்தான்.

"ம்.ம்.... பதிலைச் சொல்லுங்கள்.." என்றாள் மதுமதி முறைப்புடன் விரட்டலாய்...

தினகரனோ அசையாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

"வாடகைதாரர் சார்... உங்களை.. உங்களைத்தான் கேட்கிறோம்.." சிங்காரி குரலில் குழைவைத் தடவிக் கொண்டாள்.

இம்முறை தினகரன் டக்கென வாய் திறந்து அதிரும் சிரிப்பொன்றை உதிர்த்தவன், "வலையில் சிக்கிய இரண்டு புள்ளி மான்கள்..." என உச்சரித்து விட்டு சிரிப்பைத் தொடர... அவன் அதிரடிச் சிரிப்பையும் அவன் முகம் போன விஷமமான போக்கையும் கண்டு அதிரவே செய்தனர் இருவரும்.

"எனது பதிலைச் சொல்லட்டுமா? அதுவும் உங்கள்... உங்கள் குரலிலேயே?" என்றபடி மறுபடியும் இருவரையும் உற்று நோக்கி, ஆழமான பார்வை பார்த்தான்.

இருவரும் விழிகளை விரித்து விழிக்கத்தான் செய்தனர்.

என்ன உளறுகிறான்? பதிலை.. நம் குரலிலா?



தினகரன் குறுஞ்சிரிப்பு பொங்க திரும்பி தன் கைப் பக்கத்தில் இருந்த அந்த டேப்ரிக்கார்டரின் விசையை அழுத்தினான்.

மறுகணம் அதிர்ந்து அரண்டு போனார்கள் இருவரும்!

டேப் ரிக்கார்டரில் இருந்தது.. மதுமதியின் குரல். கூடவே சிங்காரியின் முழு பேச்சும்.. அவள் விவரித்த ஞாயிற்றுக் கிழமை கொண்டாட்ட ரகசியம் முழுவதும் பதிவாகியிருந்தது.

பாவி! பேசிய முழுவதையும் டேப் ரிக்கார்டரில் நைசாக பதிந்திருக்கிறானே... என்ன இது?

எப்போது.. கையை டேப் ரிக்கார்டரில் வைத்தான். எப்போது பட்டனை அமுக்கினான். அதைக் கவனிக்காமல் உணராமல் இருந்திருக்கிறோமே!

அவன் அடக்க முடியாத சிரிப்பை நிறுத்திப் பார்த்தான்.

"இப்போது புரிகிறதா..? உங்கள் பேச்சுதான். உங்களுக்குப் பதில்.. என்று! இதை மட்டும் உங்கள் தந்தைக்குப் போட்டுக் காட்டினால்..." என மறுபடியும் நிறுத்தினான்.

"இது அநியாயம்! அக்கிரமம்! எங்களுக்குத் தெரியாமல் எங்கள் பேச்சையே டேப் செய்து கொண்டு.. சரியான பிளாக் மெயில்!"

இருவரும் பெரும் குரலில் அலறத்தான் செய்தனர். கொதிப்பு பொங்க...

அவன் கைகளை உயர்த்தியபடி, ''உஷ்!' என வாயில் விரல் வைத்தவன், ''கூச்சல் போடாதீர்கள்! இது பிளாக் மெயில்தான்! இனி என்னிடம் வந்து காலி செய் அது இதுவென நீங்கள் தொந்தரவு செய்தால் பின் இந்த டேப் ரிக்கார்டரின் குரல் உங்கள் தந்தையின் காதுகளில் ஒலிக்க ஆரம்பித்து விடும். புரிகிறதா? இனி இப்படி சில்லரைத் தனமாய் விளையாடாமல் உங்கள் வேலையை மட்டும் கவனிக்க வேண்டும். இல்லையென்றால் நான் ரொம்பவும் பொல்லாதவனாகி விடுவேன்!''

- ஆள் காட்டி விரலை உயர்த்தி கடுமையாய் எச்சரித்தான் அவன்.

5



தினகரனின் உருட்டலில் அவன் எச்சரித்த விதத்தில் துண்டைக் காணோம் துணியைக் காணோம் என்பது போல்தான் அரண்டு போய் கீழே ஓடி வந்து விட்டனர் இருவரும்.

''ஐயோ... சாமி! மனிதனா இவன்? பெரிய கிரிமினலாக இருக்கிறானே! இவனிடமெல்லாம் இனி நம்முடைய பருப்பு வேகாதப்பா!'

அலுத்தபடி சொன்னாள் சிங்காரி.

மதுமதிக்கும் பலத்த அதிர்ச்சிதான்!

எவ்வளவு எளிதாய், கெட்டிக்காரத்தனமாய் அவர்களது கையை வைத்தே அவர்களது கண்ணைக் குத்தப் பார்க்கிறான். ''பலே ஆள்தான்!'' என்றாள் அவள்.



''பலே ஆள் மட்டுமல்ல. படு மோசமான கேடி ஏமாற்று மன்னன். தெருப் பொறுக்கி என என்ன பட்டம் வேண்டு மானாலும் அவனுக்குக் கொடுக்கலாம்...'' என்றபடி பற்களைக் கடித்த சிங்காரி, ''இனி அவ்வளவுதானே... வேறு வழிகள் இல்லைதானே? நாம் தோற்றுவிட்டோமேயக்கா..'' என்றாள் ஆற்றாமையோடு.

மதுமதியும் சோகமாய்த்தான் தலையாட்டினாள். கூடவே அவளுக்கு புதிதாய் பயம் ஒன்றும் தோன்றியது.

மிரட்டியவன் அதே வேகத்தில் அவர்களிடம் மாட்டி வைக்க.. ''அப்பாவிடம் டேப் ரிக்கார்டரை போட்டுக் காட்டி விட்டால்?''

சிரித்தாள் சிங்காரி.

''அப்படியெல்லாம் அந்த ஆள் செய்ய மாட்டான்..'' என்றாள்.

''எதை வைத்து சொல்கிறாய் சிங்காரி?''

''எல்லாம் இந்த ஆண்கள் சைக்காலஜிதான்! பொதுவாய் இவனைப் போன்ற ஆண்களுக்கெல்லாம் பெண்களை மட்டம் தட்டி குதிரையேறிக் கொண்டிருக்க வேண்டும். அதில் அப்படி ஒரு அற்ப சந்தோஷம் அவர்களுக்கு!''

''அப்படியானால்... நம்மை மாட்டி விட மாட்டான். ஆனால், தொடர்ந்து காஸட்டைக் காட்டி மிரட்டிக் கொண்டே இருப்பானோ?''

''ம்ம்... அப்படித்தான் திட்டம் தீட்டியிருப்பான். அதற்குள் அந்தக் காஸட்டை களவாடி விட வேண்டும்.

அந்த டேப் ரிக்கார்டரையும் சுத்தியலை வைத்து சுக்கு நூறாய் உடைத்துவிடவேண்டும்..!'' சிங்காரி ஆத்திரமாய்ச் சொல்ல.. வேகமாய் தலையசைத்து அதை மறுத்தாள் மதுமதி.

''ம்ம்.... அதெல்லாம் சரிப்பட்டு வராது. நாம் மறுபடியும் மாட்டிக் கொள்வோம். வேறொரு நல்ல வழியைத் தேட வேண்டும்..'' என்றபடி யோசனைக்குப் போனாள் மதுமதி.

அவர்களது தலையைப் பிய்க்கும் யோசனை அன்று இரவு முழுவதும் தொடர்ந்தது.

மறுநாள் ஒரு சிறு டெம்போ வண்டியில் மரச்சாமான்கள், ஸ்டீல் கட்டில் என தினகரனின் உடைமைகள் அனைத்தும் ஊரிலிருந்து வந்திறங்கி விட்டது.

''ஐயோ... அக்கா! பாரேன்..! சாமான்கள் கூட வந்தாயிற்று. இந்த ஓட்டை உடைசல்களையெல்லாம் வைத்து மாடிப் போர்ஷனை நிரப்பப் போகிறான். இனி ஜென்மத்திற்கும் அவனைக் காலி செய்ய முடியாது. அத்தோடு நம் கதியும் அதேகதிதான்! டேப் ரிக்கார்டரை காட்டிக் காட்டியே மிரட்டுவான். நம்மைப் பணிய வைப்பான். இன்னும் என்னமெல்லாம் திட்டம் தீட்டியிருக் கிறானோ?''

- லபோதிபோவென வயிற்றில் அடிக்காத குறையாய் அலறத்தான் செய்தாள் சிங்காரி.

அவளை அடக்கி.. அமைதிப்படுத்தினாள் மதுமதி.

''பொறு சிங்காரி! அப்படியெல்லாம் ஒன்றும் நம் கையை மீறி நடக்காது. நடக்கவும் விடமாட்டேன். ஆனால் ஒன்றை



மட்டும் ஞாபகம் வைத்துக் கொள். தப்பித் தவறி கூட மாடிப் பக்கம் போய் விடாதே. அந்த ஆள் முகத்தில் விழித்து விடாதே..'

''ஐயய்யோ! நான் போகவே மாட்டேன்ப்பா..'' என்று மறுபடியும் அலறினாள் சிங்காரி.

அன்றைய காலைப் பொழுது அப்படி பதைப்பிலேயே போகிறதென்று பார்த்தால் மதியம் அவர்களை மேலும் பதைபதைக்க வைத்தது பூர்ணம் அத்தையின் வருகை.

பூர்ணம் அத்தை தில்லைநாயகத்தின் ஒரே சகோதரி. மற்ற சொந்தங்கள் எல்லாம் சிறு சிறு மனஸ்தாபங்களால் விட்டுப் போய்விட.. பூர்ணம் ஒருத்திதான் அவர்களுக்கு ஒரே சொந்தம் என ஆகிப் போனாள்.

பூர்ணத்திற்கு ஒரே மகன். நெடு உயரத்துடன் ஒட்டடைக் குச்சி போல் இருக்கும் எழிலரசன்! இந்த மூஞ்சிக்கு இப்படியொரு பெயரா? என சதா மதுமதியும் சிங்காரியும் கலாய்த்து டபாய்த்து விடும் அளவுக்கு சுபாவி. முப்பது வயதை நெருங்கிக் கொண்டிருந்தாலும் அப்பாவிக் களை. எதற்கெடுத்தாலும், அவனைக் கிண்டலடித்தாலும் கூட கக்க பிக்கவென சிரிக்கும் இளிச்சவாய்த்தனம்!

அத்தை அந்த இளிச்சவாய்த்தனத்தை ''பார்.. என் மகனுக்கு எப்போதும் சிரித்த அழகு முகம்...'' என பெருமையடிக்கும் போது, ''ஆமாம்.. ஆமாம்... அத்தை நீங்கள் சொல்வது சரிதான். மாமாவிற்கு நீங்கள் 'மன்தமராஜன்..' என்று கூட பெயர் வைத்திருக்கலாம். பாருங்கள்.. எங்களை இப்படி சிரித்து சிரித்தே

மயக்குகிறார்..'' என சிங்காரி அடிக்கடி கிண்டலடிப்பது உண்டு.

அதுகூட புரியாமல் அத்தையும், ''இரண்டு பேரில் யாராவது ஒருவர் மயங்கினால் சரி... அவனும் டபக்கென மூணு முடிச்சுப் போட்டு விடுவான். நம் சொந்தமும் விட்டுப் போகாது. என்ன சொல்கிறீர்கள்?'' என்பாள் சந்தடி சாக்கில் அவர்களது எண்ணத்தை அறியும் நோக்கில்.

அப்போது பட்டென பேச்சில் உள்ளே புகும் மதுமதி குறும்பாக, ''அத்தை, மாமா மூன்று முடிச்சு போடக் கூடாது. இரண்டு முடிச்சுதான் போட வேண்டும். அப்படி போட அவர் சம்மதித்தால்.. எனக்கும் சம்மதம்தான்!' என்பாள்.

சிங்காரி மட்டும் விடுவாளா?

''அத்தை எனக்கும் மூணு முடிச்சு வேண்டாம். மாமா நாலு முடிச்சு போட வேண்டும். அப்படியானால் எனக்கும் ஓகேதான்!''

பூர்ணம் அவர்கள் பேசுவது கண்டு திகைத்து விழிப்பாள்.

''என்ன அத்தை விழிக்கிறீர்கள்? புரியவில்லை? எங்கள் இருவருக்கும் உங்கள் மகன் எழிலரசனைக் கட்டிக் கொள்ளத் தீராத ஆசை. சம்மதம். உடனே தந்தையிடம் பேசி ஏற்பாடு செய்கிறீர்களா?''

சிங்காரி மறுபடி கத்தலாய் பேசும்போதுதான் அவர்கள் இருவரும் தன்னையும் மகனையும் கிண்டலடிக்கிறார்கள் என்பது பூர்ணத்திற்குப் புரியும்.

அதிலும் சிங்காரி ஒருபடி மேலே போய், ''அத்தை, நீங்கள் நீங்களாகவே ஒழுங்காய் அப்பாவிடம் பேசி



கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள். இல்லையென்றால் நாங்கள் மாமாவைக் கூட்டிக் கொண்டு வீட்டை விட்டு ஓடி விடுவோம்..'' என டபாய்க்க ஆரம்பித்ததும், போலியாய் அவளும் வெகுண்டு, ''போங்கடி கழுதைகளா! கேலியா செய்கிறீர்கள்? இருங்கள்... ஒருநாள் நடக்கத்தான் போகிறது. உங்கள் இருவரில் ஒருவருக்கு நானே மாமியாராய் வந்து உங்களை நையப் புடைத்து பெண்டை கழற்றுகிறேனா.. இல்லையா.. என்று'' என அவளும் அடிக்க வருவது போல் விரட்டுவாள். பொங்கும் சிரிப்பை அடக்க முடியாமல் இருவரும் துள்ளிக் குதித்து மான்களாய் ஓடுவர்.

அத்தை பூர்ணத்திற்கு தன் மகன் எழிலரசனைப் பற்றி தெரியாததல்ல. பிறந்தது முதல் அவன் சுபாவமே அப்படித் தான். சோம்பேறித்தனமும் அப்பாவிக் களையும் ஒன்று சேர்ந்த குணம் அவனுக்கு.

அதனாலே இளம் வயதிலேயே கணவனை நோய் ஒன்றில் பறிகொடுத்தாலும் இந்த அப்பாவியை வளர்க்க வேண்டிய பெரும் பொறுப்பு இருக்கிறதே.. என குடும்பப் பொறுப்பை ஏற்றுக் கொண்டாள். வீட்டு வருமானத்திற்கு அப்பளம், வடாம், முறுக்கு, சீடை என அத்தனை எண்ணெய் பலகாரங் களையும், சுடச் சுடச் சுட்டு பக்கத்து மிட்டாய் கடைகளில் விற்கப் போட்டு பணம் சேர்த்தாள்.

எழிரலசனை எப்படியாவது டிகிரி வரையாவது படிக்க வைக்க வேண்டும் என்பது அவள் பெரும் ஆசை. லட்சியக் கனவு. ஆனால் அவனோ எட்டுக்கு மேல்.. இனி எனக்கு சுட்டாலும் படிப்பு வராது. அப்பளம், வடாம் சுட வருகிறேன் என தொழிலுக்கு வந்து விட்டான்.

படிக்காவிட்டால்.. என்ன? உன்னை பெரும் தொழிலதிப ராய் ஆக்கிக் காட்டுகிறேன் என மீசையில் மண் ஒட்டாத குறையாய் மீண்டும் முஷ்டியைத் தட்டிக் கொண்டு ஒரு சிறு கடை பிடித்து பட்சணங்களை எல்லாம் வைத்து எழிலரசனை கல்லாவில் உட்கார்த்தி வைத்து கடை முதலாளியாகவும் ஆக்கிப் பார்த்தாள். ஆனால் அங்கும் வியாபாரத்தை சரியாய் கவனிக்காமல் பாதி நேரம் குறட்டை விட்டுத் தூங்க.. முறுக்கு வியாபாரமும் படுத்தது. கடையை இழுத்து மூட வேண்டியதாயும் ஆயிற்று.

சரி.. இவன் இதற்கெல்லாம் சரிப்பட்டு வரமாட்டான்... அடுப்பு முன்னால் உட்காரத்தான் லாயக்கு என பூர்ணம் முடிவு செய்து தன் பக்கத்திலேயே தன் அசிஸ்டெண்டாக வைத்துக் கொண்டாள்.

ஆனாலும் அவளுக்கு அந்த ஆசை விட்டபாடில்லை. எழிலரசன் அப்பாவிதான். ஆனால் எந்த வம்பிற்கும் போகாத நல்லவன்தானே? அவனுக்கு ஏன் உன் பொண்ணைக் கொடுக்கக் கூடாது? என தில்லை நாயகத்திடமே உரிமையுடன் கேட்டுப் பார்த்தாள்.

எந்த விஷயத்திலும், தெளிவாய் பட்டாணி போல் உடைத்துப் பேசும் தில்லைநாயகமும் அப்படியே வெளிப் படையாய்ப் பேசினார். "இதோ பார் பூர்ணம். உன் மகன் மீது எனக்கு எவ்வித குறைவான அபிப்பிராயமும் கிடையாது. ஆனால் கட்டிக் கொள்ளப் போவது நான் இல்லையே. என் மகள்கள்தானே? அதனால் அவர்களது சம்மதம்தான் முக்கியம். அவர்களில் யாராவது உன் மகனைக் கட்ட சம்மதம் சொன்னால் உடனே அடுத்த முகூர்த்தத்திலேயே மேளம் கொட்ட வைத்து விடுகிறேன், போதுமா?"



சகோதரனின் பதிலில் வாயடைத்துதான் போனாள் பூர்ணம். சதா எழிலரசனை கேலி செய்யும் இந்த வாண்டு களாவது அவனைக் கட்டிக் கொள்வதாவது? என அத்தோடு அந்த நினைப்பையும் மூட்டைக் கட்டி வைத்து விட்டாள் அவள்!

அந்த பூர்ணம் அத்தைதான், மலையம்பட்டியில் இருந்து நாற்பது கிலோ மீட்டர் தூரத்திலிருக்கும், வாமனூர் கிராமத்திலிருந்து மகன் எழிலரசனுடன் அன்று கிளம்பி வந்து விட்டாள்.

"அடடா.. அறுவை வந்தாயிற்று. இனி அவ்வளவுதான்!" என சிங்காரி காதுபடவே முணுமுணுத்து கதவைத் திறந்தாலும், அறுபத்தைந்து வயது பொக்கை வாயுடன் சிரிக்கத்தான் செய்தாள் பூர்ணம்.

"அறுவை இல்லைடி...! அத்தை! சொந்த உடன் பிறப்பையும் உங்களையும் பார்க்க ஓடோடி வந்திருக் கிறேன். அப்படியே உங்களுக்கு ஆசையாய் வயிறு புடைக்க தின்ன முறுக்கு, சீடை, புட்டு என ஒரு பெட்டி பலகாரங்களை கொண்டு வந்திருக்கேனடி.." என்றபடி எழிலரசன் தூக்கி வந்த பெரிய டின்களை காட்டினாள்.

அதற்கும் சிங்காரி குறுகுறுப்புடன், "ஆமாம். ஆமாம்.. கடைகளில் விற்காத சரக்கை எல்லாம் சேர்த்து எடுத்துக் கொண்டு வந்தாயிற்று. இனி எங்கள் இருவர் வயிற்றையும் குப்பைத் தொட்டியாய் ஆக்கிக் கொள்ள வேண்டியதுதான்... சரிதானா அத்தை?" என குரல் குழைய கேட்டவளின் இடையே புகுந்த மதுமதி, "ஐயோ சிங்காரி, அத்தை வந்ததும் வராததுமாய் அவர்கள் மனதை நோகடிக்காதே..."

என கரிசனமாய் சொல்வது போல் சொல்லிவிட்டு, "உண்மையில் அத்தை இவ்வளவு பலகாரங்களை, முறுக்குச் சமாச்சாரங்களை ஏன் கொண்டு வந்திருக் கிறார்கள் என்பது எனக்கு மட்டும்தான் தெரியும்!" என்றாள் அக்கறையுடன்.

"ஐயோ, சொல்லக்கா, என்ன காரணம்?"

"அது.. அது.. சிங்காரி, நம் வீட்டு எலிகளுக்கும் பெருச்சாளிகளுக்கும் சரியான உணவு இல்லை. உணவுப் பஞ்சம் ஏற்பட்டுள்ளது என அப்பா மூலம் தெரிந்து கொண்டு அத்தை கொண்டு வந்திருக்கிறார்கள். அதைப் போய் குறை கூறுகிறாயே?" என பொங்கிய சிரிப்பை அடக்கிக் கொண்டு பேச, பூர்ணமும் இவள் தனக்காக பரிந்து வந்து பேசப் போகிறாள் என நினைத்து ஏமாந்த கோபத்தில், "அடக் கழுதைகளா! நீங்கள் திருந்தவே மாட்டீர்களா? இந்த அத்தையைக் கிண்டல் செய்து பாடாய்ப் படுத்துகிறீர் களே... உங்களை.. என்ன செய்கிறேன் பார்!" என விரட்டு வதுபோல் தனது கனத்த உடம்பைத் தூக்கிக் கொண்டு ஓடுவது போல பாவனை செய்ய.. சிட்டாய் பறந்தார்கள் சகோதரிகள்.

அன்றும் வழக்கம் போல் அத்தையைச் சீண்டி கூத்தடித்துவிட்டு எழிலரசன் பக்கம் திரும்பினர்.

"அடடா! நம் மன்மத ராசனை கவனிக்கவே இல்லையே.. என்னமாய் அழகு கூடி இருக்கிறது பார்! நிறம் கூட மாநிறத்தில் இருந்து தக்காளி போல செந்நிறத்தில்.." என சிங்காரி குளிர் பேச்சைத் தட்டி விட அதை அப்படியே நம்புபவனாய் தன் முட்டைக் கண்களை விரித்து அவர்களைப் பார்த்தான் எழிலரசன்.



"நிஜமாகவா.. நிஜமாகவா.. சொல்கிறீர்கள்?" என்றான் முகத்தில் ஒருவித வெட்கத்தை ஓட விட்டுக் கொண்டு.

"அட.. ராசாவுக்கு வெட்கத்தைப் பாரேன்.. இந்த வெட்கத்தில், மன்மத அழகு இன்னமும் கூடி விட்டதே!" என மதுமதியும் சேர்ந்து கொள்ள... எழிலரசன் நிஜமாகவே அதையும் நம்பி நாணிக் கோணிக் கொண்டிருந்தான். அதைப் பார்த்து, "இதைக் காண கோடிக் கண்ணல்லவா வேண்டும்..." என குதி போட்டுக் கொண்டிருந்தனர் சகோதரிகள்.

இப்படிக் கேலியும் கும்மாளமுமாய் எழிரலசனை கூத்து பண்ணிக் கொண்டிருந்த வேளையில் தான் தில்லைநாயக மும் வீட்டினுள் நுழைந்தார்.

தந்தையைக் கண்டதும் கப்சிப் ஆக.. அவரே கேட் வரை கேட்டிருந்த கும்மாளக் குரலை ஞாபகப்படுத்தி நொடியில் நடந்ததை புரிந்து கொண்டார்.

அதற்கேற்றாற் போல் எழிலரசனும் கால்களை விரித்து போஸ் கொடுப்பது போல் பேக்கு மாதிரி விழித்து நிற்க மதுமதியையும், சிங்காரியையும் முறைத்தவர் "இதுவெல் லாம் தவறு என்று கூட உங்களுக்குத் தெரியாதா? ம்ம்... போங்கள்! இனியாவது அவரை மரியாதையுடன் நடத்துங்கள்!" என்றாள் விரட்டலாய்.

"சரியப்பா" என பய பக்தியாய் சொல்லிக் கொண்டு இருவரும் ஓடினர். அதிலும் சிங்காரி ஓடும் போது யாரும் கவனியாத வண்ணம் எழிலரசனைப் பார்த்து கண்ணடிக்க வேறு செய்தாள்.

அவர்கள் அகன்றதும், எழிலரசன் தில்லைநாயகம் பக்கத்தில் வந்து அவரது கையைப் பிடித்துக் கொண்டான். ''மாமா! சிங்காரி ரொம்ப நல்லவள். எனக்கு அவளைப் பிடித்திருக்கிறது'' என்றான்.

தில்லைநாயகம் அதை காதிலே வாங்காதவர் போல், ''மாப்பிள்ளை எப்போது வந்தீர்கள்? சாப்பிட்டீர்களா?'' என்றெல்லாம் பேச்சை மாற்றி குசலம் விசாரிக்க ஆரம்பித்தார்.

அதற்குள் உள்ளிருந்து பூர்ணமும் ஓடி வந்து விட்டாள்.

''வா.. பூர்ணம்...'' என முகம் முழுவதும் புன்னகையுடன் வரவேற்ற தில்லைநாயகத்தை வாஞ்சையுடன் தான் பார்த்தாள் பூர்ணம்.

''அட அதற்குள்.. என்னமாய் மெலிந்து விட்டாய்? என்னதான் ஆயிற்று உனக்கு?'' என அக்கறையாய் கேட்ட சகோதரியின் அன்பை நெகிழ்ச்சியாய் பார்த்த தில்லைநாயகமும், ''எல்லாம் உன்னைக் காணாததால், சகோதரி தேற்றத் தாலே மெலிந்து விட்டேன் போலும்!'' என்றார் குறும்பாய்.

''அட.. நீயும் அந்த வாண்டுகள் போல பேச ஆரம்பித்து விட்டாயா? நல்ல ரசனையப்பா உனக்கு!'' என வியப்புகாட்டி அதிசயித்தாள் பூர்ணம்.

அதற்குப் பின் உட்கார்ந்து ஊர்க்கதைகள், வியாபார பேச்சுக்கள் என ஒன்று விடாமல் அத்தனை விஷயங்களையும் மணிக் கணக்காய் பேசினார்கள்.

கடைசியில் பூர்ணம்தான் ஞாபகம் வந்தவளாய் குரலை மெலிதாக்கிக் கொண்டு, மதுமதியும், சிங்காரியும் முன்புறம்



இருப்பதை உறுதி செய்து கொண்டு, ''அப்புறம் தில்லை, நம் மதுமதி விஷயம் எப்படி இருக்கிறது? அவள் எல்லாவற்றையும் கெட்ட கனவு போல் மறந்து விட்டாள்தானே?'' என்றாள்.

அதுவரை சிரிப்புடன் இருந்த தில்லைநாயகத்தின் முகம் சோகத்திற்கு மாறியது. மெல்ல தலையாட்டினார்.

''ம்ம்.. அப்படித்தான் நினைக்கிறேன்! பழையபடி துள்ளிக் குதித்து ஓடித்தான் நடமாடுகிறாள்... ஆனாலும் அவள் மனதில் ஆறாத ரணம் போல் அந்த நினைப்பு இருக்கத்தானே செய்யும்? அவள் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை என்றாலும் கூரான கத்தி போல் அவ்வப்போது உள் மனதை கிழித்துப் பார்க்கத்தானே செய்யும்? மறக்கக் கூடிய சம்பவங்களா அவை?'' என்றார் குரல் கம்மி உடைவது போல்.

''நம் வீட்டுப் பெண்ணிற்குப் போய் இப்படி ஒரு அசம்பாவித சம்பவம் நடந்து விட்டதே? எல்லாம் விதிதான்!''

தன் பங்கிற்கு நொடித்தபடி கவலை பொங்க கன்னத்தில் கை வைத்துக் கொண்டாள் பூர்ணம்.

## 6



மறுநாள் வழக்கம் போல் காலையில் சிங்காரியும் மதுமதியும் கோவிலுக்குக் கிளம்பினர். மேலிருந்து யாரோ சொடுக்கிடும் சப்தம் உணர்ந்து நிமிர்ந்தார்கள்.

தினகரன்தான் பால்கனிப் பக்கம் நின்று சொடுக்கிட்டு அவர்களை மேலே வரும்படி சைகை செய்து கொண்டிருந் தான்.

இருவருக்கும் ஒரே ஆத்திரம்!

"திமிரைப் பாருக்கா! நேற்று முளைத்த கத்தரிக்காய் நம்மை கை சுண்டி கூப்பிடுகிறது?" சிங்காரி பற்களைக் கடிக்க மதுமதியும் விழிகளை விரித்து முறைத்தாள்.

அவன் தினகரனோ, "ம்ம்.. வாருங்கள்" என்பது போல் மறுபடியும் உதட்டசைப்பு செய்தான்.

"என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறான் இவன்?" என கொதித்தவர்களாய் மடமடவென மாடியேறிப் போய் அவன் முன் நின்றனர்.

என்ன? என்பது போல் எரிமலைப் பார்வையை வீச தினகரனோ கைகளைக் கட்டியபடி முறுவலைக் கூட்டியவன் புருவங்களையும் உயர்த்தினான்.

"இருவரும் பேசாமல் போனால் எப்படி?"

அவன் கேட்பது புரிந்தாலும், "இல்லையே! இருவரும் சளசளவென பேசிக் கொண்டுதானே போனோம்... பார்க்கவில்லை?" என்றாள் சிங்காரி வெடுக்கென.

அவன் பார்வையில் உஷ்ணத்தைக் கூட்டினான்.

"விளையாட்டு வேண்டாம். தப்பைச் செய்து விட்டு அதற்கு தண்டனை வாங்காமல் நீங்கள் இருவரும் நடையைக் கட்டினால் எப்படி?"

"தப்பா? எதைச் சொல்கிறீர்கள்?"



தெரியாதது போலவே முகத்தை வைத்துக் கொண்டு இருவரும் கேட்க அவன் பதில் சொல்லாமல் ஆட்காட்டி விரலால் ஷெல்ஃபில் இருந்த டேப் ரிக்கார்டரைக் காட்டினான்.

"இப்போது புரிகிறதா?"

"புரிகிறது."

"என்ன புரிகிறது?'

"பெண் பிள்ளைகளிடம் மிரட்டல் செய்யும் உங்கள் வீரம் புரிகிறது.."

"ம்ம்.. இது மிரட்டல் இல்லை. தண்டனை. செய்த தப்பிற்கான தண்டனை!" அவன் அவசரமாய் குறுக்கிட்டு திருத்தினான்.

"எங்களுக்குத் தண்டனை கொடுக்க நீங்கள் யார் சார்?" மதுமதி முறைத்துக் கேட்க பதிலுக்கு அவனும் முறைத்தான்.

பின் அந்த முறைப்பையே புன்னகையாய் மாற்றியவன், "என்னை யாரென்று இன்னும் தெரியவில்லையா? நான்தான் நீங்கள் சொன்ன வாடகைதாரர் சார்.." என்றான்.

"ஓஹோ!"

மதுமதி இழுத்துச் சொல்ல பதிலுக்கு அவளைப் போலவே இழுத்து, "ஓ...ஹோ..தான்!" என்றான்.

"சரி வாடகை தாரர் சார், அப்படி உங்கள் தண்டனைதான் என்னவோ? அதையும் சொல்லிவிடுங்கள்!"

சிங்காரி குரலில் கேலியை ஏற்றினாள்.

''ரொம்பச் சுலபம்தான்! தினமும் காலை வந்து ஆஜராகி ஒரு தரிசனம் கொடுத்துவிட்டுப் போய்விட வேண்டியது தான்..''

''எ..ன்..ன..து?''

''அதாவது, ஒரு 'விஷ்' அல்லது கை கூப்பலான வணக்கம் ஒன்றை தினம் என்னைப் பார்த்து போட்டுச் செல்ல வேண்டும்'' என அவர்கள் திகைப்பதைப் பார்த்து விளக்கினான்.

''அட... மாடியில் உட்கார்ந்திருக்கும் இந்த மைசூர் மகாராஜாவுக்கு தினமும் கைகூப்பலான வணக்கம் வேறா..? சரிதான்.. செய்துவிட வேண்டியதுதான்!''

''நான் சீரியஸாய்ச் சொல்கிறேன்..''

''நாங்களும் சீரியஸாய்த்தான் கேட்கிறோம்..''

''கை கூப்பல் வணக்கத்தை இருவர்..'' என ஆரம்பித்தவன், ''வேண்டாம்.. இருவரில் ஒருவர் கூட தினம் வந்து செய்தால் போதும்..'' என திருத்தினான்.

''அட தண்டனையில் திடீர் கரிசனம் வேறா?''

''அது.. வேறொன்றுமில்லை.. பெண் என்றால் பேயும் இறங்குமென்று சொல்வார்கள். அதான் நானும் தண்டனையை இறக்கி விட்டேன்.''

''நீங்கள் பேய் என்று அப்படியாவது ஒத்துக் கொண்டால் சரி..''



''அது இன்னொரு பேய்க்கு உடன் புரிந்து விட்டால் அதுவும் சரி..''

சிங்காரி கொடுக்க - பதிலடிக்கு பதிலடியாய் கொடுத்தான் அவன்.

மதுமதி பேச்சை நிறுத்திச் சொல்வது போல் கைகளை உணர்த்தினாள்.

''மிஸ்டர்..''

''என் பெயர் மிஸ்டர் இல்லை. தினகரன்..!'' என்றான் அவன் திரும்பவும் தெளிவான குருலில்.

''எதற்கு வீணான சண்டைக்கு வருகிறீர்கள்?''

''சண்டைக்கு வந்தது நான் அல்ல. நீங்கள்தான். வீட்டைக் காலி செய்யச் சொல்லி அடாவடித்தனம் பண்ணியது நீங்கள்தானே?''

''அது.. எங்கள்.. சுதந்திரத்தை மீட்பதற்கு..''

''அதற்காக.. என் சுதந்திரத்தில் தலையிட்டது தவறு.. மேலும்..''

மறுபடியும் கைகளை உயர்த்தினாள் மதுமதி.

''வீண் லெக்சர் வேண்டாம். என்னதான் சொல்ல வருகிறீர்கள்?''

''செய்த தவறுக்கு நீங்கள் தண்டனை அனுபவிக்க வேண்டும். அப்படி அனுபவித்தால் அந்த காஸட்டை உங்களிடமே கொடுத்து விடுகிறேன்.''

"அதாவது.. தினம் தினம் வந்து உங்களை பவ்யமாய் கும்பிட்டு சலாம் செய்ய வேண்டும்.. அப்படிச் செய்தால் செய்த தப்பு சரியாகி விடும்.."

"தப்பு சரியாகி விடும் அல்ல. மன்னிக்கப்படும்!" திருத்தினான் அவன்.

"ஓ..ஹோ!"

சிங்காரிக்கு திடீரென இன்னொரு சந்தேகமும் குமிழிட்டது.

"இந்தத் தண்டனை.. தினம்.. தினம்... ஆயுள்... முழுக்கவா வாடகைதாரர் சார்?"

"அப்படியில்லை.. சரியாக ஒரு வாரம்! நாளை முதல் கணக்கு வைத்துக் கொள்வோம்.ம்ம்.. நேரமாகி விட்டது..." என்றபடி மணியைப் பார்த்தவன், "நீங்கள் போகலாம்... எனக்கு நிறைய வேலைகள் இருக்கிறது!" என உள்புறமாய் திரும்பப் போனான். போனவன் சட்டென்று திரும்பி, "ஒன்று ஞாபகமிருக்கட்டும். என் தண்டனையை ஏற்காவிட்டால், அடுத்த நிமிடமே அந்த டேப் ரிக்கார்டரின் குரல் உங்கள் தந்தையின் காதுகளுக்கு சுப்ரபாதம் போல் போய்விடும்!" சுட்டு விரலைக் காட்டி எச்சரித்தபடி அவன் அகல விக்கித்து நின்றனர் சகோதரிகள்.

இருவரும் விறுவிறுவென இறங்கி வந்துவிட்டனர். ஆனாலும் அன்று முழுவதும் ஒன்றும் ஓடவில்லை. "வசமாய் ஆதாரத்துடன் போய் அவனிடம் மாட்டிக் கொண்டோமே?" எனவும் வருந்தினர்.



"அக்கா, எதற்காக நாம் இப்படி மெனக்கிட வேண்டும்? அப்படி அந்த காஸட் அப்பாவின் கையில் கிடைத்தால்தான் என்ன?" என்றாள் சிங்காரி.

"புரியாமல் பேசாதே.." என்றாள் மதுமதி.

"புரிந்துதான் பேசுகிறேன்! என்ன அப்பா.. நாம் ஞாயிற்றுக் கிழமை அடிக்கும் வண்டவாளம் தெரிந்து கத்துவார். கோபப்படுவார். என்னைத் திரும்பவும் மரமண்டை! மரமண்டை! என்பார். உன்னை.. மறை கழண்டு விட்டதா... இவளுடன் சேர்ந்து ஆட்டம் போடுகிறாயா? என்பார். இருவரும் பல்லைக் கடித்துக் கொண்டு குனிந்து கொள்வோம். கொஞ்ச நேரம் அப்படியே நின்று விட்டால் நம் உடம்பில் மிச்சமிருக்கின்ற கொஞ்சூண்டு சூடு, சொரணை கூட அப்படியே தப்பித்து வெளியே போய்விடும். பின் என்ன? எதற்கும் கவலைப்பட வேண்டியதில்லை. ஜாலிதான்!"

சிங்காரி சொல்லியபடி கைகளைத் தட்டிச் சிரிக்க.. அவள் பின்னந் தலையில் செல்லமாய் ஒரு குட்டு வைத்தாள் மதுமதி.

"மக்கு மாதிரி பேசாதே! நன்றாக யோசித்துப் பார்!"

"எப்படி?" என்றாள் சிங்காரி.

"அப்பா கோபப்படுவது.. அப்பாவிடம் வாங்கிக் கட்டிக் கொள்வது ஒன்றும் பெரிய விஷயமல்ல. நம் சுதந்திரம்... நம் ஞாயிற்றுக்கிழமை கொண்டாட்டம் தொடர வேண்டும். அதனால் தந்தைக்கு நாம் ஞாயிற்றுக்கிழமை அடிக்கும் லூட்டிகள் பற்றி எதுவும் தெரியக் கூடாது..."

''ம்ம்.. நீ சொல்வது புரியவில்லை! இன்னும் என் மண்டைக்குள் ஒரு டியூப் லைட்தான் பக் பக்கென அடிக்கிறது. தெளிவாகவே சொல்லு.''

''சொல்கிறேன்! மாடிப் போர்ஷன் இல்லாவிட்டால் என்ன.. கீழே இங்கு இடமில்லையா? இந்த கட்டில் அந்த மர பீரோ, பழைய நாற்காலி என எல்லாவற்றையும் ஒதுக்கி வைத்து விட்டால்... விளையாட இங்கேயே இடம் கிடைத்து விடுமே.. இப்போது புரிகிறதா?''

''புரிகிறது.. புரிகிறது..''

பலமாய் இருபுறமும் தலையசைத்தாள் சிங்காரி.

மதுமதி தொடர்ந்தாள். ''அதனால் தந்தைக்கு நமது ஞாயிற்றுக்கிழமை விஷயம் கண்டிப்பாகத் தெரியக் கூடாது. அந்த பொல்லாத தினகரனும் அவன் சொன்னபடி நடந்தால் அந்த காஸட்டை நம்மிடம் கொடுத்து விடுவதாகச் சொல்லி யிருக்கிறான். ஆக அதனால் வேறு வழியில்லை. ஆடுகிற மாட்டை ஆடித்தான் கறக்க வேண்டும் என்பதுபோல் அவன் சொன்னபடி ஆடி எப்படியாவது அந்த காஸட்டை வாங்கி விட வேண்டும்..''

''அப்படியானால்.. அந்த தினகரனுக்கு ஒரு வாரம் தினம் தினம் சலாம் வைக்க வேண்டும்..''

''அப்படித்தான்..''

''நாளையில் இருந்து நான் செல்லட்டுமா?''

''நீ வேண்டாம்.. நானே செல்கிறேன்..!'' மதுமதி சொன்னதும் சிங்காரி விழித்துப் பார்க்க, ''உன் துடுக்கான



வாய் அவனைக் கண்டால் சும்மா இருக்காது. ஏதாவது வம்பு பேசி விடும். பின் பிரச்சினை சிக்கலாகி விட்டால், அவன் தொடர்ந்து விரட்ட ஆரம்பித்து விடுவான்.''

''ம்ம்... அதுவும் சரிதான்!''

தலையசைத்து ஒப்புதல் தெரிவித்தாள் தங்கை. மறுநாள் முதல் மதுமதி தினமும் அந்த வம்புக்கார பொல்லாத தினகரனுக்கு ஒரு வணக்கம் வைத்து விட்டு, திரும்பிப் பாராமல் விறுவிறுவென நடந்து வரவேண்டியது எனவும் முடிவாயிற்று.

ஆனால் மறுநாள் மதுமதி அதுபோல் ஒரு வித இறுக்கத் துடன் இயந்திரமாய் அவன் முன்னால் போய் அந்த வணக்கத்தைச் சொல்ல, ''அடடா! வள்ளுவர் சொன்ன காதல் பார்வை இதுதானோ?'' என்றான் தினகரன் அவளை அதிர வைத்தவாறு.

## 7



மதுமதி கம்ப்யூட்டர் சென்டர் ஒன்றில் தினம் ஒரு மணிநேர பயிற்சி வகுப்பிற்கு சேர்ந்திருந்தாள். அது முடித்து விட்டு வந்தால் அஞ்சல் வழிக் கல்வி யாய் தான் படிக்கும் எம்.ஏ. பாடதிட்டங் களை எடுத்து வைத்துக் கொண்டு படிப்பில் மூழ்கி விடுவாள்.

ஒருவாறு மதியம் வரை இவ்வாறு நேரம் ஓடிவிடும். இடையிடையே குக்கர் ஏற்றி சின்னதாய் மதியச் சமையலையும் முடித்து விட்டால், பின் ஒரு குட்டித்

தூக்கம். கொஞ்சம் டி.வி. ரேடியோ என நேரம் போவதே தெரியாது.

சிங்காரி காலையில் காலேஜுக்கு இட்லி தோசை, டிபன் பாக்ஸுடன் கிளம்பி விட்டால், மாலை ஐந்து மணிக்குத் தான் வீடு திரும்புவாள். தந்தை தில்லைநாயகமும் காலை கிளம்பினால், நூலகம், கோயில், குளம் என சுற்றிவிட்டு மதியம் மூன்று மணிக்கு மேல்தான் வீடு திரும்புவது வழக்கம்.

சில சமயம் இப்படி வீட்டில் தனியே மாட்டிக் கொண்டு தான் மட்டும் கிடப்பது மதுமதிக்கு ரொம்பவும் போரடிக்கத் தான் செய்யும். பேசாமல் அப்பா சொன்னது போல் தனது எம்.ஏ. படிப்பை அஞ்சல் வழியில் தொடராமல் பக்கத்து டவுண் கல்லூரியில் சேர்ந்து படித்திருக்கலாமே... என்று கூட எண்ணுவாள். ஆனால் அவளுக்கென்னவோ அப்படி தினம் தினம் அரக்கப் பரக்க அலைந்து பஸ்சைத் தொற்றிக் கொண்டு பக்கத்து டவுனுக்குப் போய் ஓடியாடி படிப்பதை விட, நிதானமாய், வீட்டிலிருந்தபடியே பல்கலைக் கழகத்தில் சேர்ந்து அஞ்சல் வழியில் படிப்பது... நல்லதுதானே என்று தோன்றியது.

மேலும் அப்படி போரடிக்கும் சமயங்களில் பக்கத்து வீட்டு மீனா மூலம் பொது நூலகம் பற்றிக் கேள்விப்பட்டு அதில் உறுப்பினராகிக் கொண்டாள். பொது அறிவு புத்தகங்களும் கதைப் புத்தகங்களுமாய் எடுத்து நிறைய படிக்க ஆரம்பித்தாள்.

அன்றும் அப்படித்தான் கம்ப்யூட்டர் சென்டர் சென்று விட்டு அப்படியே நூலகம் சென்று புத்தகங்களை மாற்றி



வரவேண்டும் என்று எண்ணிக் கொண்டாள். அவளுக்கு அரை மணி நேரம் முன்னதாகவே பஸ் பிடிக்கும் அவசரமாய் சிங்காரி கிளம்பிச் சென்று விட்டாள்.

அந்த அவசரத்திலும், சிங்காரி கிளம்பியவள். நிதானித்து "அக்கா.. மறந்துவிட வேண்டாம். இன்று முதல் ஒரு வாரத்திற்கு அந்த திமிர்க்காரனுக்கு நீ சலாம் போட வேண்டும்..!" என்றவள் மறுபடியும் ஏதோ உதித்தவளாய், "அக்கா, இன்னொரு முக்கியமான விஷயம்" என்றாள்.

"என்ன சிங்காரி?"

"அவனைப் பார்க்கப் போகையில் சிம்பிளாய் சிறிய அலங்காரத்துடனேயே போ. சும்மாவே உன்னைப் பார்த்து வாய் பிளப்பான் அவன். நீ மட்டும் மேக்கப் போட்டாயானால் அப்படியே உன் அழகில் அசந்து போய் விடுவான்.." என எச்சரித்தும் சென்றிருந்தாள்.

அதனாலேயே மதுமதி கண்ணாடி முன் ஒப்பனைக்கு உட்கார்ந்தவள் வழக்கமான பளீச் மேக்கப்பை செய்யாமல் சின்னதாக ஸ்ட்ராப் தொங்கட்டான், சின்ன குங்குமக் கீற்று எனக் கிளம்பி விட்டாள்.

இது.. என்ன ஒரு வழக்கம்? அவள் மேலே போய் தினம் ஒரு வாரத்திற்கு ஒரு கும்பிடு போட்டுக் கொண்டு செல்ல வேண்டுமாம். அது தண்டனையாம். என்ன ஒரு திமிர்? என்ன ஒரு ஆணவம்!

தங்கை சொன்னதுபோல் அவனுக்கு உடம்பு முழுக்க கொழுப்பு இருக்கும் போலும்!

ஆத்திரமாய் நினைத்தபடியே படிகளில் ஏறினாள். எல்லாம் ஒரு வாரம்... அந்த கேஸட் கைக்கு வரும் வரைதான்! அந்த கேஸட் மட்டும் கைகளுக்கு வந்ததும்.. அவ்வளவுதான்! சிங்காரியுடன் சேர்ந்து கொண்டு அவனை உண்டு இல்லையென பார்த்துவிட வேண்டியதுதான்.

முத்துப் பற்களைக் கடித்தவாறு பால்கனியை அடைந்தவள் பார்த்தாள். முகப்பு ரூமிலேயே தினகரன் நின்று கொண்டிருப்பது தெரிந்தது. அவனும் வெளியே கிளம்பிக் கொண்டிருப்பது புரிந்தது. கல்லூரியின் லெக்சரர் அல்லவா? வேலைக்குக் கிளம்பிக் கொண்டிருக்கிறான்!

முதல் முறையாய் இன்று வேலையில் சேரப் போகிறவன் நம் முக தரிசனம் பார்த்து விட்டுப் போகிறானா?

நடக்கட்டும்... இன்று நன்றாக பிரின்ஸிபாலிடமும் குறும்பு மாணவர்களிடமும் இவன் வாங்கிக் கட்டிக் கொள்ளட்டும், அப்போதுதான் இவனுக்கு புத்தி வரும்!

மனதுள் நினைத்துப் பார்த்தவள் அப்படியே அவனை ஒரு முறைப்புப் பார்வை பார்த்தாள். தினகரன் யதேச்சையாய் திரும்பி பார்த்தவன் அவள் நிற்பதை உணர்ந்து விறுவிறு வென வந்துவிட்டான்.

''அடடா... நரி வந்து விட்டதா?'' என்றான் அவள் நினைப்புக்கு ஏற்றாற்போல்.

என்ன நரியா? என்ன உளறுகிறான் இவன்?

''புரியவில்லை! இன்னும் ஒருவாரம்... தினம் காலையில் உங்கள் முகம்தானே என் எதிர்ப்படும். அதான் நரிமுகம் என்றேன்!'' என்றவன் விடாது, ''அதுவும் அழகான நரி!'' என சேர்த்துக் கொள்ள அவள் கொதிப்பு கூடியது.



''ஹலோ.. மிஸ்டர் தினகரன்!'' என அவள் கோபமாய் பேச்சை ஆரம்பித்தவள் மறுகணமே இவனிடம் வீணாய் ஏன் பேச்சை வளர்ப்பானேன்... என்ற முடிவுடன் சட்டென நிறுத்தினாள்.

அதே இறுக்கமாகிப் போன உதடுகளுடன், ''இதோ உங்களுக்குத் தேவையான வணக்கம்..'' என்று கைகளை கோர்த்து எரிச்சலாய் ஒரு கும்பிடு ஒன்றை போட்டாள்.

''ம்ம்... நான் இனி போகலாம் அல்லவா?'' திரும்பப் போனாள்.

''ஹலோ, மது, ஒரு நிமிடம்...''

என்ன மதுவா? என்ன இவன் ரொம்ப நாள் பழகியது போல் நம் பெயரை சுருக்கிக்கொண்டு..? கண்கள் விரிய கோபமாய் முறைத்தாள்.

''என் பெயர் மதுமதி..'' என்றாள்.

அவன் சிரிப்புடன் கைகளைக் கட்டிக் கொண்டான்.

''ம்ம்.. தெரியும்! மது வேண்டாம்... வேண்டாமா? வேண்டுமானால் மதுக்குட்டி என்று அழைக்கட்டுமா? மதுக்குட்டி அழகான பெயர்தான்..''

''இந்த நாய்க்குட்டி போல் அழைக்கும் வேலை எல்லாம் என்னிடம் வேண்டாம்..'' என்றாள் மீண்டும் கறார்க் குரலில்.

"ஓகே. மிஸ்.. மதுமதி.." என்றவன் குனிந்து அவள் முகத்தை உற்றுப் பார்த்து விட்டு, "எனக்குப் பிடித்த பச்சை நிறத்தில் சேலை, அதே நிற ஸ்டிராப், தொங்கட்டான், பொட்டு... என எல்லாமே அசத்தலாய் அமர்க்களமாய் இருக்கிறது. ஆனால்..." என்றவன் நிறுத்தி "அந்த அழகு முகத்தில் ஒரு சின்னக் கீற்று புன்னகையாவது இல்லாவிட்டால் எப்படி?" என்றான்.

அவள் திடுக்கிடவே செய்தாள்.

என்ன இவன்.. இவனுக்கு பச்சை நிறம் பிடிக்கும் என்பதற்காக கட்டி வந்ததுபோல்? இவனுக்கு பச்சை நிறம் பிடிக்கும் என்று தெரிந்தால் இனி அவளுக்கு அந்த பச்சை நிறமே பிடிக்காமல் போய்விடுமே!

"அடடா..! என்ன இது.. கன்னங்கள் சிவக்க அந்த கதுப்புகள் சூடேற.. மறுபடியும் முகம் கோபத்திற்கு போகிறது... ரிலாக்ஸ்.. ரிலாக்ஸ்... மிஸ் மதுமதி... லேசான ஒரு சிரிப்பு சிரியுங்கள்... எல்லாம் சரியாகி விடும்... ப்ளீஸ்.. எனக்காக.."

அவனது பேச்சில் அவளது கோபம் பன்மடங்கு அதிகமாகத்தான் செய்தது. இருந்தும் பல்லைக் கடித்துக் கொண்டு அடக்கிக் கொண்டாள். வேண்டுமென்றே அத்தனை பற்களையும் காட்டி 'ஈ'யென இளித்தாள்.

"போதுமா?" என்றாள்.

"போதும், நீங்கள் போகலாம்!" என்றான் தினகரன்.

அவள் விருட்டென திரும்பி அகலப்போக சட்டென அந்தக் காரியத்தைச் செய்தான் தினகரன்.



அவள் வலக் கையின் பிஞ்சு விரல்களை அப்படியே பற்றி மணிக் கட்டுப் பகுதியில் மென்மையாய் தன் இதழ்களைப் பதித்தான் அவன்.

8



மதுமதி அதிர்ந்து அரண்டு போனாள் என்றுதான் சொல்ல வேண்டும்.

தினகரன் அவள் கையை சட்டென பிடித்து அதில் முத்தமிட்டு விட்டு பின் விடுவித்து விட்டான். எதுவுமே நடவாதது போல் அவளையே சலனமில்லாத பார்வை வேறு பார்த்தபடி.

அவனது இந்த செய்கையை அவள் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை!

ஓரிரு நிமிடம் செதுக்கிய சிலை போல் அதே போஸில் அப்படியே திகைத்துத்தான் நின்று கொண்டிருந்தாள்.

என்ன காரியம் செய்து விட்டான்! உரிமை உள்ளவன் போல் அவள் கைகளை இழுத்து... அதில் முத்தமிட்டு.. அதே கைகளினால் இந்நேரம் அவன் செவிட்டில் அல்லவா அவள் அறைந்திருக்க வேண்டும்... இல்லையே!

இதை.. வேறு யாராக இருந்தாலும் செய்திருப்பாள்.

ஆனால் நெடுநெடு உயரத்தில் ஆஜானுபாகுவாய் பிடறியை உலுக்கிக் கொண்டு நிற்கும் சிங்கம் போல் கம்பீரமாய் இருக்கும் அவனை, அவனை அப்படி எளிதாய் அறைந்துவிடத்தான் முடியுமா?

ஒரு சில வினாடிகள் என்ன செய்வது, பதிலுக்கு எந்த மாதிரி நடந்து கொள்வது என புரியாமல் விழித்து விட்டு விறுவிறுவென படியிறங்கினாள் அவள்.

இதுவரை ஏற்படாத, அவள் அனுபவித்திராத ஒரு உணர்வு ஏற்பட்டதாலோ என்னவோ அவள் உடம்பே நடுங்கத்தான் செய்தது. அவன் முன் தன் நடுக்கத்தை காட்டி விடக் கூடாது என்பதாலே பற்களால் உதட்டை அழுந்தக் கடித்தபடி படிகளில் இறங்கினாள்.

நல்லவேளை அங்கு யாரும் இல்லை! வேறு யாரும் நடந்ததைப் பார்க்கவும் இல்லை!

வீட்டினுள் போய் இரண்டு மூன்று டம்ளர் நீரை மடமட வென குடித்தபின்தான் அவளால் ஆசுவாசப்படுத்திக் கொள்ள முடிந்தது.

இன்னொரு மனம் விழித்து அவளைக் கேள்விகளால் துளைத்தது.

என்ன துணிச்சல்! ஏதோ அவளது காதலன் போல் கையைப் பிடித்து இழுத்து முத்தம் கொடுத்திருக்கிறான்! அவள் ஒன்றும் செய்யாமல் பேக்கு போல் விழித்துக் கொண்டு வந்து நிற்கிறாள். அவள் வீரம் எல்லாம் என்னாயிற்று? எங்கு போயிற்று?

இல்லை.. அவசரப்படக் கூடாது.. யோசித்துத்தான் செய்ய வேண்டும்.

என்ன.. சொல்கிறாய்...? யோசிக்க வேண்டுமா? எதனால் இந்த தயக்கம்? பதிலுக்குப் பதில் உடனே கொடுப்பது தானே உன் பாலிசி?



விடாது கத்திய மனதை அடக்கிக் கொண்டு கம்ப்யூட்டர் சென்டருக்குக் கிளம்பினாள்.

அங்கும் அவளால் முழுமையாய் பாடத்தில் கவனம் செலுத்த முடியவில்லை.

அவன் கையை சட்டென எடுத்தது.. அப்படி அவன் இதழ்களைப் பதித்தது... கைக் குட்டையால் அந்த மணிக்கட்டுப் பகுதியை தேய் தேய் என்று தேய்த்து விட்டாள்.

அப்படி தேய்க்கும் போதும் ஒருவித ஜிலீர் என்ற உணர்வுதான்!

தங்கை சொன்னது அவள் ஞாபகத்தில் ஓடியது. உன் அலங்காரத்தைக் குறைத்துக் கொண்டே போ. சும்மாவே உன்னை விழுங்குவது போல் வாயைப் பிளந்து கொண்டு பார்ப்பான்... என்றாளே! அது உண்மைதானோ?

சிங்காரி கவனித்திருக்கிறாள் நாம்தான் அதைக் கவனிக்க வில்லையோ?

அப்படியானால் அந்த தினகரன் ஏன் அவளை அந்த விழுங்கும் பார்வை பார்க்க வேண்டும்?

இன்று இப்படி ஏன் ரோமியோத்தனமாய் வெட்கமில் லாமல் நடந்து கொள்ள வேண்டும்? இதற்கெல்லாம் என்ன அர்த்தம்?

ஒன்றுக்கும் விடை காண முடியாதவளாய்த்தான் அன்று முழுவதும் குழப்பத்திலேயே நடமாடினாள். முதற் காரியமாய் மாலை சிங்காரி வந்ததும் இதைச் சொல்ல

வேண்டும் என துடித்துக் கொண்டிருந்தவள் நேரம் ஆக.. ஆக.. இதை சிங்காரியிடம் சொல்ல வேண்டுமா? என நினைக்க ஆரம்பித்து விட்டாள்.

சிங்காரி துடுக்கானவள். அவளை விட கோபக்காரி. அவளிடம் ஏதாவது சொல்லப் போய் அவள் விஷயத்தைப் பெரிதாக்கி, பெரும் சண்டையில் அல்லவா பிரச்சினை போய்விடும்?

பின் தினகரன் வேண்டுமென்றே அந்த டேப் பண்ணிய பேச்சுகளை அப்பாவிடம் போட்டுக் காட்டி இருவரையும் மாட்டி விடப் பார்ப்பானே?

அதற்காக அவன் செய்கையை பொறுத்துக் கொள்வதா? எவ்வளவு பெரிய தவறை செய்திருக்கிறான். அதற்குப் பதிலடி கொடுக்காமல் விடுவதா?

யோசித்தவள் முதலில் சிங்காரியிடம் இந்த விஷயத்தைச் சொல்ல வேண்டாம். அவளையும் குழப்ப வேண்டாம் என முடிவெடுத்தாள்.

அதனாலே மாலை சிங்காரி வந்ததும் முதல் கேள்வியாய், ''அக்கா என்னாயிற்று?'' என ஆவலாய்க் கேட்க, ''ஒன்று மில்லை. சலாம் வைத்தேன். ஓடி வந்து விட்டேன்.. அவ்வளவுதான்'' என்றாள்.

''அந்தப் புலி உன்னை வேறு எதுவும் கடிக்கவில்லையே?'' என்று மறுபடியும் வினவியபோது, ''கடிக்கவும் இல்லை, கிடிக்கவும் இல்லை..'' எனச் சொல்லி அவள் சந்தேகப் படாதவாறு சிரிக்கத்தான் செய்தாள்.



ஆனால் ஒன்று அவளுக்குத் தெளிவாய்ப் புரிந்திருந்தது. அவள் மட்டும் நடந்ததைச் சொல்லியிருந்தால் இந்நேரம் அவள் நினைத்தது போலவே சிங்காரி தாம் தீம்மென குதித்து ரகளைதான் பண்ணியிருப்பாள். அது நிச்சயம்! எனவும் எண்ணிக் கொண்டாள்.

மறுநாள் விடிந்ததும் அவளுக்கு மறுபடி சிந்தனை பற்றிக் கொண்டது. பேசாமல் இன்று போய்விட வேண்டும். இனி அந்த தினகரனுக்கு சலாம் வைக்கிற வேலையெல்லாம் தேவையில்லை. நேற்று அவன் நடந்து கொண்டதற்கு அவன் செவிட்டில் அவள் அடிக்காமல் விட்டதே பெரிய விஷயம்தான்! என இறுமாப்புடன் தான் இருந்தாள்.

ஆனால் சிங்காரி ஞாபகமாய், ''அக்கா, இன்னும் ஆறுநாள்தான். சலாம் வைத்து விட மறந்து விடாதே'' என்றபோது தலையைத் தான் ஆட்டினாள்.

கூடவே சிங்காரி அன்று பார்த்து மெதுவாகவே கல்லூரிக்குக் கிளம்பியபோது மதுமதி எரிச்சலானாள். ''முதல் ஹவர் இன்று ப்ரீ.. லேட்டாக போகலாம்... நான் உன்னுடனேயே கிளம்புகிறேன்'' என்றபோது, 'அடடா.. இவளிடம் விஷயத்தைச் சொல்லாமல் இன்று வசமாக மாட்டிக் கொள்ளப் போகிறோமே!' என்றுதான் பயந்தாள்.

மதுமதி பயந்தபடிதான் விஷயமும் நடந்தது. சிங்காரி அவளுக்காகக் காத்திருந்து அவளுடனே கிளம்பினாள். வீட்டு கதவைப் பூட்டி வெளிவந்ததும், ''ம்ம்.. சலாம், வைக்கத் தானே போகிறாய்? நானும் வரட்டுமா?'' என்று கேட்டு அவளை மேலும் திகைக்கத்தான் வைத்தாள்.

அவளை கீழேயே நிற்கச் சொல்லி சமாதானப்படுத்தி விட்டு வேறு வழி தெரியாதவளாய் மாடிப் படிகளில் ஏறினாள். படிகளில் ஏற ஏற அவள் மனம் தடுமாறத்தான் செய்தது.

மேலே போய் அந்தத் தினகரன் முன் நின்று என்ன செய்யப் போகிறாள்? நேற்று போல் மறுபடியும் சலாமா? அல்லது கைகூப்பலான வணக்கமா? நேற்று அவ்வளவு நடந்தும் வெட்கமில்லாமல் அவன் முன் போய் இன்று இப்படி நின்றால் அவன் என்ன நினைப்பான்?

நேற்று நடந்த விஷயத்திற்கு அவள் கோபப்பட வில்லை. அதை அனுமதித்து விட்டாள் என்று தானே நினைப்பான்? அப்படி அவள் அனுமதிக்கிறாள் என்ற நினைப்பு அவனுக்கு வந்துவிட்டால், நேற்று கைகளில் முத்தமிட்டவன், இன்று கட்டிப் பிடிக்க முயல மாட்டான் என்பது என்ன நிச்சயம்?

இந்தச் சிங்காரியிடம் இப்படி விஷயத்தை சொல்லாமல் மறைத்தது இவ்வளவு பெரிய விபரீதத்தில் கொண்டு போய்விட்டதே!

மனம் பரிதவித்தவளாய் குனிக் குறுகி மேலே பால்கனிப் பக்கம் போனபோது அவள் வரவை எதிர்பார்த்து நிற்பது போல் கைகளைக் கட்டியபடி தயாராய் நின்று கொண்டிருந்தான் தினகரன். கண்களில் அந்த குறும்பான குறுகுறுப்போடு!

விழி விரிய அவனை உற்றுப் பார்த்தவள், மறுகணமே அவன் பார்வையை சந்திக்க முடியாமல் கீழே குனிந்தாள்.



அப்படி அவள் சட்டென விழிகளைத் தாழ்த்தியதை வெகுவாய் ரசித்த தினகரனும், ''அடடா! என்ன ஒரு பார்வை இது?'' என அவள் காதுபடவே சொல்ல திகைப்பாய் நிமிர்ந்தாள் மதுமதி.

அவனை மறுபடியும் உறுத்துப் பார்க்க விளக்கம் கொடுத்தான் அவன். ''உன் விழிப் பார்வையை பார்த்ததும் வள்ளுவரின் குறள் ஒன்றுதான் ஞாபகம் வருகிறது. குமுறிக் கொண்டு நோக்காமை அல்லால் ஒருகண் சிறக்கணித்தாள் போல நகும்'' என்று.

அதாவது அழகான பெண்களை ஒரு கண்ணைச் சுருக்கிக் கொண்டு மறு கண்ணால் பார்க்கிற 'போஸ்' ஒன்று உண்டு. இப்படிப் பார்க்கும்போது, இமைகள் லேசாக மூடி கொஞ்சம் திறந்திருக்கும். மேலும் எந்தக் கண் சுருங்குகிறதோ அந்தப் பக்கத்து உதடு லேசாக விரிந்து ஒரு சைஸாக, ரொம்ப நைஸாக, ஒரு சிரிப்பு இருக்கும். இது கண்ணுக்கு உடையவள் சிரிக்க விரும்பாவிட்டாலும், ஆட்டோமெட்டிக்காக நடக்கும் சிரிப்பு இது. அப்படி வள்ளுவர் விவரித்த கள்ளச் சிரிப்பொன்றை என்னைப் பார்த்து நீ சிரித்து விட்டாய். நான் கொடுத்து வைத்தவன் தான்..'' என ஒரு விளக்கம் கொடுத்து பெரும் புன்னகை யொன்றை அதிர விட்டவாறு முடித்தான் தினகரன்.

மதுமதிக்கு ஒருகணம் நிஜமாகவே என்ன செய்வ தென்றே தெரியவில்லை.

சரிதான்! நிஜமாகவே மறை கழன்று விட்ட கேஸ்தான். நேற்றே இந்த லூஸுக்கு செவிட்டில் ஒன்று போட்டிருந் தால் இன்று இப்படியெல்லாம் ரோமியோத்தனமாய் உளறிக்

கொண்டு இருக்காது. விட்டு விட்டோமே! என்ன செய்வது? என மறுபடியும் தவித்துப் போனவள், அவன் சொன்ன விழிகள், பார்வை, பற்றிய வர்ணனையில் சினம் கொண்டவளாய் நிமிர்ந்து இமைகளை அகல விரித்து அவனை நன்றாக முறைத்தாள்.

‘‘மிஸ்டர் இந்தப் பார்வை உனக்கு வள்ளுவர் பார்வையாக, வர்ணனையாக தெரிகிறதா?’’ என்றாள் ஆத்திரமான குரலில்.

அவள் வெகுண்டு கேட்டதற்கு மறுபடியும் அவளை ஆழமாய் உற்றுப் பார்த்து விட்டு, ‘‘ம்ம்... சந்தேகமே இல்லை. இது வள்ளுவர் பார்வை மட்டுமல்ல, புதிதாய் என் மீது உனக்கு முளைத்திருக்கும் காதல் பார்வை..’’ என்றான் தினகரன் அமைதியாய்.

## 9



மதுமதிக்கு ஒரே ஆத்திரம்தான்! என்ன துணிச்சல்! காதல் பார்வை... என்று அவளிடமே பிதற்ற ஆரம்பித்து விட்டானே!

ஆனாலும் அவள் நிலை எதையும் ஓங்கிச் செய்ய முடியாமல் தவிக்க வைத்தது.

கீழே சிங்காரி நின்று கொண்டிருக்கிறாள்.

இவனுக்குப் புத்தியில் படுகிற மாதிரி உரக்க நாலு ஏச்சு ஏசினால் கூட ஏதோ பிரச்சினை என மேலே ஏறி வந்து



விடுவாள். அதனால் எது செய்தாலும் சப்தம் வராமல்... என நினைத்தவள் முதலில் கையில் உள்ள தடிமனான லைப்ரரி புத்தகத்தை அவன் மேல் அப்படியே வீசி விடலாமா என்றுதான் கொதித்தாள்.

பின் இவனால் புத்தகம் கிழிந்து வீணாகி விடுமே என்ற நினைப்பில் அதை ஒதுக்கியவள் பற்களை நறநறத்தவாறு அவனை எரிக்கத்தான் செய்தாள்.

ஆனால் தினகரன் அதையெல்லாம் கொஞ்சமும் பொருட்படுத்தாமல் அவள் பக்கம் வந்து ஒருவித குறும்பு புன்னகையைப் படர விட்டான்.

‘‘எனக்காக... பொய் எல்லாம் சொல்ல ஆரம்பித்து விட்டாயிற்று... பேஷ்! பேஷ்! நான் நினைத்தது சரிதான்!’’ என்றான் அதே நகைப்புக் குரலில்.

அவளுக்கு தூக்கி வாரிப் போட்டது.

பொய்யா... என்ன சொல்கிறான்?

அவள் மறுபடியும் விழிக்க.. அவன் உற்றுப் பார்த்து விட்டு ‘அட இப்படி திகைத்து விழிகள் விரிய நீ நிற்கும் போஸ் கூட என்னமாய் அழகில் ஜொலிக்கிறது!’ என ரசிக்க அவள், ‘‘விஷயத்தைச் சொல்லுங்கள்... நான் பொய் சொன்னேனா?’’ என்றாள் தெரிந்து கொள்ளும் வேகத்துடன்.

‘‘ம்ம்... பொய்! அதுவும் பச்சைப் பொய். உன் தங்கையிடம் நீ சொல்லியிருக்கிறாய். ஞாபகமில்லை?’’

‘‘நானா? அதுவும் தங்கையிடமா?’’

''அட.. அம்மா... இப்படி குருவி போல் தலையை அங்கும் இங்கும் திருப்பி விழித்தால் இல்லை என்று ஆகி விடுமா? எப்படிப் பார்த்தாலும் பொய்.. பொய்தான்...!'' என்றான் தினகரன்.

''என்ன பொய்? அதைச் சொல்லுங்கள்!'' என்றாள் அவளும் சினம் கூடியவளாய்.

''நேற்று நடந்ததை... உன் கையில் நான் கொடுத்த அந்த இன்பமான விஷயத்தை உன் தங்கையிடம் மறைத்து விட்டாயே.. அது பொய்தானே?''

அவன் சொன்னதும் சட்டெனெ கன்னங்கள் சூடேற திகைத்துத்தான் போனாள்.

தங்கையிடம் மறைத்தது இவனுக்கு எப்படித் தெரியும்? இவன் தெரிந்திருக்க வாய்ப்பில்லையே!''

''இல்லை. அவளுக்குத் தெரியும். நான் சொல்லி..'' அவள் பேச்செடுத்து முடிப்பதற்குள் குறுக்கிட்டாள்.

''மறுபடியும் பொய் சொல்ல வேண்டாம். நான் உன் தங்கையிடம் நேற்றே பேசிப் பார்த்து, நீ பொய் சொன்ன விஷயத்தைக் கண்டு பிடித்து விட்டேன்!''

அவன் தெளிவாய்ச் சொல்ல, அவள் வியப்பில் அதிர்ந்து இதழ்களை அப்படியே மூடிக் கொண்டாள்.

அடப்பாவி! செய்வதை செய்துவிட்டு, தங்கையிடம் போய் வேறு கேட்டுத் தொலைத்திருக்கிறானா? என்ன திமிர் இவனுக்கு?



ஆத்திரமாய் நிமிர்ந்தவள், ''வெட்கக் கேடான ஒரு செயலைச் செய்து விட்டு அதை பெரிய சாதனை போல் விசாரித்துக் கொண்டு.. சே!'' என எரிச்சலாய் முடித்தாள்.

அவனோ, ''ம்ம்... இருக்கட்டும். நீ சொல்வது போல் வெட்கக் கேடான செயலாகவே இருக்கட்டும். அதை ஏன் அம்மா.. நீ மறைக்க வேண்டும்? மறைக்காமல் சொல்லியிருக்க வேண்டியதுதானே?'' என்றான்.

''அதான் வெட்கக் கேடான செயல் என்று சொல்லி விட்டேனே! பின் எப்படிச் சொல்வது?''

''சரி.. சொல்ல வேண்டாம்! அதை விடு! இப்போது அது.. அது.. நேற்று நடந்தது பற்றி.. என்ன நினைக்கிறாய்?''

அவன் சட்டெனெ கேட்க அவளும், ''ம்..ம.. உடனே செருப்பால் அடிக்காமல் விட்டு விட்டோமே... என வருந்தத்தான் செய்கிறேன்!'' என்றாள் அதே வேகத்தோடு.

அவள் முறைப்பும் கோபமுமாய் சொல்லியும் கொஞ்சமும் அசராமல், ''என்ன இந்த முகத்தை அடித்து விடுவாயா என்ன?''. என அவள் பக்கம் தன் முகத்தைச் சாய்த்து வேண்டுமென கேட்டான் அவன்.

''ஆமாம். இது ஆசை முகம் அல்லவா... பிடித்து வைத்து கொஞ்சத்தான் போகிறேன்..'' வெறுப்பு முழுவதையும் முகத்தில் கொண்டு வந்து அவள் சொன்னபோதும், அதையும் அவன் ரசித்தவன், சட்டெனெ அவள் மூக்கைப் பிடித்துக் கிள்ளவும் செய்தான்.

''இன்னும் கொஞ்ச நாளில் நீ அதைத்தான் செய்யப் போகிறாய்'' என அவன் முணுமுணுத்தபோது, இனி

இவனிடம் என்ன பேச்சு? என்பதுபோல் திரும்பி விடுவிடு வென இறங்கிக் கொண்டிருந்தாள் அவள். அவன் மூக்கைப் பிடித்து ஆட்டிக் கிள்ளியதில் எரிச்சலானாலும் பொருட் படுத்தாமல் இறங்கிவிட்டாள்.

கீழே சிங்காரி வாட்ச்சைப் பார்த்து நகத்தைக் கடித்துக் கொண்டிருந்தவள், ஆவலாய் முன்வர சட்டென இறுக்கம் தளர்ந்து வலுக்கட்டாயமாய் புன்முறுவல் ஒன்றை படர விட்டாள் மதுமதி.

''அக்கா என்ன முடிந்ததா? ஒன்றும் பிரச்சினை இல்லையே?'' என சிங்காரி விசாரிக்க, ''ம்ம்.. போகலாம்..'' என்றபடி அவளை இழுத்துக் கொண்டு நடந்தாள் அவள்.

ஆனால் அன்று மாலை விஷயம் முழுவதையும் சிங்காரியை எதிரில் உட்கார வைத்து கொட்டி விட்டாள் மதுமதி.

''ஆ..ங்.. ஆங்... என்னவெல்லாம் கொழுப்பெடுத்து செய்திருக்கிறான். ஏன் என்னிடம் மறைத்தாய்?'' என சண்டைக்கு வந்தாள் சிங்காரி.

அவளை ஒரு வழியாய் சமாதானப்படுத்தி அமைதிப் படுத்தினாள். ''இனி நடப்பதைப் பார்ப்போம். நீயே யோசனை சொல்லு!'' என்றாள்.

சிங்காரியும் தலையில் கைவைத்தவள் தன் நெஞ்சை நிமிர்த்தியபடி பேச ஆரம்பித்தாள்.

''என்ன செய்ய? அந்த நெட்டை கொக்கிற்கு அதற்குள் காதல் முளைத்து விட்டதா? அதில் பெரிய ரோமியோ போல் கைகளில் முத்தம் வேறு? நீயும் பயந்தாங்கொள்ளி



போல் வாங்கி வந்திருக்கிறாயே.. நானாக இருந்தால் என்ன செய்திருப்பேன் தெரியுமா?''

''என்ன செய்திருப்பாய்?''

மதுமதி கேட்டதும், ஆத்திரமாய் சிங்காரி அதுவரை பேசியவள், ஒருகணம் பதில் சொல்ல முடியாமல் விழிக்கத் தான் செய்தாள்.

மறுகணம், சமாளித்து ''அது.. அது.. அறைந்திருப் பேன்...'' என முடித்தாள்.

''நானும் அதைத்தான் செய்ய நினைத்தேன். ஆனால் ஒரு ஆணைப் போய் அறைய வேண்டுமே.. என்ற தயக்கம் என்னை ஊமையாக்கி விட்டது.''

''சரி.. அறையத்தான்... இல்லை.. வார்த்தைகளி னாலாவது கடித்துக் குதற வேண்டியதுதானே?''

''அதான் அதிர்ச்சியில் ஊமையாகி விட்டேன் என்று சொன்னேனே..''

''நல்ல.. ஊமையானாய்.. போ...!'' சிங்காரி சலித்தவள், ''ஆனாலும் பாரக்கா, விஷயம் ரொம்பவும் முத்தி விட்டது. இனியும் சும்மா இருந்தால் ஆபத்து. உடனே ஏதாவது செய்தாக வேண்டும்'' எனப் பற்களை நறநறத்தாள்.

என்ன செய்ய? என்று யோசித்தபோது இருவருக்கும் வழி கிடைக்காமல் புரியாமல்தான் போனது.

''எல்லாம் அந்த ஒற்றை ஆடியோ கேசட்டை வைத்துக் கொண்டு நம்மை மிரட்டுகிறான். இனி என்னவானாலும் சரி என துணிந்து விடுவோம்.''

"ம்ம்.. நீ சொல்வது சரி.. துணிந்து விடுவோம்'' என்றாள் பதிலுக்கு மதுமதி.

"நாளை முதல் நீ ஒன்றும் அவனுக்கு சலாம் வைக்க வேண்டாம். ஏன் இனி அவன் இருக்கும் பக்கமே போக வேண்டாம். நாம் உண்டு நம் வேலை உண்டு என இருப்போம்.. சரியா?''

"ம்ம்.. சரி..''

"அப்படி நாம் அவனை சட்டை செய்யாமல் இருந்து விட்டால் அவனால் நம்மை ஒன்றும் செய்ய முடியாதென்று நினைக்கிறேன்..''

"ம்ம்... அப்படித்தான்.''

சிங்காரி ஒருகணம் திரும்பி மதுமதியை உற்றுப் பார்த்தவள் ஏதோ யோசனையில் அப்படியே அவள் கைகளைத் தட்டினாள்.

"அக்கா..''

"என்ன சிங்காரி?''

"முக்கியமாய் ஒன்று. அவன் அப்படி ரோமியோத்தனம் செய்ததினால் உனக்கு ஒன்றும் ஏற்படவில்லையே?''

"எனக்கா.. அப்படி என்ன எனக்கு?'' எனக் கேட்ட மதுமதி முதல் முறையாய் உள்ளூரத் திடுக்கிடத்தான் செய்தாள்.

"அதான்.. உன்னை ஒன்றும் அவன் சலனப்படுத்தி விட வில்லையே?'' என சிங்காரி விளக்கம் கொடுத்து



கேட்டதற்கு அவசரமாக தலையாட்டி 'சே! சே!' என மறுத்தாள்.

ஆனால் உள்ளுக்குள் மனதளவில் அவளையறியாமல் ஒருவித சலனம் எழுந்திருப்பதையும் அப்போதுதான் உணர ஆரம்பித்தாள் மதுமதி.

## 10



மறுநாள் இருவரும் திட்டமிட்டபடி மாடிப் பக்கம் எட்டிப் பார்க்கவும் இல்லை. சலாம் வைக்கவும் இல்லை. 'அக்கா! என்னிடம் விஷயத்தைச் சொல்லி விட்டாய் அல்லவா? அதைத் தெரிந்து தான் அந்த தினகரன், பொன். தினகரன் தன் பொன்னான வாயை மூடி, வாலைச் சுருட்டிக் கொண்டு விட்டான்..' என வேறு ஜம்பமடித்துக் கொண்டிருந்தாள் சிங்காரி.

ஆனால் மாலை இருவரும் சேர்ந்தாற்போல வீடு திரும்பியவர்கள் திகைக்கவே செய்தனர். தினகரனின் செய்கை அவர்களை வாயடைக்க வைத்திருந்தது.

அத்தை பூர்ணம் முன்புற வாசல் திண்டில் உட்கார்ந் திருக்க... கீழே தரையில் காலைக் கட்டியபடி பவ்யமாய் அவளிடம் பேசிக் கொண்டிருந்தான் தினகரன்.

அத்தை எதையோ கதையளந்து கொண்டிருக்க, அதை அக்கறையாய் கேட்பது போல் பாவனை வேறு!

ஆஹா! அத்தையை அல்லவா பிடித்து விட்டான்? சரியான லொட லொட கேஸ். பேசினால் நிறுத்த மாட்டாள்.

நம் வீட்டு விஷயங்களைக் கூட அன்னியன் என்றும் பாராமல் உளறிக் கொட்டி விடுவாளே!

மதுமதி பயந்தது போலத்தான் சிங்காரியும் நினைத்தாள்.

அதிலும் அவர்கள் வந்ததைக் கூட கவனியாதது போல் தொடர்ந்து இருவரும் அக்கறையாய் பேசிக் கொண்டிருந்தது எரிச்சலையே கிளப்பியது. விடுவிடுவென வீட்டினுள் நுழைந்து கொண்ட இருவரும் தொப்பென தத்தம் கட்டிலில் விழுந்து ஒருவரையொருவர் பார்த்தனர்.

''என்னக்கா... செய்வது?''

''ஒன்றும் செய்ய வேண்டாம். நம்மை தொந்தரவு செய்யவில்லை அல்லவா? எப்படியும் போகட்டும்!''

''அதுவும் சரிதான்!''

சிங்காரியும் சமாதானமடைந்தாள். இருவரும் தங்கள் வேலைகளைக் கவனிக்க ஆரம்பித்தனர். ஆனால் ஒரு மணி நேரம் கழித்து உள்ளே வந்த பூர்ணம் அத்தை தம்பி, தங்கமான தம்பி என்றபடி தினகரன் புராணத்தை ஆரம்பித்ததும் தங்களையறியாமல் காதுகளைத் தீட்டினர்.

''கல்லூரியில் வேலை பார்க்கிறான். பெரிய பேராசிரியனாம். எவ்வளவு எளிமையாய் பேசுகிறான். பழகுகிறான், தெரியுமா? நீங்களும் இருக்கிறீர்களே... உதவாக்கரைகள்!' என்றுதான் அத்தை ஆரம்பித்தாள்.

''ம்ம்.. சொல்ல வந்ததைச் சொல்லுங்கள். அதான் ரொம்ப நேரம் வம்பளந்தீர்களே..''



''நான் ஒன்றும் வம்பளக்கவில்லை. உபயோகமாய்த் தான் பேசிக் கொண்டிருந்தேன். அதுவும் யாரைப் பற்றி தெரியுமா?''

''யாரைப் பற்றி?''

''உங்களைப் பற்றித்தான்.''

ஒரே போடாக அத்தை போட்டதும் திகைக்கத்தான் செய்தனர். ஒருவேளை அத்தையிடம் காஸட் விஷயத்தை எல்லாம் தினகரன் ஊதி விட்டிருப்பானோ? என்ற பயம் முளைக்க திகிலாகினர்.

''எங்களைப் பற்றி.. என்ன.. என்ன.. அப்படி என்ன இருக்கிறது?'' படபடத்தாள் சிங்காரி.

''எல்லாம் படிப்பு விஷயம்தான்! மதுவுக்கு எம்.ஏ. படிப்பிற்கு.. உனக்கு கல்லூரி முதல் வருட படிப்பிற்கு!'' என்றதும் தான் இருவருக்கும் நிம்மதி மூச்சே வந்தது.

பூர்ணம் தொடர்ந்தாள். ''அது பற்றித்தான் பேசிக் கொண்டிருந்தேன். தங்கமான பிள்ளை. உடனே சரியென்று ஒத்துக் கொண்டான். காசு எதுவும் வேண்டாம். தினமும் டியூசன் எடுத்து பாடம் சொல்லிக் கொடுக்கிறேன்.. என்றும் தலையாட்டி விட்டான்.''

அத்தை சொன்னதைக் கேட்டு இருவருக்கும் பொசுக்கென கோபம் பீறிட்டது.

''அடடா! டியூசன் படிக்க காசில்லாமல் தட்டுத் தடுமாறி எப்படித் தவித்துக் கொண்டிருந்தோம். எவ்வளவு பெரிய உபகாரத்தை பண்ணி எங்களை உச்சி குளிர வைத்து விட்டீர்கள்.. உண்மையிலேயே.. தாங்க்ஸ் அத்தை... வெரி

வெரி.. தாங்க்ஸ் அத்தை!'' என சிங்காரி பூர்ணத்தின் கைகளைப் பிடித்து வெகுவாய் குலுக்கினாள்.

அவள் தன்னைக் கிண்டல் செய்வதைக் கூட உணராமல் பூர்ணம் தலையாட்டி ரசிக்க சிங்காரி விடாது, ''அத்தை, அப்படியே உங்கள் அருமை புதல்வன் எழிலரசனையும் அந்த தினகரன் தம்பி மூலம் படிக்க ஏற்பாடு செய்யுங்களேன். அப்படி படிக்க வைத்தால் அந்த தங்கமான தம்பியின் புண்ணியத்தில் உங்கள் செல்வ மகன் கலெக்டராகக் கூட வாய்ப்பு இருக்கிறதே..'' எனச் சொல்லிவிட்டு மேற்கொண்டும் நகைப்பை அடக்க முடியாமல் சிரித்துவிட மதுமதியும் அதில் சேர்ந்து கொள்ள... அத்தைக்கு அப்போதுதான் புரிந்தது.

''ஆரம்பித்து விட்டீர்களா உங்கள் விளையாட்டை? இருங்கள் அந்த வாத்தியார் தம்பியை வைத்து உங்கள் வாலை ஒட்ட நறுக்குகிறேன்..'' என்றபடி தன் தடிமனான மூக்குக் கண்ணாடியை சிலுப்பியபடி கைகளைத் தூக்கி மிரட்டினாள் பூர்ணம்.

''இந்த மிரட்டலுக்கெல்லாம் நாங்களாவது பயப்படுவதாவது? ஒன்று தெரிந்து கொள்ளுங்கள் அத்தை. போயும் போயும் அந்தத் தினகரனிடம் டியூசன் படிப்பதா? அதை விட சொல்லி வைத்துக் கொண்டு இருவரும் பாழும் கிணற்றில் குதித்து விடுவோம். இந்த விளையாட்டெல்லாம் எங்களிடம் வேண்டாம் புரிகிறதா?'' என மதுமதி கறாராய் ஒரு அதட்டுப் போட சிங்காரி பூர்ணம் பக்கத்தில் போய் 'வெவ்வவெவ்வே' என பழிப்புக் காட்டி விட்டு அகன்றாள்.



மதுமதி சிங்காரியிடம் தனியே, ''பார்த்தாயா? அந்தத் தினகரன் நம்மை படிய வைக்க அத்தை மூலம் முயற்சி செய்கிறான். விடக் கூடாது'' என்றாள்.

''நம்மை அல்ல.. உன்னை.. உன்னை மட்டும்..'' என திருத்தினாள் சிங்காரி.

''என்ன சொல்கிறாய் சிங்காரி?''

''நான் ஆரம்பத்திலேயே கவனித்து விட்டேன் மதுக்கா.. அவனுக்கு வந்தது முதலே உன் மீது ஒரு கண். ஒரு வித சலனம். அதான் கையில் எல்லாம் முத்தம் கொடுத்திருக்கிறான்..''

''சே! சரியான உளறல்.. இது.''

''ம்ஹூம்! இப்படி உளறுவதைத்தான் காதல் என்கிறார்கள்..''

''நீ என்னதான் சொல்ல வருகிறாய்?''

''அக்கா! எத்தனை லூசுகள் உன் அழகைப் பார்த்து போகிற வழியெல்லாம் இளிக்கின்றன. அதில் ஒரு லூசுதான் இந்த தினகரன்! அதனால் பெரிதாய் அலட்டிக் கொள்ளாமல் கவலையை விடு!''

''ஆனால் தினகரன் படித்த...'' என மதுமதி திகைப்பாய் ஆரம்பிக்க.. அதற்கும், ''ம்ம்.. படித்த லூசு!'' என மறுபடியும் திருத்தி முடித்தாள் சிங்காரி.

அத்தோடு அந்தப் பேச்சும் முற்றுப் பெற்றது. சிங்காரி அதுபற்றி சிந்தனையில்லாமல் அலைய.. மதுமதிக்கோ முழுக்க முழுக்க அதே கவலைதான்!

சிங்காரி சொல்கிறபடி, அந்த தினகரன் தன் மேல் காதல் பித்து பிடித்து அலைகிறானா?

அதனால்தான் இப்படி ரோமியோ கோமாளித்தனங்களை செய்து அவள் மனதைச் சலனப்படுத்த பார்க்கிறானா?

சொன்னானே..? வள்ளுவர் விவரித்த பார்வை ஏதோ.. காதல் பார்வை என்றெல்லாம் கூட உளறிக் கொட்டினானே?

அப்படியானால் நிஜம்தானா?

சினிமாக்களில் வரும் ஹீரோ போல் காதல் விளையாட்டை ஆரம்பித்திருக்கிறானா?

ரொம்ப நேரம் அதுபற்றி சிந்தித்தவளுக்கு தான் நினைப்பதெல்லாம் சரியென்றே தோணியது.

தினகரனின் நடவடிக்கைகளும் அதைத்தான் உணர்த்து கிறது.

தினகரன் அவளைக் காதலிக்க ஆரம்பித்திருக்கிறான்.

ம்ஹூம்! இதை விடக் கூடாது. வளர விடக் கூடாது. உடனே ஏதாவது செய்தாக வேண்டும்!

எல்லாவற்றுக்கும் மேலாய் அப்படியொரு நினைப் பெல்லாம் தனக்கில்லை என்பதை தெளிவாக அவனுக்கு உணர்த்தி அந்த எண்ணத்தை முளையிலேயே கிள்ளி யெறியும்படி செய்துவிட வேண்டும்.

அதற்கு என்ன செய்ய?

வேறென்ன செய்ய முடியும்? நேருக்கு நேர் போய் பட்டென்று பேசிவிட வேண்டியதுதான். முகத்திலடித்தாற் போல் சொல்லிவிட வேண்டியதுதான்!



மறுநாள் மதுமதி முடிவெடுத்து சிங்காரிக்குத் தெரியாமலே மதிய நேரம் போய் தினகரனைப் பார்த்தாள்.

''உங்களிடம் முக்கியமாய் ஒன்று பேச வேண்டும்..'' என்றாள் ஒருவித இறுக்கமான குரலில்.

''ம்ம்.. தாராளமாய்.. ஒன்றல்ல.. இரண்டு மூன்று கூட பேசலாம்.. நான் ப்ரீதான்...'' என்றான் அவன் நகைப்போடு.

''நீங்கள் என்னிடம் நடந்து கொள்ளும் விதம் உங்கள் செய்கைக்கெல்லாம் என்ன அர்த்தம்?'' என்றாள் கைகளைக் கட்டியபடி கேள்வி கேட்கும் தோரணையில்.

''என்ன அர்த்தம்?'' என்றான் அவன் புரியாதது போல் பதிலுக்கு.

''உங்களுக்குப் புரியவில்லை?''

''புரியவில்லை..'' என்றான் கைகளை விரித்தபடி.

''தெரிந்தும்.. தெரியாதது போல் பேசுவது ஒன்றும் பெரிய கெட்டிக்காரத்தனம் இல்லை.''

''ம்ம்.. சரி! அதை ரொம்பவும் கெட்டிக்காரத்தனமாய் உணர்ந்த நீங்களே சொல்லுங்கள் என்ன விஷயம்?''

''என்ன விஷயமா?'' எனக் குரல் உயர கொதிப்பாய் கேட்டவள், ''என்னை நீங்கள் காதலிக்க ஆரம்பித் திருப்பது..? அதற்காக ரோமியோச் சேஷ்டைகள் எல்லாம் செய்து.. என்னை தொந்தரவு படுத்த ஆரம்பித்திருப்பது...? இதற்கெல்லாம் என்ன அர்த்தம்? பதில் சொல்லுங்கள்!''

மூச்சு வாங்க அவள் கேட்க அவன் ஓரிரு நிமிடம் பேசாமல் அவள் முகத்தையே உற்றுப் பார்த்து விட்டுக் கேட்டான்.

''உன்னை நான் காதலிக்கிறேனா? எந்த முட்டாள் அப்படிச் சொன்னது? போயும் போயும் இந்த மூஞ்சியைக் காதலிக்க நான் ஒன்றும் மடையன் இல்லை!''

தெள்ளத் தெளிவாய் அவன் வார்த்தைகளை உச்சரிக்க அப்படியே அதிர்ந்து போனாள் அவள்.

மறுகணமே அவன் சொன்னதைக் கேட்டு கொதிநிலையின் உச்சத்திற்கு ஒரு கணம் போனவள், அவனைத் தற்செயலாய் பார்க்க அவன் அவள் முகத்தையே ஒருவித குறும் புன்னகையுடன் பார்ப்பது கண்டு அவன் விளையாடுகிறான் என்பதும் தெரிந்தது.

''ஹலோ மிஸ்டர்.. சும்மா நடிக்காதீர்கள். பின் இந்த மூஞ்சியின் கைகளில் ரோமியோ போல் முத்தமிட்டது எல்லாம் எதனால்.. சொல்லுங்கள்?''

''அ.. ன்.. பு!'' என்றான் அவன் அமைதியாய்.

''அன்பா? என்ன உளறல் இது? அதுதானே அந்தக் காதல்?''

''அதுதான் இல்லை... என்கிறேன். அன்பு வேறு. காதல் வேறு. வயதான பாட்டி தாத்தா மேல் பிரியம் காட்டுகிறோமே.. அதுதான் அன்பு. அந்த அன்பைத்தான் பிரியமாய் உன்னிடம் காட்டினேன். நீ புரிந்து கொள்ள வில்லை!''

''நீங்கள் அப்படி ஒரு அன்பைக் காட்டுவதற்கு நான் ஒன்றும் பாட்டி இல்லையே!''

''ஆனால் உங்கள் வீட்டில் ஒரு பாட்டி இருக்கிறார்களே?''



''பாட்டியா.. யார் அது?''

''பூர்ணம் பாட்டி.''

பூர்ணம் அத்தையை அவன் தெளிவாய் பூர்ணம் பாட்டி என கேலியாய் உச்சரிக்க பக்கென தன்னை மீறிச் சிரித்து விட்டாள் அவள்.

அவள் பளீரிடச் சிரிப்பதை உற்றுக் கவனித்து விட்டு ''ஆஹா! முத்துப் பல் அழகி!'' என்றான்.

அவள் மறுகணமே நகைப்பை நிறுத்தி முகம் சுருங்கினாள்.

''இதான்.. இந்த சேஷ்டையைத்தான் கண்டிக்கிறேன். இதற்கு பெயர் என்ன? சொல்லுங்கள்!'' என்றாள் கறாராய்.

''ஒ.. இது.. புகழ்ச்சி! உன் அழகை ரசிக்கிறேன். புகழ்கிறேன். இதற்கு அனுமதி தேவையில்லையே!''

''ஓஹோ..''

''ஓஹோதான்!'' என அவளைப் போலவே சொல்லிக் காட்டியவன், புருவம் உயர்த்தியபடி, ''மிஸ். மதுமதி, ஒரு விஷயம். போகிற போக்கைப் பார்த்தால் எனக்கு ஒன்று சொல்லத் தோன்றுகிறது, சொல்லி விடட்டுமா?''

''என்ன சொல்லுங்கள்!''

''இன்னும் கொஞ்ச நாளில் தூக்கத்தையெல்லாம் தொலைத்து விட்டு ஒருவரது நினைப்பில் அலையோ அலை என்று நீங்கள் அலையப் போவதாய் என் மன பட்சி சொல்கிறது.''

''அந்த ஒருவர் நீங்கள் தானே? ஆமாம்! இனி உங்களது நினைப்பில் தலையை விரித்துக் கொண்டு தினம் தினம் வீட்டில் நான் ஆடிக் கொண்டிருப்பேன். வந்து பார்த்து விட்டுச் செல்லுங்கள். சரிதானா?'' என்றபடி திரும்பி 'வெவ்வவெவ்வே' என பழிப்புக் காட்டிக் கொண்டு படிகளில் இறங்கினாள் மதுமதி.

## 11



மதுமதிக்கு தினகரன் உண்மையாகச் சொல்கிறானா? அல்லது சிங்காரி சொல்வதுபோல் காதல் பித்து கொண்டிருக்கிறானா.. என்பதில் சந்தேகமாய்த்தான் இருந்தது.

ஆனால் தொடர்ந்து அதுபற்றி யோசிக்கவோ அதற்காக கவலைப்படவோ அவள் விரும்பவில்லை. அவன் என்ன நினைப்பில் பழகினாலும், முயற்சி செய்தாலும், அவள் ஒன்றும் சலனப்படப் போவதில்லை. பின் வீணாக அதற்காக அலட்டிக் கொள்ளத் தேவையில்லை என்ற முடிவிற்கும் வந்தாள் அவள்.

பூர்ணம் அத்தைதான் விடாது அவளை எம்.ஏ. படிப்பிற்கான டியூசன் செல்லும்படி வற்புறுத்தினாள். அவள் பேசாமல் இருக்கவே தந்தையிடம் போய் சொல்லி தினகரனிடம் டியூசன் செல்ல முயற்சி செய்தாள்.

பேசாமல் வீட்டிலேயே படித்தால் அவ்வளவு ஆர்வம் ஏற்படாதாம். படிப்பை பாதியிலேயே விட்டு விடுவாளாம். தினகரன் மாதிரி ஒரு பேராசிரியர் வழிகாட்டினால்



விரைவாக படித்து விடலாமாம். டிகிரியும் வாங்கி விடலாமாம்... என அத்தை என்னென்னவோ சொல்லி தந்தையை குடைச்சல் கொடுக்க தந்தையும் மனம் மாறினார்.

''அத்தை சொல்வது போல் படித்தால் நல்லதுதானே? நீ ஏன் டியூசன் செல்லக் கூடாது?'' என வினவ பதில் சொல்ல முடியாமல் விழிக்கத்தான் செய்தாள் அவள்.

கடைசியில் வேறு வழியில்லாது இருவரின் வற்புறுத்தலுக் காக அவள் சம்மதிக்க வேண்டியதாயிற்று. சிங்காரியிடம் போய், ''என்ன இப்படி ஆயிற்றே? இனி என்ன செய்வது?'' என அவள் திகைத்துக் கேட்க, சிங்காரி உற்சாகமாய் மதுமதியின் தோள்களைத் தட்டி சிரித்தாள்.

''இப்போது புரிந்து விட்டது. சரியான பிளான் கிடைத்து விட்டது..'' என்றாள்.

''என்ன சொல்கிறாய்?''

''அக்கா, இப்போதுதான் அந்த தினகரன் நம்மிடம் வீணாக வாலாட்டி பிளாக் மெயில் செய்த தினகரனை, பழிவாங்க சரியான சந்தர்ப்பம் அமையப் போகிறது.''

''எப்படி, நீ சொல்வது புரியவில்லையே?''

''கொஞ்சம் யோசித்துப் பார். உனக்கே புரியும்.''

சிங்காரி தலையசைத்துக் கேட்க தனது காது மடல்கள் அதிர தலையாட்டி மறுத்தவள், ''நீயே சொல்லு..!'' என்றாள்.

''இந்த டியூசன் நாடகம் எல்லாமே தினகரனின் பிளான்தான்! அவன்தான் அத்தையிடம் வலியப் பேசி

பெரிதாய் உதவுவது போல் படம் காட்டி உன்னை தினமும் வரவழைக்கப் பார்க்கிறான். அவனது நோக்கமே உன்னை அப்படி வரவழைத்து காதல் செய்வதுதான்.''

''அப்படியா?''

''என்ன அப்படியா.. என்கிறாய்? இது கூடவா உனக்குப் புரியவில்லை. அவன் உன் மேல் காதல் பித்து கொண்டுதானே கைகளில் முத்தம் எல்லாம் கொடுத்து..''

''அப்படி ஒன்றும் இல்லவே இல்லை... என்று என்னிடம் சொன்னாரே..'' இடைமறித்தாள் மதுமதி.

''ம்ம்.. அப்படித்தான் சொல்வார். பின் எனக்கு உன் மேல் காதல் பித்து இருக்கிறது. நான் உன்னைக் காதலிக்கிறேன் என யாரும் உடன் ஒத்துக்குவார்களா?''

''அப்படியானால்... தினகரன் மறுபடியும் ஏதோ பிளான் செய்துதான் என்னை அவனிடத்திற்கு தினம் வரவழைக்கப் பார்க்கிறான் என்கிறாயா?''

பலமாய் தலையாட்டினாள் தங்கை.

''அதேதான்! இப்போதாவது புரிந்து கொண்டாயே? அவன் செய்வது காதல் ப்ளான். அதனால் இது ஒரு சரியான சந்தர்ப்பம். நாம் திட்டமிட்டபடி அவனை எளிதாய்ப் பழிவாங்கி விடலாம்..''

''எப்படி? கொஞ்சம் விளக்கமாய் சொல்லு!'' என்றாள்.

நிதானமாய் விவரித்தாள் சிங்காரி. ''அவன் உன்னைக் காதலிக்க முயற்சி செய்கிறான் அல்லவா? பதிலுக்கு நீயும் அவன் காதலை ஏற்றுக் கொள்வது போல் அவனை



காதலிப்பது போல் நடி. அவன் நன்கு உன் வலைக்குள் விழுந்ததும்... காதலும் இல்லை, கத்திரிக்காயும் இல்லை... என அவன் முகத்திலடித்தாற் போல் கூறு.. அவன் திகைத்து விடுவான். நாமும் நமக்குத் தொல்லை கொடுத்த அவனை இதன் மூலம் பழிவாங்கி விடலாம்! என்ன சொல்கிறாய்?''

சிங்காரியின் யோசனையைக் கேட்டு அலறத்தான் செய்தாள் மதுமதி.

''ஐயோ! இது.. என்ன வம்பு? என்னால் எல்லாம் அப்படி நடிக்க முடியாது! சே! என்ன ஒரு மடத்தனம்!'' என்றாள் தலையில் தட்டியபடி மதுமதி.

''ஐயோ! மடத்தனம் ஒன்றும் இல்லை! அக்கா, நீயே யோசித்துப் பார். அந்தத் தினகரன் எங்கிருந்தோ வந்தவன். நமக்கு விருப்பமில்லாமல் நம் வீட்டு மாடிக்கு குடி வந்து நம் சுதந்திரம் எல்லாவற்றையும் பறித்தவன். அப்பாவையும் அத்தையையும் பேச்சில் மயக்கி தன் கைக்குள் போட்டுக் கொண்டு.. இப்போது நம் குடும்பத்துக்குள் நுழையப் பார்க்கிறான். அவனை அப்படிப்பட்டவனை சும்மா விடலாமா? அவனது கொட்டத்தை நிறுத்த ஏதாவது வழி செய்தாக வேண்டுமே?

''அதற்காக இப்படியா?''

''ஏன்.. இது வெறும் நடிப்புதானே? இதில் எதற்கு நீ பயப்பட வேண்டும்?''

''பயமில்லை. வீணாகப் போய் ஒருவரை ஏமாற்றுகிறோமே... என்ற கவலைதான் ஏற்படுகிறது!''

''ம்ஹூம்! அந்த கொழுப்பெடுத்தவனுக்கு போயெல்லாம்.. இரக்கம் கொள்கிறாயே! நல்ல பெண் நீ!''

தங்கை அலுக்க.. அவளையே உறுத்துப் பார்த்தாள் மதுமதி.

''சரி.. நீ சொல்வது போல் நடித்து ஏமாற்றினால் என்ன நடக்கும்?''

''என்ன நடக்கும்..? அவன் அந்தக் காதல் தோல்வியைத் தாங்க முடியாமல் ரூமையே காலி செய்து விட்டுப் போய் விடுவான். நமக்கும் பிரச்சினை எல்லாம் தீர்ந்து போய்விடும். புரிகிறதா?''

''இதுவெல்லாம் பேச நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் பேச்சுப்படி நடக்குமா?''

''நடக்கத்தான் செய்யும். நீ மட்டும் நடிக்க வேண்டும்.. மது!'' மறுபடியும் சிங்காரி அதே பாயிண்டுக்கு வந்து அவளை வற்புறுத்தினாள்.

சிங்காரி சொல்லியும் மதுமதிக்கு உடன்பாடு இல்லைதான். ஆனால் சிங்காரியோ விடாது நச்சரித்தாள்.

''மது, கொஞ்சம் பின்னோக்கி யோசித்துப் பார். அந்த தினகரன் நம் பேச்சை கேஸட்டில் பதிவு செய்து கொண்டு என்னமாய் மிரட்டினான். தினம் சலாம் வை... வணக்கம் வை... என உன்னை எப்படியெல்லாம் துன்புறுத்தினான். அதெல்லாம் எவ்வளவு பெரிய விஷயம்? எப்படிப்பட்ட அவமானம்? அதற்கு நாம் தகுந்த பதிலடி கொடுக்க வேண்டாம்?''



என்னென்னவோ சமாதானங்களைக் கூறி அவளை வற்புறுத்தினாள். கடைசியில் மதுமதியை தனது திட்டத்திற்கு சம்மதிக்கவும் வைத்தாள் சிங்காரி.

அதைவிட அவள் போட்டுக் கொடுத்த 'டிப்ஸ்' போன்ற பிளானும் மதுமதியை அதிரவே வைத்தது.

''நீ வேறு ஒன்றும் செய்ய வேண்டாம். தினம் கண்ணாடி முன் நின்று சீவிச் சிங்காரித்துக் கொண்டு போ. அவன் எது சொன்னாலும் ஈயென இளித்து அத்தனை பல்லையும் காட்டு. அவன் உடனே காதல் என்று நம்பி விடுவான். அதுபோதும்!''

சிங்காரி சொல்லும்போது எளிதாகத்தான் மதுமதிக்குத் தோன்றியது. ஆனாலும் தினகரனின் அந்த நெடு நெடு உயரமும் பிடறி உலுக்கியபடி இருக்கும் பொலிவான அந்தக் கம்பீரமும், அவன் பார்க்கும் அவனது சிங்கப் பார்வையும் இவனை நடித்து ஏமாற்றுவது, முடியுமா? எனத்தான் ஒருபுறம் மலைக்க வைத்தது.

அத்தைக்கும் அப்பாவிற்கும் அவள் படிக்க வேண்டும். சிங்காரிக்கு பழிவாங்க அவள் நடிக்க வேண்டும் என மற்றவர்களின் கட்டாயத்திற்காக பலியாடு போலத்தான் டியூசன் கிளம்பினாள் மதுமதி.

தினம் மதியம் ஒரு மணியிலிருந்து இரண்டு மணி வரை டியூசன் என ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சரியான உச்சி வெயில் மண்டையைப் பிளக்கும் நேரத்தில் டியூசனா? என அவள் வினவிய போது 'அவனுக்கு அதுதான் ஃப்ரீடைமாம்.

மற்ற நேரமெல்லாம் கல்லூரி வேலை. மாணவர்களுக்கான கோச்சிங்... என அவன் பிஸியாம்!'' என்ற பதில் வந்தது.

''நீ வீட்டில் சும்மாதானே இருக்கிறாய்? அந்த நேரத்தில் படித்து வந்து விட்டு மற்ற நேரம் ஓய்வெடுக்கலாமே'' என தந்தை சொல்ல தலையாட்டி சம்மதம் சொல்லியிருந்தாள்.

அன்று முதல் நாள் டியூசனுக்கு தனது தபால் வழி மூலம் கிடைத்த பயிற்சி புத்தகங்களை பாடத் திட்டங்களை எல்லாம் சுமக்காத குறையாய் எடுத்துக் கொண்டு மாடிக்குச் சென்றாள். அவள் வருவதை உணர்ந்து தயாராய் தினகரன் இருந்தான். டேபிள் சேர் போட்டு பள்ளி மாணவி போல் அவளுக்கு மேஜையுடன் கூடிய இருக்கை சிறிய கரும்பலகை, நாலைந்து சாக்பீஸ்கள் சரிதான்... சரியான வாத்யார்தான் இவன்!''

நகைப்பாய் நினைத்தவள் கண்களால் தேடுவது போல் பாவனை செய்தாள்.

''என்ன பார்க்கிறாய் நீ?''

''வாத்யார் போல்.. ஆகி எல்லாமே இருக்கிறது. அது.. பிரம்பு இல்லையா?'' என்றாள் துடுக்காய்.

''பிரம்பு இல்லாவிட்டால் என்ன? குட்ட கைகள் இருக்கிறதே!'' என கைகளை விரித்துக் காட்டினான் தினகரன்.

தங்களையறியாமல் இருவருக்கும் சிரிப்பு வந்து விட்டது. அது ஒன்றுதான் இருவரும் நகைக்கும்படி பேசியது. அதன் பின் அவன் சீரியசாக பாடங்களைப் பற்றி விளக்க ஆரம்பித்து விட்டான்.



மதுமதிக்கும் பாடத் திட்டங்களில் நிஜமான ஆர்வம் இருந்ததால் அவள் அவன் விளக்கங்களை கவனித்து குறிப்பெடுத்து அதிலே ஆழ்ந்து விட்டாள்.

டியூசனின் பாதி மணி நேரம் முடிந்தபோது தான் சிங்காரியின் கூற்று அவன் சொல்லிக் கொடுத்த பிளானெல்லாம் ஞாபகம் வந்தது.

இவள் ஒருத்தி.. இப்படியெல்லாம் சிரித்து மயக்கச் சொல்கிறாளே! என வியப்பாய் நினைத்தவள் அதை சோதித்துப் பார்க்க வேண்டும் எனவும் ஆவல் கொண்டாள்.

அதனாலே அக்கறையாய் பாடம் நடத்திக் கொண்டிருந்தவனை நேருக்கு நேர் கண்கள் விரியப் பார்த்து வேண்டுமென்றே இதழ்களில் மயக்கும் சிரிப்பொன்றை உதிர விட்டாள்.

மதுமதி அப்படிச் செய்ய செய்ய தினகரனை விட அவளுக்குத்தான் என்னவோ ஒன்று ஏற்பட்டு திடுக்கிட வைத்தது.

## 12



தினகரனை அப்படி ஒரு மயக்கும் பார்வை பார்க்க முயற்சி செய்த மதுமதி உண்மையில் திடுக்கிடவே செய்தாள்.

அவள் ஒவ்வொரு முறை விழிகளை விரித்துப் பார்க்க முயற்சிக்கும் போதும் அவனது ஊடுருவும் பார்வையைத் தாங்காமல் அவளது விழிகள் தானாய் பின்வாங்கியது.

மீறிப் பார்த்தாலும் அவனது முக வசீகரத்தில் அவளுக்குள்ளே ஒருவித தடுமாற்றம் ஏற்படுவது போல் பயத்தையும் கொடுத்தது. சிங்காரி சொன்னதற்காக இரண்டு மூன்று முறை முயன்று பார்த்தவள், ம்ஹூம்! இதெல்லாம் நமக்குச் சரிப்பட்டு வராது என்பதுபோல் பின்வாங்கி விட்டாள்.

கடைசியில் அன்றைய டியூசன் எவ்வித சுவாரசியமுமில்லாமலே முடிந்தது. சோர்வுடன் புத்தகக் குவியலை எடுத்துக் கொண்டு சலிப்பாய் இறங்கினாள் அவள்.

அன்று மாலை வந்த சிங்காரி பரபரவென அவளைப் பிடித்துக் கொண்டாள். "என்னாயிற்று? காதலை ஆரம்பித்து விட்டாயா? என்ன செய்தான் அந்த மன்மதன்?" என்றாள் ஆவலாய்.

"ஒன்றும் முடியவில்லை" என கைகளைத்தான் விரித்தாள் மதுமதி.

"என்ன முடியவில்லையா... என்ன சொல்கிறாய்?"

மதுமதி தினகரன் பாடத்தில் ஆழ்ந்து அதிலே கவனமாய் நடத்த ஆரம்பித்ததை விவரித்தாள்.

பெரிய மனுஷியாய் தலையில் அடித்துக் கொண்டாள் சிங்காரி. "நல்ல பெண் நீ! அவன் என்ன பெரிய விசுவாமித்திரரா? நீ நினைத்தால் முடியாதது? லேசாக ஒரு சிரிப்பு சிரித்து கண்ணைக் காட்டினால் அவன் இறங்கி விட மாட்டானா? இதற்கும் ஒருத்தி வந்து உனக்கு பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டும் போலிருக்கிறதே..!" என சலிக்கத்தான் செய்தாள்.



ஆனால் அப்படிச் செய்யும்போது தனக்குள் எழுந்த சில தடுமாற்றங்களை அவளிடம் சொல்ல விரும்பாதவளாய் மதுமதி, "நீ நினைப்பது போல் இல்லை.. அது ரொம்பக் கஷ்டம்!" என்றாள்.

"எது காதலிப்பதா...? காதலிப்பது போல் நடிப்பதா? அது.. அது.. தான் ரொம்பவும் ஈஸி ஒன்றைத் தெரிந்து கொள். தினமும் நான் காலேஜுக்குப் போகும் போது நடைபாதையில் பஸ் ஸ்டாப்பில் எத்தனை கிராக்குகள் என்னைப் பார்த்து இளித்து நூல் விட்டுப் பார்க்கும் தெரியுமா? பதிலுக்கு நானும் ஒரு 'லுக்' கொடுத்து அவர்களை எப்படியெல்லாம் அலைய விட்டு ரசிப்பேன் தெரியுமா?"

"அப்படியா? நீ இப்படியெல்லாம் செய்வது தந்தைக்கு தெரிந்தால் உன் முதுகில் இரண்டு போடாவது போட மாட்டாரா?" பெரும் சாதனை போல் சொன்ன சிங்காரியை மடக்கினாள் மதுமதி.

அதற்கும் சிங்காரி அசராமல், "தந்தை என் முதுகில் போடுவது இருக்கட்டும். ஆனால் நீ இன்னமும் இப்படி உலகம் தெரியாத அப்பாவியாய் விழித்துக் கொண்டிருந்தால்... இந்தப் பொல்லாத சமூகம் உனக்கு சரியான பாடம் கற்பித்து விடும்.." எனச் சொல்லி மதுமதியும் விடாமல் "அப்படி நடந்தால் அதுவும் வசதிதான். அந்தப் பாடத்தை யாவது படித்து ஈஸியாய் எம்.ஏ. டிகிரியை வாங்கி விடுவேன்" என்றாள் சிரிப்பு பொங்க.

சிங்காரியும் சேர்ந்து ரசித்து சிரித்தவள், கூடவே கைகளை பரபரவென தேய்த்தாள்.

''ஆனாலும்.. பாரக்கா... நம்மை இந்தப் பாடு படுத்திய அந்தக் கோமாளியை எப்படியாவது மட்டம் தட்டி, சிக்கலில் மாட்டி பழி வாங்க வேண்டும்.. என மனது பரபரக்கிறது. ஆனால், நீதான் புரிந்து கொள்ள மாட்டேன் என்கிறாய்..''

''ஐயோ! சிங்காரி..! எனக்கும் புரியத்தான் செய்கிறது. ஆனால் நீ நினைப்பது போல் இது சுலபமல்ல..''

''அப்படியானால்.. நான் வேண்டுமானால் முயற்சித்து பார்க்கட்டுமா?''

சர்வ சாதாரணமாய் சிங்காரி கேட்க திடுக்கிட்டுத் தான் போனாள் அவள்!

''என்ன.. என்ன சொன்னாய்? நீயா? ஏய்... ஏய்.. உனக்கு என்னாயிற்று?''

''ம்...ம்.. அதிலென்ன தப்பு? உன்னால் முடியவில்லை என்றால்.. நான் கோதாவில் இறங்குகிறேன். அந்த தினகரனை ஒன்றில் இரண்டு பார்த்து விடுகிறேன்..'' கைகளைச் சுண்டி முஷ்டியை மடக்கிக் காட்டினாள் சிங்காரி.

''சரிதான்.. நல்லா இருக்கும்மா கதை..! ஏதோ சின்னப் பெண் என்று பார்த்தால் வாய்க்கு வந்தபடி நீ பாட்டுக்குப் பேசிக் கொண்டு போகிறாயே..? உன்னை.. உன்னை..'' போலியாய் முறைத்தாள் மதுமதி.

''ஆமாம்..ஆமாம்... நான் சின்னப் பெண்! நீ எண்பத்தாறு வயசு கிழவி.. பாரேன்..'' என அதற்கும் முகத்தை ஒரு நொடி நொடித்து சிங்காரி சிரிக்க, ''ஏய்.. லூசு... சும்மா இரு!'' என செல்லமாய் அதட்டுப் போட்டு அவள் தலையை லேசாய்த் தட்டினாள் மதுமதி.



அதற்கும் ''ஐயோ! நான் லூசு இல்லை அக்கா... மரமண்டை! மறந்து விட்டாயா? அப்பா வைத்த பெயர்!'' என விளக்கம் கொடுத்து சிரித்தாள் சிங்காரி.

அத்தோடு அந்த தினகரன் பேச்சு முற்றுப் பெற்று விட்டது.

அடுத்து வந்த இரண்டு தினங்களும் மதுமதி வழக்கம் போல் தினகரனிடம் டியூசன் சென்றாள். வந்தாள்.

சிங்காரியும், தவறாது 'ஒன்றும் நடைபெறவில்லை தானே?' என கேள்வி கேட்பதும் மதுமதி உதட்டைப் பிதுக்கி காட்டுவதும் வழக்கமாயிற்று.

''ம்கூம்! நீ தேறாத கேஸ்! இது சரிப்படாது. அவனைப் பழிவாங்க நான் வேறு வழி தேடிக் கொள்கிறேன்!'' என சிங்காரி வீரப்பாய் சூளுரைத்துக் கொண்டாள்.

மதுமதி அதற்கும் சிரிக்கவே செய்தாள். அவளுக்கும் சிங்காரியைப் போல் தினகரனை ஏதாவது செய்து அவனை மூக்கறுக்க வேண்டும் என்ற கோபம் இருக்கத்தான் செய்தது. ஆனால் டியூசனின் போது அவன் கொஞ்சமும் விளையாட்டுத் தனமில்லாமல் சீரியசாய் அக்கறையுடன் பாடங்களை நடத்துவது கண்டு அவள் அதிரவே செய்தாள்.

அப்படி பாடத்தில் கண்ணும் கருத்துமாய் இருப்பவனிடம் போய் சிங்காரி சொன்ன ஆளை மயக்கும் பார்வை, வினோத வசீகரச் சிரிப்பு சிரிப்பதெல்லாம் சில்லரைத் தனமாய் மதுமதிக்குத் தோன்றியது.

அதனாலே அவளும் தன்னையறியாமல் பாடங்களில் அக்கறை கொண்டு படிக்க ஆரம்பித்தாள்.

இப்படியாக ஒரு வாரம் ஓடி விட்டது.

அன்று வழக்கம் போல் மதுமதி எழுந்து காலண்டர் தேதியைக் கிழித்தவள் அப்படியே தினத்தைப் பார்த்து கற்சிலை போல் நின்று விட்டாள்.

பின்னால் காபி கோப்பையுடன் வந்த சிங்காரி அவள் அப்படி பிரமையாய் நிற்பதைப் பார்த்து தோள்களைத் தட்டி உலுக்கினாள்.

பதிலுக்கு தன் சுட்டு விரலால் அன்றைய தினத்தைக் காட்டினாள் மதுமதி.

சிங்காரி புரியாமல் பார்த்தவளுக்கு அவள் காட்டிய காலண்டர் தேதியைப் பார்த்ததும் சகலமும் புரிந்து போயிற்று.

''அக்கா, நீ இன்னும் அதை மறக்கவில்லையா? அந்த தேதியைக் கூட ஞாபகம் வைத்துக் கொண்டிருக்கிறாயா?''

முகத்தில் கவலை பொங்க வறட்டுச் சிரிப்பு சிரித்தாள் மதுமதி.

''நீயே.. ஞாபகம் வைத்துக் கொண்டிருக்கிறாய். சம்பந்தப்பட்ட என்னால் மட்டும் மறந்து விட முடியுமா?''

''அது.. அது.. ஒரு கெட்ட... கெட்ட... கனவு! மறந்துவிடு அக்கா..!''

''கெட்ட கனவுதான்! ஆனால் நிஜமாக நடந்து விட்டதே..''

''நடந்ததற்காக.. வருந்தி பிரயோஜனமில்லையே..!''

''வருந்தி.. பிரயோஜனமில்லைதான்! அதற்காக நினைக்காமல் இருந்துவிட முடியுமா?''



''சரி! நீ முதலில் இப்படி வா!'' என அவளை தோளோடு அணைத்து பக்கத்து நாற்காலி இருக்கையில் கொண்டு போய் உட்கார்த்தி வைத்தாள் சிங்காரி.

பின் அவள் குனிந்த தலையை நிமிர்த்தி நேருக்கு நேர் அவள் கண்களைப் பார்த்தவள் படபடவென இமைகளைச் சிமிட்டியபடி பேசினாள்.

''இதோ பார்... என் அக்கா மதுமதி... நல்ல அக்காவாம்.. துணிச்சலான அக்காவாம்.. பழசை எல்லாம் நினைத்து நினைத்து குமைந்து போகிற பயந்தாங்கொள்ளி அக்கா இல்லையாம்... எங்கே நான் சொன்ன மாதிரி தைரியம் கொண்டு.. என்னைப் பார்த்து சிரி.. பார்ப்போம்.. சிரி..! சிரி..! சிரி..!''

சிங்காரி முகத்தை ஆட்டி ஆட்டி கண்களை மேலும் கீழும் உருட்டி சொன்ன விதத்தைப் பார்த்து மதுமதிக்கு நிஜமாகவே சிரிப்பு வந்து விட்டது.

பக்கென சிரித்து விட்டாள்.

''ஹப்பா...! அக்கா சிரித்து விட்டாள்! ம்ம்.. அப்படி சிரித்துக் கொண்டே காபியைக் குடி.

''அதுவும் இது பேஷ்.. பேஷ்.. காபி! ரொம்ப நன்னா இருக்கும். குடி பார்ப்போம்..'' என அவள் கைகளில் கோப்பையை திணித்தாள்.

சிரிப்பு மாறாமல் குடித்தாள் மதுமதி.

சிங்காரி அவளையே உற்றுப் பார்த்து விட்டு அதைச் சொன்னாள்.

"ஆனாலும்.. கள்ளம் கபடமில்லாத உன் வாழ்க்கையில் போய் அப்படி ஒரு சம்பவம் நடந்து இருக்கக் கூடாது. அக்கா! நினைத்தாலே எரிச்சலாய்த்தான் இருக்கிறது. எவ்வளவு பெரிய ஏமாற்றம். அது!"

"எல்லாம் விதி!" என்றாள் மதுமதி. சுருக்கமாக... அதுபற்றி மேற்கொண்டு பேச விரும்பாதது போல்.

"ஆமாம்.. பொல்லாத விதி! இப்படித்தான் சினிமாக்களில் கதாநாயகிகள் வசனம் பேசுவார்கள். உடனே கேமிராவும் ஒரு வறண்ட பாலைவனத்தை... அதில் இருக்கும் முள் மரத்தைக் காட்டும். பின் கதாநாயகியின் முகம் க்ளோசப்பாய் காண்பிக்கப்பட்டு அதில் வட்ட வட்ட கோடுகள் தோன்றி சுற்ற ஆரம்பிக்கும். அதாவது பிளாஷ் பேக்காம்!.." எனச் சொன்னவள் நிறுத்தி "அக்கா உன் கதைக்கும் ஒரு பிளாஷ்பேக் போடட்டுமா?" என்றாள்.

## 13



சிங்காரி சொன்னது போல் அப்படி ஒரு சம்பவம், ஒரு நிகழ்ச்சி மதுமதியின் வாழ்க்கையில் நடைபெறும் என கனவில் கூட யாரும் நினைக்கவில்லை.

ஆனால் நிஜத்தில் நடந்து அவளை மட்டுமில்லாமல் குடும்பத்தையே ஸ்தம்பிக்க வைத்து விட்டதே!

சரியாக எட்டு மாதங்களுக்கு முன் நடந்த நிகழ்ச்சி அது.

அப்போது தில்லைநாயகம் பணி நிமித்தம் காரணமாய் தஞ்சாவூரில் தங்கி இருந்த காலம். சிங்காரி ப்ளஸ் ஒன் படிக்க... மதுமதி இளங்கலை படிப்பை முடித்திருந்தாள்.



மேற்கொண்டு படிப்பைத் தொடரவா வேண்டாமா என மதுமதி யோசித்துக் கொண்டிருந்த நேரம்.

அப்போதுதான் கல்யாணத் தரகர் ஒருவர் தற்செயலாய் மதுமதியை பார்த்துவிட.. அக்கம் பக்கம் விசாரித்து அவளைப் பற்றிய முழு விவரங்களையும் தெரிந்து கொண்டார்.

நேராக தில்லை நாயகத்திடம் பேச வந்து விட்டார். நல்ல வரன் ஒன்று இருக்கிறதாம். மாப்பிள்ளைக்கு அரசாங்கத்தில் உயர் அதிகாரி பதவியாம். கை நிறைய சம்பளமாம். பெண் வீட்டில் இருந்து பணம், நகை என்ற பெரிய எதிர்ப்பு ஒன்றும் இல்லையாம். பெண் நல்ல அழகுடன் இருக்க வேண்டும் என்பது தான் அவர்களது ஆசையாம்!

தரகர் பாட்டுக்கு கடகடவென சொல்லிக் கொண்டு போக தில்லைநாயகம் அதிரத்தான் செய்தார். "நான் ஒன்றும் வரன் தேடவில்லையே.. யாருக்கு வரன் சொல்கிறீர்கள்?" என்றார் அப்பாவியாய்.

தரகர் சிரித்தபடி, "வேறு யார்? அழகுச் சிலை போல் இருக்கும் உங்கள் பெண்ணிற்குத்தான் சொல்கிறேன்!" என்றார்.

"யார்.. மதுமதிக்கா? அவள் இப்போதுதானே டிகிரி முடித்திருக்கிறாள். அதற்குள் என்ன அவசரம்?"

"அவசரம் இல்லைதான். ஆனால் நான் கொண்டு வந்திருப்பது நல்ல இடம்.."

"நல்ல இடமா?"

''ம்ம்... அரசாங்க உத்யோகம். மிக உயர்ந்த பதவி சிறு வயதிலேயே இப்படிப்பட்ட உயர் பதவியை அடைந்திருக் கிறார் என்றால்.. மாப்பிள்ளை.. திறமையானவர் என்பது எளிதில் புரிந்து விடும். மேலும் மாப்பிள்ளையின் குடும்பம் நகரிலே மதிப்பு பெற்ற கௌரவமான குடும்பம். உங்கள் வீட்டுப் பெண்ணை அவர்களது இல்லத்தில் ஒருத்தி யாகவே இன்முகமாக நடத்துவார்கள். நீங்கள் நன்றாக யோசியுங்கள்..'' என்றார்.

தில்லைநாயகம் யோசனையோடு தலையாட்டி அவரை அனுப்பி வைத்தார். அன்று மாலையே மதுமதியிடம் விஷயத்தைச் சொல்லி அபிப்பிராயத்தைக் கேட்டார்.

மதுமதிக்கு ஆச்சரியம்! என்ன 'கல்யாண வரனா...? எனக்கா..? என்னப்பா இது?' என திகைத்துதான் போனாள்.

ஆனால் தில்லைநாயகம் தான் வெவ்வேறு கோணங் களில் யோசித்துப் பார்த்தார். தனது வயதான நிலை; தாயில்லாத இரண்டு பெண்களை கரையேற்ற வேண்டிய சூழ்நிலை. பின்னாளில் நல்ல வரனுக்காக பல தரகர்களைத் தேடி அலைய வேண்டிய நிலையும் ஏற்படுமே என்ற பயமும், என எல்லாம் மனதுள் தோன்றிவிட 'ஏன் இப்படி ஒரு நல்ல வரன் வலிய வருகிறபோது, நாமும் முயற்சித்துப் பார்க்கலாமே?' என்ற முடிவுக்கு வந்தார்.

அதனாலே தரகருடன் சென்று மாப்பிள்ளையை, அவர் குடும்பத்தையெல்லாம் நன்கு பார்த்து விசாரித்து வந்தார்.

தரகர் சொன்னதுபோல் மாப்பிள்ளை அரசாங்கத்தில் கெஸட்டட் ரேங்க் என சொல்லப்படும் உயர் பதவியில்



இருந்தார். மாப்பிள்ளை வீட்டார்களும் கௌரவமான குடும்பத்து நபர்களாய் பழகுவதற்கு இனிமையானவர்களாய் இருக்க.. அவருக்கு எல்லாமே பிடித்துப் போனது.

திருப்தியடைந்தவராய் மதுமதியிடம் வந்து பேச்சை ஆரம்பித்தார். ''இப்போது கல்யாணம் வேண்டாம். வேண்டவே வேண்டாம்' என பிடிவாதம் பிடித்த மதுமதி தந்தையின் அந்த வற்புறுத்தலைக் கண்டு யோசிக்க லானாள்.

''இதோ பாரம்மா... எனக்கோ வயதாகிக் கொண்டே போகிறது. சிறு வயதிலேயே தாயை இழந்தவர்கள் நீங்கள். காலாகாலத்தில் எனது கடமைகளை நான் செய்ய வேண்டும் அல்லவா? உனக்குப் பின் உன் தங்கை வேறு இருக்கிறாள். அதனால் நீயே கொஞ்சம் பொறுப்புடன் யோசித்துப் பார். வந்திருப்பது நம் கனவிலும் நினைக்க முடியாத நல்ல வரன். நகை நட்டு என பெரிய எதிர்பார்ப்புகள் இல்லை. முடிந்ததைப் போடுங்கள்.. என தெளிவாய் சொல்கிறார்கள். அதனால் இது பற்றி நீயே தீவிரமாக யோசித்து ஒருநல்ல முடிவிற்கு வா'' என்றார்.

மதுமதியும் பலமாய் தலையாட்டி மூன்று நாள் தூங்காமல் கொள்ளாமல் யோசித்தாள். அவளுக்கு திருமணம் பற்றி யோசிக்க அப்போது எண்ணமே இல்லா விட்டாலும் தந்தையின் ஒவ்வொரு வார்த்தையும் புரிந்தது. அதன் விளக்கமும் அவளை உண்மை நிலையை எண்ணிப் பார்க்க வைத்தது.

சிங்காரியும் ''அக்கா, மாப்பிள்ளை நல்ல வசதியும் கூட, கார், பங்களா என சகல சொகுசு வசதிகளும் இருக்கின்றன.

பேசாமல் கொஞ்சமும் யோசிக்காமல் மாப்பிள்ளை சாருக்கு தலையை நீட்டு. பொறுப்பான குடும்பத் தலைவியாய் செட்டிலாகி விடு!'' என உபதேசித்தாள்.

இப்படி தந்தையும், சிங்காரியும் மாறி மாறி பேசி அவளுக்கு உபதேசித்து வற்புறுத்தல் செய்ய கடைசியில் வேறு வழி தோன்றாதவளாய் கல்யாணத்திற்கு சம்மதிக்கவே செய்தாள் மதுமதி.

பின் வேக வேகமாய் பெண் பார்க்கும் படலம் நடந்து மதுமதியை மாப்பிள்ளை வீட்டில் எல்லோருக்குமே பிடித்துப் போயிற்று. மாப்பிள்ளை மோகனும் நேருக்கு நேர் அவளை பெண் பார்க்க வந்து புன் சிரிப்பு பொங்க சம்மதம் சொன்னான். அவனை அன்றுதான் முதன் முதலாய் மதுமதியும் பார்த்தாள்.

மாநிறமும் சுமாரான உயரமுமாய் மோகன் இருந்தான். அவன் முகத்தில் ஓடிய ஒருவித வசீகரத் தன்மை, குபீர் சிரிப்பு பொங்கும் பேசும் தன்மை மதுமதியை கவரவே செய்தது. அவள் எதிர்பார்த்தது போல் அவன் இல்லை யென்றாலும், எதையும் காரணம் காட்டி நிராகரிக்கும்படி இல்லாததால் அவள் மனமுவந்து சம்மதம் சொன்னாள்.

கல்யாண பேச்சு தொடங்கி முகூர்த்த நாள் குறிக்கப் பட்டு, கல்யாண காரியங்கள் மளமளவென நடக்க ஆரம்பித்தன.

மதுமதிக்கு ஒருபுறம் ஆச்சரியம், மறுபுறம் திகைப்பு!

அவ்வளவு சீக்கிரத்தில் அவளுக்கு கல்யாணமா? அவளும் சம்மதம் சொல்லி விட்டாளே! சில சமயம்



கல்யாணத்தை நினைத்து ஒருவித இனம் புரியாத உற்சாகம் ஏற்பட்டாலும், மறுபுறம் தந்தை, தங்கையை எல்லாம் பிரிய வேண்டியது இருக்குமே.. என்ற வருத்தமும் குடைய ஆரம்பித்தது.

அதையும் தில்லைநாயகம் உணர்ந்தவர், "அட, எல்லாப் பெண்களுக்கும் ஏற்படும் கவலைதான்ம்மா இது. போகப் போக சரியாகிவிடும். மேலும் என்னைக் கவனித்துக் கொள்ள சிங்காரி இருக்கிறாள். நீ எதைப் பற்றியும் கவலைப் படத் தேவையில்லை..!'' என சமாதானப்படுத்தி விட்டார்.

ஆனாலும் மதுமதிக்கு உள்ளுக்குள் ஏதோ ஒருவித தயக்கம் தொடர்ந்து கொண்டே இருந்தது. ஏதோ ஒரு நல்ல இடம் வருகிறது என்பதற்காக வேறு எந்தவித காரணமோ முயற்சியோ செய்யாமல் கல்யாணத்திற்கு ஒத்துக் கொள்வது சரியான விஷயமாய் அவளுக்குத் தோன்ற வில்லை. மேலே படித்து வேலை அது இதுவென ஒரு நல்ல நிலைக்கு வந்தபின் இந்தக் கல்யாணம் பற்றிய பேச்சை ஆரம்பித்திருக்கலாமே... அதற்குள் என்ன அவசரம்? மனதளவில் அவள் தயாராகி அந்த முடிவை எடுப்பதற்குள் எதற்குள் கல்யாணம்?

ஆனாலும் அவளை மீறி நடந்த விஷயங்களை அவளால் தடுத்து நிறுத்த முடியவில்லை. மேலும் அப்பாவின் 'காலா காலத்தில் நான் செய்ய வேண்டிய கடமையல்லவா இது..' என்ற வார்த்தைகள் அவளை ஓங்கி மறுத்துப் பேச முடியாமல் தலையாட்ட வைத்தது. அதனால் விருப்ப மில்லா மனதுடன் பலியாடுபோல்தான் தயாரானாள் மதுமதி.

கல்யாண வேலைகள் மின்னல் வேகத்தில் நடந்தது. நல்ல டிசைன் பார்த்து அழைப்பிதழ் அடிப்பதிலிருந்து மண்டபம் பிடிப்பது வரை மாப்பிள்ளை வீட்டாரே வலிய வந்து பார்த்துக் கொண்டார்கள். எல்லா செலவையும் அவர்களே ஏற்றுக் கொண்டார்கள்.

மிகக் குறுகிய காலத்தில் கல்யாண ஏற்பாடுகள் நடந்தாலும், தில்லைநாயகமும் மதுமதியும் தெரிந்தவர்கள், நண்பர்கள், சொந்தம்பந்தம் என ஒருவர் விடாமல் கல்யாணப் பத்திரிகை அனைவருக்கும் வைத்து அழைப்பு விடுத்தனர்.

இதோ இன்று மணநாள்! தோழிகள் சுற்றத்தார் படை சூழ மதுமதி ஜொலிக்கும் அழகுடன் மணமகளால் அலங் கரிக்கப்பட்டு மண மேடையில் அமர்ந்தாள். கல்யாணச் சடங்குகள் ஒவ்வொன்றாய் தொடங்கி அரங்கேற ஆரம்பித்தது.

முகூர்த்த நேரமும் நெருங்கி விட்டது. அப்போதுதான் அந்த பயங்கர விபரீதம்! பட்டு வேஷ்டி பட்டுச் சட்டை பளபளப்பில் மாப்பிள்ளை கோலத்தில் உற்சாகமாய் கிளம்பிய மோகன் டக்கென நெஞ்சைப் பிடித்தான். மறுகணமே வலி தாங்காமல் சுருண்டு விழுந்தான்.

எல்லோரும் திகைத்துப் போயினர். கீழே விழுந்த வனைத் தூக்கிக் கொண்டு ஆஸ்பத்திரி நோக்கிக் கூட்டமாய் விரைந்தனர். ஆனால்...

'மோகனுக்கு ஏற்கனவே லோ ப்ளட் பிரஷர். சரியாக கவனிக்காததால் திடீரென பல்ஸ் இறங்கி இதயத் துடிப்பே



நின்று விட்டது. இனி செய்வதற்கு ஒன்றுமில்லை!' என டாக்டர்கள் விளக்கமளித்து கைவிரித்து விட்டனர். அப்படியே எல்லோரும் ஸ்தம்பித்துப் போனார்கள்!

'கல்யாணத்தன்று மாப்பிள்ளை மரணம்' என பேப்பர்களில் கூட விஷயம் செய்தியாய் வந்து விட்டது. நல்லவேளை! தாலி கட்டுவதற்கு முன் நடந்திருக்கிறது. இல்லாவிட்டால் அந்தப் பெண் நிலை? இப்படி ஒரு நோய் மாப்பிள்ளைக்கு இருப்பதை மறைத்துக் கட்டி வைக்கப் பார்த்திருக்கிறார்கள்? என்றும் கூட்டம் சளசளத்தது.

அப்படியே தலையில் கை வைத்தபடி இடிந்து போனவர் களாய் உட்கார்ந்து விட்டார்கள் மதுமதியும் தில்லை நாயகமும்!

கல்யாணம் நின்று போய் விட்டதே என்பதை விட தன் மகள் மதுமதியின் வாழ்க்கையில் இப்படி ஒரு சம்பவமா? தாலி கட்டப் போகும் நேரத்தில் மாப்பிள் ளையே இறந்து விடும் அளவுக்கு ஒரு அசம்பாவிதமா? என்ன கொடுமை இது! என அப்படியே மனம் உடைந்து விட்டார் அவர்.

மதுமதிக்கோ நடப்பதை, நடந்து கொண்டிருப்பதை உணர்ந்து கொள்ள முடியாத அளவுக்கு புத்தியே பேதலித் திருந்தது. பிரமை பிடித்தவள் போல் தான் மணக் கோலத்தில் தனி ரூமில் போய் உட்கார்ந்து விட்டாள்.

கல்யாணத்திற்கு வந்த கூட்டங்கள், சொந்தபந்தங்கள் எல்லாம், 'பாவம் இந்தப் பெண்! இப்படி ஆகிவிட்டதே... என்ன ஒரு துரதிர்ஷ்டம் இவளுக்கு!' என அவள் காதுபட

உச் கொட்டி முணங்கிச் சென்றது அவளை ஓரளவு நிலை குலைய வைத்தது.

மெல்ல மெல்லத்தான் அவளுக்கு தன் கல்யாணம் நின்று விட்டது... மாப்பிள்ளை இதயக் கோளாறு ஒன்றினால் இறந்து விட்டார், எல்லாம் முடிந்து விட்டது... என்பது தெள்ளத் தெளிவாய் புத்தியில் உரைத்தது.

இடிந்து போய் கிடந்த குடும்பத்தில் முதலில் நிமிர்ந்து சுதாரித்ததும் மதுமதிதான்! மணமகள் ஒப்பனையை அவசரமாய் கலைத்து விட்டு, விறுவிறுவென ரூமை விட்டு வெளிவந்தாள்.

சேரில் தலை கவிழ குமைந்து கொண்டிருந்த தந்தையையும், பேதலித்த சிங்காரியையும் ஆறுதல்படுத்தி தைரியம் சொன்னாள். மூவரும் ஒரு வழியாய் வீடு வந்து சேர்ந்தனர்.

ஒரு வாரம் ஏதோ துன்பக் கடலில் மிதப்பது போலவே அவர்களுக்கு வாழ்க்கை ஓடியது. தில்லைநாயகமும் வெளியே தலைகாட்ட முடியாதவராய் வீட்டிலேயே முடங்கிக் கிடந்தார்.

அந்நேரம் பார்த்து அவரது தமிழ் ஆசிரியர் பணியில் பக்கத்து திருச்சிப் பக்கம் உள்ள மலையம்பட்டிக்கு பணிமாற்ற வாய்ப்பு ஒன்று வர... உடனே ஆவலாய் அந்த ட்ரான்ஸ்பரை வாங்கிக் கொண்டு குடும்பத்தோடு தஞ்சாவூரை விட்டு கிளம்பி விட்டார் தில்லைநாயகம்.

அப்படி மூவரும் ஊர் விட்டு ஊர் வந்து நடந்த கசப்பான அனுபவங்களை மறக்க ஆரம்பித்தனர். 'இனி வீட்டில் தன் கல்யாண பேச்சே எடுக்கக் கூடாது' என திட்டவட்டமாய் அன்றே அறிவித்து விட்டாள் மதுமதி.



## 14



நடந்தவைகளை நினைத்துப் பார்த்து கற்சிலைபோல் அப்படியே மதுமதி நிற்க அவள் தோள்களைத் தட்டினாள் சிங்காரி.

''பழையதை நினைத்தது போதும். என் இனிய அக்காவே, நனவுக்கு வா... ராஜயோகம் உனக்கு காத்திருக்கிறது!'' என்றாள்.

''ராஜயோகமா?''

''பின்.. துன்பத்திற்கு பின் இன்பம் வரும் என்றுதானே சொல்வார்கள்? அப்படிப் பார்த்தால்... மோசமான காலத்தை சூழ்நிலையைக் கடந்த உனக்கு இனி எல்லாம் ராஜயோகம் தானே?''

''ஆமாம்.. ஆமாம்... இனி ராஜயோகம்தான்! அப்படியே ஊரெங்கும் இந்த மலையம்பட்டியில் ராஜகுமாரி நான்தான் என நம் சேவகர்களை விட்டு பிரகடனப்படுத்தி விடுகிறாயா?'' என்றாள் சிரிப்பாய்.

''உத்தரவு.. மகாராணி!'' என அதற்கும் சிங்காரி சலாம் போட்டு வணங்கி அவளை மேலும் சிரிக்க வைத்தாள்.

அதற்குள் அங்கு தற்செயலாய் வந்தான் பூர்ணம் அத்தையின் செல்வ மகன் எழிலரசன்.

''என்ன மகாராணியா? யார் மகாராணி?'' என்றான் அப்பாவியாய்.

''அட... பாரேன்! ராணி என்றவுடன் ராஜா ஓடோடி வந்து விட்டார் டோய்!''

கூக்குரலிட்டாள் சிங்காரி.

எழிலரசன் புரியாமல் விழிக்க அவனை கலாட்டா செய்யும் நோக்கத்தில், "முதலில் இப்படி இருக்கையில் உட்காருங்கள் மாமா!" என்றாள் சிங்காரி அன்புக் குரலில்.

அவள் எண்ணத்தைப் புரிந்த மதுமதி, "ஐயோ! மாமா பாவம்! அவரை விடு சிங்காரி!' என்றாள்.

அவளை நோக்கி செல்ல முறைப்பு முறைத்தவள், "அக்கா இப்போது நம் இருவருக்கும் இருக்கும் மன நிலையில் மாமாதான் கீச்சு மூச்சு ஊட்டும் சிறந்த மருந்து. அதைப் புரிந்து கொள்!" என்றாள்.

பின் எழிலரசன் பக்கம் திரும்பி, "மாமா முக்கியமான விஷயம். நீங்கள் சரியாக பதில் சொல்ல வேண்டும்" என்றாள்.

"கேளுங்கள்.. சொல்கிறேன்..." என்றான் எழிலரசன் தலையைக் கோணிக்கொண்டு தன் அத்தனை பற்களையும் காட்டியபடி.

"உங்களுக்கு மனைவியாக வரவேண்டியவள் எப்படி இருக்க வேண்டும் என்பதைச் சொல்லுங்கள்"

"எதற்கு?" என்றான் எழிலரசன்.

"வேறு எதற்கு? எங்கள் இருவரில் யார் உங்களுக்குப் பொருத்தம் என நாங்கள் தெரிந்து கொள்ள வேண்டாமா?

"உங்கள் இருவரையும் எனக்குப் பிடிக்கும்.." என்றான் அதற்கும் எழிலரசன் வெள்ளேந்தியாய்.



"அடிசக்கை! அப்படியானால் இருவரையும் கட்டிக் கொள்கிறீர்களா?" என்றாள் சிங்காரி துடுக்காய்.

நாணிக் கோணி வெட்கச் சிரிப்பு சிரித்தான் பதிலுக்கு எழிலரசன்.

"அட.. வெட்கத்தைப் பாரேன்.."

"சரி மாமா எங்களைக் கட்டிக் கொள்வது இருக்கட்டும்... எங்கள் உடை உணவு செலவுகளுக்குப் பணம் வேண்டுமே நீங்கள் தருவீர்களா?"

"ம்ம்... நிறைய தருவேன்."

"அதான் எப்படி?"

"உழைத்து சம்பாதிப்பேன். உங்களுக்கு கை நிறைய பணத்தை அள்ளித் தருவேன்."

"உழைத்தா? அப்படியானால் எங்காவது வயல்வெளி யில் போய் ஏர் பிடித்து உழுது உழைக்கப் போகிறீர்களா?"

"ம்ம்... அப்படிக் கூடச் செய்வேன். எனக்கு பழைய எம்.ஜி.ஆர். படங்களில் பார்த்தது போல் வயல் வெளியில் உழுது சம்பாதிக்க ஆசை."

"ம்ம்.. பொல்லாத ஆசைதான்! சரி மாமா உழுவதற்கு வயல் கூட எங்காவது கிடைத்து விடும். ஏரில்.. பூட்டு வதற்கு மாடுகள் வேண்டுமே?" சிரிப்பை அடக்கியபடி சிங்காரி கேட்க பதிலுக்கு சீரியசாய் எழிலரசன் ஏதோ சொல்ல வாயைத் திறப்பதற்குள், "அதற்குதான் நீங்கள் இரண்டு பேர் மாடுகளாய் இருக்கிறீர்களே... அது போதாதா?" என பின்புறம் இருந்து ஒய்யாரக் குரல் வந்தது.

திரும்பிப் பார்த்தால் பூர்ணம் அத்தை ஜிவுஜிவு முகத்துடன்.

''ஐயோ அத்தை!'' என இரண்டு பேரும் துள்ளிக் குதித்து ஓடினார்கள்.

''போங்கடி.. கழுதைகளா? என் பையனை கிண்டல் செய்யாவிட்டால் உங்களுக்குத் தூக்கம் வராதா? ஓடுங்கள்.. ஓடுங்கள்..!'' என போலியாய் கைகளைத் தூக்கி விரட்டினாள் பூர்ணம்.

பின் தன் மகன் பக்கம் திரும்பி, ''ஏண்டா, கூமுட்டை, அவர்கள் உன்னை இப்படி கூப்பிட்டு உட்கார வைத்து கேலி செய்கிறார்கள் என்று கூடவா உனக்குப் புரிய வில்லை?'' என்றதும் எழிலரசன் அசடு வழிய, ''அப்படி யானால் அவர்கள் கேட்டதெல்லாம் விளையாட்டுக் காகவா? நிஜமாக இல்லையா?'' என்றான் அதே அப்பாவிக் களையுடன்.

அவனது அப்பாவித்தனத்தை நினைத்து உருகிப் போன பூர்ணம், ''நீ வாடா செல்லம்! அவர்களை அந்தக் கழுதைகளை விடு. கொஞ்ச நாள் கழித்து உனக்கு நான் நிஜமாகவே ராணி போல் ஒரு பெண்ணைக் கட்டி வைக்கிறேன், சரியா?'' எனக் கேட்க அதற்கும் டபலமாய் தலையாட்டிக் கொண்டிருந்தான் எழிலரசன்.

ஓடிய இருவரும் நின்றார்கள். சிங்காரி தள்ளிப் போய் வழக்கம் போல் அத்தையை நோக்கி 'வெவ்வவெவ்வே' சொல்லி சிரித்தாள். பின் மதுமதி பக்கம் திரும்பி, ''போகட்டும், சரி உன் ப்ரோக்ராம் என்ன?'' என்றாள்.



''ப்ரோக்ராமா?''

''இன்று உனக்கு அந்த இனிய நாள் அல்லவா? அதை மறக்க.. எங்காவது போவோம்... கவலை தெரியாதவாறு கொண்டாடுவோம்.''

''ச்சே.. அப்படியெல்லாம் எனக்கு ஒன்றும் வருத்தம் இல்லை'' என குரலில் எதையும் வெளிக்காட்டாதவளாய்.

''ம்ஹூம்... நீ சொல்லும் தொனி... விதத்திலேயே தெரிகிறதே! இப்படியே வீட்டிலிருந்தால் மூட் அவுட் ஆகிடுவாய்.. பேசாமல் என்னுடன் வா!''

மதுமதிக்கும் அது சரியாகவே தோன்ற மெல்ல தலையசைத்தாள். ''எங்கு போகலாம்?'' என்றாள்.

சிங்காரி கன்னத்தில் ஒற்றை விரல் வைத்து தலை சாய யோசித்தவள் உற்சாகமாய் நிமிர்ந்தாள்.

''சினிமா... சினிமா போகலாமா?''

உதட்டைச் சுழித்த மதுமதி, ''ம்ம்.. படம் குப்பை என்றால் தலைவலிதான் மிஞ்சும்...'' என்றாள்.

''அப்படியானால் மல்லிகா வீட்டுக்குப் போகலாம்...''

''மல்லிகாவா?''

''அதான் என் டியர் ப்ரெண்ட்! பக்கத்து தெரு மூணாம் வீடு மல்லிகா. அவள் வீட்டில் எல்லோரும் ஏதோ திருமணத்திற்கு வெளியூர் சென்றிருக்கிறார்களாம். வீட்டில் தனியேதான் இருக்கிறாள். என்னை வரச் சொல்லி நச்சரித்துக் கொண்டிருந்தாள். அங்கு போய் ஏதாவது விளையாடுவோம்..''

"அது.. அது.." என்றபடி மதுமதி திரும்பவும் சிந்தனைக்குப் போக சிங்காரி செல்லமாய் அவளைத் தட்டியவள், "ரொம்பவும் யோசிக்காதே கிளம்புவோம்" என்று பஞ்சரித்தாள்.

வேறு வழி தோன்றாதவளாய் மதுமதியும் அரை மனதுடன் கிளம்பினாள்.

சிங்காரி சொன்னது போலவே மல்லிகா தனியாகத்தான் இருந்து கொண்டு நேரம் போக்க ஆளைத் தேடிக் கொண்டிருந்தாள்.

அவர்கள் இருவரும் வந்ததைப் பார்த்து உற்சாகத்தில் குஷியாகி விட்டாள்.

கொஞ்ச நிமிடங்களிலே சொல்லி வைத்தாற்போல் பக்கத்து வீடுகளில் உள்ள ஹேமா, ரமா, சினேகா என மற்ற தோழிமார்களும் வந்துவிட வீடே கலகலக்க ஆரம்பித்தது.

சீட்டுக்கட்டு, செஸ், ஸ்நூக்கர் என ஒவ்வொன்றாய் ஆடினார்கள். பின் அதுவும் போரடித்து விட மல்லிகாவின் யோசனைப்படி ஸ்டிரியோவில் சினிமா பாட்டுகளை உச்சஸ்தாயில் ஒலிக்க வைத்து டான்ஸ் ஆடும் படலத்தை தொடங்கினர். மதுமதி ஆடுவதில் நாட்டமில்லாதவளாய் இருக்கையில் உட்கார்ந்து அவர்கள் செய்யும் கூத்துகளை ரசிக்க ஆரம்பித்தாள்.

ஆள் ஆளுக்கு இடுப்பை ஆட்டிக் கொண்டு, கனத்த உடம்பை அப்படியும் இப்படியும் நெளித்துக் கொண்டு ஆட்டம் என்கிற பெயரில் என்னென்னவோ சேஷ்டைகள் செய்தனர். ஆண்களைப் போல் இடையிடையே உய்.. உய்.. ஹே.. ஹோ.. என கத்தல்கள் இரைச்சல் வேறு!



சிங்காரி தன் பங்கிற்கு தலைமுடியின் ஸ்டிராப்பை விடுவித்து தலையை விரித்துப் போட்டுக் கொண்டு ஒரு நடனம் ஆடி (பங்க் நடனமாம்) எல்லோரையும் சிரிக்க வைத்தாள். அவள் போட்ட ஆட்டத்தைப் பார்த்து மதுமதியே அதிர்ந்து, "ம்ம்.. நம் தங்கை சரியான துடுக்குக்காரிதான்!" என வியப்புக்குப் போனாள்.

ஒரு வழியாக மூன்று மணி நேரத்தை இப்படி ஆட்டம் பாட்டம் கூத்து என ஆக்கி விட்டு இருவரும் வீடு திரும்பினர். "ஆனாலும் உன் யோசனை சரிதான்..நேரம் போனதே தெரியவில்லை!" என அவளைப் பாராட்டத்தான் செய்தாள் மதுமதி.

வீடு வந்து சேர்ந்ததும், "என்ன இனி ரெஸ்ட்தானே?" என சிங்காரி வினவ, "இல்லை டியூசனுக்குப் போகிறேன்.." என்றாள் மதுமதி.

"என்ன அந்த.. கொம்பேறி மூக்கனிடமா? அதுவும் இன்று போயா?"

அவள் புதுப்புது பெயராய் தினகரனுக்கு வைத்துப் பார்ப்பதை எண்ணி சிரித்தவள், "சிங்காரி, டியூசன் சமயத்தில் அந்த தினகரன் படிப்பில் அப்படியே ஆழ்ந்து விடுவார். வேறு எதுபற்றியும் அவருக்கு சிந்தனை இருக்காது.." பதில் சொன்ன மதுமதியை வினோதமாய்த்தான் உற்றுப் பார்த்தாள் சிங்காரி.

"என்னாயிற்று உனக்கு..? டக்கென அவனுக்கு கிரேடு உயர்த்தி விட்டாய்?"

"கிரேடா? என்ன சொல்கிறாய்?"

''அதான்.. 'ன்'ல் இருந்து 'ர்'க்கு..'' என்றவள் தொடர்ந்து மதுமதி விழிக்கவும், ''அதான் தினகரனை மரியாதையாய் 'அவர், இவர்' என அழைக்க ஆரம்பித்து விட்டாயே.. அதைச் சொல்கிறேன்...'' என விளக்கம் கொடுக்க அவசரமாய் உதட்டைக் கடித்தாள் மதுமதி.

அடடா.. தன்னையறியாமல் இப்படி பேசியிருக்கிறோமோ... எதனால்? என திகைத்து விட்டு, ''அது.. அது.. வேறு ஒன்றுமில்லை.. அவர்.. அவர்.. என்ன இருந்தாலும் வாத்தியார்.. அப்படி அப்படித்தானே? அதான்.. அந்த நினைப்பிலேயே பேசி விட்டேன்!'' என சமாளிக்கவும் செய்தாள்.

''வாத்தியார்.. மாணவி... நல்ல காம்பினேஷன்தான்..! ம்ஹூம்..! நீயும் பெரிய படிப்பாளியாகத்தான் ஆகி விட்டாய்... ம்ம்... படி.. படி நன்றாகப் படி!''

''நீ மட்டும் என்னவாம்?''

''நான் தெரியாதா? நான்தான் மரமண்டையாயிற்றே!'' சிரித்துக் கொண்டு ஓடினாள் சிங்காரி.

பின் கொஞ்ச நேரத்தில் புத்தகங்களைத் தூக்கிக் கொண்டு தினகரனிடம் டியூசனுக்கு கிளம்பினாள் மதுமதி.

வழக்கம் போல் கவனமாய் பாடத்தை நடத்திய தினகரன் ஒரு கட்டத்தில் அதை நிறுத்தி விட்டு அவளை உற்றுப் பார்த்தான்.

அவன் திடீரென அப்படிப் பார்ப்பதை உணர்ந்து அவளும் திடுக்கிட்டுப் பார்க்க... அவன் அமைதியாக கேட்டான்.



''இன்று உனக்கு முக்கியமான, மறக்க முடியாத நாள்தானே? உன் கல்யாணநாள்... கல்யாணம் நின்று போன நாள்தானே?''

தெள்ளத் தெளிவாய் அவன் வார்த்தைகளை உச்சரிக்க தூக்கி வாரிப் போட்டவளாய் அதிர்ந்தாள்.

## 15



தினகரன் கேட்ட கேள்வியைப் பார்த்து சப்த நாடி ஒடுங்கி அதிர்ந்தே போய் விட்டாள் மதுமதி.

'இன்று உன் கல்யாண நாள். கல்யாணம் நின்று போன நாள்தானே?'

இவனுக்கு எப்படித் தெரியும்? யாருக்கும் தெரியாத ரகசியம் இவனுக்கு மட்டும் எப்படித் தெரிந்தது?'

அவள் திகைத்துப் பேச்சு வராதவளாய் திருதிருவென விழிக்க, ''எனக்கு எல்லாம் தெரியும்!'' எனக் கூறி அவளை மேலும் அதிர வைத்தான் அவன்.

''எல்லாம் தெரியுமா?''

அவள் திணறலாய்க் கேட்க பெரிதாய் தலையசைத்தான் அவன்.

''ம்ம்.. எல்லாம் தெரியும். நீ தஞ்சாவூரில் மோகனைக் கட்டிக் கொள்ள இருந்தது. முகூர்த்த நேரத்தில் துரதிர்ஷ்ட வசமாக மோகன் இறந்து போனது.. எல்லாம் தெரியும்..!''

''அப்படியானால்... நீங்கள்.. நீ..ங்..க..ள்... யார்?'' மறுபடியும் திணறியே கேட்டாள் அவள்.

''நான் மோகனின் நண்பன்!'' திடகாத்திரமாய் அவனிட மிருந்து அந்த பதில் வர அவளது அதிர்ச்சி பன்மடங் காகியது.''

''மோகனின் நண்பனா?''

''ம்ம்.. மோகனின் நண்பன்தான்! நான் உன்னை முன்பே பார்த்திருப்பது போல் நீயும் என்னை பார்த்திருக்கிறாய்..''

''நான் பார்த்திருக்கிறேனா?''

தினகரன் வேகமாய் தலையாட்டியவன், ''இரு. உனக்கு விவரமாகச் சொல்கிறேன். அன்று தஞ்சாவூரில் கல்யாண மண்டபத்தில் திருமணக் கோலத்தில் நீ இருந்தாய். மோகன் தன் நண்பர்களை எல்லாம் கூட்டிக் கொண்டு வந்து அறிமுகப்படுத்தி வைத்தான். நீயும் தலையாட்டி வைத்தாய். இப்போது ஞாபகம் வருகிறதா?'' என்றான்.

அவள் சற்றே தலைசாய யோசித்தாள்.

அன்று மணவறையில் அவளுக்கு அலங்காரம் நடந்து கொண்டிருந்தபோது, மோகன் திடுமென ஐந்தாறு பேர்களைக் கூட்டிக் கொண்டு அவளறைக்குள் நுழைந்து, நண்பர்களை அறிமுகப்படுத்தியது ஞாபகத்திற்கு வந்தது.

''ஆமாம் ஞாபகம் வருகிறது. மோகன் நண்பர்களை அறிமுகப்படுத்தினார்..'' என கூறியவள், அவசரமாய் ''அப்படியானால் அந்த நண்பர்களில் ஒருவராய் நீங்கள் நின்று கொண்டிருந்தீர்களா?'' என்றாள் நம்ப முடியாத வளாய்.



''அதேதான்! கரெக்டாக சொல்லிவிட்டாய்!'' என்றான் தினகரன் பெரிய தலையசைப்புடன். கூடவே, ''அப்படி மோகன் அறிமுகப்படுத்தியபோது போட்டோகிராபர் தற்செயலாய் அங்கு வர போட்டோ கூட எடுக்கப்பட்டது. உனக்கு அந்த போட்டோ ஆல்பத்தை எடுத்துப் பார்த்தால்.. மோகன் பக்கத்தில் நண்பனாய் நான் நின்று கொண்டி ருப்பது புரிந்து விடும்!''

அவள் இம்முறை திகைத்துதான் போனாள்.

'இவன் சொல்வதைப் பார்த்தால் இவன் இங்கு எல்லா விஷயங்களையும் தெரிந்து கொண்டுதான் தேடிப் பிடித்து..'

அவள் நினைப்பை முடிப்பதற்குள், ''நீ நினைப்பது சரி. நான் உன்னைப் பற்றி விசாரித்து, உன்னைத் தேடிப் பிடித்துத் தான் இங்கு உன் வீட்டு மாடிக்கு கல்லூரி பேராசிரியாய் குடிவந்திருக்கிறேன்.. நான் பணிமாற்றம் விருப்பமாய் வாங்கியது கூட அதற்காகத்தான்!'' கடகட வென அவன் சொல்லிக் கொண்டு போக ஷாக்கடித்தவள் போல் தான் அதிர்ச்சியில் உறைந்தாள்.

''எதற்கு..? எல்லாம் எதற்காக?'' என்றாள் அவள் குரல் கம்ம.

''வேறு எதற்கு? நடந்த விஷயங்களுக்கு பிராயச்சித்தம் தேடுவதற்காகத்தான்..'' என்றான் அவன் அமைதியாக.

''பிராயச்சித்தமா?''

''ம்ம்.. மீண்டும் ஒரு கதை போல் நடந்தது எல்லா வற்றையும் சொல்கிறேன். அப்போதுதான் உன்னால் எல்லாவற்றையும் புரிந்து கொள்ள முடியும்..!'' என்ற

பீடிகையுடன் ஆரம்பித்தான் தினகரன். "அது.. அது.. மோகன் விஷயம்... மோகனுக்கு அந்த ஆபத்தான லோ - பிளட் பிரஷர் என சொல்லப்படும் உயிர்க் கொல்லி நோய் ஒன்று இருப்பது முன்பே மோகனின் குடும்பத்தாருக்கு, எங்களுக்குத் தெரியும்தான். தற்செயலாய் மோகனின் இந்தக் குறைபாட்டை கண்டுபிடித்த டாக்டர்கள் இது ஆபத்தானது. மோகனுக்கு எந்நேரமும் மரணம் நிகழலாம் என எச்சரித்திருந்தார்கள். மோகனும் அந்தக் குறைபாட்டை நீக்க மருத்துவ சிகிச்சையும் எடுத்துக் கொண்டுதான் இருந்தான். அந்த நேரத்திலேயே டாக்டர்கள் தடுத்தும் அவனது வீட்டார்கள் அவனுக்கு ஒரு கல்யாணத்தை பண்ணி பார்த்துவிட வேண்டும். நடப்பது நடக்கட்டும் என்கிற விபரீத முடிவு ஒன்றை எடுத்து விட்டார்கள். உண்மை நிலையைச் சொன்னால் பெண் கிடைக்காது என்பதால் அதை மறைத்தே பெண் தேடினார்கள். அவர்கள் எதிர்பார்த்தது போலவே நீயும் வரனாய் அவர்களுக்கு அமைய.. உடனே பேச்சுவார்த்தையில் இறங்கி கல்யாண ஏற்பாடுகளை ஆரம்பித்து விட்டார்கள். கூடவே மோகனுக்கு இருந்த அந்த ஆபத்தான நோய் பற்றிய விஷயத்தையும் உங்களுக்குத் தெரியாமல் மறைத்து விட்டார்கள். ஆனால் பொல்லாத விதி.. என ஒன்று இருக்கிறது அல்லவா... அது.. மிகச் சரியாக கல்யாணத் தினத்தன்று தன்வேலையைக் காட்டி மோகனை குரூரமாய் பழிவாங்கி விட்டது. மோகனின் குடும்பத்தாரும் உண்மையை மறைத்து கட்டி வைக்க இருந்த தங்களுக்கு சரியான தண்டனை கிடைத்து விட்டதாய் அதிர்ந்து போயினர்!"



சொல்லிக் கொண்டிருந்த மோகன் சட்டென நிறுத்தி விட்டு அவளை உற்றுப் பார்த்தான்.

"இப்போது புரிகிறதா?" என்றான்.

அவள் நெற்றியில் வெண்மைக் கன்னங்களில் முத்து முத்தாய் ஒளிர்ந்த வியர்வைத் துளிகளை ஒற்றியெடுத்த வாறு திகைப்பு விலகாமல் அவனையே வெறித்தாள்.

அவளால் நம்ப முடியவில்லை! மோகன் கல்யாண தினத்தன்று நெஞ்சைப் பிடித்துக் கொண்டு விழுந்தது தற்செயலாய் ஏற்பட்ட உடல் நோவு என்பது தான் நினைத்திருந்தாள்.

ஆனால் இவன் சொல்வதைப் பார்த்தால் அது.. தெரிந்தே.. நடந்த மோகன் வீட்டுப் பெரியவர்கள் தெரிந்தே நடத்திய விபரீதம்தான்... என இப்பேது அல்லவா புரிகிறது?

கொஞ்சமாவது தன் வாழ்க்கையை ஒரு பெண்ணுக்கு இப்படிப்பட்ட மாப்பிள்ளையை கட்டி வைத்தால்.. அவள் எதிர்காலம் என்ன ஆகும்? என சிந்தித்துப் பார்த்தார்களா?

அல்லது தங்களது உண்மை நிலையை எடுத்து உரைத் தாவது பெண் கேட்டார்களா? இல்லையே! எல்லா வற்றையும் மறைத்து அல்லவா நாடகம் போட்டிருக் கிறார்கள். இரக்கமில்லாமல் அவளையும், அவளது குடும்பத்தாரையும் ஏமாற்ற அல்லவா பார்த்திருக்கிறார்கள்?

அவள் கொதிப்பாய் யோசிக்க அவள் சிந்தனையை உணர்ந்தவன் போல் தினகரன், "அவர்கள் மாப்பிள்ளை வீட்டை நிந்தித்து எவ்வித பிரயோஜனமுமில்லை.

அவர்களது செயலுக்கு மறந்து அவர்களை மன்னித்து விடு. ஏனெனில் அவர்கள் செய்த தவறுக்கு பெரும் தண்டனை போல் மோகனின் மரணமும் அமைந்துவிட்டது. ம்ம்... பாவம் அவர்கள்..!'' குரல் கம்ம பேச்சை நிறுத்தி நிஜமாகவே அவர்களுக்கு ஓரிரு நிமிடம் அனுதாபப் பட்டான் தினகரன்.

மதுமதி அவன் சொன்ன அதிர்ச்சியான விஷயங்களைக் கேட்டு அப்படியே அசையாமல் ஏறக்குறைய கற்சிலை போலவே ஆகிவிட்டாள்.

அவளை மேலும் அதிர்ச்சியாக்கும் விதமாய் அடுத்து அந்த வார்த்தைகளை முத்தாய் உதிர்த்தான் தினகரன்.

''நடந்த எல்லா விஷயங்களையும் நேரில் பார்த்த எனக்கு, உன் மீது இரக்கம், அன்பு, காதல் என எல்லாம் வந்து விட அப்படியே உன்னைத் தேடி ஓடி வந்து விட்டேன்.. நான்!'' என்றான் அமைதியாக.

## 16



என்ன இரக்கப்பட்டானா? நம் மீதா? மதுமதிக்கு அது நினைக்கவே எரிச்சல் வந்தது.

''என் மீது இரக்கப்பட நீங்கள் யார்?'' என்றாள் கோபமாய்.

தினகரன் கைகளை விரித்தான்.

''நான் யாரும் இல்லை. உன்னைப் போல் ஒரு சக மனித ஜீவன்!''



''யாரும் அப்படிக் கூட இரக்கம் கொள்ளத் தேவையில்லை. எனக்கு அது பிடிக்காது..''

''எனக்கும் அது பிடிக்காததுதான். ஆனால் அது ஒரு நண்பனின் கட்டளையாக இருக்கும்போது... நான் எப்படி அதை மீற முடியும்?''

''நண்பனின் கட்டளையா? என்ன இது உளறல்?''

''உளறல் இல்லை... உண்மை! எனது உற்ற நண்பனான மோகன் என்னிடம் சொல்லிய வார்த்தைகள்தான் இவை. அதை அப்படியே சொல்கிறேன். கேட்டுக் கொள். ''தினகரா, என் வீட்டில் இந்த அழகான பெண்ணை எனக்கு மணப் பெண்ணாய் நிச்சயித்து விட்டார்கள். நான் மறுக்க இடம் கொடுக்காமல் பத்திரிகை அடித்து மண்டபம் பிடித்து எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டார்கள். ஆனால் என் உடல் குறைபாட்டை நினைத்து என் மனம் அடிக்கடி தவிக்கத்தான் செய்கிறது. ஆகையால் ஒருவேளை எனக்கு ஏதாவது அசம்பாவிதமாய் நேர்ந்து விட்டாலும்... நீ கலங்காமல் தைரியமாய் நின்று அந்தப் பெண்ணின் வாழ்வு சீர்குலையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அவளுக்கு ஒரு நல்ல வாழ்க்கையை அளிக்க நீயே முன்வரவேண்டும். எனக்காக நீ இதைச் செய்ய வேண்டும். செய்வாயா? எனக் கேட்டபோது அவன் கரங்கள் அழுத்தி உறுதி கூறினேன்.'' நிறுத்திய தினகரன் நேருக்கு நேர் அவள் விழிகளை உற்றுப் பார்த்தான்.

''இதை நம்புவதும் நம்பாததும் உன் இஷ்டம்!'' என்றான்.

''ம்ம்... கதை நன்றாகத்தான் இருக்கிறது..'' என்றாள் மதுமதி அலட்சியமாய்.

''கதை.. இல்லை.. நான் சொல்வது உண்மை!''

''அதாவது.. அந்த உடல் நலமில்லாத மாப்பிள்ளை ஆருயிர் நண்பனான உங்களிடம் இப்படி கடைசி நேரத்தில் அவருக்கு ஏதாவது நிகழ்ந்து விட்டால், மணமகளான என்னை உங்களுக்கு தாரை வார்த்துக் கொள்ளும்படி கெஞ்சிக் கேட்டுக் கொண்டிருக்கிறார். பரோபகாரியான நீங்களும் அதற்கு பெரிய மனதுடன் சம்மதித்திருக்கிறீர்கள் அப்படித்தானே?''

''உனக்குப் புரியவில்லை. நீ கொச்சைப்படுத்தி பேசுகிறாய்..''

''எனக்குப் புரியாதுதான்! என் வாழ்க்கையை பந்தாட.. நீங்கள் யார்?''

''பந்தாடியது நாங்கள் இல்லை... விதி!''

''அந்த விதிக்குப் பின் சூட்சமமாய் ஒளிந்திருந்தது நீங்கள்தானே?''

''ம்ம்... அதையும் அப்படியே வைத்துக் கொள். இப்போதும் அதே அந்த விதிதானே என் உருவில் உன்னிடம் வந்திருக்கிறது..''

''ஆமாம்.. பெரிய.. மகாராஜா.. எனக்கு வாழ்க்கைப் பிச்சை போட மைசூரிலிருந்து வந்திருக்கிறீர்கள..க்கும்..''

''ம்ஹூம்! மறுபடியும் கொச்சைப்படுத்துகிறாய். என் நோக்கம் அதுவல்ல, தெளிவாக சிந்தித்துப் பார் புரியும்..'' என்றான் கோபமாய்.



''அப்படி நீங்கள் சொல்கிற அந்த தெளிவாக சிந்திக்க எனக்கு யாரும் கற்றுக் கொடுக்கவில்லை. நீங்களே சொல்லி விடுங்கள்..'' என்றாள் அவளும் அதே கோபத்துடன் விடாப்பிடியாய்.

அவன் நிமிர்ந்து அவளை ஒரு முறைப்பு பார்வை பார்த்துவிட்டு, ''என் நண்பன் இறந்தது. உன் வாழ்க்கையில் அப்படி நடந்தது துரதிர்ஷ்டம். நடக்கக் கூடாத ஒன்று அதற்காக அதையே நினைத்துக் கொண்டிருக்க வேண்டுமா? எதற்கும் விமோசனம் மாற்று வழி என்று ஒன்று உண்டல்லவா? அதைத்தான் இவ்வளவு நேரம் உன்னிடம் வாய் கிழியச் சொல்கிறேன்..''

''முதலில் உங்கள் கிழிந்த வாயை தைத்துக் கொள்ளுங்கள்.. எனக்கு மாற்று வழி தேவையில்லை.''

''உனக்கு திமிர் ஜாஸ்தி.''

''அதைப் புரிந்து கொண்டால் சரி.''

அவன் சட்டென பொறுமையிழந்தவன் போல் அவளைப் பார்த்தான்.

''என்னதான் நினைக்கிறாய் நீ?''

''இன்னும் புரியவில்லை? நான் ஒன்றும் கழுத்தை நீட்டிக் கொண்டு யாரும் என் மேல் இரக்கப்பட்டு வருவார் என காத்துக் கொண்டு நிற்கவில்லை... அதைப் புரிந்து கொள்ளுங்கள்!''

''அதை ஏன் இரக்கம் என்று சொல்கிறாய்? நண்பனுக்காக நான் செய்யும் கடமை என்று நீ நினைத்துக் கொள்ள வேண்டியதுதானே?''

''அப்படியெல்லாம் இனியும் ஏமாற நான் தயாரில்லை. உங்கள் நண்பர் ஒருவர் ஏமாற்றியதே என் வாழ்நாள் முழுவதும் போதும். நீங்கள் உங்கள் ஊரைப் பார்த்துப் போகலாம் சார்.''

அவன் முதல் முறையாய் அதிர்வுடன் திடுக்கிட்டான்.

''என்ன.. என்ன சொல்கிறாய் நீ?''

''அதான்.. நீங்கள் இங்கு வந்த காரியம் என்ன எதுவென தெரிந்து வெட்ட வெளிச்சமாகிப் போய்விட்டதே... இனியும் இங்கு ஏன் தங்கி உங்கள் நடிப்பைத் தொடர வேண்டும்? பேசாமல் மூட்டை முடிச்சைக் கட்டிக் கொண்டு உங்கள் ஊரைப் பார்த்து போய்ச் சேருங்கள்..''

தினகரன் இம்முறை அதிர்ச்சி விலகி கடகடவென சிரித்தான்.

''நான் ஏன் போகவேண்டும்?'' என்றான் பின் சிரிப்பை நிறுத்தி.

''புரியவில்லை. நீங்கள் இங்கு வந்தது இங்கு மாடிப் போர்ஷனில் தங்கியது எல்லாம்... மோகனால் சீர்குலைந்த என் வாழ்க்கையைச் சரிப்படுத்த.. தூக்கி நிறுத்த.. அப்படித்தானே? அதாவது மோகனால் போட முடியாமல் போன மூன்று முடிச்சை நீங்கள் போட்டு எனக்கு வாழ்க்கைக் கொடுக்க... அது அதுதானே?'' என்றவள் ஒருகணம் நிறுத்தி மூச்சு வாங்கி விட்டு அதே முறைப்புடன் பார்வையுடன், ''அது ஒன்றும் தேவையில்லை. மிஸ்டர் இப்படி இரக்கப்பட்டு யாராவது வந்து கழுத்தில் கட்டிவிட மாட்டார்களா என அலைகிற கூமுட்டை நான் இல்லை. அதனால் உங்கள் எண்ணம் எதுவும் நிறைவேறப் போவதில்லை. பின் எதற்கு நீங்கள் இங்கு இருக்க வேண்டும்? உடனே அடுத்த பஸ்ஸிற்கு கிளம்புகிற வழியைப் பாருங்கள்.,.'' என்றாள் சூடான குரலில்.



அவனுக்கும் கோபம் பீறிட்டது. கைகளை உயர்த்தி ''நிறுத்து'' என்றான் கர்ஜிக்கும் குரலில்.

''ஏதோ நண்பனுக்காக பாவ புண்ணியம் பார்த்தால் ரொம்பவும்தான் அலட்டிக் கொள்கிறாயே? இதோ பாரம்மா... நான் சொன்னது பிடிக்கவில்லை என்றால் விட்டு விடு... என் பேச்சை அப்படியே வாபஸ் வாங்கிக் கொள்கிறேன்... அதற்காக உன்னைத்தான் கட்டிக் கொள்வேன். உனக்குத்தான் வாழ்வு கொடுப்பேன் என நான் யாரிடமும் சபதம் போட்டுக் கொண்டு வரவில்லை.. புரிகிறதா?'' எனக் கேட்டு வேகமாய் சொடுக்கிட்டவன், ''இன்னொன்றையும் நீ தெரிந்து கொள். நான் இப்படி நடக்காமல் போனதற்காக காலி செய்ய வேண்டும் என்ற அவசியமும் எனக்கில்லை. நான் எதற்கு ஊரை விட்டுப் போக வேண்டும்? உனக்கு நான் சொன்ன விஷயம் பிடிக்கவில்லை என்றால் அத்தோடு விட்டுவிடு. ஒதுங்கிக் கொள்! நான் பாட்டுக்கு என் கல்லூரி வேலையைப் பார்க்கிறேன். நீ உன் வேலையைப் பார். புரிகிறதா?'' என்றவன், ''ம்ம்.. நீ போகலாம்!'' என்றான் அதே மிடுக்குடன்.

சொல்லிவிட்டு அதே வேகத்தில் கதவை பட்டென சாத்தியும் விட்டான் அவன்.

அவள் கொஞ்ச நேரம் அப்படியே உறைந்துதான் போனாள்.

நடப்பது கனவா.. நனவா?

கொஞ்ச நேரத்தில் அவளுள்.. எவ்வளவு அதிர்ச்சி அலைகளை உண்டு பண்ணிவிட்டான் இந்த தினகரன்?

அவனை யாரோ என்றுதானே நினைத்திருந்தாள்? இவ்வளவு பெரிய திட்டத்துடன் பிளான் போட்டு அல்லவா இங்கு குடி வந்து உட்கார்ந்திருக்கிறான்?

அந்த மோகன் இவனது நண்பனா? ஆரம்பத்தில் இவனை உற்றுப் பார்த்து யோசித்திருந்தால் கூட கண்டுபிடித்திருக்கலாம். போட்டோ ஆல்பத்தைப் பார்த்தாவது இவன் யாரென்று உணர்ந்திருக்கலாம். சரிவர பார்க்காமல் விட்டு விட்டோமே!

ஆனாலும் இவனுக்குத்தான் என்ன தைரியம்? அந்த மோகனால் அவள் வாழ்க்கையில் நீக்க முடியாத கறை ஒன்று படர்ந்தது படர்ந்ததுதான்! பெரும் பரோபகாரியாய் அதற்கு விமோசனம் தேடுவது போல் நண்பனான இவன் முளைத்து வந்து விட்டானாக்கும்!

நண்பனின் கட்டளையாம்! அவளுக்கு வாழ்க்கை கொடுக்க வந்திருக்கிறானாம்!

இரக்கம், பரிதாபம், பச்சாபதாபம் என எது எது அவளுக்குப் பிடிக்காதோ... அதையெல்லாம் அவள் மீது காட்டி உச் கொட்டாத குறையாய் அவளுக்கு உதவ வந்திருக்கிறான்!



அப்படியானால்.. அன்று கைகளில் சட்டென முத்த மிட்டது.. காதல் கொண்டது போல் எல்லாம் டயலாக் பேசி ஒருவிதமாய் அவளைப் பார்த்தது.. எல்லாம் இதற்காக. இதற்காகத்தானா?

கடவுளே! எல்லாம் பரிதாபப்பட்டு.. அவள் மீது இரக்கம் கொண்டு பிச்சை போடுவது போல்..?

அவள் தலையில் கை வைத்து பிடித்துக் கொண்டாள்.

## 17



அன்று இரவு முழுவதும் அவள் தூக்கமின்றிதான் திணறினாள். அவளால் நடந்த எதையும் ஜீரணிக்க முடிய வில்லை.

அன்று மோகனோடு இந்த கசப்பான விஷயங்கள் எல்லாம் முடிந்து போய் விட்டது என நினைத்தால் இப்போது தினகரன் உருவத்தில் மறுபடியும் பூதாகரமாய் கிளம்புகிறதே!

அன்று மோகன் சம்பவத்திற்குப் பிறகு தந்தையிடம் தெளிவாய் திட்டவட்டமாய் கூறியிருந்தாள். இன்னும் இரண்டு மூன்று வருடங்களுக்கு அவளது எதிர்காலம் பற்றியோ.. கல்யாணம் அது இது என சம்பந்தப் பேச்சுகளோ வீட்டில் பேசக் கூட செய்யக் கூடாது என தடை உத்தரவு போல் அல்லவா போட்டிருந்தாள்!

அவ்வளவு வெறுப்பு அவள் அப்படிக் கொண்டிருந்ததும் நியாயம்தானே!

கல்யாண தினத்தன்று அதுவும் முகூர்த்த நேரத்தில் தாலி கட்டும் முன் மாப்பிள்ளை இறந்து திருமணம் நின்று போவது எவ்வளவு பெரிய இழுக்கு!

அன்று அந்த மண்டபத்தில் அவளைப் பார்த்து எத்தனை பேர் பரிதாபப்பட்டார்கள்! பாவம் இவள் என்று உச் கொட்டி அவள் கண் கலங்கும் அளவுக்கு அல்லவா போய்விட்டது!

எவ்வளவு பெரிய அவமானம்! வாழ்நாள் முழுவதும் மறக்க நினைத்தாலும் வடுபோல் துரத்துகிற விஷய மல்லவா அது?

எப்படி அதை அவ்வளவு எளிதாய் மறக்க முடியும்?

அப்படியும் அதை எப்படியாவது மறந்து தொலைத்து விடலாம் எனப் பார்த்தால், இப்படி இந்த தினகரன் மாதிரி ஆட்கள் வந்து பிளாஷ்பேக் சொல்லி ஞாபகப்படுத்து கிறார்களே?

சரி.. விஷயம் வெட்ட வெளிச்சமாகி விட்டது. இனி என் முடிவு இதுதான். நீ இரக்கப்பட்டு பிச்சை போட வந்திருக்கும் வாழ்க்கை எல்லாம் எனக்குத் தேவையில்லை என முகத்திலடித்தாற் போல் தினகரனிடம் சொல்லி, இனி நீ கிளம்பலாம் என்று விரட்டிப் பார்த்தாயிற்று.

ஆனால் ஆள் அதற்கெல்லாம் அசருகிற மாதிரி இல்லையே!

உனக்கு விருப்பமில்லை என்றால் விட்டு விடு. அவ்வளவுதான்! அதற்காக நான் இந்த இடத்தை விட்டு காலி செய்ய வேண்டும் என்றெல்லாம் எதிர்பார்க்காதே என்கிறான்.



ஆனால் இவன் இங்கிருந்தால்.. தினம் இவன் முகத்தைப் பார்த்தால்.. பழைய விஷயங்கள் எல்லாம் அவளுக்கு ஒவ்வொன்றாய் ஞாபகம் வந்து கொண்டிருக்குமே!

என்ன செய்ய? முதலில் இறங்கிப் பேசியவன் கடைசியில் முடியாது.. உன் வேலையைப் பார் என எடுத்தெறிந்து பேசும் அளவுக்குப் போய்விட்டானே!

யோசித்தவள் கூடவே இன்னொரு நினைவும் வர திடுக்கிடவே செய்தாள்.

இந்த விஷயத்தை தந்தையிடம், தங்கையிடம் கூட தெரிவிக்கவில்லையே? ஏன் மறைக்க வேண்டும். இந்த தினகரன் நம் மாடிப் போர்ஷனுக்கு சாதாரணமாக குடியிருக்க வரவில்லை. ஒரு பெரும் திட்டத்துடன்தான் வந்திருக் கிறான் என போட்டு விஷயத்தை உடைத்திருக்கலாமே... அப்படிச் செய்யாமல் இருந்து விட்டோமே! எனவும் நினைத்தாள்.

ஆனால் அப்படி அவள் விஷயத்தை சொன்னால் அவர்களும் அவளது கோணத்தில் அதைப் புரிந்து கொள்ள வேண்டுமே?

தங்கை சிங்காரியிடமாவது அழுந்தச் சொல்லி புரிய வைத்து விடலாம். அவளும் தினகரனை பிடிக்காமல் பழி வாங்க துடித்துக் கொண்டிருக்கிறாள். அதனால் அவன் காலி செய்து கொண்டு போனால் பெரும் நிம்மதியே என்று சொல்லிவிடுவாள்.

ஆனால் தந்தை?

அவர் அப்படி நினைக்க வேண்டுமே? அதை விட்டு விட்டு "என்னம்மா.. நீ ஏன் இப்படி இரக்கம் பச்சாதாபம் என விபரீதமாய் நினைக்கிறாய்? அந்தக் கடவுளாய்ப் பார்த்து விமோசனம் போல் அனுப்பி இருக்கிறார். நீ எதற்கு தடுக்க வேண்டும்? மேலும் இந்த தினகரன் தம்பியும் நல்ல உத்தியோகத்தில் இருக்கிறார். நீ கட்டிக் கொள்ள வேண்டியது தானே? என கேட்டு விட்டால் அவளால் எப்படிச் சமாளிக்க முடியும்? என்ன பதில் சொல்ல முடியும்?

ஆக.. வழக்கம் போல் விஷயத்தை தந்தையிடம் மறைத்து தங்கையிடம் மட்டும் சொல்வது எனவும் முடிவுக்கு வந்தாள் மதுமதி.

மறுநாள் விடிந்ததும் காபி கோப்பையுடன் தன் அறையில் நுழைந்த சிங்காரியை உட்கார வைத்து அவ்வளவு விஷயத்தையும் கொட்டித் தீர்த்தாள்.

அதிர்ந்து போனாள் அவள். மேலும் கேட்ட சிங்காரிக்கு நம்ப முடியாத ஆச்சரியம்!

"நிஜமா.. நிஜமாகவா? இல்லை. அந்த நெட்டை கொக்கு உன்னைப் பயங்காட்ட விடுகிற ரீலாக இருக்குமா?" என்றாள்.

"ரீல் எல்லாம் இல்லை. உண்மைதான்! நடந்த எல்லா விஷயத்தையும் புட்டு புட்டு வைத்து விட்டார். அதை விட ஆச்சரியம் அவர் சொன்ன மாதிரி அந்த பழைய ஆல்பத்தில் அந்த மோகன் பக்கத்தில் நண்பராய் நிற்பதும் இதே தினகரன்தான்!"

"அச்சச்சோ..!" என்றாள் சிங்காரி பெருங்குரலில்.



"என்ன சிங்காரி?"

"இந்த தினகரனிடம் இருந்து நாம் தப்பிக்கவே முடியாது போலிருக்கிறதே..! ஒன்றுக்கு மேல் ஒன்று என சிக்கலாகிக் கொண்டே இருக்கிறதே!"

"இல்லை சிங்காரி! நான் தெளிவாக சொல்லி விட்டேன். இந்த மாதிரி வாழ்க்கைப் பிச்சைப் போடுகிற வேலையெல்லாம் வேண்டாம். மூட்டை முடிச்சைக் கட்டிக் கொண்டு ஊர் போய் சேருங்கள் என்று.."

"அதற்கு அந்த கிராக்கு என்னதான் சொல்கிறது?"

அந்த நிலையிலும் சிங்காரியின் நகைச்சுவைத்தனத்தை ரசித்த மதுமதி வறண்ட சிரிப்புடன், "போக மாட்டேன்! நான் சொன்னது பிடிக்காவிட்டால், விட்டு விடு. பேசாமல் நீ உன் வேலையைப் பார். நான் என் வேலையைப் பார்க்கிறேன்! என்கிறான்."

சிங்காரி முகத்தை வெட்டினாள்.

"அப்படியானால், சரி.. விட்டுவிடு.."

"என்ன சொல்கிறாய்?"

"அவன் சொன்ன மாதிரியே விட்டு விட்டு வேலையைப் பார்ப்போம்."

"வேலையைப் பார்த்தால் என்ன நடக்கும்?"

"என்ன நடக்கும்?" என பதிலுக்கு எதிர் கேள்வியைக் கேட்ட சிங்காரி கூடவே "வேறென்ன? தனது பாச்சா வெல்லாம் பலிக்காது என நன்கு தெரிந்து கொள்வான் அந்த

தினகரன். பின் சொல்லாமல் கொள்ளாமல் ஒருநாள் வீட்டைக் காலி பண்ணிவிட்டு ஓடியே போய்விடுவான்!''

''அப்படியா? அப்படி நடக்குமா?''

''கண்டிப்பாய் நடக்கும். ஆனால் அதற்கும் நீ ஒன்று செய்தாக வேண்டும்?''

''என்ன?''

''அவனை கொஞ்சமும் சட்டை செய்யாமல் நடந்து கொள்ள வேண்டும். அவனைக் கண்டால் விலகுவதோ.. பழைய விஷயங்கள் ஏதாவது பேசி விடுவானோ என பயப்படுவதற்கு பதில் எதுவுமே நடவாதது போல் துணிந்து எதிர்கொள்ள வேண்டும். அப்படி நீ நடந்து கொண்டால்தான் அவனை நீ கொஞ்சமும் சட்டை செய்யவில்லை என்பதைப் புரிந்து கொள்வான். மூட்டை முடிச்சைக் கட்டிவிட வேண்டியதுதான் என முடிவுக்கு வந்து விடுவான்..''

''ம்ம்.. புரிகிறது... அப்படியே நடந்து கொள்கிறேன்..''

''நடந்து கொண்டால் மட்டும் போதாது. நாளை முதல் வழக்கம் போல் நீ அவனிடம் டியூசனுக்குச் செல்ல வேண்டும். எதுவுமே நடவாதது போல் பாடத்தில் மட்டும் கவனம் செலுத்த வேண்டும். அவன் உன் செய்கையைப் பார்த்து அப்படியே நொந்து விடுவான் நொந்து!''

மதுமதி பலமாய் தலையாட்டினாள். அவளுக்கும் சிங்காரியின் யோசனை பிடித்திருந்தது. பயந்து பயந்து போனாலோ ஓடி ஒளிந்தாலோ.. எந்த விஷயத்திலும்



இருந்து தப்பிக்க முடியாது. துணிந்து எதிர்த்து நின்றால்தான் தைரியம் வரும். எதிராளியும் திணறுவான்.

முடிவுக்கு வந்த மதுமதி மறுநாளே எதுவுமே நடவாதது போல் டியூசனுக்கு கிளம்பிச் சென்றாள்.

கூடவே அவளுள் அந்த யோசனையும் கூடியது. இனி அவனிடம் கொஞ்சம் கர்வமாய் திமிராய்த்தான் நடந்து கொள்ள வேண்டும். சரியான திமிர்க்காரி இவள் என அவன் நினைக்க வேண்டும்! அப்படி நடந்தால்தானே அவனுக்கும் அவள் மீது கோபம் வரும். எரிச்சல் பிறக்கும்1

அப்படிக் கோபம், எரிச்சல், குபுக்கென வந்தால் அவள் மீது அவன் கொண்டிருக்கும் இரக்கம் பச்சாதாபம் எல்லாம் ஓடி ஒளிந்து போகுமே?

பின் அவன் அவள் மீது கொஞ்சம் கூட ஈவு இரக்கம் காட்ட மாட்டானே!

ம்ம்... அதுதானே, அவளுக்கு வேண்டும்! யாரும் தனக்காக இரக்கம் கொள்வதுதான் அவளுக்குப் பிடிக்காத விஷயமாயிற்றே!

## 18



மதுமதி அதே விருப்புடன் துணிச்சல் கொஞ்சமும் குறையாமல்தான் அன்று டியூசனுக்கு தினகரன் முன் போய் உட்கார்ந்தாள்.

அவன் அவளைப் பார்த்து அந்த வழக்கமான புன்னகை உதிர்த்ததும்

வேண்டுமென்றே தலையை ஒரு வெட்டு வெட்டி ஒரு வித அலட்சியப் புன்னகையை உதடுகளில் உதிர விட்டாள். நடந்த எதுவும் அவளை பாதிக்கவில்லை. இனியும் பாதிக்காது.. என அவனுக்குப் புரிய வைக்க வேண்டும்!

அவனும் உற்றுப் பார்த்து விட்டு கைகளைத் தட்டினான்.

''வெரிகுட்! இதுதான்.. நான் எதிர்பார்த்தது.. இப்படித்தான் இருக்க வேண்டும்..'' என்றான்.

அவள் புருவங்களை உயர்த்தினாள்.

''நடந்ததை நினைத்தே புழுங்கிக் கொண்டிருக்காமல் துணிச்சலாய் எந்த பாதிப்புமில்லாமல் நடமாட வேண்டும். அதே துணிச்சலுடன் தைரியமாகவும் சில முடிவுகள் எடுக்க வேண்டும்..''

என்ன இவன்? நாம் ஒன்று நினைத்து செய்தால் அதற்கே வேறு தொனியில் ஒரு அர்த்தம் கற்பிக்கிறானே.. என எரிச்சலானவள், ''ஹலோ, எனக்கு ஒன்றும் ஆக்ஸிடெண்ட் ஆகவில்லை. கால்கள் ஊனமாகவில்லை. நன்றாகத்தான் இருக்கிறது'' என்றாள் ஏதோ தான் முடமாகி விட்டதைப் போல் அவன் பரிதாபப்பட்டதற்கு.

அவன் தொண்டையைச் செருமி கணைத்தான்.

''ம்கூம்! கால்.. கீல்.. நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் மனசு?''

''மனசுக்கென்ன? அது ஜாலியாய்த்தான் இறக்கை கட்டிக் கொண்டு பறக்கிறது. போதுமா.. கவலைப்பட்டது போதுமா? பாடத்தை ஆரம்பிக்கலாமா?'' என்றாள் அதே சினத்துடன்.



அட்டா! அழகுப் பெண்களுக்கு கோபம் கூட அழகு தான்... என தனக்குள்ளே முணுமுணுப்பாய் சிலாகித்தவன், ''நான் சொல்ல வருவது குற்றமாய் இல்லை... பாராட்டு.. உன் தைரியத்திற்கான பாராட்டு..'' என்றான் விளக்கு பவனாய்.

''உங்கள் பாராட்டுதலுக்கு ரொம்ப நன்றி சார். பாடத்தை ஆரம்பியுங்கள் சார்!'' என்றாள் அவளும் அதற்கு விடாப்பிடியாய்.

அவன் இம்முறை சிரித்து விட்டான். ''ஏதேது.. இம்முறை பாடத்தைத் தவிர வேறெதிலும் கவனம் போய் விடக் கூடாது என்பதில் மதுக்குட்டி குறியாய் இருப்பதுபோல் தெரிகிறது..'' என்றான் பீடிகைச் சிரிப்பை விடாமல்.

அவளுக்கு திகைப்புதான். குட்டி புட்டி என்றெல்லாம் திடீரென அழைக்க ஆரம்பித்து விட்டான். மதுக்குட்டியாம்.. இவனுக்கு அந்த உரிமையை யார் கொடுத்தது?

ஆயினும் எதையும் வெளிக்காட்டாமல் உதடுகளை இறுக்கிக் கொண்டு பேசாமல் இருந்திருந்தாள். வேண்டு மென்றே சலனமில்லாத வெறும் பார்வை அவனைப் பார்த்தாள்.

அவளை மீண்டுமொருமுறை ஆழமாய்ப் பார்த்து விட்டு பாடத்தை ஆரம்பித்து விட்டான் தினகரன்.

ஒருமணி நேரம் வரை எவ்வித பிரச்சனையுமில்லாமல் பாடத்தில் இருவரும் ஆழ்ந்து விட்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

டியூசன் முடிந்ததும் எழுந்து கொண்டு வலுக்கட்டாய புன்னகை ஒன்றை உதிரவிட்டாள். வேண்டுமென்றே, ''வருகிறேன் ஐயா..'' என கிண்டலும் குத்தலுமாய் சொல்லிவிட்டு அகன்றாள்.

அப்படியே இரண்டு மூன்று நாட்கள் தொடர்ந்தது. முன்பு போல் இல்லாமல் அவனது ஒவ்வொரு கேள்விக்கும் பதிலடி கொடுத்தாள். சில நேரம் வலியப் போய் வம்புக்கிழுப்பது போல் சீண்டவும் செய்தாள்.

''ஊர் உலகத்தில் திருமணத்திற்கு ஒரு பெண் கூட கிடைக்காமல் சிலர் பெட்டி படுக்கைகளுடன் வந்து சுற்றிக் கொண்டிருக்கிறார்கள். மகா கேவலம் அல்லவா இது?'' என்றாள் அவனிடம் ஒருநாள்.

அவள் தன்னைத்தான் சொல்கிறாள் என தினகரனுக்கு நன்கு புரிந்தாலும், புரியாதது போலவே பேசினான். ''என்ன செய்ய..? அப்படித் தேடிக் கொண்டிருப்பவர்களுக்கு அழகுப் பெண்கள் என்றால் கொள்ளை ஆசையாய் இருக்கலாம். அவர்கள் தேடும் அழகுப் பதுமைகள் யாருக்கோ பயந்து கொண்டு ஏதாவது பொந்தில் ஒளிந்திருக்கலாம். அவர்களுக்கு தைரியம் கொடுத்து பொந்தில் இருந்து வெளி வர வைப்பது.. கடமையாய் அல்லவா போய் விடுகிறது..''

''நான் யாருக்கும் பயப்படவும் இல்லை. ஒளியவும் இல்லை..'' என்றாள் அவள் வெடுக்கென.

''இல்லை. நீ பயப்படுகிறாய்.. ஒளிந்து ஓடுகிறாய்!'' என்றான் அவன் உரத்த குரலில்.



''யாருக்கு?'' என்றாள் அவள் மறுபடியும் கோபமாய்.

''விதி! அந்த இரண்டெழுத்து வில்லனுக்கு பயந்து வாழ்க்கையை எதிர் கொள்ளாமல் ஓடியல்லவா ஒளிகிறாய்?''

''யார் சொன்னது? அப்படியெல்லாம் இம்மியளவும் பயம் கிடையாது. எல்லாம் உங்கள் வறட்டுக் கற்பனை!''

''அப்படியானால் கல்யாணத்திற்கு சம்மதிக்க வேண்டியதுதானே? ஏன்.. வேண்டாம் என கொடி பிடிக்கிறாய்?'' என்றான் நேரிடையாய் விஷயத்திற்கு வந்தவனாய்.

''அது என் இஷ்டம்..'' என்றாள் அழுத்தமாய்.

''இஷ்டமல்ல... பயம். நீ கோழை!'' என்றான் அவனும் குரலை அழுத்தியவாறு.

நிமிர்ந்து மை விழிகளால் முறைத்தவள் நிஜமாகவே அவனது பேச்சில் சூடாகிப் போனாள்.

''ஹலோ மிஸ்டர்... உண்மையில் உங்கள் கோரிக்கைக்கு நான் சம்மதிக்காமல் போனதற்கான காரணம் என்ன தெரியுமா?''

''என்ன?'' என்றான் ஆவலாய்.

அவனை ஏதாவது சொல்லி காயப்படுத்த வேண்டும் என்ற ஆவேசம் வெறியாய் அவளுள் தகதகத்தது.

''உங்களை எனக்குப் பிடிக்கவில்லை..'' என்றாள் சத்தமாய்.

''என்ன பிடிக்கவில்லையா?'' குரலில் அதிர்வோடு கேட்டான் அவன்.

''ம்ம்... சுத்தமாய் உங்களைப் பிடிக்கவில்லை. அதிலும் உங்கள் கழுத்துக்கு மேல் மூன்றெழுத்தில் ஒன்று இருக்கிறதே... அதைப் பார்க்கவே சகிக்கவில்லை. அதைப் போய் யாராவது கட்டிக் கொள்ள விரும்புவார்களா?''

சொல்லிவிட்டு நிமிர்ந்து அவனை உற்றுப் பார்க்க அவள் நினைப்பு மாறாக சிரித்துக் கொண்டிருந்தான் தினகரன்.

''அடடா... என் பிடிக்காத முகத்தைக் கூட இவ்வளவு ரசித்துப் பார்த்து வர்ணனை செய்கிறாயே... நல்ல ரசனைதான் உனக்கு!'' என்றபடி திரும்பவும் சிரித்தாள்.

அந்த வசீகரச் சிரிப்பும் அவனது காந்தக் கண்களும் அவளை என்னவோ செய்தன. வாய் கூசாமல் பொய் சொல்வது என்பது இதுதானே? என அவளுள் நினைப்பு ஓடியது.

அவன் அத்தோடு நிறுத்தாமல், ''ஒப்புக் கொள்கிறேன். நான் ஒன்றும் அழகன் இல்லை..'' என்றான்.

''ஆனால் நான் அழகி..!'' என்றாள் அவள் வேண்டுமென்றே ஒருவித தொனியில்,

தினகரன் தலையாட்டினான்.

''அதையும் ஒப்புக் கொள்கிறேன். நீ அழகிதான்!''

''பின்.. இந்த அழகி... அவளுக்கு ஏற்ற ஒரு அழகனைத் தானே தேர்ந்தெடுத்து மணக்க முடியும்?''

அவனது தலை மீண்டும் அசைந்தது. ''அதுவும் சரிதான். ஆனால் இதற்கு முன்னால் இந்த அழகியை சுமாரான மோகன் என்பவருக்கு நிச்சயிக்கும் போது... அவரது



அந்தஸ்தான வேலையையும், பணத்தையும் மட்டும்தான் பார்த்தார்கள் என எனக்கு கேள்வி..''

''அட.. சரியாக மடக்குகிறானே..'' என அவள் வியந்தாலும் விடாப்பிடியாகத்தான் அவனிடம் சீறினாள்.

''அது முடிந்த கதை..'' என்றாள்.

''முடிந்த கதைதான்.. ஆனால் கல்யாணம் நின்று போய் விட்டதால், 'தொடரும்' அல்லவா போட வேண்டியதாயிற்று?''

''அதெல்லாம் எனக்குத் தேவையில்லாதது..'' என தலையை நிமிர்த்தி முகத்தை வெட்டிக் காண்பித்தவள், ''இதோ.. என்னை நன்றாக பார்த்துக் கொள்ளுங்கள். என் அழகுக்கு ஏற்ற ஒரு அழகன் உங்கள் கண்ணில் பட்டால் மட்டும் சொல்லுங்கள். உடனே கழுத்தை நீட்டுகிறேன். அதை விட்டு விட்டு கண்ட கண்ட மூஞ்சுகளைப் போய்..''

அவன் முறைத்துப் பார்க்கவும் அத்தோடு நிறுத்தி உதடுகளை இறுக்கமாக்கிக் கொண்டு பேச்சை விட்டாள்.

''சரிதான்! இனி தம்பட்டம் ஒன்று வாங்கி ஊரறிய முரசு கொட்டி அந்த அழகனைத் தேட ஆரம்பித்து விடுகிறேன், போதுமா?'' என்றவன் நிறுத்தி அவளைக் கூர்ந்து பார்த்து விட்டு, ''அப்படியே உனக்கும் ஒரு தம்பட்டம் தருகிறேன். நீயும் உன் அழகைப் பற்றி தெரியாதவர்களுக்கு பறை சாற்றலாம். அல்லவா?'' என்றான்.

''ம்ம்.. அது தேவையில்லை. நான்.. நான்.. சரியான.. திமிர்க்காரியாக்கும்!'' சொல்லி விட்டு சட்டென உதட்டைக் கடித்தாள் அவள். ஐயையோ! என்ன இது? எதற்காக இப்படித்

தன்னைத்தானே புகழ்வது போல் அவள் பேசி அவனுக்கு தன்னைப் பற்றி... இவள் கர்வம் பிடித்தவள் திமிர்க்காரி என்றெல்லாம் எண்ணம் வரவேண்டும் என்பதற்காக வேண்டுமென்றே வார்த்தைகளால் அவனைச் சீண்டி காயப்படுத்தினாளோ.. அதை வாய் தவறி... அவளே போட்டு உடைத்து விட்டாளே!

சட்டென குட்டு வெளிப்பட்டு விட்டதைப் போல் பதறி விழிக்கத்தான் செய்தாள் அவள்.

அவன் தினகரன் அவன் சொல்லியதையும் சொல்லி விட்டு உதட்டைக் கடித்து கொண்டு விழிப்பதையும் பார்த்தவன், அடடா... இவள் இவ்வளவு நேரம் செய்தது நடிப்பா? நடிப்புதானா? என நொடியில் புரிந்து கொண்டு நிம்மதியானபின், நிம்மதியுடன் சிரிப்பை பெரிதாக்கினான்.

"நான் ஒத்துக் கொள்கிறேன். நீ சரியான திமிர்க்காரிதான்! போதுமா? போதும்தானே?" என்றான் நகைப்பை விடாமல்.

## 19



"நீ சரியான திமிர்க்காரிதான்!" என தினகரன் சரியான சர்டிபிகேட் கொடுத்து நகைக்கவும் அதற்கு மேல் அங்கு நிற்க முடியாமல் ஓடி வந்து விட்டாள் மதுமதி.

அவள் அகம்பாவக்காரி. திமிர் பிடித்தவள் என்றெல்லாம் தினகரன் மனதில் தோன்றி விட்டால் அவனது எண்ணம் மாறிவிடும் அல்லவா? இவள் மீது இரக்கம் காட்டுவது வீண்... பேசாமல்



நம் வேலையைப் பார்ப்போம். என வீட்டைக் காலி செய்து கொண்டு கிளம்பி விடுவான் இல்லையா?

இது அவளது எண்ணம்.

அப்படி நடக்க வேண்டும் என்பதற்காகத்தான் தம்பட்டம் அடிக்கும் தொனியில் தன்னை அழகி அது இதுவென பீற்றிக் கொண்டு வேண்டுமென்றே அவனை மட்டம் தட்டினாள்.

அத்தோடு அவள் நிறுத்தியிருக்கலாம்... கடைசியில் எதற்காக இப்படி ஒரு அலட்டல் வேஷம் போட்டோம் என்பதையும் தானே அந்த வார்த்தையை உச்சரித்து தன்னைக் காட்டிக் கொடுத்து விட்டாளே!

அது என்னவோ தெரியவில்லை. இந்த தினகரன் விஷயத்தில் அவள் போடுவதும் சரி சிங்காரி போடும் கணக்கும் சரி தப்பு தப்பாய் அல்லவா போய் விடுகிறது.

எதையும் முறியடித்து விடும் அசகாய சூரனாய் அல்லவா அவன் இருக்கிறான்!

அதே நினைப்பிலே அன்று முழுவதையும் கழித்தாள். ஆயினும் மறுநாள் டியூசனின் போது அவள் தன் வழக்கத்தை மாற்றிக் கொள்ளவில்லை. அதே செயற்கையான அலட்டலும் அவனைச் சட்டை செய்யாத திமிர் சுபாவத்தையும் தொடர்ந்தாள்.

இரண்டு மூன்று நாள் அவளது நடவடிக்கைகளை உற்றுக் கவனித்த தினகரன் மறுநாள் டியூசனின் முடிவின் போது அவளிடமே கேட்டு விட்டான்.

''இப்போது உன் பிரச்சனை என்ன? எதற்காக இந்த அலட்டு அலட்டுகிறாய்?'' என்றான்.

''இது அலட்டல் இல்லை. என்னுடைய சுபாவம்!'' என்றாள் அவள் மொட்டையாக அதற்கும் கழுத்தை வெட்டிய ஒரு அலட்டலுடன்.

அவன் சிரிக்க ஆரம்பித்தான்.

''எனக்குப் புரிந்து விட்டது..'' என்றான்.

''என்ன புரிந்தது?''

''உன் மீது இரக்கமோ பரிவோ நான் காட்டக் கூடாது. அப்படித்தானே?''

அவன் சரியாக கண்டுபிடித்து விட்டானே என்பதை திடுக்கிடலாய் உணர்ந்து அவள் பேசாமல் உதடு கடித்தாள். குனிந்தாள்.

அவனும் பேசாமலே அவளை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

கொஞ்ச நேரம் பொறுமையாயிருந்தவன், ''அந்த உன் அழகான மைவிழிகளை வைத்து எவ்வளவு நேரம் தரையை பெருக்கிக் கொண்டிருப்பாய். நிமிர்ந்து பார்!'' என்றான்.

''எனக்கென்ன பயம்?''

குபீரென நிமிர்ந்து வேண்டுமென்றே இமைகளை விரித்து அவனை முறைத்துப் பார்த்தாள்.

''அட, இந்த வழி தெறித்து விழும் அளவுக்கான முறைப்பு போஸ்.. இது கூட நன்றாகத்தான் இருக்கிறது.



இதையெல்லாம் அவ்வளவு லேசில் வெறுக்க முடியுமா?'' என்றவன் ஒரு கணம் நிறுத்தி நீளமான மூச்சு விட்டபடி. ''நீயே சொல்! இந்த அழகு, அழகை ரசிக்கும் தன்மை.. இதுவெல்லாம் வெறும் இரக்கத்தின் மூலமா ஏற்படும்? தானாக இங்கிருந்து கனியக் கூடிய சமாச்சாரம்.... என்பது கூடவா ஒரு வயதுப் பெண்ணான உனக்குப் புரிய வில்லை? என்ன பெண் நீ?'' என்றபடி அவன் விரல்களால் தன் நெஞ்சைத் தொட்டுக் காட்டியபடி கேட்க அவள் சட்டென முகம் சிவந்துதான் போனாள்.

கொஞ்ச நேரம் மௌனமாகவே இருந்தாள்.

''நான் கேட்பதற்கு பதில் சொல்..'' என்றான் அவன்.

''அப்படியெல்லாம் ஒன்றுமில்லை.''

''ஒன்றுமில்லை என்றால்... எதற்காக இப்படி கர்வம் பிடித்தவள் திமிர்க்காரி போல் எல்லாம் என்னிடம் நடிக்க முயற்சிக்கிறாய்?''

''.....''

''மறுபடியும் எதையாவது சொல்லி சமாளிக்கலாம் என்று பார்க்காதே. உன்னுடைய அரைகுறை நடிப்பே உன்னைக் காட்டிக் கொடுத்து விட்டது. உண்மையைச் சொல். நான் உன்னிடம் எவ்வித இரக்கமும் காட்டக் கூடாது. இரக்கப் பார்வை உன்னிடம் பார்க்கக் கூடாது. அப்படித்தானே?''

அவள் இம்முறை மெல்ல தலையசைத்தாள்.

அவனும் பதிலுக்கு பெரிய தலையசைப்புடன், ''அப்படி யானால் ஓகே! இனி உன் மீது இரக்கப்படுவதில்லை.

கடுமையாகவே நடந்து கொள்கிறேன்..'' என்றவன் நிறுத்தி ''ஆமாம்... இதுவரை உன்னிடம் கேலியும் கிண்டலுமாய் விளையாடியிருக்கிறேனே தவிர இரக்கப்படும்படி அதை நீ உணரும்படி எதுவும் செய்திருக்கிறேனா? கொஞ்சம் யோசித்துப் பார்!''

அவள் யோசித்தாள்.

அவன் சொல்வது உண்மைதான். அவளிடம் பரிவு பச்சாதாபம் காட்டும்படி இதுவரை அவளது நடவடிக்கைகள் எதுவும் இல்லைதானே!

''இல்லை..!'' என்றாள்.

''கரெக்ட்! அதேதான் என்னுடைய பாயிண்ட். உனக்குப் பிடிக்காததை நான் செய்யப் போவதில்லை. நீ விரும்பாதது எதையும் நான் பண்ண மாட்டேன். நீ பயமில்லாமல் எங்கும் நடமாடலாம். உன்னிடம் உன் எதிர்கால வாழ்க்கையைப் பற்றியோ.. வீணான கேள்விகள் கேட்டோ தொந்தரவு செய்யவும் போவதுமில்லை. என்ன போதுமா?'' என்றவன் அதே குறுஞ்சிரிப்புடன் ''நீ என் வார்த்தைகளை நம்பா விட்டால் பத்து ரூபாய் பத்திரம் வாங்கி வேண்டுமானாலும் எழுதித் தருகிறேன்!'' என்று சொல்ல அவள் முதல் மறையாய் இறுக்கம் தளர்ந்து சிரித்து விட்டாள்.

அவள் வாய்விட்டுச் சிரிப்பதை வெகுவாய் ரசித்தவன், ''அப்பாடா... எவ்வளவு நாளுக்குப் பிறகு இந்த இயற்கையான சிரிப்பழகு வெளிவருகிறது. முத்துப்பல் புன்னகை என்பது இதுதானோ? பார்த்துக் கொண்டே இருக்கலாம் போல் இருக்கிறதே?'' என்றதும் அவள் டக்கென சிரிப்பை நிறுத்தி முறைத்தாள்.



அவன் அதையும் குறும்புடன் ரசித்தான்.

''பேச்சின் இடையே இப்படி அடிக்கடி 'ஐஸ்' வைக்க அனுமதி உண்டா... இல்லை அதற்கும் நோ என்ட்ரிதானா?''

அதே பாவனையோடு அவன் சற்றே குரல் இறக்கி கேட்க அவளால் இம்முறையும் அடக்க முடியவில்லை. சிரித்து விட்டாள்.

''ஐஸ் வைக்க அனுமதி கிடைத்து விட்டது..'' என்றபடி அவனும் சேர்ந்து சிரித்தான்.

இவ்வளவு நாள் முட்டி மோதிக் கொண்டிருந்தவனிடம் திடீரென பேச்சும் பாவனையும் இலகுவாகி தன்னையறியாமல் தான் சிரித்துக் கொண்டு நிற்பதையும், முதல் முறையாய் அப்போதுதான் அதிர்வாய் உணர்ந்தாள் அவள்.

அவனோ பேச்சைத் தொடரும் விதமாக, ''இதோ உனக்காக... என்ன வேண்டுமானாலும் செய்யத் தயாராய் இருக்கிறேன்.. அந்த ஒன்றே ஒன்றைத் தவிர!'' என்றான் பீடிகையாய்.

''என்ன அது?''

கேட்டபடி புருவங்கள் உயர்ந்தது அவளுக்கு.

"உன்னை வெறுப்பது..! உன்னை வெறுக்க மட்டும் என்னால் முடியாது.."

அவன் திடமாய் உறுதியான குரலில் சொன்னது அவளுக்கு உள்ளுக்குள் இனம் புரியா உணர்வை ஏற்படுத்தினாலும், அதை வெளிக்காட்டாதவளாய், "ஓஹோ அப்படியா?" என்றாள்.

அவன் அவள் முகக் குறிப்பை அறிய பார்வையால் ஆழமாய் ஊடுருவதையும் உணர்ந்தாள்.

அதனாலே அவசரமாய், "அப்படியானால் வேறு வழியில்லை. நான் அதைச் செய்துவிட வேண்டியதுதான்!" என்றாள்... அதே பீடிகைத்தனத்துடன்.

"என்ன சொல்கிறாய்?"

முகம் நிமிர்த்தி கண்களைச் சுருக்கியவள், "வெறுப்பது! அப்படி நீங்கள் என்னை வெறுக்காவிட்டால்.. நான் உங்களை வெறுத்து விடுகிறேன் சரிதானா?" என்றாள் சுருங்கிய கண்களை விரித்துச் சிமிட்டியபடி.

ஒருகணம் அவள் சொன்ன பதிலால் திகைத்தவன் அவளது இனிமையான சிமிட்டலைக் கண்டு அமைதி யானான்.

அவள் அதற்குப் பின் அங்கு நிற்கவில்லை. தனது புத்தகங்களைத் தூக்கிக் கொண்டு வேகமாய் ஓடிவிட்டாள்.



அவள் துள்ளி ஓடும் அழகை ரசித்துப் பார்த்தபடி மறுபடியும் மெலிதான புன்முறுவலை உதடுகளில் தவழ விட்டான் தினகரன்.

கீழே மாடிப்படி வழியாக மூச்சிரைக்க வந்த மதுமதிக்கும் ஒருவித திகைப்பான உணர்வுதான் மனம் முழுக்க ஓடிக் கொண்டிருந்தது. திடீரென ஒரு வித நெருக்கமான உணர்வுடன் தினகரனுடன் பழக ஆரம்பித்து விட்டாளே.. ஏன்?.. எதனால் நடந்தது? எதற்காக இப்படித் தன்னை யறியாமல் மாறி விட்டாள்?

தனக்குத்தானே கேட்டுக் கொண்டு விடை தெரியாமல் தவிக்கத்தான் செய்தாள் அவள். அதனால் தான் என்னவோ, சிங்காரி வழக்கம் போல், "அக்கா, அந்த லூசு இன்று எதுவும் கூத்து அடித்ததா?" எனக் கேட்கத் தெரியாதது போல், "யாரைச் சொல்கிறாய்?" என்றாள்.

"அதான், அந்த நெட்டைக் கொக்கு... தினகரன் கோமாளி.." என சிங்காரி விளக்க, "என்ன நீ? என்ன இருந்தாலும் அவர் ஓர் கல்லூரிப் பேராசிரியர். அவரைப் போய் நீ.. லூசு, கோமாளி என வாய்க்கு வந்தபடி சொல்லிக் கொண்டு.." என வேகமாய் ஆரம்பித்தவள், சிங்காரி சட்டென திரும்பி தன்னை ஒருவிதமாய்ப் பார்ப்பதை உணர்ந்து, உதட்டை அவசரமாய் கடித்தவள், "அது.. அது.. வேறொன்றுமில்லை! தந்தையின் காதுகளில் இது விழுந்தால்... அவர் அவர் நம்மைத் திட்டுவாரல்லவா..? அதான் சொல்ல வந்தேன்.." என அசடு வழிய சமாளிக்கவும் செய்தாள் அவள்.

## 20



முன்தினம் டியூசனில் பேச்சினால் வந்த நெருக்கம் அடுத்தடுத்த நாட்களும் தொடர்ந்தது. பாடத்தை முடித்து விட்டு கடைசியில் நேரத்தை ஒதுக்கி ஐந்து பத்து நிமிடங்கள் இருவரும் பொது விஷயங் களைப் பேசலாயினர்.

அதுவரை அவனது குடும்பத்தைப் பற்றி எதுவும் அறியாதவள், ஆவலாய் கேட்க ஆரம்பித்தாள். தாய் தந்தையரை சிறு வயதிலேயே பறி கொடுத்து விட்டு பாட்டியின் அரவணைப்பிலே படித்து வளர்ந்தவனாம். கல்லூரிப் படிப்பை நெருங்கும் போது அந்தப் பாட்டியும் மறைந்துவிட தனிக் கட்டையாகவே படித்து தனக்கென ஒரு வேலையும் தேடிக் கொண்டானாம்.

அவன் சொல்லச் சொல்ல இவனுக்குள் இப்படி ஒரு சோகம் இருக்கிறதா? என்று இரக்கமே அவளுள் பிறந்தது.

“சொந்த பந்தங்கள் இல்லாமல்... வளர்ந்திருக்கிறீர்கள்... ஐயோ.. ரொம்ப பாவம்.. நீங்கள்..” என்றாள் வருத்தம் தொனித்த குரலில்.

“அப்படித்தான்.. இரக்கப்படு... இரக்கப்படு..” என்றான் அவன் அவசரக் குரலில்.

அவள் புரியாமல் விழித்தாள்.

“என் மேல் யாராவது இரக்கப்படுவது எனக்கு ரொம்பவும் பிடிக்கும். அதனால் ப்ளீஸ்... இன்னும் இரக்கப்படு... இன்னும் கொஞ்சம்..” கெஞ்சுவது போல் குறுநகையோடு



அவன் கேட்க அவள் தன்னைக் கேலி செய்வதைப் புரிந்து கொண்டு சிரித்தாள்.

பின் சிரிப்பை நிறுத்தி, “உண்மையாகச் சொல்லுங்கள். உங்களுக்கு அப்படி உறவுகள் சொந்த பந்தங்கள் இல்லாமல் தனிக் கட்டையாய் வளர்ந்தது வருத்தம் அளிக்கவில்லை?” என்றாள்.

“வருத்தம்தான்... என்ன செய்வது? ஆனால் நம்மை மீறி சில விஷயங்கள் நடக்கும்போது ஜீரணித்துத்தானே ஆக வேண்டும். அதற்காக கவலைப்பட்டுக் கொண்டு இருந்தால்... ஒன்றும் ஆகாது.”

அவள் வைத்த விழிகளை மாற்றாமல் அவனையே பார்த்துக் கொண்டிருக்க அவன் தொடர்ந்து விளக்கினான்.

“வாழ்க்கை என்றால் மேடு பள்ளங்கள் இன்பம், துன்பம் எனத்தான் நிறைய இருக்கும். நாம்தான் சகித்துக் கொண்டு வாழ வேண்டும். துணிச்சலாய் பிரச்சினைகளை எதிர் கொள்ள வேண்டும். சிலரைப் போல் ஓடி ஒளியக் கூடாது..” என அவன் முடித்த உடன்தான் அவளுக்கு சுருக்கென உரைத்தது.

அடடா... இவன் சுற்றிச் சுற்றி நம் விஷயத்திற்கே வந்து புத்திமதி சொல்கிறானே... என எரிச்சலானவள் போல், “நீங்கள் சொல்லும் அறிவுரை யாருக்கு.. எனக்குத்தானா?” என்றாள்.

“புரிந்து கொண்டால் சரி..” என்றான் அவன் சுருக்கமாய்.

அவன் நிமிர்ந்து கண்களை விரித்தாள். ''ஹலோ, மிஸ்டர் தினகரன், நீங்கள் என்னைப் பற்றி என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?'' என்றாள் கொஞ்சம் சினமாய்.

அவள் திடுமென கேட்டதும் அவன் புரியாமல்தான் விழித்தான்.

அவளே தொடர்ந்து, ''அதாவது.. நான் அப்படி என் திருமணம் தடைப்பட்டு விட்டதால்.. அதற்காக மனம் உடைந்து... தினம் தினம் குமைந்து கவலைப்பட்டுக் கொண்டிருப்பதாய்த்தானே உங்கள் நினைப்பு?'' எனக் கேட்க அவன் அதை ஆமோதிப்பது போல் மெல்ல தலையசைத்தான்.

அவள் வேகமாய் தலையை வெட்டிக் காட்டியவள், ''அதுதான் இல்லை! நான் அது பற்றிக் கவலைப்படுவதை நிறுத்தி எவ்வளவோ நாட்கள் ஆயிற்று. சொல்லப் போனால் அப்படி ஒன்று என் வாழ்க்கையில் நடந்ததையே நான் மறந்து விட்டேன். இப்போதெல்லாம் நான் தினம் தினம் உங்களோடு சிரித்துப் பேசி எவ்வளவு மகிழ்ச்சியாய் இருக்கிறேன் தெரியுமா?'' என பெரிதாய் தான் சந்தோஷமாய் இருப்பதை அவனுக்குக் காட்டிக் கொள்ள வேண்டும் போல் பேசி முடித்தாள்.

அவனோ அவள் வார்த்தைகளையே வாக்காய் ஏற்றுக் கொண்டு அடுத்த கேள்வியை வீசினான். அதாவது.. என்னுடன் இருக்கும் போது சிரித்து சிரித்துப் பேசி மகிழ்ச்சியாய் இருக்கிறாய் அப்படித்தானே?''



அவன் கேட்டதும்தான் பேச்சில் தான் அப்படியே உளறி இருப்பதை உணர்ந்து துணுக்குற்றவளாய் கன்னங்கள் சூடேற ஆரம்பித்தது அவளுக்கு. அவன் கண்களை அலைய விட்டு அவளையே குறுகுறுப்பாய் பார்ப்பது வேறு அவளை என்னவோ செய்தது.

தவிப்பாய் அவளை ஓரிரு நிமிடங்கள் அப்படியே விட்டவன் அதற்கு மேலும் அவளைச் சங்கடப்படுத்த விரும்பாதவனாய், ''நான் சொன்னது பாடம் நடத்தும் நேரங்களில் நாம் நம்மை மறந்து படிப்பில் மூழ்கி விடுவோம். கவலைகளை மறந்து விடுவோம்... சரிதானே?'' எனவும் தலையசைத்து சமாளித்தாள்.

அத்தோடு அன்று விடைபெற்று ஓடி வந்து விட்டாள். ஆனால் இரவு முழுவதும் டியூசனில் நடந்ததை நினைத்துப் பார்த்துக் கொண்டு இருப்பதையும், மறுநாள் டியூசன் செல்ல மணியைப் பார்த்துக் கொண்டே ஆர்வமாய் இருப்பதையும் உணர்ந்து.. எதனால் இந்த பரபரப்பு? திடீரென எப்படி வந்தது? என திடுக்கிடலாகவே அறிந்து பதில் காண முடியாமல் தவிக்கவும் ஆரம்பித்தாள்.

ஆனால் சிங்காரிக்குத்தான் கொஞ்சம் சந்தேகம் வந்து விட்டது. அவள் துள்ளிக் குதித்துக் கொண்டு டியூசன் கிளம்பிச் செல்வதையும், முன்பு போல் தினகரனை மட்டம் தட்டிப் பேசாமல் இருப்பதையும் உற்றுக் கவனித்து விட்டு ஒருநாள் கேட்டே விட்டாள்.

''என்னக்கா... ஒரு மாதிரியாகி விட்டாய்?'' என்றாள்.

அவள் எதையோ தான் பயப்படுவதைக் கேட்க வருகிறாள் என்பதை உணர்ந்த மதுமதிக்கு படபடப்புதான் அதிகமாகியது.

இருந்தாலும் மறைத்துக் கொண்டு "நீ என்ன சொல்கிறாய்?" என்றாள் சலனமற்ற குரலோடு.

"முன்பு போல் நீ இல்லையே..?" என்றாள் பீடி கையுடன் சிங்காரி.

"இல்லையே... எப்போதும் போலத்தான் இருக்கிறேன். பார்.. இன்னும் உஜாலாவுக்கு கூட நான் மாறவில்லை!" என சொல்லியவள் பெரிய நகைச்சுவை போலவும் சிரிக்கவும் முயன்றாள்.

ஆனால் சிங்காரியின் உருட்டும் கண்கள் தன்னையே நோட்டமிட்டு துளைப்பதைக் கண்டு முகத்தை திருப்பியபடி, "என்னவோ கேட்க வருகிறாய். நேரடியாக கேளேன். எதற்காக தலையைச் சுற்றுகிறாய்?" என்றாள். உடனே சிங்காரி பட்டென "எல்லாம் அந்த.. மாடிப் போர்ஷன்ல நெட்டைக் கொக்கு விஷயம்தான்! முன்பெல்லாம் அந்த லூசுவைப் பற்றி அடிக்கடி கேலி செய்வாய். கிண்டலாய் பேசுவாய். இப்போது அப்படி யெல்லாம் சொல்வதில்லை. அதனால் ஒருவேளை.. ஒருவேளை.."

சிங்காரி நிறுத்த மதுமதி படபடத்தாள்.

"ம்ம்.. கேளு.. ஒருவேளை?"

"ஒருவேளை அந்த நெட்டைக் கொக்கு உன்னை வசியம் பண்ணி விட்டதா.. அதான் நீயும் பெட்டிப் பாம்பாய்



அடங்கி விட்டாயா.. என.." மறுபடியும் பாதியில் நிறுத்தி அவளையே உற்றுப் பார்த்தாள் சிங்காரி.

"நல்ல கற்பனைதான்!" சொல்லியபடி தன் அத்தனை பற்களும் தெரிய வேகமாய் சிரித்தாள் மதுமதி.

"என்ன சிரிக்கிறாய்?"

"பின் சிரிக்காமல் என்ன செய்வது? நீ தான் முக்கியமான ஒன்றை மறந்து விட்டாயே?"

"முக்கியமான ஒன்றா?"

"ஆமாம்... நாம் இருவரும் சேர்ந்து அந்த தினகரன் விஷயத்தில் என்ன முடிவெடுத்தோம்? கொஞ்சம் யோசித்துப் பார்! இனி நாம் தினகரனை நாம் பொருட்படுத் தக் கூடாது. கொஞ்சமேனும் சட்டை செய்யக் கூடாது என்றுதானே?"

அவள் சொல்ல அதை ஆமோதிப்பது போல் சிங்காரி தலையாட்டினாள்.

"இப்போது புரிகிறதா? அதனால்தான் நான் அந்த தினகரனைப் பற்றி கொஞ்சங் கூட சிந்திப்பது இல்லை. சட்டை செய்வது இல்லை. அதனால் அவன் பற்றிப் பேசுவதும் இல்லை!"

அவள் படபடவென சொல்லி முடித்ததும் நம்பியவளாய் உற்சாகமாகிக் கொண்டாள் சிங்காரி.

"நல்லவேளை! நான் கூட பயந்து விட்டேன். அந்த மன்மத கொக்கு உன்னைப் பேச்சில், கண்ணால் மயக்கி..

காதல் கீதல் என எதிலாவது தள்ளி விட்டு விட்டதோ என்று..'' சிங்காரி பளீரெனச் சிரிக்க,

வேண்டுமென்றே உதட்டைச் சிலிப்பு முகத்தை வெட்டிக் காண்பித்தாள் மதுமதி.

''அடடா, என்ன ஒரு பயம் உனக்கு! அந்த தினகரன் சொன்னால், அவன் மன்மதப் பார்வை வீசினால் உடனே தொபுக்கடீர் என காதல் கடலில் விழுந்து விடுவேனாக்கும்..? நல்ல ஆளம்மா நீ!'' என்றபடி புன்னகைக்க அவள் சிரிப்பில் சிங்காரியும் சேர்ந்து கொண்டாள்.

பின் ''என் அக்காவைப் பற்றி எனக்குத் தெரியாதா? சரியான சாமியாரினி ஆயிற்றே!'' என்றபடி பக்கத்தில் வந்து அவள் கழுத்தை வளைத்துக் கொண்டாள் சிங்காரி.

அவள் சிங்காரி அப்படி கள்ளங் கபடமில்லாமல் கழுத்தை வளைத்து முகத்தோடு முகம் வைத்து சிறு பிள்ளை போல் முட்ட.. இவளிடம் உண்மையைச் சொல்கிறோமா? அல்லது எதையாவது மறைக்கிறோமா? என்ற சந்தேகமும் மதுமதிக்கு வந்தது.

உண்மையைச் சொல்ல வேண்டும் என்றால் முன்பு போல் இல்லாமல் இப்போது தினகரனிடம் தினம் தினம் இலகுவாய் ஒருவித நெருக்கத்தோடு பேசுவதையும், சிரிக்க சிரிக்கப் பேசுவதையும் அல்லவா வெளிப்படையாய் சிங்காரியிடம் சொல்லியிருக்க வேண்டும்?

அதைச் சொல்லாமல் மறைத்து விட்டாளே! அது ஏன்? சிங்காரி தப்பாக எண்ணி விடுவாள் என்றா... அல்லது



உண்மையில் அவள் சிங்காரி நினைப்பது போல் தப்பாய்த் தான் பழகிக் கொண்டிருக்கிறாள் என்பதாலா?

கேள்விகளுக்குப் பதில் கிடைக்காமல் மறுபடியும் குழப்பத்தான் செய்தாள் அவள். ஆனால் அவளது கேள்விகளுக்கு பதில் அளிக்கும் வண்ணம் மறுவாரம் தினகரன் நடந்து கொண்டது.. அவளை நிஜமாகவே தூக்கியடிக்கத்தான் செய்தது.

## 21



பேசுவது இருவருக்கும் எவ்வித தடங்கலின்றி சுலபமாகி விட்டதாலோ என்னவோ தினகரனும் சரி மதுமதியும் சரி பொது விஷயங்களிலிருந்து உலக விஷயங்கள் வரை ஒன்று விடாமல் பேசினர்.

ஆயினும் வழக்கமான கேலி, குறும்பு கிண்டல் அவர்கள் பேச்சில் இடம் பெறாமல் இல்லை. அன்று டியூசனுக்கு வந்த மதுமதியைப் பார்த்த தினகரன் ''அடடா, உன் கூந்தலழகு அம்பிகாபதியை அல்லவா நினைவுபடுத்துகிறது'' என்றான்.

''என்ன சொல்கிறீர்கள்... புரியவில்லையே?''

''அதாவது பழைய சங்க இலக்கியத்தில் அம்பிகாபதி தன் காதலியைப் பற்றி வர்ணிக்கும்போது, ''சற்றே சரிந்த குழல் அசைய'' என்பான். அதாவது கொஞ்சம் சரிந்த கூந்தல் எனப் பொருள் படும். கூந்தல் என்பது கொஞ்சம் சரிந்து புறங் கழுத்தை மூடினால்தான் அழகு அதிகரிக்கும். அதைத்தான்

சற்றே சரிந்து இருப்பது அழகு என புகழ்கிறான். அதுபோலத்தான் உனது கூந்தலும் சற்றே கழுத்தில் தோள்களில் சரிந்து அழகுபட காட்சியளிக்கிறது..'' என விளக்கம் கொடுத்து முடிக்கவும் மதுமதி அடக்க முடியாமல் கலீர் சிரிப்பு சிரிக்கவும் சரியாக இருந்தது.

''என்னாயிற்று..? எதற்கு சிரிக்கிறாய்?''

சிரிப்பை அடக்கியவள், ''அப்படியே திரும்பி கண்ணாடியில் உங்கள் தலைக்கேசத்தைப் பாருங்கள். குச்சி குச்சியாய்.. சிலிர்த்துக் கொண்டு.. படை வீரர்கள் வேல் கம்பையும் குத்தீட்டிகளையும், பிடித்துக் கொண்டு.. அணிவகுத்து நிற்பதைப் போல்...'' என்றவள் நிறுத்தி, ''இதுவும்... சங்க கால போர்க் காட்சியை நினைவு படுத்துவது போல்தானே இருக்கிறது?'' என அவள் புருவம் உயர்த்தி கேட்கவும், அவனும், ''ஷாம்பூ போட்டு இன்று குளித்ததினால் ஏற்பட்ட விளைவு!'' என்றபடி சிரிக்க ஆரம்பித்தான்.

மதுமதி தொடர்ந்து சிரிக்கவும் அவள் முத்துப் பல் அழகை உற்றுப் பார்த்து விட்டு, ''அதே அம்பிகாபதி காதலி காதலனைப் பார்த்து புன்னகைப்பது பற்றியும் ஓரிடத்தில் அழகாக விளக்குகிறான். அதாவது காதலி தன் காதலை காதலனுக்கு தெரிவிக்க வேறு ஒன்றும் செய்யவில்லையாம்! அவனைப் பார்த்ததும் நகுகிறாள்! முறுவலிக்கிறாள்! புன்னகை செய்கிறாள்! அவ்வளவுதான்! அதாவது மூன்று செய்கையும் ஒன்றுதான். ஆனால், அவள் அதை வேறுபடுத்தி ஒவ்வொன்றையும் செய்து புன்னகையின் மூலமே தனது காதலை புரிய வைக்கிறாளாம். அம்பிகாபதியின் கதையில் இப்படியெல்லாம் வருகிறது..'' அவன் சொல்லி முடித்து விட்டு, அவளையே பார்க்க அவள் வேண்டுமென்றே சலனம் இல்லாதவளாய், ''ஒரு புன்னகைக்கு இவ்வளவு அர்த்தமா?'' என்றாள்.



அவனோ பேச்சை திருப்பும் வகையில் அம்பிகாபதி சொன்ன புன்னகைக்கான அர்த்தத்தை விடு. உன் புன்னகைக்கு என்ன அர்த்தம்?'' என்றான்.

அவன் எதற்கோ சுற்றி வளைக்கிறான் என்பதை உணர்ந்தவள் மீண்டும் அமைதியாக, ''வேறு என்ன? நகைச்சுவைதான்!'' என்றாள்.

''என்ன நகைச்சுவையா? வேறு ஒன்றும் இல்லையா?''

''வேறு ஒன்றும் இல்லை.''

தீர்க்கமாய் சொல்வது போல் சொல்லிவிட்டு அவள் எழுந்து கொண்டு தனது புத்தகங்களோடு கிளம்பப் போனாள்.

தினகரன் அவனும் எழுந்தவன் அவள் சற்றும் எதிர்பாராத சமயத்தில் டக்கென அவள் கைகளைப் பிடித்து தன் பக்கம் இழுத்தான்.

அப்படியே பூக்குவியல் போல் அவளை அணைக்கவும் செய்தான்.

இதைக் கொஞ்சமும் எதிர்பாராத மதுமதி திகைப்பு மேலானவளாய் ஸ்தம்பித்து தான் நின்றாள்.

அதை அனுமதிக்கவோ எதிர்க்கவோ மனமின்றி அவள் மனம் தடுமாறியதாலோ என்னவோ அவன் இழுத்த இழுப்பிற்கு உடம்பு தானாக போய் அவன் மேல் சாய்ந்து கொண்டது. அபயம் கிடைத்தது போல் அவள் தலையும் அவனது நெஞ்சில் பொதிந்து.. ஓரிரு நிமிடங்கள் இந்த நிலை நீடித்தது என சொல்லலாம்.

அதற்கு மேலும் அவளை சோதிக்க விரும்பாதது போல் டக்கென விடுவித்து விட்டான் தினகரன். அணைப்பை விடுவித்து அவன் பிடிகளில் இருந்து விலகியதும்தான் முழு உணர்வுக்கு வந்து திகைத்தாள் மதுமதி.

காதலன் காதலி அம்பிகாபதி என்றெல்லாம் ஏதேதோ பேசிக் கொண்டிருந்தவன் சட்டென அணைக்க வேறு செய்து விட்டான். என்ன ஒரு செயல் இது... என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறான் இவன்!

சினமாய் நினைத்தாலும் மறுகணமே எவ்வித எதிர்ப்பும் காட்டாத தன் நிலையை எண்ணி அதிர்வும் வெட்கமுமாய் இருந்தது. முகம் சிவந்து போனவள் அதே தவிப்புடன் அதற்கு மேல் அங்கு நிற்க முடியாமல் விடுவிடுவென ஓடினாள்.

தனக்குப் பின்னால் குறுஞ்சிரிப்புடன் தினகரனின் முதுகைத் துளைக்கும் பார்வையும் உணர்ந்தவளாகவே மாடிப்படி இறங்கினாள்.

அதற்குப் பின் அன்று முழுவதும் ஏதோ ஒரு உணர்வில் எதையோ பறிகொடுத்தவள் போல்தான் அவள் நடமாடினாள்.



அந்த அணைப்பிற்கு என்ன அர்த்தம் இருக்கக் கூடும்? தினகரன் எந்த எண்ணத்தில் அவளை அப்படி அணைத்திருக்கிறான்? என மனதுள்ளே கேள்விகளை எழுப்பி விடையும் கண்டுபிடித்தாள்.

அவன் செய்ததற்காக அர்த்தம் தெரிந்து விட்டது. புரிந்து விட்டது. அவள் அனுமதித்தது எதனால்? அப்படி அர்த்தம் தான் என்ன?

அந்தக் கேள்விக்குத்தான் விடை காணுவது சிரமமாயிருந்தது.அவன் அணைத்ததும் அந்த திகைப்பில் அவள் செய்வதறியாது ஸ்தம்பித்திருக்கலாம். அதன் பின் நிலைமையைச் சுதாரித்தவாறு அவள் எதிர்ப்பைக் காட்டியிருக்கலாமே?

இல்லையே.. அவளிடம் ஒரு சிறு கோபம்.. சிறு அசூயை கூட எழவில்லையே! ஏதோ புது மணப் பெண் போல் அல்லவா நாணிக் கோணி வெட்கப்பட்டு ஓடிவந்து விட்டாள்!'

நின்று நிமிர்ந்து ஒரு முறைப்பு பார்வை பார்த்தாலாவது அவன் தினகரன் அவளை சரியாக எண்ணியிருக்கக் கூடும்... ஆனால் இப்போது?

என்னதான் ஆ.. ஊ.. வென பெரிதாய் பீற்றிக் கொண்டாலும், தொட்டால் கையில் துவண்டு போகக் கூடிய ரகம் இவளும்.. என சாதாரணமாக அல்லவா எடை போட்டிருப்பான்? ஒரு கணம் திரும்ப அவனிடம் சென்று, 'எப்படி நீங்கள் செய்யலாம்? எதற்காக அப்படிச் செய்தீர்கள்?' என்று கூட சண்டையிட்டுப் பார்க்கலாம் என நினைத்தாள்.

ஆனால் தினகரன் இதற்கெல்லாம் அசருகிறவன் அல்ல என்பதும் அவளுக்குப் புரிந்தது. அவள் எவ்வளவு துள்ளி வந்தாலும், சமாளிப்பான். சர்வ சாதாரணமாய், "அப்படியா? காரணமா? ம்ம் யோசித்துச் சொல்கிறேன்!" என ஒரு உப்புச் சப்பில்லாத பதில் சொல்லிவிட்டு அகன்று விடுவான்.

அதனால் நடந்த விஷயத்தை அப்படியே விட முடியாமலும், நடந்தது நடந்து போயிற்று என ஜீரணிக்க முடியாமலும் தான் அன்று முழுவதும் மதுமதி நடமாடினாள்.

ஆனால் சிங்காரிதான் முகச் சாயலை பிரதிபலிப்பை வைத்தே துப்பறிபவள் ஆயிற்றே! மாலை அவளுடன் வழக்கம் போல் பேசியவள் மதுமதி அடிக்கடி பேச்சினிடையே சிந்தனையில் மூழ்குவதைப் பார்த்து "ஏதோ விஷயம் அக்காவிடம் இருகுகிறது போல் தெரிகிறதே." என்றபடி கண்களைச் சுழற்றினாள்.

"சே.. சே..! அப்படியெல்லாம் இல்லை!" என்றாள் மதுமதி அவசரமாக.

ஆனால் சிங்காரி விடுவதாயில்லை. "மதுக்கா, இல்லை என்று நீங்கள் சொல்லும்போதே விஷயம் தொண்டை வரை வந்துவிட்டது. இன்னும் கொஞ்சம் கொஞ்சம்தான்.. ம்ம்.. கமான்.. அப்படியே வெளியே.. க்வாக்.. க்வாக்.." என்றபடி உமிழ்வது போல் செய்து காட்ட அவள் தோள்களைத் தட்டிச் சிரித்த மதுமதி, "ம்ம்.. அதுதான் ஒன்றும் இல்லை என்று சொல்கிறேனே! பின் என்ன?" என சமாளித்தாள்.



பின் பேச்சை திசை திருப்பும் விதமாய் பூர்ணம் அத்தை பற்றி அவளது செல்வ மகன் எழிலரசன் பற்றி வேண்டுமென்றே பேச்சுக் கொடுத்தாள். இப்போதெல்லாம் எழிலரசன் பொறுப்பாய் பக்கத்து டவுணுக்குப் போய் அத்தை போட்டுக் கொடுக்கும் முறுக்குச் சீடை, பலகாரங்களை விற்று நிறைய பணம் கொண்டு வருவதாய், அத்தை சொன்ன புளகாங்கிதங்களை விவரித்தாள்.

அவள் சொல்வதை சுவாரஸ்யமில்லாமல் உம் போட்டுக் கேட்டுக் கொண்டிருந்தாள் சிங்காரி. ஒரு கட்டத்தில் அதிலும் பொறுமை இழந்து அவள் பக்கம் வந்தவள், "இன்று என்னாயிற்று உனக்கு? ஒன்றுக்கத்த விஷயங்களை எல்லாம் வரிசையாய் சொல்லி செம போர் அடிக்கிறாய்?" என மதுமதியை உலுக்கவும் செய்தாள்.

பேச்சு தினகரன் பற்றி வந்து விடக் கூடாது என்பதற்காக சிங்காரியிடம் நாம் ஏதேதோ பிதற்றுகிறோம் போலும் என சுதாரித்த மதுமதி வாயை மூடி அசட்டுப் புன்னகையை பெரிதாக்கினாள்.

தொடர்ந்து சிங்காரியே, "சுவாரஸ்யமாய் ஏதாவது பேசுவோம்.." என்றவள் யோசித்தபடி, "அந்த நெட்டைக் கொக்கு தினகரனிடம் விளையாடி ரொம்ப நாளாயிற்றே! பேசாமல் அந்த கலியுக கோமாளிக்கு ஒரு லவ் லெட்டர் எழுதிக் கொடுத்து அவனை டபாய்க்கலாமா?" என்றாள்.

சிங்காரி சாதாரணப் பேச்சுடன் சர்வ சாதாரணமாய், கேட்க மதுமதிக்கு தூக்கி வாரித்தான் போட்டது. "ஏய்.. உளறாதே!" என்றாள் அவசரக் கோபத்துடன்.

"ஐயோ! நான் உளறவில்லை! நிஜமாகவே லெட்டர் கொடுக்கப் போறேன்.." என்றாள் சிங்காரி பிடிவாதம் பிடிப்பதுபோல்.

மதுமதி ஏறக்குறைய அவளை முறைக்கவே செய்தாள்.

"இப்படியெல்லாம் பேசிக் கொண்டிருந்தால் அப்பா விடம் சொல்லி உனக்கு முதுகில் இரண்டு போடச் சொல்லி விடுவேன்.." என்றாள் கண்டிப்பான குரலில் எச்சரிப்பது போல்.

பயப்படுவதற்குப் பதில் கலகலவென நகைத்தாள் சிங்காரி.

"ஐயோ.. அக்கா!" என்றபடி அவள் பக்கம் வந்து இறுக கட்டிக் கொண்டு "சும்மா விளையாட்டுக்குச் சொல்லி உன்னை டபாய்க்கப் பார்த்தால்.. நீ என்னவென்றால் அதை சீரியஸாய் எடுத்துக் கொண்டு.. ம்ம்... என்னமாய் கோபம் வருகிறது உனக்கு?" என தொடர்ந்து சிரிக்கவும், 'அட சுட்டித்தனமாய் இவள் விளையாடுவது கூட தெரியாமல் சீரியசாய் பேசி விட்டோமே!' என உள்ளுக்குள் மருகி மீண்டும் அசட்டுப் புன்னகையை உதிர விட்டாள் மதுமதி.

அவள் கழுத்தை வளைத்து அணைத்திருந்த சிங்காரி மேலும் அவளை அணைத்தபடி மெல்ல அவள் காதுகளில், "இப்படித்தானே உன்னை அந்த தினகரன் அணைத்துப் பிடித்திருந்தார்?" என வார்த்தைகளை வீச தூக்கி வாரிப் போட்டவளாய் திகைத்துப் போனாள் மதுமதி!



# 22



சிங்காரி கேள்வியைக் கண்டு மதுமதி ஒரேடியாய் அதிர்ந்துதான் போய் விட்டாள். அவள் எது அவளுக்கு தெரியக் கூடாது என்று நினைத்தாளோ.. அதைப் பார்த்து விட்டாளா?

அவள் திகைத்து விழிப்பதை ரசித்தபடி சிங்காரி கண்களை உருட்டினாள்.

"நான் தற்செயலாய் மாடிப் படி ஏறி வந்தேன். எல்லாவற்றையும் பார்த்து விட்டேன். போதுமா?"

"எல்லாவற்றையுமா?"

"அதான்.. அந்த தினகரன் உன்னை பெரிய மன்மதன் போல் அணைத்துக் கொண்டிருக்க.. நீயும் ரதிதேவி போல் ஒண்டிக் கொண்டு இருந்தாயே, அதை!"

சிங்காரியின் வார்த்தைகள் குத்தீட்டி போல் துளைத் தெடுக்க தடுமாறித்தான் போனாள் மதுமதி.

"ஐயோ.. சிங்காரி! அது.. அது.."

"சும்மாச் சொல்லு... என்னதான் நடந்தது?" கைகளைச் சொடுக்கினாள் சிங்காரி.

"நீ நினைப்பது போல் இல்லை. திடுமென செய்தால் உனக்கென்ன... உன் கைகளுக்கென்ன? அவைகளைப் பூப்பறிக்கவா எங்காவது அனுப்பியிருந்தாய்? செவிட்டில் இரண்டு இழுப்பு நீ இழுத்திருக்கலாமே? ம்ம்... ஏன் செய்யவில்லை?" மறுபடியும் சுண்டிச் சொடுக்கினாள்.

"நீ நினைக்கிறபடி செய்யத்தான் நினைத்தேன். ஆனால். அதற்குள் எல்லாம் முடிந்து விட்டது.."

"முடிந்த பிறகாவது... அடிக்கலாமே?"

"ஆனால்.. அது.. அது.. முடியாமல் தடுமாறி விட்டேன். என்ன செய்வது என்று புரியாமல் பயந்து ஓடி வந்து விட்டேன்.."

அவள் சொல்ல பெரிதாய் தலையை ஆட்டி அபிநயம் பிடித்தாள் சிங்காரி. "ஆஹா! நல்ல கதைதான்! இனி என்ன நடக்கப் போகிறது தெரியுமா? ஊரில் உள்ள அத்தனை ரோமியோக்களும் ஒன்று சேர்ந்து கொண்டு, 'அடடா! இங்கு பார்! ஒரு பயந்தாங் கொள்ளி வருகிறது பார்! நாம் யார் கட்டிப் பிடித்தாலும் நம்மை ஒன்றும் செய்யாது... என உன்னை விரட்டப் போகிறார்கள் பார்...!" எனச் சொல்லிவிட்டு மறுபடியும் கண்களை வேகமாய் உருட்டி மதுமதியின் முகத்தை உற்றுப் பார்த்துவிட்டு, கடகடவென சிரிக்க ஆரம்பித்தாள்.

சீரியசாய் பேசிக் கொண்டிருந்தவள் அப்படி பெருஞ் சிரிப்பு சிரித்ததும்தான் அட.. இவள் விளையாட்டுக் காகத்தான் இப்படி நோண்டி கேள்விகளை கேட்டிருக்கிறாள். நாமும் பயந்து விட்டோமே! என பயம் நீங்கியவளாய் மெல்ல சிரிக்க ஆரம்பித்தாள் மதுமதி.

பின் தினகரனுடன் பேசிவிட்டு கிளம்பும்போது அவன் அப்படிச் செய்தது அதனால்தான் செய்வதறியாமல் தடுமாறி ஓடிவந்தது என எல்லாவற்றையும் அவளுக்கு விளக்கினாள்.



"இவ்வளவு நடந்திருக்கிறது... என்னிடம் ஏன் சொல்லவில்லை?"

மறுபடியும் கொம்பு பிடித்தாள் சிங்காரி.

"பயம்.." என்றாள் மதுமதி.

"அட.. என்னிடமும் பயமா? நிஜமாகவா? நிஜமாகவா சொல்கிறாய்? அப்படியானால் எங்கே அந்த பயத்தை கொஞ்சம் வெளியே காட்டேன். நானும் பார்த்துக் கொள்கிறேன்!" என்று உற்றுப் பார்த்து முகத்தை உர்ரென சிங்காரி வைக்க, "போடி.. நீ! விளையாட்டு போதும். நான் சொல்வது நிஜம்.." என அவள் தோள்களை உலுக்கினாள் மதுமதி.

"ம்ம்... ம்ம்..." என அதற்கும் பலமாய் தலையாட்டிய சிங்காரி, "ம்.. புரிகிறது! திடீரென ஒரு ஆடவன் கட்டிப் பிடித்தால், முதலில் அப்படித்தான் பயம் ஏற்படும். பின் போகப் போக சரியாகி விடும்... எல்லாம் எனக்குத் தெரிந்ததுதான்!" என்றாள்.

அவள் ஏதோ பீடிகை போல சொல்ல முதல் முறையாய் லேசான அதிர்வுடன் அவளைப் பார்த்தாள் மதுமதி.

"என்ன சொல்கிறாய் நீ?"

"எல்லாம் அனுபவம்தான்! அனுபவம்தான் பேசுகிறது!" என்றாள் சிங்காரி புதிதாய் குறுஞ்சிரிப்பு ஒன்றை படர விட்டவாறு.

"அனுபவமா?"

''ம்ம்.. உனக்கு கட்டிப் பிடித்தலை வாங்கிய அனுபவம் இருப்பது போல் எனக்கும் அனுபவம் இருக்கக் கூடாதா? எனக்கும் இருக்கிறது!''

''அப்படியானால், நீ..?''

சந்தேகமாய் மதுமதி இழுத்தாள்.

''நானும் ஒருவரைக் காதலிக்கிறேன்!'' என்றாள் சிங்காரி அவளை அதிரவைத்தவாறு.

''ஏய் விளையாடாதே! நான் ஒன்றும் தினகரனைக் காதலிக்கவில்லை.''

''நான் நம்ப மாட்டேன்.''

''நான் சொல்வது உண்மை. அப்படி ஒன்றும் எங்களுக்குள் ஏற்படவில்லை.''

''சரிதான். நல்ல கதையாகத்தான் இருக்கிறது. கட்டிப் பிடிப்பது வரை வந்தாயிற்று. இனியும் காதல் இல்லை என்று சொன்னால் எப்படி? கள்ளத்தனம் தானே? நீ சரியான கள்ளிடி!''

சிங்காரி கைதட்டி ரசிக்க அவள் தோள்களை இடித்து முறைத்தாள் மதுமதி.

''போடி இவளே..! நீ பாட்டுக்கு என்னென்னமோ கற்பனைப் பண்ணிக் கொண்டு.. அப்படி எல்லாம் ஒன்றும் ஏற்படவில்லை..''

ஆனால் அதற்கும் ஆருடம் சொன்னாள் சிங்காரி.



''இதுவரை ஏற்படவில்லை. இனி ஏற்படும். நீயும் தினகரனும் காதல் ஜோடிகள் ஆகப் போகிறீர்கள் என்று அர்த்தம்.''

மதுமதி அவளையே உற்றுப் பார்த்தவாறு, ''என் விஷயம் இருக்கட்டும். நீ சொன்னது எல்லாம் விளையாட்டுக்குத் தானே?'' என்றாள்.

''யார் அப்படிச் சொன்னது?''

''பின்?''

''நான் ஒருவரைக் காதலிக்கிறேன். ஐ...ஆம்.. இன்.. லவ்..!'' என்றாள் சிங்காரி பெருமிதமாக.

''ஏய்.. முட்டாள்.. உளறாதே..''

''முட்டாள்கள் உளற மட்டும் இல்லை. காதலிக்கவும் செய்வார்கள்...'' என்றாள் அதற்கும் விடாமல்.

''ஹேய்.. நீ இப்படியே பேசிக் கொண்டிருந்தால் முதுகில் பூசைகள்தான் கிடைக்கும்.''

''பூசையை எல்லாம் அப்படியே தோசையாக்கி சாப்பிட்டு விடுகிறேன், போதுமா?''

''ஏய்..'' என்றபடி பக்கத்தில் சென்று அவள் காதுகளைத் திருகினாள் மதுமதி. ''நீ விளையாடியது போதும். வா.. வேறு பேசுவோம்..'' என்றாள்.

''ஐயோ.. அக்கா! நான் சொல்வது உண்மை. நான் நிஜமாகவே ஒருவரைக் காதலிக்கிறேன். அவர் பெயர் மோகன். தொழிலதிபர் ஒருவருடைய மகன்.''

சிங்காரி தீர்க்கமாய் உறுதியான குரலில் சொல்ல மதுமதி அதிர்ந்தே போனாள்.

"நீ விளையாடவில்லையா நிஜமாய்த்தான் சொல்கிறாயா?"

அவள் தலையில் கை வைத்து சத்தியம் செய்தாள் சிங்காரி.

"நான் சொல்வது விளையாட்டில்லை.. உண்மை!"

"எவ்வளவு பெரிய விஷயத்தை விளையாட்டுப் போல் லேசாக சொல்லிவிட்டாய்?"

"காதல் என்ன அவ்வளவு பெரிய விஷயமா? ஊர் உலகத்தில் யாரும் காதலிப்பதுதான் இல்லையா?"

"அது இருக்கட்டும். அந்த காதல் சைத்தான் இந்த சிறு வயதில் உனக்கு எப்படி வந்தது? யார் அவன்? எதனால் இவ்வளவு தூரத்திற்கு வந்தது?"

"அப்படிக் கேள்.. விளக்குகிறேன்.." என்றபடி பதிலுக்கு கதை போல் சிங்காரி சொல்ல ஆரம்பித்தாள்.

அவள் காலேஜில் படிக்கும் சீனியர் மாணவன் தான் மோகனாம். பெரும் தொழிலதிபர் ஒருவரின் மகனாம். தந்தை சென்னையில் இருப்பதால் ஹாஸ்டல் வாசியாம். தினம் தவறாமல் சிங்காரியை வைத்த கண் வாங்காமல் பார்த்து இரண்டு மாதம் பார்வையில் துரத்தினானாம். இவளும் அதில் மயங்கி காதலில் விழுந்து விட்டாளாம்..

அவள் சொல்லச் சொல்ல அவள் விளையாடவில்லை என்பது புரிந்து அதிர்ந்தாள்.



"எப்படி நீ..? நீயா.. சொல்கிறாய்? என்னால் நம்பவே முடியவில்லையே!"

அவள் அரற்ற பதிலுக்கு அவளும், "என்னாலும் நம்ப முடியவில்லைதான் அக்கா. அந்த ஆள் ஆரம்பத்தில் கண்களால் வட்டமடிக்கும் போது நான் கொஞ்சமும் சட்டை செய்யாமல்தான் இருந்தேன். ஆனால் தொடர்ந்து அவன் என்னைப் பின்னால் சுற்றிய விதம் என்னை சலனப்படுத்த ஆரம்பித்தது. தோழிகளும் அவன் பெரிய பணக்கார இடமடி. உன்னை இந்தச் சுற்று சுற்ற நீ கொடுத்து வைத்திருக்க வேண்டும்... என துளைத்தெடுத்தார்கள். அதனால்.."

அவள் நிறுத்த, "அதனால் உடனே நீ மயங்கி விட்டாயாக்கும்?" என்றாள் மதுமதி கோபமாய்.

"நான் அப்படி ஒன்றும் மயங்கவில்லை! நானும் யோசித்தேன். எப்படியும் வாழ்க்கையில் யாரோ ஓர் ஆண் மகனை திருமணம் செய்துதான் ஆக வேண்டும். அந்த 'யாரோ' நம் பின்னால் சுற்றும் இவனாய் இருந்தால் என்ன.. என்ற நினைப்பு ஓடியது. அதான் பார்த்தேன்.. ஒரு நாள் பின்னால் என் கடைக்கண் பார்வைக்காக பின்னாலே வந்தவனைப் பார்த்து பல்லிளித்து காதலுக்கு ஓகே சொல்லி விட்டேன். இதுதான் என் காதல் கதை.." பெரிய கதையாய் சொல்லி முடித்தாள் சிங்காரி.

"எவ்வளவு நாளாய் இது நடக்கிறது?" என்றாள் மதுமதி கடுமை குறையாமலே.

''சரியாகச் சொன்னால் இரண்டுமாதம் மூன்று நாள் முப்பது நிமிடங்கள்..'' என்றபடி கைகளை விரித்து சாதனை போல் சிங்காரி சிரிக்க அவளை முறைத்தாள் மதுமதி.

''ஏன்.. என்னிடம் உடனே சொல்லவில்லை?'' என்றாள் அதே கோபத்துடன்.

ஆனால் சிங்காரி அசராமல் சிரித்தவள், ''பயம் எல்லாம் ஒன்றும் இல்லை. சரியான சந்தர்ப்பத்திற்காகக் காத்திருந் தேன். இன்றுதான் அமைந்தது..'' என்றாள் சர்வ சாதாரணமாய்.

எவ்வளவு பெரிய விஷயத்தை எவ்வளவு சாதாரணமாக பேசுகிறாள்... இவள்? என்ற கோபத்துடனே அவள் தோள்களைப் பிடித்து டக்கென திருப்பிய மதுமதி, ''என்னடி ஆயிற்று.. உனக்கு? இதெல்லாம் தப்பு என்று கூட நீ உணரவில்லையா?'' என்றாள் முகத்தில் கவலை பரவியவளாய் ஆற்றாமையுடன்.

அதற்கு அசால்டாய் தோள்களை குலுக்கினாள் சிங்காரி. ''அப்படிப் பார்த்தால் அந்த தினகரன் உன்னை நெஞ்சார அணைத்தது நீயும் செய்வதறியாது ஒண்டிக் கொண்டது.. எல்லாம் தப்புதானே? அதை ஏன் நீ உணரவில்லை?'' என்றாள் அவளும் பதிலுக்கு.

அவள் கேள்வியின் நிஜம் உரைத்தபோது அரண்டு தான் போனாள் மதுமதி.



## 23



அதற்குப் பின் சிங்காரியை உற்றுக் கவனித்த பின்தான் மதுமதியால் நிறைய விஷயங்களை உணர முடிந்தது. அவள் உடை மேக்கப் என அழகுச் சமாச்சாரங் களில் நிறைய மாற்றம் செய்திருந்தாள்.

நல்ல டிசைன்களான சேலைகளை தேர்ந்தெடுத்து அணிந்து கொண்டு அலங்காரத்திற்காக என்றுமில்லாததாய் கண்ணாடி முன் நின்று அரை மணி நேரம் செலவழித்துக் கொண்டு... பேஸ் க்ரீம், உயர் ரக சென்ட், தொங்கட்டான் என விதவிதமாய் தன்னை அழகுபடுத்திக் கொண்டு... ஒரு அலங்காரத் தேராய் அல்லவா தினமும் கிளம்பிப் போய்க் கொண்டு இருக்கிறாள்?

எப்படி இவளை கவனிக்க மறந்தோம்?

சிங்காரி இயற்கையாகவே உற்சாகமும் துள்ளலும் கூடியவள்தான். அது தற்போது பல மடங்காக அதிகரித்து எப்போது சிறகடிக்காத குறையாய் அல்லவா தரையில் கால்படாத அளவுக்கு அல்லவா உற்சாகத்தோடு பறந்து கொண்டிருக்கிறாள்?

எல்லாம்.. அந்தக் காதல்... அவன்.. அவன்... என்ன பேர் சொன்னாள்? மோகன்... மோகனா? அவனால் வந்த மாற்றமா? தனது மனதுக்குப் பிடித்த துணையை தேடிக் கொண்ட சந்தோஷமா?

அந்த மோகன் எப்படியோ... நல்லவனாய் நல்ல குணமுடையவனாய் இருக்க வேண்டுமே! இவள் வெறும்

அசட்டுத் துணிச்சல் மட்டும் உள்ள அப்பாவி வெகுளி யாயிற்றே! அவன் பெரும் பணக்காரன் என்று வேறு சொல்கிறாள். அவன் இவளுடன் பழகி கடைசியில் ஏமாற்றி விட்டால் இவளால் அந்த ஏமாற்றத்தைத் தாங்க முடியுமா?

என்ன செய்வது?

சும்மாவே எந்த அறிவுரை சொன்னாலும் லேசில் செவி சாய்க்க மாட்டாள் இந்த சிங்காரி.

இப்போது அந்த புத்திமதியை மதுமதி சொல்ல முடியாமல் போவதற்கும் அவள் கேட்காமல் போவதற்கும் சிங்காரிக்கு சரியான காரணமும் கிடைத்து விட்டது.

அது -

தினகரன்!

நீதான் அவனுடன் பழகுகிறாயே... காதல் செய்கிறாயே... பின் நான் ஏன் செய்யக் கூடாது.. என எதிர்க் கேள்வி கேட்க ஆரம்பித்து விட்டாள்.

அவளிடம் எப்படி நியாயத்தைச் சொல்வது?

தினகரனுக்கும் அவளுக்கும் அவள் நினைப்பது போல் அப்படி ஒன்று இல்லை என்பதை...?

இது சாதாரண விஷயம் என விட்டுவிட முடியாது. உடனடியாய் தீர்மானித்து முடிவு செய்ய வேண்டும். இதில் சிங்காரி வேறு அவசரக்காரி... கொஞ்சமும் பொறுமை இல்லாதவள்!



மதுமதிக்கு அன்று இரவு தூக்கம் வரவில்லை. புரண்டு புரண்டு படுத்தாள். சிங்காரி ஒரே கேள்வியில் தனது செயல்களை எல்லாம் நியாயப்படுத்தி விட்டாளே!

நீ மட்டும் தினகரனை காதல் செய்யலாம். நான் செய்யக் கூடாதா? என்பதுதானே அவளது கேள்வி.

ஆனால் உண்மை அவளுக்குப் புரியவில்லையே!

தினகரனை அவள் காதலிப்பதாய் இதுவரை அவளும் உணரவில்லை. அவனிடமும் அப்படிச் சொல்லிக் கொண்டது இல்லையே!

ஆனால் சிங்காரி அதை நம்ப மாட்டாள்.

அது.. காதல்தான் என்பாள்!

நீ மட்டும் செய்யலாம், நான் செய்யக் கூடாதா? என எதிர்க்கேள்வி கேட்டு வாதிடுவாள். அவளுக்கு விளக்கி புரிய வைக்க முடியாது.

என்ன செய்ய இதற்கு?

கல்லூரி சென்று படிக்கும் வயதில் இப்படி காதல் அது இதுவென இவள் அலைய ஆரம்பித்து விட்டால்.. இவள் படிப்பு என்ன ஆவது? இவள் எதிர்காலம் என்ன ஆகும்?

தந்தைக்கு இந்த விஷயம் தெரிந்தால்..என்னமாய் ஆடிப் போய் விடுவார்.

அந்த.. இவள் காதலிக்கும் மோகன்... எப்படிப் பட்டவனோ? என்ன வகை குணமோ? பெரும் பணக்காரன் வேறு என்கிறாள். ஒருவேளை அவன் இவளை டைம்

பாஸுக்காக என எண்ணி காதல் செய்து விட்டு கைவிட்டு விட்டால்... வெகுளிப் பெண்ணான இவள் நொந்து விடுவாளே!

உலகம் புரியாத வயதில் இவளுக்கு இப்படி ஒரு காதல் தேவையா?

எப்படி இவளைத் திருத்துவது?

நாம் புத்தி சொல்லப் போனால்... எனக்கு அறிவுரை சொல்கிறாயே... நீ மட்டும் என்னவாம்? என பதிலடி கொடுக்கவும் தயாராகி விடுவாள்.

இவளை இந்த நிலையில் திருத்த வேண்டும். இந்த வயதில் காதல் கொள்வது எல்லாம் தவறு என புரிய வைக்க வேண்டும். விஷயத்தை தந்தை வரை போகாமல் நாமே அவளுக்கு உணர வைத்து அவளை தெளிவுபடுத்த வேண்டும்.

எப்படி?

தூக்கம் தொலைந்தவளாய் நெடுநேரம் அது பற்றியே யோசித்துக் கொண்டிருந்தாள் மதுமதி.

யோசித்துப் பார்த்ததில் ஒரு விஷயம் தெளிவாய்ப் புரிந்தது.

முதலில் அவளுக்கும் தினகரனுக்கும் சிங்காரி நினைப்பது போல் காதல் இல்லை என்று புரிய வைக்க வேண்டும்.

அப்படி புரிய வைத்தால்தான் சிங்காரியிடம் உரிமையாய் கண்டித்துப் பேசவாவது முடியும்.



இல்லாவிடில் உனக்கு ஒரு நியாயம் எனக்கு வேறா.. என்று சீறி விடுவாள்.

சிந்தித்தவளின் மனம் ஒரு நிமிடம் நிதானித்து எதிர் கேள்வியும் கேட்டது.

ஆமாம்.. உண்மையில் அவளுக்கும் தினகரனுக்கும் இடையே சமீப நாட்களாய் ஒருவித ஈர்ப்பு ஓடத்தானே செய்கிறது?

அந்த ஈர்ப்பின் உரிமையில்தானே அன்று அவன் அணைக்கக் கூட செய்தான்!

அவள் அதை அந்த அணைப்பை குழப்பமாய் அனுமதித்ததும் அந்த ஒரு வகை ஈர்ப்பால்தானே!

அதைத்தான் காதல் என சிங்காரி சொல்கிறாளா?

கிடுகிடுவென யோசித்தவள் உடல் நடுங்க தலையைச் சிலுப்பிக் கொண்டாள்.

எது.. எப்படியோ... அது அவள் நினைப்பது போல் ஈர்ப்போ... அல்லது சிங்காரி நினைப்பது போல் காதலோ.. எதுவானாலும் சரி... உடனடியாய் அதை நிறுத்தியாக வேண்டும்!

வேறு வழியில்லை!

சிங்காரியைத் திருத்த அவளுக்கு உண்மையைப் புரிய வைக்க அவள் அப்படி ஓர் நடவடிக்கையை கண்டிப்பாக எடுத்தாக வேண்டும்!

என்ன நடவடிக்கையை எடுக்கலாம்?

இனி அவளுக்கும் தினகரனுக்கும் ஒன்றுமே இல்லை என்பதை சிங்காரிக்கு உணர்த்த வேண்டும்.

அதற்கு ஒரே வழி?

இனி தினகரனை சந்திப்பதை அவனுடன் பேசுவதை ஏன் அவனைப் பார்ப்பதைக் கூட அவள் நிறுத்த வேண்டும்.

அப்படிச் செய்தால்தான் சிங்காரி நம்புவாள்.

அப்படி தினகரனை சந்திப்பதை நிறுத்த அவள் டியூசன் நிறுத்தியாக வேண்டும்.

முன்பு போல் பாடங்களை வீட்டிலிருந்தே சுயமாக கற்றுக் கொள்கிறேன் எனச் சொல்லி விட்டால் போதும்.

டியூசனை நிறுத்தி விடலாம். தினகரனைப் பார்க்க வேண்டிய அவசியம் இருக்காது.

சிங்காரியும் நம்புவாள்

நாம்தான் தவறாக நினைத்து விட்டோமோ? என பொறுப்புடன் யோசிக்க ஆரம்பித்து விடுவாள்.

அது போதும்!

முடிவெடுத்தவள் தாமதிக்காமல் மறுநாளே செயல் படுத்த ஆரம்பித்து விட்டாள்.

முதல் வேலையாய் தினகரனைச் சந்தித்து தான் பாடங்களை சுயமாகப் படித்துக் கொள்வதாகவும் இனி டியூசன் பயிற்சி தேவையில்லை எனவும் தெரிவிக்க... பெரிதாய் புருவம் உயர்த்தினான் தினகரன்.



அவள் முகத்தையே காரணம் அறிய கூர்ந்து பார்க்க எவ்வித சலனமுமில்லாமல் இருந்தாள் மதுமதி.

''வேறு எதுவும் விசேஷ காரணம் உண்டா?'' என்றான் குறிப்பறிவது போல்.

''ஒன்றும் இல்லை..'' என்றாள் அவள் பிசிறில்லாத குரலில்.

அவள் முகத்தை மறுபடியும் உற்றுப் பார்த்து விட்டு, ''அதுவும் ஒரு வகையில் நல்லதுதான். எனக்கு காலேஜ் டூர் ஒன்று வருகிறது..'' என்றான்.

''காலேஜ் டூரா?''

''ம்ம்.. கல்லூரி மாணவர்கள் வட மாநிலங்களுக்கு சுற்றுலா போல் அழைத்துச் செல்லும் பொறுப்பு என் மீது விழுந்திருக்கிறது. அதனால் ஒரு இருபது.. இருபத்தைந்து நாட்கள் டூர் செல்ல இருக்கிறேன்!''

''இருபத்தைந்து நாட்களா?''

இம்முறை வியப்பால் அவளையறியாமல் அவள் புருவமும் கண்களும் விரிந்தது.

அதை ஆவலாய் உற்றுப் பார்த்த தினகரன், ''ம்ம்.. கண்டிப்பாக இருபத்தைந்து நாட்கள்தான். அதற்குப் பின் நான் திரும்பி விடுவேன். தாராளமாய் என்னைத் தரிசிக்கலாம்...'' என்றபோது அவனது வார்த்தைகள் சரியாய் அவள் காதுகளில் உரைக்கவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

அவள் மீண்டும் விழிப்பதைப் பார்த்து, ''அதான் இருபத்தைந்து நாட்களுக்குப் பின் தரிசனம் கட்டாயம் உண்டு என்று சொல்லி விட்டேனே.. இன்னும் அங்கு என்ன கலக்கம்?'' என அவன் மறுபடியும் வினவ அவள் உணர்வுக்கு வந்து அவன் சொல்வதன் அர்த்தம் புரிந்து சினம் கொண்டாள்.

''ஆமாம்! உங்களைப் பார்க்காமல், கண்கள் சிவக்க தூங்காமல் கொள்ளாமல், உணவை சரியாய் உண்ணாமல், மெலிந்து கிலிந்து எறும்பாய் போய் இளைத்துக் கிடப்பேன். அப்படி தாங்கள் திரும்பி வந்ததும் உடனே தரிசனத்தை கொடுத்து என்னை ரட்சித்து விடுங்கள். என்ன நான் சொல்வது சரிதானே?'' என நகைப்புடன் சொல்லியவள் அதற்கு மேல் அங்கு நிற்காமல் ஓடினாள்.

கூடவே இருபத்தைந்து நாட்கள் தினகரன் ஊரில் இருக்க மாட்டானா? என்கிற வார்த்தைகள் தன்னுள் இனம் புரியா கவலையொன்றை எழுப்புவதையும் கண்டு அதிரவே செய்தாள் அவள்.

## 24



மதுமதி டியூசன் நிறுத்திய விவரத்தை தந்தையிடம் தெரிவித்தபோது ஒரு சிறு வியப்போடு தலையசைத்து விட்டார். ஆனால் சிங்காரிதான் குதித்தாள். ''என்னிடம் கேட்காமல் நீ எப்படி நிறுத்தலாம்?'' என்றாள்.



அவளிடம் உண்மையான காரணத்தை சொல்ல விரும்பாதவளாய், ''எனக்குத் தேவையில்லை என்று தோணியது. அதனால் நிறுத்தி விட்டேன்..'' என்றாள்.

''தேவையில்லாமல் போனது... படிப்பு பயிற்சியா... அல்லது தினகரனா?''

சிங்காரி நேருக்கு நேராகவே கேட்டு மடக்கினாள்.

''இரண்டும்தான்!''

அழுத்தமாய் பதில் வந்தது மதுமதியிடமிருந்து. பக்கத்தில் வந்து அவள் தோளைப் பிடித்தாள் தங்கை.

''என்னக்கா... இது என்ன? என்னைத் திருத்த இப்படி ஒரு முயற்சியா?''

திரும்பி கண்கள் படபடக்க கேட்டவளை ஆழமாகவே பார்த்தாள் மதுமதி.

''அப்படித்தான் வைத்துக் கொள்ளேன்..''

சிங்காரி டக்கென சிரிப்புக்கு போனவள், ''இந்தச் தலையைச் சுற்றி மூக்கைத் தொடும் வேலையெல்லாம் எதற்கு? நேரிடையாகச் சொல்லிவிட வேண்டியதுதானே?''

''சரி.. நேரிடையாகவே சொல்கிறேன்.. நீ உன் காதலை விட்டு விடு..''

''ஹை! நீ சொன்னால் நான் விட்டு விடுவேனாக்கும்?'' என்றபடி மீண்டும் அந்த கடகட சிரிப்பு சிரித்த சிங்காரி நிறுத்தி, ''இதோ பாரக்கா, நீ தினகரனை காதலித்தாலும் காதலிக்காவிட்டாலும் அது உன் பிரச்சினை. நான்

தலையிட மாட்டேன். ஆனால் என்னைப் பொறுத்த வரையில் நான் தொபுக்கென காதல் கடலில் விழுந்தது விழுந்ததுதான். இனி என்னை அந்த ஆபத்பாந்தவன் மோகனால்தான் மீட்டு கரை சேர்க்க முடியும். அதைப் புரிந்து கொள்!'' என்றாள்.

''சரி புரிந்து கொள்கிறேன். அதேபோல் நீயும் ஒன்றை தெரிந்து கொள்.''

''என்ன?''

''உண்மையிலே எனக்கும் தினகரனுக்கும் எவ்வித காதல் உணர்வுகளோ ஒப்பந்தமோ இல்லை..'' என்றாள் அழுத்தமாக.

''ம்ம்...நம்ப மாட்டேன் நான்..'' என இழுத்த சிங்காரி பின் தலையாட்டி, ''சரி, உனக்காக நம்புகிறேன். நீ தினகரனைக் காதலிக்கவில்லை. அவ்வளவுதானே? அதையும் ஒத்துக் கொள்கிறேன். அதற்காக நானும் மோகனைக் காதலிக்க வில்லை என்று கூற மாட்டேன். மோகனைத்தான் நான் விழுந்து விழுந்து காதலிக்கிறேன். அவரைத்தான் கட்டிக் கொள்ளவும் போகிறேன்... போதுமா?'' வெட்டு ஒன்று துண்டு ஒன்றாய் பேச்சை முடித்தாள் சிங்காரி.

இவளிடம் என்ன பேசுவது என திகைக்கத்தான் செய்தாள் மதுமதி.

அவள் அப்படி விழித்தபடி நிற்கும் போஸைக் கண்ட சிங்காரி திரும்பவும் அவளை உலுக்கினாள்.

''இப்போது... என்ன ஆகிவிட்டது? எதற்காக வீணாக கவலைப்படுகிறாய்?'' என்றாள்.



''சிங்காரி...'' என அழுத்தமாய் உச்சரித்த மதுமதி, ''என் விஷயத்தை விடு. நீ செய்வது அசட்டுத் துணிச்சல். இது கூடவா உனக்குப் புரியவில்லை.''

''ஐயோ மதுக்கா.. புரிந்து கொள்!'' என தலையிலடித்து சிரித்த சிங்காரி, ''காதல் ஒன்றும் தப்பான சமாச்சாரம் இல்லை. ஊர்உலகத்தில் நடக்கக் கூடியதுதான். நீ ஏன் உலக மகா தப்பை நான் செய்து விட்டது போல் இந்த பயம் பயப்படுகிறாய்?'' என்றாள்.

''ஐயோ.. நீயும் புரிந்து கொள்! காதல் தப்பில்லைதான்! ஆனால் காதலிக்கும் அளவுக்கு உனக்கு வயதில்லை. அதைச் சொல்கிறேன்!''

''என்ன வயதில்லையா?''

''ஆமாம்! உனக்கு முன்னால் நந்தி போல் அக்காவான நான் இருக்கிறேனே? எனக்குப் பின் தானே உனக்கு? அதற்குள் ஏன் அவசரப்படுகிறாய்?''

இப்படி எதிர் கேள்வி கேட்டு மடக்கினாலாவது அவள் புரிந்து கொள்வாள் என்று பார்த்தால் அதற்கும் மதுமதிக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

''அட.. அப்படி வருகிறாயா? ஆனால் பார்.. நான் ஒன்றும் அவசரப்படவில்லையே? காதலிக்க மட்டும்தான் செய்கிறேன். உன் லைன் க்ளியர் ஆனதும் தான் கல்யாணம் பற்றிய பேச்சையே எடுப்பேன்.''

''ஐயோ சிங்காரி'' என இம்முறை நிஜமாகவே தலை யிலடித்தாள் மதுமதி. ''உனக்கு எப்படி புரிய வைப்பது? நீ ரொம்பவும் சின்னப் பெண். உலக விஷயங்களை

அறியாதவள். காதல் என்ற பெயரில் யாரிடமாவது ஏமாந்து விடுவாய், புரிகிறதா?''

மதுமதி குரல் உயர சீரியசாய் கேட்டதற்கு புரிந்ததற்கு அடையாளமாகப் பலமாய் தலையாட்டினாள் சிங்காரி. ''நீ சொல்வது சரிதான்! வேண்டுமானால் ஒன்று செய்யட்டுமா? அந்த மோகனை ஒருநாள் இங்கு கூட்டி வருகிறேன். நீயும் கேள்விகளைக் கேட்டு அவரைச் சோதித்துப் பார்.. உனக்கு அப்போது புரிந்து தெளிவாகி விடும். இந்த சிங்காரி ஒன்றும் லேசுப்பட்டவள் இல்லை. புத்திசாலியான புளியங்கொம்பு ஒன்றைத்தான் பிடித்திருக்கிறாள் என்று.. என்ன அப்படிச் செய்யட்டுமா?''

எதிர் கேள்வி கேட்டவளை பலமாய் முறைத்தாள் மதுமதி. ''ம்ஹூம்! திருந்தாத கேஸ்! உன்னையெல்லாம் திருத்த முடியாது!'' கோபமாய் சொல்லியபடி அங்கிருந்து நடந்தாள் அவள்.

அவள் போவதைப் பார்த்து அதிராமல் தனது வழக்கமான கலீர் சிரிப்பை உதிர்த்துக் கொண்டிருந்தாள் சிங்காரி.

மறுநாள் முதலே மதுமதி டியூசனை நிறுத்தி தினகரனைப் பார்ப்பதைத் தவிர்த்திருந்தாள். அதற்கேற்றாற் போல் அடுத்த இரண்டு நாட்களில் தினகரனும் இருபத்தைந்து நாள் கல்லூரி டூருக்காக கிளம்பி விட்டான்.

அப்படி பாக் செய்து கிளம்புகையில் ஒரு மரியாதைக்காக தந்தையிடம் வந்து விஷயத்தைச் சொல்லிக் கொண்டிருக்க - உள் ரூமில் தினகரன் பேசிக் கொண்டிருப்பது மதுமதியின் காதுகளில் விழத்தான் செய்தது.



திரும்பி வர இருபத்தைந்து நாட்கள் ஆகும் என அவன் தந்தையிடம் சொன்னது அவளை திரும்பவும் உறுத்தத் தான் செய்தது. சரி போய் அவனை ஒரு 'பார்வையாவது' பார்க்கலாம் என்றால் சிங்காரி. கூடவே நின்று கொண்டு அவள் செய்கையை நோட்டமிட்டுக் கொண்டிருந்தாள்.

இவள் நிற்கையில் அங்கு போய் தினகரனைப் பார்க்க முயன்றால், அவ்வளவுதான்! சிங்காரி கையும் களவுமாய் பிடித்தது போல் ஆடி விடுவாள்.

ஆக... இன்னும் இருபத்தைந்து நாளுக்கு பார்க்க முடியாதவனை இப்போதாவது ஒரு பார்வை பார்த்து விடலாம். என்ற அவள் நினைப்பும் நிராசையானது. கூடவே இது என்ன அப்படி ஒரு பொல்லாத சிந்தனை? என தன்னைத்தானே கடிந்து கொள்ளவும் செய்தாள் அவள்.

அன்று கடைசியில் தினகரனை ஒரு முறை கூட பார்க்க முடியாமல் போயிற்று. சிங்காரி வலிய வந்து, ''அடடா... இன்று என்ன அண்ணலும் நோக்கவில்லை... அவளும் நோக்கவில்லை..'' என்று கிண்டலடித்தபோது அவளை முறைக்கவே செய்தாள்.

எது எப்படியோ தினகரன் நல்லபடியாக டூரை முடித்துக் கொண்டுவர வேண்டும் என மனதுள் அவளையறியாமல் வேண்டிக் கொண்டபோது தன் மனதின் படபடப்பையும் அவளால் புரிந்து கொள்ள முடிந்தது.

அதன் பின் வந்த ஒரு வாரத்தில் தினகரனின் நினைப்பு அவளுள் எழும்பால் இல்லை. தினமும் கணினிப் பயிற்சி மையத்திற்காக வெளியே அவள் கிளம்பும் போதெல்லாம்

அவளது மைவிழிக் கண்கள் தற்செயலாக திரும்பி மாடிப் போர்ஷனை ஆவலாய் நோக்கும்.

பூட்டியிருக்கும் ஜன்னல்களும் அழகிய வேலைப் பாடுகள் உள்ள கதவும் தினகரன் ஊரில் இல்லையே மறந்து விட்டாயா? என அவளைக் கேட்பது போல் இருக்கும். ஒருவித ஏக்கப் பார்வையுடன் அகல்வாள் அவள்.

தினகரன் இல்லாத குறையை அவனுடன் பேசாத குறையை பூர்ணம் அத்தையிடம் பேசித்தான் தீர்த்தாள் அவள். ஒரு மாதம் தூரத்து சொந்த திருமணத்திற்காக அயலூர் சென்றிருந்த அவள் அன்றுதான் செல்வ மகன் எழிலரசனுடன் திரும்பி இருந்தாள்.

மதுமதி லேசாக, ''என்ன கல்யாணம் சிறப்பாக முடிந்ததா?'' என கேட்டதும்தான் தாமதம் விலாவாரியாக மாப்பிள்ளை பெண் அழைப்பில் இருந்து ஒவ்வொன்றாக விவரிக்க ஆரம்பித்து விட்டாள்.

மதுமதியும் நேரம் போகாததால் அவள் சுவாரஸ்யமாய் சொல்வதை எல்லாம் உச் கொட்டியபடி கேட்டுக் கொண்டி ருந்தாள். அத்தை அப்படியே வந்த சொந்த பந்தங்களிடம் மகன் எழிலரசனுக்கு வயதாகிறது. அவனுக்கு ஏற்ற வரன் இருந்தால் சொல்லும்படி கேட்டுக் கொண்டாளாம்.

பக்கத்து கிராமங்களில் ஒரு சில ஏழைப் பெண்கள் இருப்பதாயும் விசாரித்து சொல்வதாகவும் உறவுக்காரர்கள் சொல்லியிருக்கிறார்களாம்.

அத்தை சொல்லச் சொல்ல பக்கத்து பெஞ்சில் உட்கார்ந்து கொண்டிருந்த எழிலரசன் நெளிந்து குழைந்து



அசட்டுச் சிரிப்புடன் வெட்கப்பட்டுக் கொண்டிருக்க... மதுமதி சிரிப்பை அடக்கிக் கொண்டு ரசிக்கவே செய்தாள்

மாலை கல்லூரி முடிந்து திரும்பிய சிங்காரியும் இந்த விஷயத்தைக் கேட்டு வெகு உற்சாகமாகி விட்டாள். ''மாப்பிள்ளை.. டோய்.. மாப்பிள்ளை டோய்... அழகான குணமுள்ள மாப்பிள்ளை டோய்!'' என எழிலரசனைப் போட்டு கிண்டல் செய்ய நாணிக்கோணி வீடு முழுக்க ஓடிக் கொண்டிருந்தான் எழிலரசன்.

சிங்காரி அத்தோடு நில்லாமல் அத்தையையும் வம்புக் கிழுத்தாள். ''என்ன அத்தை நீங்கள்? அழகான எழிலரசு மாமாவை நான் கட்டிக் கொள்ளலாம் என ஆசையோடு இருந்தால்.. நீங்கள் அவருக்கு வெளியே பெண் தேட ஆரம்பித்து விட்டீர்களே? என் கதி என்னாவது?'' என்றாள் வேண்டுமென்றே ஏக்கப் பெருமூச்சுடன்.

அவள் சொல்வதற்கு அத்தை பதில் சொல்வதற்கு முன் எழிலரசன் பக்கத்தில் ஓடி வந்து விட்டான். ''நிஜமாகவா.. நிஜமாகவா.. சிங்காரி சொல்கிறாய்... என்னைக் கட்டிக் கொள்ள உனக்கு ஆசையா?'' என்றான் குரலில் ஆதங்கம் பொங்க.

''ஐயோ.. மாமா... என்ன இப்படிக் கேட்டு விட்டீர்கள்... உங்கள் மீது வெறும் ஆசை மட்டுமல்ல.. காதல்.. அதுவும் தீராதக் காதல்.. என்னைக் கைவிட்டு விடாதீர்கள்... பின் என் இதயம் சுக்கு நூறாய் உடைந்து விடும்..'' என கைகள் இரண்டையும் விரித்து சினிமாக் கதாநாயகி போல் போஸ் கொடுக்க அதை உண்மையாக நம்பி அவளையே வாய் பிளக்க பார்த்துக் கொண்டிருந்தான் எழிலரசன்.

அத்தை பூர்ணம் பின்னால் வந்து சிங்காரியின் தோளில் செல்லமாய் ஒன்று போட்டு, ''என் பிள்ளையை கிண்டலடிக்கவில்லை என்றால் உனக்குத் தூக்கமே வராதே? ஓடு நீ!'' என விரட்டியதும் துள்ளிக் குதித்து அடக்க முடியாத சிரிப்புடன் ஓடினாள் சிங்காரி.

எழிலரசன் தனது அப்பாவியான முகத்தை சோகமாய் வைத்துக் கொண்டு, ''அப்படியானால் சிங்காரி சொன்னதெல்லாம் உண்மையில்லையா? வழக்கமான கேலி தானா?'' என பரிதாபமாய்க் கேட்க அவளைத் தேற்றினாள் பூர்ணம்.

''நீ கவலைப்படாதடா செல்லம். அவ கிடக்கிறா. உனக்கு நிஜமாகவே ராஜகுமாரி மாதிரி ஒரு அழகியைக் கட்டி வைச்சு.. அவ முகத்தில் கரியைப் பூசுகிறேன் பார்!'' என்றாள் சவால் விடுவது போல்.

அத்தை எந்த நேரத்தில் அப்படிச் சொன்னாளோ அடுத்த ஒரு வாரம் கடந்த மறுநாளில் சிங்காரி முகத்தில் நிஜமாகவே கரியைப் பூசியது விதி!

அன்று கல்லூரி சென்று மதியமே திரும்பி விட்ட சிங்காரி மதுமதியை அவசரமாய் தனியறைக்கு அழைத்துச் சென்று கதறத்தான் ஆரம்பித்தாள்.

அவளது உடைந்த மன நிலையையும் நிலை கொள்ளாத தவிப்பையும் பார்த்த மதுமதி நிச்சயமாய் ஏதோ விபரீதம் என அதிர... சிங்காரி மெல்ல விஷயத்தைச் சொன்னபோது அதிர்ச்சியில் அரண்டே போய்விட்டாள் அவள்!



## 25



சிங்காரி சொன்ன விஷயத்தைக் கேட்டு மதுமதியின் சப்த நாடியும் ஒடுங்கி விட்டது. எதற்கு புத்திமதி சொன்னாளோ, எதை நினைத்து பயந்தாளோ கடைசியில் அது நடந்தே விட்டதே! கடவுளே என்ன இது?

பலமாய் மனதுள் அரற்றியவள் நடப்பதெல்லாம் நிஜமா? என்ற சந்தேகத்தில் அவளை உற்றுப் பார்த்தாள். சிங்காரி குலுங்கி குலுங்கி அழுது கொண்டிருப்பது உண்மையை உறுதிப்படுத்தியது.

துள்ளி ஓடும் மான் குட்டியாய் குதிப்பவள், கேலியும் குதூகலமுமாய் சிரிக்கச் சிரிக்கப் பேசுபவள் இப்படி காலில் முகம் புதைத்து அழுது கொண்டு...

அந்தக் காட்சியைக் காணவே அவளுக்கு என்னவோ போல் இருந்தது.

ஆதரவாய்க் குனிந்து அவளைத் தோளோடு அணைத்தவள் குலுங்கிய அவளது முதுகை மிருதுவாய் தடவி விட்டாள்.

என்னமாய் வருந்துகிறாள்..! இப்படி அழுவதற்கு முன்பே நாம் சொன்னவைகளை ஒருமுறை யோசித்து உணர்ந்திருக்கலாமே!

எல்லாம் காலம் கடந்த ஞானோதயம்!

எவ்வளவு பெரிய தவறு இது! வாழ்க்கையில் எந்தப் பெண்ணும் மதிமயங்கி சறுக்கி விழக் கூடாத இடம் அல்லவா?

அதில் விழுந்து அடிபட்டு விட்டு.. இப்படி முதுகு குலுங்க அழுது புலம்புவதால் என்ன லாபம்?

நினைத்தவள் அவள் பிடிகளை ஆதரவாய் இறுக்கிய வாறு, அவள் காதுகளில் ''முதலில் அழுகையை நிறுத்து..'' என்றாள்.

சிங்காரி அதற்கும் ''இல்லையக்கா... நான் பெரிய தவறு செய்து விட்டேன். நீ எவ்வளவு சொல்லியும் கேட்காமல் கண்களைத் திறந்து கொண்டே குழியில் விழுந்து விட்டேனே!'' என்றபடி மறுபடியும் குலுங்கப் போனாள்.

''ஐயோ.. முதலில் இந்த அழுகையை நிறுத்து! அழுது புலம்பி ஒன்றும் ஆகப் போவதில்லை!'' என தடுத்து நிறுத்தியவள், ''முதலில் மனதை திடப்படுத்திக் கொண்டு யோசி. தப்பு நடந்தது நடந்ததுதான். ஆனால் அதைச் சரிப்படுத்திக் கொள்ள வழிகள் இருக்கின்றனவே.. அதைப் பத்தி யோசி.. யோசிப்போம்..'' என அவள் முடித்ததும் சிங்காரி நிமிர்ந்தாள். கண்களை அழுந்தத் துடைத்தாள்.

''நீ சொல்வது புரிகிறது அக்கா.. இன்று கல்லூரி சென்று அவர் மோகன் வருகிறாரா என்று பார்த்தேன். வந்தால் அவரிடம் எல்லா விஷயங்களையும் கொட்டி உடனே முடிவெடுக்க நினைத்தேன். ஆனால் அவர் இன்றும் வரவில்லை!''

''ஆமாம்.. மூன்று நாட்களாய் அவர் கல்லூரி வரவில்லை.. என்று சொன்னாயே? ஏன் என்று விசாரித்தாயா?''



''ம்ம் விசாரித்தேன். அவர் நண்பர்களும் சொன்னார்கள். அவரும் ஒருமுறை போனில் என்னிடம் தொடர்பு கொண்டு சொன்னார். அவரது தந்தையின் வியாபார விஷயமாய் மும்பை வரை சென்றிருப்பதாயும் நாலு ஐந்து நாட்களில் வந்து விடுவதாகவும் சொன்னார்.''

''பின் ஏன் வரவில்லை?''

''அதுதான் தெரியவில்லை. நண்பர்களிடம் விசாரித்த தில் இன்னும் பத்து நாட்களுக்கு மேல் ஆகுமாம்..''

''சரி.. இந்த விஷயம்.. அந்த நண்பர்களுக்கு உன் தோழிகளுக்கு யாருக்கும் தெரியாதே?''

''ம்ம்.. நாங்கள் பழகினது மட்டும்தான் தெரியும். இப்படி ஆகிவிட்டது தெரியாது.''

''சரி.. எதற்காக வரம்பு மீறினீர்கள்? அதைச் சொல்!'' என்றாள் மதுமதி துளைக்கும் பார்வையோடு.

''அது.. அது.'' தயக்கமாய் இழுத்தாள் சி.ங்காரி.

''செய்யும்போது இல்லாத தயக்கம்.. இப்போது வருகிறதா?'' என்றாள் மதுமதி குத்தலாய்.

''அது.. அது.. மன்னித்து விடக்கா... நான்.. நான் தப்பு செய்துவிட்டேன்..''

மறுபடியும் கண்களை கசக்கி விசும்பினாள் சிங்காரி.

நான் பரிதாபப்பட வேண்டியவளிடம் கோபப்பட்டு விட்டோமோ என்ற உணர்வோடு குனிந்து பரிவாய் அவளது தலையை வருடினாள்.

அந்த நிலையிலும் மதுமதி தன் மேல் காட்டும் பாசத்தை உணர்ந்து கண் கலங்கிய சிங்காரி,

“இப்படி என் மேல் அன்பு காட்டுவதற்கு பதில் என்னை இரண்டு அடி அடித்தாவது விடுக்கா.. எனக்கு புத்தியில் உரைக்காவாவது செய்யும்.. எவ்வளவு பெரிய தவறைச் செய்து விட்டேன்!”

மறுபடியும் அரற்றினாள் சிங்காரி.

அவளை மேலும் அணைத்து தன்னோடு சாய்த்துக் கொண்டவள், “முதலில் நடந்ததைக் கூறு..” என்றாள் பேச்சை திசை திருப்பும் விதமாய்.

சிங்காரி விவரிக்க ஆரம்பித்தாள்.

சென்ற மாதம் ஒருநாள் கல்லூரியில் ஸ்டிரைக் காரணமாக லீவு ஏற்பட, மோகனுடன் சினிமா ஒன்றுக்குச் சென்றாளாம். அதைப் பார்த்துவிட்டு வருகையில் நண்பனின் ரூமிற்கு அழைத்துச் சென்றானாம் மோகன். நண்பன் அங்கு இல்லாததால் இருவரும் அவனது ரூமில் ஓய்வெடுக்க... விளையாட்டாய் சில்மிஷம் பண்ணத் தொடங்கிய இருவரும் ஒரு கட்டத்தில் உணர்ச்சி வசப்பட்டு விட்டார்களாம். செய்யக் கூடாத அந்த தப்பை செய்து விட்டார்களாம். இருந்தும் அன்றே தவறை உணர்ந்து சிங்காரி கண்கலங்கினாளாம். மோகன்தான் எதற்குப் பயப்படுகிறாய்? இன்னும் ஆறு மாதத்தில் என்னுடைய படிப்பு முடிந்து விடும். உடன் அப்பாவிடம் சொல்லி திருமண ஏற்பாடுகளை செய்து விடுவதாய் வாக்குறுதி கொடுத்திருந்தானாம்...



எல்லாவற்றையும் சிங்காரி சொல்லி முடிக்க மதுமதி சலனமே இல்லாமல் கேட்டுக் கொண்டிருந்தாள்.

நிமிடங்கள் ஆகியும் அவள் எவ்வித பதிலும் பேசாமல் இருக்க மெல்ல அவள் கரங்களை அழுத்தினாள் சிங்காரி.

“என்னக்கா... நான் செய்தது பெரும் தவறுதானே?”

புருவம் உயர்த்தி குழந்தைத்தனமாய் கேட்டவளை ஆச்சரியத்துடனே பார்த்தாள். எதையும் விளையாட்டாய் நினைப்பவள் இதையும் விளையாட்டாய் நினைத்து விட்டாளே!

அவள் நினைப்பைப் புரிந்து கொண்டவள் போல் சிங்காரி, “உன் எண்ணம் சரிதான் அக்கா. எல்லாவற்றையும் போல இதையும் விளையாட்டுத்தனமாய் செய்து விட்டேன்தான்.. எல்லாம் இந்த குறும்புத்தி.. அப்பா சொன்னாலும் சொன்னார்.. அந்த மரமண்டை... எனக்கு பொருத்தமான பெயர்தான் அக்கா..”

“ஹூம்..!” என பெருமூச்சுடன் இயல்பானாள் மதுமதி. “இதோ பார் சிங்காரி, நடந்தவையே எண்ணாமல் இனி நடப்பதைப் பார்ப்போம். அந்த மோகன் எப்படியும் கல்லூரிக்கு இன்னும் இரண்டு மூன்று தினங்களில் வந்து விடுவார்தானே? அவர் அப்படி வந்ததும் உன் நிலைமையை விளக்கு. நானும் உடன் வந்து பேசுகிறேன். நாம் மூவரும் சேர்ந்து ஒரு நல்ல முடிவு எடுப்போம்” என முடித்தாள்.

"நல்ல முடிவு என்றால்.. எது உடனே திருமணம் செய்வதா?" மறுபடியும் வில்லாய் புருவம் உயர்த்தினாள் சிங்காரி.

பலமாய் தலையசைத்த மதுமதி, "அதைத் தவிர வேறு என்ன முடிவு எடுக்க முடியும்?" என்றாள் எதிர்க் கேள்வியாய்.

சிங்காரியின் முகம் பெரும் கவலைக்குப் போனது. மறுபடியும் குரல் நடுங்க, "ஐயோ! விஷயம் அப்பாவுக்குத் தெரிந்து விடுமே? அதைவிட அக்காவான நீ இருக்கும் போது எனக்கு எப்படி உடனடியாய் கல்யாணம் செய்து வைக்க முடியும்?" என்றாள் கலவரமான முகத்தோடு.

மதுமதி அவள் தோள்களை அணைத்து முதுகைத் தட்டினாள்.

"அதுவெல்லாம் பின்னால் யோசித்துக் கொள்ளலாம். நீ செய்ய வேண்டியது.. உடனடியாய் மோகனை சந்தித்து விஷயத்தைக் கூறி கல்யாணத்திற்கான அவருடைய வீட்டார் சம்மதத்தை வாங்க வேண்டியது... உன்னால் முடியும்தானே?"

பதிலுக்கு தலை சுழன்று விடும் அளவுக்கு ஆட்டினாள் அவள்.

"கண்டிப்பாக என்னால் முடியும் அக்கா! எனக்காக எது வேண்டுமானாலும் செய்வார். தன் உயிரையே கூட கொடுப்பார் அந்த மோகன்.." என்றாள் நம்பிக்கை ததும்பும் குரலில்.



ஆனால் அதில் நம்பிக்கை வராதவள் போல் அவளையே பார்வையில் வெறித்துக் கொண்டிருந்தாள் மதுமதி.

## 26



தினம் கல்லூரிக்கு ஆவலாய் செல்வதும் மாலை தலையை தொங்கப் போட்டவாறு சோர்வுடன் வருவதாயும் இருந்தாள் சிங்காரி. மதுமதிக்கு அவளிடம் கேட்காமலே விஷயம் புரிந்து விட்டது தான். இருந்தாலும் ஒப்புக்குக் கேட்டாள்.

"பிசினஸ் டூர் சென்றவர் இன்னும் வரவில்லையாம்..' என்ற ஒற்றை பதில்தான் அவர் வீட்டார்கள் நண்பர்களிடம் சொல்லியிருக்கிறார்கள்.." என்றாள் பதிலாய்.

"பிசினஸ் டூர் என்றால்.. ஒரு மாதமாகவா?"

"ம்ம்.. அதையும் விசாரித்தேன். ஏற்றுமதி பிசினஸில் இருப்பதால் ஆப்பிரிக்க நாடுகளுக்கு வியாபாரத் தொடர்பு உண்டாம். அதனால் வெளிநாடு சென்றிருப்பதாகவும் சொல்கிறார்கள்.."

"வெளிநாடா? அப்படியானால் உனக்கு எதுவும் போன் செய்து மோகன் சொல்லியிருக்கலாமே?"

"நானும் அப்படித்தான் நினைத்தேன். ஆனால், அவசரமாய் அவர் வெளிநாடு செல்ல வேண்டியிருந்ததால் அவருடைய செல்பேசியைக் கூட தன்னுடன் எடுத்துச் செல்லாமல் மறந்து போய் விட்டாராம் மோகன். அதனால் என்னுடன் மட்டுமல்ல அவருடைய நெருங்கிய நண்பர்

களிடம் கூட தொடர்பு கொள்ள முடியவில்லையாம். இதை அவருடைய அண்ணன் மூலம் நண்பர்களுக்கு தெரிவிக்கவும் மோகன் சொன்னாராம்.."

சிங்காரி சொல்லி முடிக்க மதுமதியிடம் இருந்து நீண்ட பெருமூச்சுதான் வெளிப்பட்டது.

சிங்காரியை அந்த நிலைமையில் பார்க்கவும் அவளுக்கு பாவமாய்த்தான் இருந்தது. குறும்பும், குழிவிழும் சிரிப்புமாய் எப்போதும் குதூகலம் வழியும் அவள் முகத்தில் கவலையின் கோடுகளும் சோகமான புன்னகையுமே ஓடிக் கொண்டி ருந்தது.

மோகன் வராததைக் கண்டு அவள் நாளுக்கு நாள் உள்ளுக்குள் வருத்தப்படுகிறாள் என்பதும் மதுமதிக்கு புரிந்தது. ஒவ்வொரு நாள் இரவும் அவள் தூக்கம் வராமல் நீண்ட நேரம் விழிகளைத் திறந்து வெறித்த பார்வையுடன் இருப்பதைப் பார்த்து அவளே கண்டித்து அவளை ஆறுதலாய் அணைத்துத் தட்டிக் கொடுத்து சிங்காரியை தூங்கவும் வைத்திருக்கிறாள்.

அவளை மேலும் சங்கடப்படுத்த விரும்பாததாலே அவளிடம் மோகனைப் பற்றிய கேள்விகளைத் தவிர்த்து இயல்பாகவே நடமாடினாள். ஆனால் சிங்காரியால்தான் இயல்பாக நடமாட முடியவில்லை.

தந்தை தில்லைநாயகத்தை காணும் போதெல்லாம் மருகினாள். அவர் முன் நிற்பது பேசுவது எல்லாம் அவளுக்கு பெரும் சங்கடமாகவே தெரிந்தது. அதைவிட



அத்தை பூர்ணத்தை கண்டாலே ஓடாத குறையாய்த்தான் நழுவினாள்.

குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும் என்பதற்கு ஏற்ப அவர்கள் அவளது நடவடிக்கைகளில் எதுவும் உண்மையை கண்டுபிடித்து விடக் கூடாதே என்ற பயம் அவளுக்கு!

அவள் நினைத்தது போலவே அத்தை பூர்ணமும் அவளது அமைதியான அடங்கிப் போகும் சுபாவத்தைக் கண்டு அதிரவே செய்தாள். வழக்கமாய் கேலியும் கிண்டலுமாய் தன்னை டபாய்த்து ஒரு வழி பண்ணுபவள் இப்படி சாதுவாய் திடீரென நடமாடுகிறாளே.. என்ற வியப்பு அவளுக்கு.

அதை வாய்விட்டு அவளிடமே கேட்க சிங்காரி அதற்கும் சரியாய் பதில் சொல்லாமலே நழுவிப் போனாள். மதுமதிதான் சுதாரித்து அத்தைக்கு மட்டும் சந்தேகம் வந்துவிட்டால் அவ்வளவுதான் என்ற பயத்தில் வலியப் போய், "அது ஒன்றுமில்லை அத்தை. அவளுக்கு கல்லூரியில் முக்கியமான பரீட்சையொன்று வர இருக்கிறது. அதனாலே தனது சுட்டித் தனங்களை எல்லாம் ஒதுக்கி விட்டு நல்ல பிள்ளையாய் நடமாடுகிறாள்.." என சமாளித்தாள்.

ஆனால் தந்தை விஷயத்தில் பெரிதாய் சலனமோ சந்தேகமோ அவருக்கு ஏற்படவில்லை. ஏனெனில் காலையில் குளித்து உணவு முடித்து தில்லைநாயகம் கிளம்பி விட்டால் மாலையோ இருள் சூழ்ந்த நிலை யிலோதான் வீடு திரும்புவார். பக்திப் பிரசங்கம், ஆன்மீகச்

சொற்பொழிவு, கோயில் குளம் என ஒன்று விடாமல் தேடியலைந்து மனதை இறைநெறியில் ஈடுபடுத்தி வைத்திருப்பதே அவரது பெரும் வேலையாகவும் இருந்தது.

ஆனால் எல்லோரையும் விட மதுமதியின் நிலைதான் திண்டாட்டமாய் இருந்தது. கம்ப்யூட்டர் பயிற்சிக்கு மட்டும் வெளியே சென்று விட்டு வீடு திரும்பி விடுவாள். வீடு வந்ததும் சிங்காரியின் நினைவும் கவலையும் அவளை ஆழ்ந்து கொள்ளும்.

இந்த சின்ன வயதில் பேதைப் பெண் போல் வகையாய் இக்கட்டான சூழ்நிலையில் மாட்டிக் கொண்டாளே? எப்படி இவளால் இனி பிரச்சினைகளை சமாளித்து மீண்டு வர முடியும்? இதில் அப்பாவுக்கும் அத்தைக்கும் தெரியாமல் இன்று விஷயத்தை மறைத்தாயிற்று. இனி.. எத்தனை நாள் இப்படி பயந்து ஒளிந்து காத்திருக்க வேண்டுமோ? அந்த மோகன் வருவது தள்ளிக் கொண்டே போகிறதே! எனவும் சிங்காரிக்காக வெகுவாய்க் கவலைப்பட்டாள் அவள்.

அப்படி மதுமதி சிங்காரி நினைப்பிலே இருந்ததாலோ என்னவோ தினகரனைப் பற்றிய நினைவு சுத்தமாய் இல்லாமலிருந்தது. தினகரனும் மாணவர்களுடன் டூர் சென்று விட்டதால் அவனைப் பார்க்கும் சந்தர்ப்பமும் இல்லாது போயிற்று.

அன்று திடுமெனத்தான் அவனை நினைத்தவள் அவன் இந்த இக்கட்டான சூழ்நிலையில் இங்கு இல்லாமல் போனானே என வருந்தவும் செய்தாள். அவன் இருந்தா



லாவது அவனிடம் விஷயத்தைச் சொல்லி அவனது உதவியைப் பெறவும் வாய்ப்பு இருந்திருக்கும். தினகரனும் இரக்கப்பட்டு அவர்களுக்கு கண்டிப்பாய் உதவுவான். இப்போது அதற்கும் வழி இல்லாமல் போய்விட்டதே... என குழம்பத்தான் செய்தாள் அவள்.

அப்படி தினமும் மாறுபட்ட குழப்பமான மனநிலையில் இருந்ததால், அன்று மாலை தங்கையை கூட்டிக் கொண்டு கோவிலுக்குச் சென்று மனமுருக பிரார்த்தித்துவிட்டு வந்தாள். முன்பு போல் இல்லாமல் சிங்காரி தளர்ந்த நடையுடன் வருவதை பார்க்க, அவளுக்கே சங்கடமாய் இருந்தது.

இதேபோல் வெளியே கிளம்பினால் இதற்குள் வளையல், ஜடை மாட்டி, தொங்கட்டான், பொட்டு என விதவிதமாய் கோயில் தெருக் கடைகளில் வாங்க சிங்காரி ஒரு பிரளயமே நடத்தி விடுவாள். மதுமதி தடுத்தாலும் நூறு இருநூறு ரூபாயை இப்படி வாங்கி காலி செய்யாமல் வீடு திரும்ப மாட்டாள்.

அப்படி சுட்டித்தனமாய் இயங்குபவள் இப்போது எதையோ பறிகொடுத்தது போல் வெறித்த பார்வையுடன்... அவளைப் பார்க்கப் பார்க்க சங்கடமாய் உணர்ந்த மதுமதி அவள் கைகளைப் பிடித்து ஆதரவாய் அழுத்தினாள்.

"எதற்கு வீணாக இனியும் மனதை போட்டுக் குழப்பு கிறாய்? எல்லாம் நல்லபடியாக நடக்கும்!" என அமைதிப் படுத்தினாள்.

சிங்காரி தலை திருப்பியவள் கலங்கிய கண்களுடன், "அவர் வந்து விடுவாரா அக்கா? நாளாக நாளாக எனக்கு பயம்தான் அதிகரிக்கிறது! அவர் என்னை ஏமாற்றி கைகழுவி விட்டு வேறு பெண்ணை மணந்து கொள்ள நினைப்பாரோ... என்ற பயம் உண்டாகிறது!'' என்றாள் வெகுளியாய்.

''சே! அப்படியெல்லாம் சொல்லாதே..'' என அவளை செல்லமாய் கடிந்து தோளோடு அணைத்தாள்.

''மோகன் அப்படியெல்லாம் செய்ய மாட்டார். அவர் உன்னை நிஜமாய் காதலிக்கிறார். நாளையே பார். அவர் உன்னைத் தேடி வந்து பார்ப்பார்!'' என்றாள் நம்பிக்கையான குரலில் அவளைச் சமாதானப்படுத்தும் நோக்கோடு.

ஆனால் மதுமதி நினைத்தது போல் மறுநாள் மோகன் வரவில்லை. அவன் இனி என்றுமே வரப் போவதில்லை. இந்த உலகை விட்டே போய்விட்டான் என்ற இடியான செய்தி மட்டும் நண்பர்கள் மூலமாய் சிங்காரியின் காதுகளுக்கு வந்தது. செய்தி கேட்டு அப்படியே மயங்கி விழுந்தாள் அவள்.

## 27



யாருமே எதிர்பார்க்காத செய்திதான்! கேட்ட போது காதுகளே நம்ப முடிய வில்லைதான்! ஆனால் உண்மையும் அதுதான்!

ஆப்பிரிக்காவின் தலைநகர் பக்கம் உள்ள சிற்றூரில் பிஸினஸ் விஷயமாகச் சென்றிருந்த மோகன் சாலை விபத்து ஒன்றில் சிக்கி ஸ்பாட்டிலேயே மரணமாம்! கோரமான விபத்தாம். இரண்டு கார்கள் வேகமாய் மோதி உடம்பே உருத்தெரியாமல் போகுமளவுக்கு!



விஷயம் கேள்விப்பட்ட சிங்காரி கிளாஸ் ரூமிலேயே மயங்கிச் சாய்ந்து விட்டாள்! கல்லூரியே சோகத்தில் மூழ்கி பாதி நாள் விடுமுறையை அறிவித்து விட்டது.

உடம்பும் சிதைந்து மோசமாகி விட்டதால் மோகனை அங்கேயே அந்த ஊரிலேயே தகனம் செய்துவிட வேலைகள் நடக்கிறதாம். வீட்டார்கள் எல்லாம் பதறி கண்ணீருடன் ஆப்பிரிக்கா சென்றிருக்கிறார்களாம்!

விஷயம் கேள்விப்பட்ட மதுமதியும் அரண்டு ஆடித்தான் போய்விட்டாள். கடவுளே! என்ன இது கொடுமை? தங்கையின் வயிற்றில் சிசு வளர்கிறது. காரணமான மோகன் இறந்து போய்விட்டான். இனி தங்கையின் நிலைமை?

ஒரே நாளில் படுகுழியில் பாதாளத்தில் சிங்காரியைத் தள்ளி விட்டது போல் அல்லவா இருக்கிறது?

விபத்தாம்! இறந்து விட்டானாம்! கடைசியில் அந்த மோகன் யார்.. எப்படி இருப்பான்? எனக் கூட அவளால் பார்க்க முடியாமல் போயிற்றே!

மதுமதி நினைத்தது போலத்தான் சிங்காரியும் நினைத்து அழுது புலம்பி குமைந்து கொண்டிருந்தாள். மோகன் வந்ததும் இப்படித்தான் கருவுற்றிருக்கும் செய்தியைச் சொல்லிவிடலாம் என பார்த்தால்... அவன் இனி வரவே

போவதில்லை... என்ற அதிர்ச்சியை எப்படி அவளால் தாங்கிக் கொள்ள முடியும்?

குலுங்கி குலுங்கி அழுதாள் சிங்காரி.

அவள் அப்படி அழுதாவது தனது சோகத்தை போக்கிக் கொள்ளட்டும் என அவளை வீட்டின் பின்புற தனியறையில் உட்கார வைத்து தவிப்பாய் பார்த்துக் கொண்டிருந்தாள் மதுமதி.

நல்ல வேளையாய் அன்று பார்த்து தந்தையும் அத்தையும் காலையிலேயே வெளியே சென்று விட்டனர்.

முதுகு குலுங்க அழும் சிங்காரியைத் தேற்றும் அளவுக்கு மதுமதிக்கு முதலில் திடமில்லைதான். அவளும் உள்ளுக்குள் தங்கையின் நிலைமை, எதிர்காலம் குறித்து முழுதுமாய் உடைந்திருந்தாள். ஆனாலும் எவ்வளவு நேரம் அழுதாலும், மனம் வெம்பிக் கவலைப்பட்டாலும் நிலைமை சரியாகி விடுமா?

யோசித்தவள் சிங்காரியை அப்படியே சில மணி நேரங்கள் விட்டுவிட்டு பின் ஆறுதல் படுத்தும் முயற்சியில் இறங்கினாள். பானையில் இருந்து செம்பு நிறைய தண்ணீரைக் கொண்டு வந்து பருகச் சொன்னாள்.

காலையில் இருந்து எதுவுமே சாப்பிடாத அவள் நீரை மடமடவென குடித்தாள். பின் பாலை சூடேற்றி காபியைக் கொண்டு வந்து கொடுத்தாள். அதையும் மறுப்பில்லாமல் வாங்கிக் குடித்தாள் சிங்காரி.



பின் அவளை அப்படியே தன் நெஞ்சில் சாய்த்து பரிவாய் அவள் தலையை வருடி தமக்கையின் நெற்றியில் முத்த மிட்டாள் மதுமதி.

அந்த முத்த சிலிர்ப்பில் அவளின் அன்பையும் தன் மேல் அவள் காட்டும் பரிவையும் எண்ணி குளிர்ந்தவளாய் அவளை இறுகக் கட்டிக் கொண்டாள் சிங்காரி.

''என்னை.. மன்னித்து விடக்கா... உன் பேச்சைக் கேட்காமல் பெரிய தவறை செய்து விட்டேன். எனக்கு.. என் செயலுக்கு மன்னிப்பே கிடையாது..''

மறுபடியும் குரல் நடுங்க அரற்றப் போனவளை இறுக அணைத்து தடுத்தாள் மதுமதி.

வழிந்த கண்ணீர்த் துளிகளை துடைத்துவிட்டு அவள் முகம் நிமிர்த்தி பார்த்தாள் மதுமதி.

''இதோ பார்.. சிங்காரி, இப்போதுதான் நீ மனம் உடையாமல் தைரியமாய் இருக்க வேண்டும். பழைய விஷயங்கள், நடந்தவைகள் உன் மூளையை உன் செயலை வெகுவாய்ப் பாதித்து பயப்படுத்தும். அவைகளை எல்லாம் ஓரங்கட்டி விட்டு.. நிஜத்திற்கு வா! வெளி உலகம் என்ற ஒன்று இருக்கிறது.. அதில் எப்படியாவது.. எப்பாடு பட்டாவது நாம் வாழ்ந்துதான் ஆக வேண்டும்.. அதற்கு உன் பிரியமான அக்காவான நான் துணை இருக்கிறேன். என்னுடைய அரவணைப்பு எப்போதும் உண்டு. நீ எதற்கும் கலங்கக் கூடாது.. புரிகிறதா?''

ஆறுதல் போல் நம்பிக்கையான வார்த்தைகள் முழுவதையும் கொட்டி அவளை சகஜ நிலைக்கு கொண்டுவர முயன்றாள் மதுமதி.

அவளது நினைப்பிற்கு வார்த்தைகளுக்கு ஓரளவு பலனும் இருந்தது.

சிங்காரி அழுது அழுது ஓய்ந்திருந்தவள் மெதுவாக சிந்திக்கவும் ஆரம்பித்திருந்தாள்.

அக்கா சொல்வது போல், இனி நடந்ததையே நினைத்து அழுது புலம்பி எவ்வித பிரயோஜனமுமில்லை. எதிர்காலம், வெளி உலகம் என்ற ஒன்று இருக்கிறது. அதை எப்படியும் சந்தித்தாக வேண்டும். வயிற்றில் வேறு சிசு வளர்ந்து கொண்டிருக்கிறது. இனி... என்ன செய்ய? அவளால் என்னதான் செய்ய முடியும்?

ஏக்கமாய் தவிப்புடன் நிமிர்ந்து மதுமதியின் முகத்தையே பார்த்தாள் சிங்காரி.

''இனி நான் என்ன செய்ய அக்கா? நீங்களே சொல்லுங்கள்..'' என்றாள் ஆற்றாமையாய்.

''சொல்கிறேன்... முதலில் இந்த வேதனையை.. இது ஈடு செய்ய முடியாத இழப்புதான்.. அதற்காக இதை ஒவ்வொரு நிமிடமும் மனதில் ஓடவிட்டு ரணகளப்படுத்திக் கொண்டிருந்தால் நாம் வாழவே முடியாது. அதனால் இந்த துயரத்தை இந்த தாங்க முடியாத இழப்பை முதலில் ஜீரணிக்கக் கற்றுக் கொள். இறப்பைப் பொறுத்த வரையில் எழும் ஆற்ற முடியாத அந்த வேதனையை ஜீரணிக்க ஒரு வழியைச் சொல்லட்டுமா?''

''சொல்லக்கா..''

''அதாவது இந்த உலகில் பிறந்த எல்லோரும் ஒரு நாள் போய்த்தான் ஆக வேண்டும். இறப்பு என்பது தவிர்க்க



முடியாத விஷயம். என்ன.. நீ காதலித்த மோகன் முந்திய பஸ்சில் ஏறிச் சென்று விட்டார் என்று நினைத்துக் கொள். அதேபோல் நாமும் ஒருநாள் இந்த உலகை விட்டு நிரந்தரமாய் போகத்தான் போகிறோம்... அப்படி சிந்தித்து மனதைத் தேற்றிக் கொள். வேறு வழியில்லை. இப்படி எல்லாம் மனதைத் திருப்பி சிந்தித்துப் பார்த்தால்தான் அந்த பிரிவுத் துயரத்திலிருந்து நீ வெளிவர முடியும். முதலில் அந்த ஆற்ற முடியாத துயரத்திலிருந்து வேதனையில் இருந்து வெளியே வா.. அதற்காக ஒருநாள் என்ன... இரண்டு நாள் கூட எடுத்துக் கொள். நன்றாக உன் வேதனையெல்லாம் அழுது தீர்த்து பிழியப் பிழிய அழுது தெளிந்து விட வேண்டும். அதற்குப் பின் இந்த கண்களைக் கசக்கும் வேலையை எல்லாம் விட்டு விட்டு.. துணிவாய் நீ சிந்திக்க வேண்டும். நீ சிந்திப்பாயா? நான் சொன்னபடி நடக்கிறாயா?'' என்றாள்.

சிங்காரிக்கு அவளது திடமான தெளிவான பேச்சு நன்றாகத்தான் மருந்து போல் உள்ளிறங்கியது. பெரிதாய் தலையாட்டியவள் வழிந்த கண்ணீர்த் துளிகளை அவசரமாய்த் துடைத்துக் கொண்டாள்.

''என் அன்புத் தங்கை.. என் தங்கமான தங்கை.. இப்படி.. இப்படித்தான்.. இருக்க வேண்டும்'' என வாஞ்சையாய் அவளை இழுத்து தன்னோடு சேர்த்து மறுபடியும் உச்சி முகர்ந்தாள் மதுமதி.

சிங்காரி அதில் நெகிழ்ச்சி அடைந்தாலும் மெல்ல முகம் நிமிர்த்தியவள் அக்காவையே உற்றுப் பார்த்தாள்.

"என்ன அப்படிப் பார்க்கிறாய் நீ?" என்றாள் தமக்கையின் பார்வையைப் புரியாமல்

இரு கைகளாலும் அவள் முகத்தைத் தாங்கிப் பிடித்தவள், "அக்கா, எங்கே நிஜமாய்ச் சொல்லு. உனக்கு என் மேல் கோபம் இல்லை? தங்கை இப்படிச் செய்து விட்டாளே.. என ஆத்திரம் வரவில்லை? எதையுமே என் மேல் காட்டாமல் எந்தவொரு சுடு சொற்களையும் என் மேல் வீசாமல் எப்படி பொறுமையாய் இருக்கிறாய்?" என்றாள் கண்கள் கலங்க.

"அட அசடு..." என்றபடி அவளை மறுபடியும் அணைத்து தன் நெஞ்சுக்குள் பொதிய வைத்துக் கொண்டவள், பின் அவள் முகம் உயர்த்தி, "ம்ம்... எனக்கும் நீ சொல்லும் கோபம், ஆத்திரம் எல்லாம் முதலில் வரத்தான் செய்தது. ஆனால் பார்.. நீ.. இப்படி எல்லாம் நடக்கும் எனத் தெரிந்து கொண்டா இந்தத் தவறை செய்தாய்? உனது அறியாமையால் தானே... இப்படியெல்லாம் நடந்து விட்டது! அதனால்தான் எனது கோபங்களை எல்லாம் மூட்டை கட்டி விட்டு.. உன்னைத் தேற்றுகிறேன். புரிந்ததா? விளக்கம் போதுமா?" என்றபடி வலிய வரவழைத்த சிரிப்புடன் அவள் கன்னங்களை திருப்பி மென்மையாய் முத்தமிடவும் செய்தாள் மதுமதி.

சகோதரியின் நிஜமான அன்பில் மறுபடியும் நெகிழ்ந்து அவளோடு ஒட்டிக் கொண்டாள் சிங்காரி.

அவள் சொன்னபடியே இரண்டு நாட்கள் எடுத்துக் கொண்டு தனது வேதனை எண்ணங்களை நினைத்து நினைத்து... நரகமாய் அனுபவித்து மெல்ல விரட்டவும் முயற்சி செய்தாள்.



மதுமதி சொல்லிக் கொடுத்த பாணியில் சிந்தித்து, 'எல்லோருக்கும் இழப்புகள் வரத்தானே செய்கிறது? யாருக்குத்தான் இல்லை? எல்லோரையும் போல் நாமும் ஏற்றுக் கொண்டு... வேதனையை ஜீரணித்துக் கொண்டு வாழ்ந்துதானே ஆக வேண்டும்? என பல கேள்விகளை மனதுள் எழுப்பி தன்னிலையை உணர்ந்தாள். ஜீரணிக்க முயற்சி எடுத்தாள்.

சிங்காரியின் முயற்சிகளுக்கு அந்த இரண்டு நாளில் நல்ல பலனும் கிடைத்திருந்தது.

மூன்றாம் நாள் எதுவுமே நடவாதது போல் கவலை களைத் துடைத்துப் போட்டு விட்டு எழுந்து விட்டாள் சிங்காரி.

அன்றே கல்லூரிக்கு கிளம்பவும் தயாராகி விட்டாள் அவள்.

புது ஜென்மம் எடுத்தது போல் புதுமலராய் பூத்த அவளை முதற் காரியமாய் கோவிலுக்குத்தான் அழைத்துச் சென்றாள் மதுமதி.

இருவரும் மனம் உருக வேண்டி விட்டு திரும்பினார்கள்.

வீடு திரும்புகையில் மதுமதியைப் பார்த்த சிங்காரி, "அக்கா இன்னொரு முக்கியமான விஷயம் இருக்கிறதே.." என்றாள்.

"என்ன சிங்காரி?"

"நினைவுகளை எல்லாம் மறந்து சரி பண்ணி விடலாம்... ஆனால் இது.. இதை.." என்றபடி வயிற்றைத் தடவிக் காட்டினாள்.

மதுமதி அதை உணர்ந்திருந்தாள்தான். அதுபற்றி முன்னரே சிந்தித்திருந்தாள்தான். அதனாலே ''கவலைப் படாதே.. அதற்கும் ஒரு வழி வைத்திருக்கிறேன்..!'' என்றாள்.

சொல்லும்போதே அவள் நினைப்பில் தினகரன் முகம் தான் பளிச்சிட்டு மறைந்தது.

## 28



மதுமதிக்கே அது ஆச்சரியம்தான்! சிங்காரியின் வயிற்றில் வளரும் விஷயத்திற்கு என்ன தீர்வு? எப்படி அதைச் சமாளிக்கப் போகிறோம்? என்ற கேள்வியை மனதுள் தொடுத்தபோது மனத் திரையில் புன்னகையுடன் கூடிய தினகரனின் முகம்தான் தோன்றி மறைந்தது.

அடடா! சிங்காரியின் பிரச்சினையில் தினகரனை மறந்தே போய்விட்டோமே? டூர் சென்றவன் இன்னும் திரும்ப வில்லையே... இருபது நாட்களுக்கு மேலாயிற்றே... நல்லபடியாக அவன் வந்து சேர வேண்டுமே! என்ற கவலை சட்டென உண்டாயிற்று.

சிங்காரியும் பேச்சை மாற்ற வேண்டும் என்று நினைத்தாளோ அல்லது சகோதரியை குளிர வைக்க வேண்டும் என்று நினைத்தாளோ அவளும் தினகரனைப் பற்றிய பேச்சை எடுத்தாள்.

''அக்கா, அவர் இன்னும் டூர் சென்றவர் வர வில்லையே?'' என்றாள் கவலைக் குரலில்.



அவள் யாரை குறிப்பிடுகிறாள், எதற்காக தினகரனுக்கு இந்தப் புதிய மரியாதை கொடுக்கிறாள் என்று தெரிந்தும், தெரியாதவள் போலவே ''எவர்? யாரைச் சொல்கிறாய்?'' என்றாள்.

''அதான்.. தினகரனைத்தான் சொல்கிறேன். கல்லூரி மாணவர்களுடன் டூர் சென்றவர் வரவில்லையே?''

''ஆமாம்.. ஆமாம்...'' வாய் பேசாமல் பலமாய் தலையை மட்டும் ஆட்டினாள் மதுமதி.

தன் உணர்வு எதையும் சிங்காரியிடம் காட்டி விடக் கூடாது என்பது போல் உதடுகளையும் இறுக்கமாக்கிக் கொண்டாள்.

ஆனால் சிங்காரியோ தொடர்ந்து அதுபற்றியே பேசும் விதமாய், ''அன்று நடந்ததற்காக ஸாரி... ஸாரிக்கா..!'' என்றாள் மன்னிப்புக் கேட்கும் தொனியில்.

''எதற்கு ஸாரி?'' மறுபடியும் தெரியாதது போலவே கேட்டாள் மதுமதி.

''அன்று தினகரன் வந்து அப்பாவிடம் தான் டூர் கிளம்பிச் செல்வதை தெரிவிக்க வந்தபோது நான் குறுக்கே நின்று உன்னைப் போக விடாமல் செய்து விட்டேன்... அது.. அது..'' என அவளே வார்த்தைகளை எப்படி முடிப்பது என்பதுபோல் தடுமாறினாள்.

'அட... மிகச் சரியாய் அன்று நாம் தினகரனை பார்க்க தத்தளித்ததை கவனித்திருக்கிறாளே..' என உள்ளுக்குள் அதிர்ந்த மதுமதி அதை வெளிக்காட்டாமல் பெரிய சிரிப்பு

ஒன்றை வேண்டுமென்றே சிரித்து அவளை திகைக்க வைத்தாள்.

கூடவே, ''நல்ல கற்பனைதான் உனக்கு.. நீயாகவே எல்லாவற்றையும் நினைத்து முடிவு பண்ணி விடுவாய் போல...'' எனச் சொல்லி நகைத்தே பதில் சொல்லாமல் மழுப்பினாள்.

பின் பேச்சை மாற்றும் விதமாக, ''அதை விடு. இன்னொரு முக்கியமான விஷயம். நீ நம் அத்தையிடம் எப்போதும் கவனமாய் இருந்து கொள். உன்னுடைய சின்ன அசைவு கூட அத்தைக்கு சந்தேகத்தை ஏற்படுத்தி விடும். புரிகிறதா?'' என்றாள்.

''புரிகிறது..'' தலையசைத்த சிங்காரி முகத்தை சோக மாக்கியபடி,. ''அதை நினைத்தால் வெகு பயமாய் இருக்கிறதக்கா. இந்த வயதில்.. இப்படி வயிற்றில் ஒன்றை சுமந்து கொண்டு... வெளியே தெரிந்தால் இந்த ஊரே சிரித்து விடும்தானே அக்கா?'' என்றாள் அப்பாவியாய்.

அவளைத் திரும்பிப் பார்த்த மதுமதி முதுகில் லேசாய் ஒரு தட்டு தட்டி விட்டு, ''முதலில் இப்படி பயமாய் யோசிக்கும் மனநிலையைக் கட்டுப்படுத்து. நிறுத்து. இது கடைசியில் அழுகையில் கொண்டு போய்தான் நிறுத்தும். எதையும் சமாளிக்க வழி இருக்கும். வழிகள் இருக்கிறது..'' என்றாள்.

''எப்படி.. எப்படி.. அக்கா பயப்படாமல் இருக்க முடியும்? வயிற்றில்தான் அடிக்கடி அசைவு தெரிகிறதே... அதுதான் என் நிலையை ஒவ்வொரு நொடியும் ஞாபகப்படுத்திக்



கொண்டு இருக்கிறதே?'' என்றாள் சிங்காரி நொந்த குரலில்.

அதற்குள் அசைவுகள் தெரிய வாய்ப்பில்லையே.. என உள்ளுக்குள் நினைத்த மதுமதி முதலில் அவள் பயத்தை நீக்க விரும்பினாள். பயத்தை நீக்க அது பற்றி பேசாமல் இருந்தால்தான் முடியும்.

எனவே, ''சரி இது பற்றி இன்னும் இரண்டொரு நாள் கழித்து யோசிப்போம். முடிவெடுப்போம். இப்போதைக்கு எல்லாவற்றையும் மறந்து விட்டு இயல்பாக இரு... உன்னால் முடியும்தானே?''

அவள் சொல்வதை ஏற்றுக் கொண்டவள் போல் தலையை ஆட்டினாள் சிங்காரி. அன்றே அதை நடைபடுத்தும் விதமாய் கல்லூரிக்கும் சென்றாள்.

அவள் தலை மறைந்ததும் கன்னத்தில் கை வைத்தபடி அப்படியே கீழே உட்கார்ந்து விட்டாள் மதுமதி.

என்ன ஒரு இக்கட்டான நிலைமை!

வயிற்றில் குழந்தை! காரணமானவன் விபத்தில் பலியாகி விட்டான்!

இனி சிங்காரியின் எதிர்காலம்?

யார் அவளுக்கு வாழ்க்கை கொடுக்க முடியும்? யார் பாழாகி விட்ட அவள் வாழ்வை சீர் படுத்த முடியும்?

இது.. அப்பாவிற்கோ.. அத்தைக்கோ.. வேறு தெரியாது. தெரிந்தால் எப்படி துடித்துப் போய்விடுவார்கள்?

இதை மறைக்கவும் முடியாதே! நாளாக நாளாக வயிறு ஒன்றே காட்டிக் கொடுத்து விடுமே!

இந்த சிங்காரி என்ன செய்யப் போகிறாள்? அவள் வாழ்க்கை அவ்வளவுதானா?

அவ்வளவு நேரம் சிங்காரி முன் அவளுக்காக அவள் போட்டிருந்த 'தைரியமான' வேஷம் கலைந்துபோய் கூர்மையான கேள்விகள் அவளைத் துளைத்தது.

பெரும் வீராப்பாய் சிங்காரியிடம் சொல்லி விட்டாள் தான். கவலைப்படாதே.. எதற்கும் வழி கிடைக்கும். நீ தைரியமாக இரு! எல்லாம் அவள் உடைந்து போய்விடக் கூடாது என்பதற்காகத்தானே?

ஆனால் உண்மையில் என்ன வழி இருக்கிறது?

இப்படி வாயும் வயிறுமாய் இருக்கிற பெண்ணை மணக்க வாழ்க்கை கொடுக்க எந்தத் திருமகன் முன்வருவான்?

இப்படி கோபமும் துயரமாய் அவள் மனதுள் நினைக்கும் போதுதான் மறுபடியும் அந்த தினகரனின் புன்னகை முகம் அவளுள் பளிச்சிட்டது. முதலில் டூர் முடிந்து வந்ததும் அவனிடம் விரிவாய் பிரச்சினையைச் சொல்லி யோசனையைக் கேட்கலாம் என நினைத்தாள்.

ஆனால் இப்போது வேறு மாதிரியான புது சிந்தனை யொன்று கிளம்பி அவளை அலைக்கழித்தது. இப்போது உள்ள சூழ்நிலையில் அப்பாவிற்கும் அத்தைக்கும் விஷயம் தெரியும் முன் உடனடியாய் ஏதாவது ஏற்பாடு பண்ணியாக வேண்டும்.



மேலும் நாளுக்கு நாள் சிங்காரியின் வயிறு பெரிதாகும். வளருகிற குழந்தைக்கு அப்பா என்று யாரையாவது கைகாட்ட வேண்டுமே? அப்படி இறந்துபோன மோகனைச் சொல்ல முடியுமா?

முடியாது.

அப்பா தன் மகளுக்கா இப்படி என உடைந்து விடுவார். ஒரு பெண்ணிற்கு கல்யாணத்தன்று மாப்பிள்ளை இறந்தான் என்றால் மற்றொரு பெண்ணிற்கு வயிற்றில் குழந்தையைக் கொடுத்து விட்டு இறந்து போய்விட்டானா? என அரற்ற ஆரம்பித்து விடுவார்.

அதனால் அப்படி நடக்க விடக் கூடாது. தந்தை மனம் நொடிந்து போகக் கூடாது.

இப்போதைக்கு சிங்காரியின் பிரச்சினையை எப்படி யாவது சமாளித்தாக வேண்டும்.

எப்படி?

தினகரனை வைத்து என்ன செய்ய முடியும்?

பேசாமல் தினகரன்தான் காரணம், சிங்காரியின் வயிற்றில் வளருவதற்கு அவன்தான் பொறுப்பு என நடிக்க வைத்து விட்டால்..?

மற்றவர்களை நம்ப வைத்து விட்டால்..?

திடீரென விபரீதமாய் தனக்குத் தோன்றிய யோசனை யைக் கண்டு மதுமதியே ஒரு கணம் திடுக்கிடத்தான் செய்தாள்.

ஆனால் மேலும் சிந்திக்க.. சிந்திக்க.. அது சரிதானே? அப்படிச் செய்தால் என்ன? இப்போதைக்கு பிரச்சினையில் இருந்து தப்பிக்க அது ஒன்றுதானே வழி? என்றெல்லாம் தோன்றியது.

எல்லாம் சரி.

எவ்வளவு பெரிய அவப் பழி இது.. இதற்கு எப்படி தினகரன் ஒத்துக் கொள்வான்.

செய்யாத தவறுக்கு கூட பொறுப்பேற்றுக் கொள்ளலாம். செய்யாத பாவத்திற்கு எப்படி பொறுப்பேற்க முடியும்?

தினகரன் என்ன அவ்வளவு முட்டாளா?

இப்படி யோசிப்பதிலேயே அன்றைய பொழுது முழுவதும் மதுமதிக்கு ஓடியது.

மாலை சிங்காரி வரும் நேரம் சிரித்த முகத்துடன் தான் நடமாடுவது போல் பாவனை பண்ணிக் கொண்டாள்.

சிங்காரிதான், ''ஆனாலும் கல்லூரியில் எல்லோரும் என்னை ஒரு மாதிரியாகத்தான் பார்க்கிறார்கள் அக்கா. தோண்டித் துருவி விசாரிக்கிறார்கள். வெறும் பழக்கம் தானா.. இல்லை மோகனுடன் நெருக்கமா என்பதுபோல்!'' என விவரித்தபோது, ''அதையெல்லாம் சட்டை செய்யாதே..'' என்றாள் மதுமதி ஒற்றை வரியாய்.

''சரியக்கா... நான் அதையெல்லாம் சட்டை செய்யவில்லை. ஆனால், நீ.. நீ..''

சொல்ல வந்ததை சட்டென சொல்ல முடியாமல் தயங்கினாள் சிங்காரி.



''ம்ம்.. சொல்.. சொல்லம்மா..''

''நீ.. என் வயிற்றில் வளருவதற்கு ஏதாவது வழி கண்டு பிடித்தாயா?'' என்றாள் ஆவலாய்.

''உனக்கு ஏதுவும் வழிகள் தோன்றுகிறதா?'' என்றாள் மதுமதி பதிலுக்கு.

வெறுமையாய் உதட்டைப் பிதுக்கினாள் சிங்காரி.

''பேசாமல் கலைத்து விடலாம் என்று கூட தோணுகிறது.''

''ஆனாலும் வளர்வது ஒரு உயிர் அல்லவா?''

''அதனால்தான் நானும் யோசிக்கிறேன்..''

''எனக்கு ஒரு நல்ல யோசனை தோன்றுகிறது சிங்காரி. ஆனால் அது சரியாய் வருமா.. என்றுதான் குழப்பமாய் இருக்கிறது..''

''என்ன யோசனை அக்கா?''

''அதாவது இப்போதைக்கு பிரச்சினையைத் தள்ளிப் போட தீர்த்துக் கொள்ள ஒரு வழி..''

''என்ன வழி அக்கா அது?''

''பேசாமல் உன் குழந்தைக்கு அப்பாவாக தினகரனிடம் பேசி அவரை நடிக்கச் செய்யலாமா? அப்பாவையும் அத்தையையும்... ஏன்.. இந்த ஊரையும் கொஞ்ச நாள் சமாளித்து விடலாம். அதன் பின் நிதானமாய் யோசித்து வேறு ஒரு வழியைத் தேடலாம்... என்ன சொல்கிறாய் நீ?'' மதுமதியின் கேள்விக்கு சிங்காரி பதில் சொல்லும் முன்

வெளிப்புறம் இருந்து, "அதற்கு நான் சம்மதிக்க வேண்டுமே?" என்ற குரல் வந்தது.

திடுக்கிட்டு இருவரும் திரும்பிப் பார்க்க... அங்கு பெட்டியும் கையுமாக தினகரன் நின்று கொண்டிருந்தான்.

## 29



இருவரும் திடுக்கிட்டுத்தான் போனார்கள்.

தினகரன் ஊரிலிருந்து வந்துவிட்டது கூட ஆச்சரியமல்ல! அவன் வந்து நின்று கொண்டிருப்பதை உணராமல் பேசிக் கொண்டிருக்கிறோமே... இருவரும் பேசியதை ஒன்று விடாமல் கேட்டு வேறு விட்டானே!

அதிர்ச்சியில் திகைத்தவர்களாய் இருவரும் அவனைப் பார்த்து ஓரிரு நிமிடங்கள் விழிக்கத்தான் செய்தார்கள்.

சிங்காரிதான் முதலில் சுதாரித்து, "வாருங்கள்... வாருங்கள்... தினகரன் சார்.. ஊரிலிருந்து இப்போதுதான் வருகிறீர்களா?" என்றாள் சமாளிக்கும் விதமாய்.

தினகரன் சட்டென சிரித்தான். "என்ன... தினகரன் சாரா? என்ன மரியாதையெல்லாம் பலமாய் இருக்கிறது?" என்றபடி மதுமதியை பார்வையால் துளைத்தவன், "என்ன மது... என்ன பிரச்சினை? என் தலை எல்லாம் உங்கள் பேச்சில் உருளுகிறது..?" எனப் பேசி இயல்பாக சிரிக்கவும் மதுமதி பயம் நீங்கி சகஜ நிலைக்கு வந்தாள். ரொம்ப நாள் பழகியதைப் போல் 'மது..' என அவன் உரிமையாய் அழைத்து வினவியது அவ்வளவு நாள் அவனைப் பார்க்காமல் எழுந்திருந்த தவிப்பை ஆறுதல் படுத்தியது போலவும் உணர்ந்தாள்.



ஒரு கணம் மைவிழிகளை விரித்து அவனையே உற்றுப் பார்த்தாள். பயணத்தின் விளைவாய் சற்றே களைப்பாய் தெரிந்தாலும் முகத்தில் தெரிந்த அந்த கம்பீரமும் அவனது வசீகரச் சிரிப்பும் அந்த நேரத்திலும் அவளைப் பரவசப் படுத்தியது.

"என்ன அப்படியே பார்த்துக் கொண்டிருக்கிறாய். விஷயத்தைச் சொல்!" என தினகரன் கேள்வியாய் உலுக்கியதும் தான் உணர்வுக்கு வந்தாள்.

"அது.. அது.." என சொல்ல ஆரம்பித்தவள் சிங்காரி கூனிக் குறுகி தலை குனிவதைப் பார்த்ததும் தயங்கினாள்.

அவள் தயங்குவதை உணர்ந்த சிங்காரியே நிமிர்ந்து, "தப்பு செய்தவள் நான். நீ எதற்கு தயங்குகிறாய்? சும்மா சொல்லக்கா.." என்றாள்.

இருந்தாலும் அவளை வைத்துக் கொண்டே பேசுவது சரியல்ல என்பதை உணர்ந்த மதுமதி அவளை பின்புற தோட்டத்து செடிகளுக்கு நீர் ஊற்றும்படி அனுப்பி விட்டு தினகரன் பக்கம் திரும்பினாள்.

மறுகணம் அவளை எதுவும் பேச விடாதபடி வேகமாய் தன் பக்கம் இழுத்து அணைத்தான் தினகரன்.

மதுமதி கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை!

தினகரன் சட்டென இழுத்துப் பிடித்து அவளை அணைத்திருந்தான்.

என்ன நடக்கிறது என்றே புரியாமல் அவள் விழிகள் விரிய விழித்துப் பார்த்தவள் அதே திகைப்போடு அவனோடு ஒட்டிக் கொண்டாள்.

ஓரிரு நிமிடங்கள் இந்த நிலை நீடித்து அந்த இதமான அணைப்பின் கதகதப்பை உணர்ந்தபோது தினகரன் அவளை விடுவித்திருந்தான்.

பின் எதுவுமே நடவாதது போல் கைகளைக் கட்டிக் கொண்டு அவளைப் பார்த்தான்.

அவன் இழுத்தான், அணைத்தான், விடுவித்தான். அவளும் ஒன்றும் எதிர்ப்புக் காட்டவில்லையே! ஒண்டிக் கொண்டுதானே இருந்தாள்.

சொல்லப் போனால் இந்த அணைப்பும் கதகதப்பும் நடப்பது இரண்டாவது முறை!

இதற்கெல்லாம் என்ன அர்த்தம்? என்னதான் அர்த்தம் இருக்கக் கூடும்?

வாய் வார்த்தைகளால் பேசுவதை விட உணர்வுகளால் புரிந்து கொள்வோம் என்பது போல் அவன் தினகரன் நடந்து கொள்கிறானா?

இல்லை... அவள்தான் அதை அனுமதிக்கிறாளா?

யோசித்தவளுக்கு கால்களின் சிறு நடுக்கமும் மனதில் திடீரென ஏற்பட்ட பரவசமும் புதுமையாகத்தான் தோன்றியது.

தனது நிலையையும் அவனது குறுகுறுப்பு பார்வை யையும் உணர்ந்தவள் அவசரமாய் பேச்சை மாற்றினாள்.



''டூர்... எல்லாம் முடிந்ததா? எல்லாம் நல்லபடியாக அமைந்ததா?'' என்றாள்.

அவள் பார்வையை விலக்காமல் தோள்களை குலுக்கினான். ''எல்லாம் நன்றாகத்தான் இருந்தது. ஆனால்.. இந்த தவிப்புதான் அதிகமாகி விட்டது..''என்றான்.

''தவிப்பா?''

''ஆமாம்... யாரையாவது அடிக்கடி நினைத்து பார்ப்போம்... அந்த தவிப்பு..'' என அவன் விளக்கியபோது, அவள் முகம் தாமரையாய் விரிந்து சிவந்தது. குனிய வைத்துக் கொண்டவள் விழிகள் தாழவே அவனை நோக்கினாள்.

அவன் அவள் பதிலறிவதில் ஆவலாகவே, ''இருக்கும்... இருக்கும்..'' என்றாள்.

''நீ சொல்வது புரியவில்லையே...?'' என்றான் அவன் தெளிவாய் அறிய விரும்புபவனாய்.

''புரியாமல் இருப்பதும் நல்லதுதான்!'' என்றாள் அவள் பதிலுக்கு.

''அது சரி..''

தலையாட்டியபடி அவனும் அந்த பேச்சை அத்தோடு முடித்துக் கொண்டான். பின் பேச்சு சிங்காரி விஷயத்திற்கு மாறியது.

''சிங்காரிக்கு... என்ன.. என்னாயிற்று?'' என்றான் குரலில் கவலை தொனிக்க.

மதுமதி பெருமூச்சு விட்டவள் மெதுவாய் விஷயத்தை ஆரம்பித்து முழுவதுமாய் சொல்லி முடித்தாள்.

புருவம் உயர அதிர்ந்துதான் போய் விட்டான் தினகரன்.

ஓரிரு நிமிடங்கள் அவனால் பேசவே முடியவில்லை.

கைகளால் நெற்றியைத் தேய்த்து தடவியவன் அதே ஆச்சரியத்துடன் "எப்படி... எப்படி... சிங்காரி.. இந்தத் தப்பைச் செய்தாள்? என்னால் நம்பவே முடியவில்லையே!" என்றான் வியப்பு அடங்காமல்.

மதுமதி அதற்கும் சோகமாய் தலையசைத்து, "நம்ப முடியவில்லைதான்! சின்னப் பெண் என நாம் நினைத்தவள் பெரிய தப்பை செய்து விட்டு வந்து நிற்கிறாள். இப்போது இக்கட்டான சூழ்நிலையும் உருவாயிற்று. வயிற்றில் வளரும் மோகனின் வாரிசுக்கு என்ன பதில் சொல்ல முடியும்?" என்றாள்.

தினகரனுக்கு எல்லாம் புரிந்தது.

கண்களை அசைத்தபடி தலையாட்டியவன், "புரிகிறது. ஜீரணிக்க முடியாத விஷயம்தான். ஊர் உலகுக்கு தெரியாமல் விஷயத்தை சமாளிக்க வேண்டும். இல்லையெனில், மானம் போய்விடும்" என்று முடித்தான்.

"அப்படி மானம் போகாமல் இருக்க நீங்கள்தான் உதவி செய்ய வேண்டும்.." என்று பீடிகையுடன் கூற, தினகரன் மறுபடியும் புருவம் உயர்த்தி கண்களை பெரிதாக்கினான்.

"நான் உதவ வேண்டுமா? எப்படி?"

"நடிக்க வேண்டும்.."என்றாள் ஒற்றை வரியில்.

"புரியும்படி சொல்."



அவனுக்குப் புரியும்படியே விளக்கினாள்.

உறுத்த கேலிப் பார்வை பார்த்தான் அவன்.

"சிங்காரி செய்ததை விட முட்டாள்தனமாய் படு கேவலமாய் அல்லவா நீ சொல்வது இருக்கிறது?"

"முட்டாள்தனம்தான். கேவலம்தான். ஆனால் இப்போதைக்கு பிரச்சினையைத் தீர்க்க வேறு வழி இல்லையே?"

"இல்லையே.. என்று சொன்னால் எப்படி? அதற்காக யோசிக்க வேண்டும். மூளையைக் கசக்கித் தேட வேண்டும்.."

"நான் எல்லாவற்றையும் யோசித்துத் தேடிப் பார்த்து விட்டேன். வேறு ஒன்றும் இல்லைதான்."

அவன் பதில் சொல்லாமல் ஒரு சில நிமிடங்கள் மௌனமானான். கண்களை மூடியபடி விறுவிறுவென அவன் யோசிப்பது புரிந்தது. மறுபடி கண்களை பட்டெனத் திறந்தான்.

அவளை நோக்கி உதடுகளை வெறுமையாய் பிதுக்கினான்.

"நீ சொல்வது சரி. வேறு வழி அமைவது கஷ்டம்தான்."

"அதற்காகத்தான்.. உங்களிடம் இந்த உதவியை கேட்கிறேன்."

அவள் குரல் மிருதுவாகி ஒலித்தது.

இம்முறை தினகரன் யோசித்தபடியே அவள் பக்கம் வந்தவன் அப்படியே அவள் கைகளைப் பிடித்தான்.

தன் விரல்களோடு சேர்த்து வைத்துக் கொண்டு அவள் கருவிழிகளை ஊடுருவினான்.

அவள் கைகளை விலக்காமல் மறுப்பேதும் சொல்லாமல் அவனையே பார்த்தாள்.

''எவ்வளவு பெரிய விஷயம் இது? புரிந்துதான் பேசுகிறாயா?'' என்றதும் அவள் காதுமடல்கள் அதிர தலையாட்டினாள்.

''இதன் விளைவுகள் எவ்வளவு மோசமாக இருக்கும் என்பதை யோசித்தாயா?''

''சொல்லு.''

''அதைவிட இந்த சூழ்நிலையில் சிங்காரி தன் நிலையை எண்ணி மனமுடைந்து பலஹீனப்பட்டு தற்கொலை போல் எதுவும் முடிவுகளை எடுத்துவிடக் கூடாது... என அஞ்சுகிறேன்.''

அதை ஆமோதிப்பவனாய் பதிலுக்கு தலையசைத்தான் தினகரன்.

''உன் அச்சம் நியாயம்தான்... சிங்காரி எதற்கும் எளிதில் உணர்ச்சி வசப்படக் கூடியவள்தான்... அதனால்தானே இப்படி ஒரு இக்கட்டில் மாட்டி இருக்கிறாள். ஆனால், என் நிலைமையை கொஞ்சம் யோசித்துப் பார். ஒரு கல்லூரி விரிவுரையாளனாய் இருந்து கொண்டு என்னதான் நடிப்பு என்றாலும் இப்படி ஒரு அவப் பெயர் என்னைச் சூழ்ந்தால் அது எப்படி இருக்கும்?''



கேள்வி கேட்டு விட்டு அவளையே பார்த்தான். பதில் சொல்லாமல் அவளும் அவனையே கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''ஹேய் மது... உன்னைத்தான்!''

அவன் குரல் உசுப்புவது போல் அவள் காதுகளில் விழுந்தது. மெல்ல உதடுகளைப் பிரித்தாள்.

''எனக்காக... எனக்காக.. இதைச் செய்ய மாட்டீர்களா?''

மிக மிக கெஞ்சலாய் அவள் குரல் ஒலித்தபோது முதல் முறையாய் தடுமாறினான் அவன்.

''மது.. உனக்காக... உனக்காக..''

அவனும் எதையோ சொல்ல வந்து உச்சரித்து தடுமாறினான்.

மறு நிமிடம் அவனை மேலும் நெருங்கியவள் சட்டென அவனை இறுக அணைத்தும் கொண்டாள்!

## 30



தினகரன் அதைச் சற்றும் எதிர்பார்க்க வில்லைதான். மதுமதி எதிர்பாரா வண்ணம் பக்கம் வந்தவள் இறுக அணைத்தாள். மறுகணம் விடுவித்து விட்டாள்.

அந்த அணைப்பு ஓரிரு நிமிடங்களே நீடித்தது எனச் சொல்லலாம். ஆனால் அவள் அணைத்த விதம் அவனால் அவனுக்கு உணர்த்த முயன்றது... எல்லாம் மின்னலாய் தினகரனுக்குப் புரியத்தான் செய்தது.

வார்த்தைகள் செய்யாத ஜாலத்தை சின்ன ஸ்பரிசம் எளிதாக உணர்த்தி விடுகிறதே!

அவள் நிலை.. உங்களை விட்டால் எனக்கு வேறு யார் இருக்கிறார்கள்? என பார்வையாலும், ஸ்பரிசத்தாலும் அவள் தெரிவித்த பாங்கு, இது எல்லாமே தெள்ளத்தெளிவாய் அவனுக்குத் தெரிந்து விட்டது.

நிமிர்ந்து அவளைப் பார்த்தான்.

அவள் நாணிக் கோணவில்லை. முடிக் கற்றைகள் முன் நெற்றியில் புரள அவள் கம்பீரமாகவே தெரிந்தாள். மைவிழிகளை விரித்து அவள் பார்த்த பார்வை பேச முடியாத நிறைய அர்த்தங்களை அவனுக்கு உணர்த்தியது.

இனிமேலும் அவளது கோரிக்கைக்கு அவள் கேட்கும் உதவிக்கு மறுக்க முடியாதுதான்!

"செய்கிறேன்... உனக்காகச் செய்கிறேன்.. மது" என்றான் அவனும் குரலில் கனிவோடு.

மற்ற நேரமாய் இருந்தால் அவன் கனிவோடு அப்படிச் செல்லமாய்க் கூப்பிடும் தன் பெயரழகை அவள் ரசித்திருக்கக் கூடும். ஆனால் இப்போது..?

அவளுக்கும் கஷ்டமாய்த்தான் இருந்தது. அப்பழுக்கற்றவனாய் தூய்மையோடு நடமாடிக் கொண்டிருக்கும் அவன் கம்பீரத்தின் மேல் சாணியடித்து அழகு பார்க்கும் வேலையல்லவா அவள் சொல்வது? எவ்வளவு பெரிய இழுக்கு அவனுக்கு!



ஊர் உலகம், அக்கம் பக்கங்களின் வாய் கூசாத பழி பாவ பேச்சுகளை அவன் கேட்க வேண்டியிருக்குமே? செவிப்பறை என்ற ஒன்று தன் உடம்பிலே இல்லாதது போல்தானே அவன் நடமாட வேண்டி இருக்கும்?

எல்லாவற்றையும் தாங்கிக் கொள்வானா? அவமானங்களையும் கேட்க முடியாத வார்த்தைகளையும் சகித்துக் கொள்வானா?

அவள் நினைப்பை அறிந்தது போல் முகத்தில் உதிர்த்த வசீகரச் சிரிப்பை பெரிதாக்கியவன், "உனக்காக எது வேண்டுமானாலும் செய்வேன். நீ கலங்க வேண்டாம்" என்றான் அவளுக்கு தைரியம் கொடுப்பது போல்.

அவன் கொடுத்த தைரியத்தில் மதுமதி ஓரளவு உற்சாகம் அடைந்தவள் போல்தான் ஆகிக் கொண்டாள்.

பின் எப்படி நடந்து கொள்வது என்பது பற்றி யோசித்த போது அது அதைவிட கஷ்டமாய் இருந்தது.

மதுமதிதான் விளக்கினாள்.

முதலில் அப்பா, பின் அத்தை இருவருக்கும் சொன்னால் போதும். அவர்களை நம்ப வைத்தால் போதும்! என்ன சிங்காரி வயிற்றில் வளர்கிறதா? காரணம் நம் மாடிப் போர்ஷனில் இருக்கும் தினகரனா? என உச்சபட்ச அதிர்ச்சிதான் அடைவார்கள்.

மேலும் எப்படி எதனால் இப்படி நடந்தது எனக் குடைந்தால், 'சிங்காரி அடிக்கடி விளையாட்டாய் போய் பேசி வரும் பழக்கத்தினால், தினகரனைத் தேடிச் செல்ல

ஒருநாள் இருவரும் யாரும் இல்லாத தனிமையில் உணர்ச்சி வசப்பட்டு எல்லை மீறி விட்டார்கள்!' என சொல்லி விட வேண்டியது.

இருவரும் சேர்ந்த கட்டுக்கதை போல் ஒன்றை நிஜமாக உருவகம்செய்தபோது அது இருவருக்கும் எரிச்சலை ஊட்டும் அசிங்கமாகவே தெரிந்தது. ஆனாலும் வேறு வழியில்லையே. சிங்காரியின் எதிர்காலத்திற்காக இதையெல்லாம் சகித்துக் கொண்டுதான் ஆக வேண்டும்!

அவளுக்கு இப்படிச் சொல்லிவிட்டு, தினகரனின் முகத்தைப் பார்க்கவே சங்கடமாய்த்தான் இருந்தது.

அதைப் புரிந்தவன் போல் தினகரனும், அவள் தோள் களைத் தட்டியவன், ''எல்லாம் நடிப்பாகத்தானே செய்யப் போகிறேன். பின் வருத்தம் எதற்கு?'' என்றவன் பின் அதே யோசனையுடன், ''உன் தந்தையையும் அத்தையையும் சமாதானப்படுத்தியதும் மறுபடியும் உட்கார்ந்து யோசிப் போம். சிங்காரியின் வாழ்க்கையை மறுபடியும் துளிர்க்க வைக்க என்ன செய்வது என தீவிரமாய் யோசிப்போம். சரிதானே?'' என்றான்.

அவன் தனக்காக இவ்வளவு தூரம் உணர்ந்து வருந்து கிறாள் என்பதை உணர்ந்தவள் ஒரு கணம் நெகிழ்ச்சி அடைந்தவளாய் அவன் கைகளை இறுகப் பற்றி அழுத்தியபடி ''ரொம்பவும் நன்றி!'' என்றாள் குரல் நடுங்க.

மீண்டும் செல்லமாய் அவள் முதுகை, கன்னங்களைத் தட்டி அவள் நடுக்கத்தை நிறுத்தியவன், ''நமக்கிடையே இந்த நடைமுறை நன்றி நவில்தல் வழக்கமெல்லாம் இனி



தேவையில்லை. தவிர்த்து விடு... என்ன?'' என்றான் கண்டிப்பது போல் உரிமையான குரலில்.

பின் தினகரனிடம் விடைபெற்று திரும்பி விட்டாள். தினகரனும் மறுநாள் காலை முதல் தன் நடிப்பை தொடங்குவதாகவும் சிங்காரியிடமும் சொல்லி நடிக்கத் தயார் செய்யும்படி கேட்டுக் கொண்டான்.

ஆனால் விஷயத்தை சிங்காரியிடம் மதுமதி உடனே வந்து சொல்ல அவள் முன்பு போல் பயப்படவே செய்தாள். ''எதற்கு இந்த விபரீத விளையாட்டு? பாவம்... தினகரன்.. எனக்காக அவர் ஏன் அவமானப்பட வேண்டும்? நான் இப்படியே இருந்து விட்டுப் போகிறேன்... ஒருநல்ல நாள் பார்த்து அப்பாவிடம் சொல்லி நன்றாக அடியும் வாங்கிக் கொள்கிறேன்...'' என்றாள் சலிப்புடன்.

''ச்சு. முட்டாள்தனமாக பேசாதே... நீ அப்படி உண்மையைச் சொல்லி விட்டால் மட்டும் எல்லாம் சரியாகி விடுமா?''

''அதையேதான் நானும் கேட்கிறேன். இப்படி தினகரனை நடிக்கச் செய்தால் மட்டும் விஷயத்தை சரிப்படுத்தி விட முடியுமா?'' என்றாள் எதிர் கேள்வியாய்.

''முடியாதுதான்! ஆனால் கால அவகாசம் கிடைக்கிறது அல்லவா? அதில் நிதானமாய் உட்கார்ந்து யோசிப்போம். வழி தேடுவோம். கண்டிப்பாய் கிடைக்கும்..''

''சரி... யோசிப்போம். ஆனால் எனக்காக இப்படி தினகரனை அவமானப்படுத்துவது எந்த விதத்தில் நியாயம்?''

சிங்காரி கேட்டதும் ஓரிரு நிமிடங்கள் அவளையே உற்றுப் பார்த்த மதுமதி அமைதியாக உச்சரித்தாள்.

''அது... உனக்காக... அல்ல.. எனக்காக!'' என்றாள் அழுத்தமாய்.

''அக்கா.. நீ..''

''தினகரன் எனக்காகத்தான் ஒத்துக் கொண்டார் என்பது உனக்கு புரியும்தானே?''

சிங்காரியும் அதன் முழு அர்த்தத்தை புரிந்தவள் போல் தலையாட்டினாள்.

''பின் எதற்கு கலங்குகிறாய்... தயக்கம் காட்டுகிறாய்? தைரியாக நடி. எல்லாவற்றையும் தினகரன் பார்த்துக் கொள்வார். சமாளித்துக் கொள்வார்..''

மதுமதி அத்தோடு அந்தப் பேச்சை முடிப்பது போல் சொல்ல.. சிங்காரி சங்கடமாய்த்தான் தலையசைத்து ஆமோதித்தாள்.

அன்று இரவு படுக்கையில் மதுமதிக்கு மறுபடியும் கவலை எழத்தான் செய்தது.

அப்பாவைக் கூட சமாளித்து விடலாம்.

ஆனால் பூர்ணம் அத்தை...? துருவித் துருவி கேட்பாளே? தினகரனை கேட்க கூடாத கேள்விகளை எல்லாம் கேட்டு வாட்டி எடுத்து விடுவாளே!

மறுநாள் விடிந்த பொழுதை மதுமதி பயந்து கொண்டேதான் வரவேற்றாள் எனலாம். காலை எழுந்ததும்



கண்களை மூடி இன்று எல்லாம் நல்லபடியாக நடக்க வேண்டும் என மனமுருக வேண்டிக் கொண்டாள்.

சொல்லி வைத்தாற் போல் ஒன்பது மணிக்கு தினகரன் நடிப்பதற்குத் தயாராய் மாடிப் போர்ஷனிலிருந்து கீழிறங்க பார்த்த இரண்டு சகோதரிகளுக்கும் அடி வயிறு கலங்கத்தான் செய்தது.

அப்பா வேறு தயாராய் குளித்து முடித்து பூஜைகளைச் செய்து வெளியே கிளம்ப தயாராகிக் கொண்டிருந்தார்.

தினகரன் முகத்தை தொங்கப் போட்டவன் போல் தனது கம்பீரமான தலையை குனிய வைத்துக் கொண்டே வீட்டிற்குள் நுழைந்தான்.

அவன் அப்படி ஒருவிதமான பாணியில் வருவதைப் பார்த்த தந்தை தில்லைநாயகமும் முகத்தில் திகைப்பு பரவே முன்புறம் வந்தார்.

அவனை இருக்கையில் அமரும்படி சொல்லி விட்டு எதிரே உட்கார்ந்தார்.

''ஐயா... ஒரு முக்கியமான... உங்களை சங்கடப்படுத்தும் விஷயம்...'' என மெல்ல ஆரம்பித்தான் தினகரன்.

தில்லை நாயகமும் புரியாமல் விழித்தவர். ''எதுவானாலும்... சொல்லுங்கள்..'' என்றார் திகைப்பாய்.

''உங்கள் மகள் சிங்காரி முழுகாமலிருக்கிறாள். அதற்கு காரணம் நான்தான்!'' என்றான் தினகரன் பட்டென விஷயத்தை உடைத்து.

31



தினகரன் கடைசியில் விஷயம் முழுவதையும் சொல்லியே விட்டான். என்னதான் நடிப்பு என்றாலும் தானே அந்த தவறை செய்தது போல் அவன் வெட்கி தலைகுனிந்து தடுமாறியபடி வார்த்தை களை சொன்னபோது மதுமதிக்கே சங்கடமாய்த் தான் இருந்தது.

கேட்டுக் கொண்டிருந்த தந்தை தில்லைநாயகமும் அத்தை பூர்ணமும் அதிர்ச்சியில் கற்சிலை போலவே ஆகிவிட்டனர்.

எல்லாவற்றுக்கும் காரணமான கதாநாயகி சிங்காரியும் அவ்வளவுக்கும் ஒப்புதல் அளிப்பது போல் எல்லோர் முன்னிலையிலும் வந்து தலையை குனிய வைத்த போஸுடன் நின்று விட்டாள்.

அந்த சோகமயமான நாடகம் கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் நடந்தேறியது. அப்பாவை விட எதிர்பார்த்தது போல் அத்தை தான் தாம் தீம் என குதிக்க ஆரம்பித்தாள். தினகரனை வாய் கூசும் வார்த்தைகளை வீசி அர்ச்சனை செய்தாள். சிங்காரி பிடறியில் தட்டி "அக்கா என்று ஒருத்தி இருக்கையில் உனக்கு அவ்வளவு அவசரம் கேட்கிறதோ?" என அவளையும் இடித்தாள். தந்தை தில்லைநாயகம்தான் பரிதாபப் பார்வையுடன் இருவரையும் மாறி மாறி விக்கித்துப் பார்த்தபடி நின்று விட்டார். தினகரனும் தன் பங்கிற்கு தலையை குனிய வைத்தவன் நிமிரவே இல்லை.



அவர்களது அத்தனை அர்ச்சனை வார்த்தைகளுக்கும் இடித்த புளியாய் சூடு சொரணையற்று நிற்பவன் போல் தான் நின்று கொண்டிருந்தான்.

ஒரு வழியாய் எல்லா அமளியும் இரண்டு மணி நேரத்தில் முடிந்து கடைசியில் அந்தத் தீர்மானமும் எடுக்கப்பட்டது. தினகரன் ஊரில் இருக்கும் தன் பெற்றோர்களிடம் பேசி ஒரு நல்ல நாள் பார்த்து முகூர்த்த தேதி வைத்து விடவேண்டும் என்ற முடிவும் செய்தாயிற்று.

அதற்காக தினகரனுக்கு ஒரு மாச அவகாசமும் அளிப்பது என முடிவு பண்ணினார்கள். ஊர் உலகத்திற்கு இந்த விஷயம் தெரியக் கூடாது. தெரிந்தால் மானம் போய்விடும் என அத்தை எல்லோரிடமும் தெளிவுபடுத்தி ரகசியம் காக்கச் சொன்னாள்.

அக்கா இருக்கையில் தங்கைக்கு எப்படி திருமணம் செய்வது? என்ற கேள்வி எழுந்தபோது மதுமதி குறுக்கிட்டாள். "இப்போதைக்கு எனக்கு கல்யாணம் வேண்டாம்... என அக்கா கூறி விட்டதாய் கூறி சிங்காரிக்கு செய்து வைத்து விடுவோம். மற்ற விஷயங்களை பிறகு பார்த்துக் கொள்வோம்..." என யோசனை சொன்னாள்.

அவளது யோசனையும் ஏற்கப்பட்டது.

ஆக... கொஞ்ச நேரம் போர்க்களம் போல் ஆள் ஆளுக்குப் பேசி ஓய்ந்த பின்னர் அந்த இடமே அமைதியானது.

தினகரன் தான் வந்ததுபோலவே திரும்பவும் தலையை தொங்கப் போட்டபடி அமைதியுடன் வெளியேறினான்.

அப்படி அகலுகையில் புருவம் உயர்த்தி விழி தாழ மதுமதியை ஒரு பார்வை பார்க்க அவன் தவறவில்லை.

பதிலுக்கு கண்கள் பனிக்க... மைவிழிகளை விரித்து பார்வையாலே நன்றி சொன்னாள் அவள்.

தந்தை தில்லைநாயகம் மனதால் பெரும் பாதிப்படைந்தவராய் அப்படியே நிலைப்படிகளில் உட்கார்ந்துவிட... ''என்னை மன்னித்து விடுங்களப்பா'' என அவர் காலில் விழுந்து கதறினாள் சிங்காரி.

கொஞ்ச நிமிடங்கள் அவர்களை அப்படியே விட்டு விட்டு மெல்ல மெல்ல ஆறுதல்படுத்தி தேற்றினாள் மதுமதி.

அன்று முழுவதும் வீடே ஏதோ போல்தான் எதையோ பறி கொடுத்தது போல்தான் ஆகிவிட்டது.

யாருக்கும் பேச்சு வரவில்லை.

சரியாய் சாப்பிடக் கூட மனம் வரவில்லை.

ஆனால் அத்தை பூர்ணத்திற்குத்தான் உள்ளூர சில சந்தேகங்கள்.

மதுமதியை தனியே அழைத்துப் போய் குடையத்தான் செய்தாள்.

''எப்படிடி.. இது...உனக்கு கூட தெரியாமல்?'' என்ற போது உதடுகளை பிதுக்கியபடி மௌனம்தான் காத்தாள் மதுமதி.

''இந்தச் சிங்காரி துடுக்குக் காரிதான். ஆனால் தினகரனைப் பார்த்தால் நல்லவனாய் அல்லவா



தெரிகிறான். அவன் இப்படிப்பட்ட தப்பை செய்திருப்பான் என்று நம்ப முடியவில்லையே?''என இழுத்தாள்.

மதுமதிக்கு உள்ளூர ஆச்சரியம்தான்! அத்தை கூட தினகரனைப் பற்றி எவ்வளவு தெளிவாய் தெரிந்து வைத்திருக்கிறாள்!

எல்லாம் இந்த சிங்காரியால் வந்த வினை! அவளுக்காக என்னவெல்லாம் செய்ய வேண்டியிருக்கிறது? ஒருநல்ல மனிதரை பாழ்படுத்தி அவரது கௌரவத்தைக் குலைக்கச் செய்து... சே! வெறுமையாய் நினைத்து நொந்து கொண்டவனை அத்தை மறுபடியும் உலுக்கி உணர்வுக்கு கொண்டு வந்தாள்.

''தினகரன்தான் பண்ணியிருப்பான் என நீ நம்புகிறாயா?'' என்றாள்.

மதுமதி திடுக்கிடவே செய்தாள். அத்தை இப்படித் தோண்டித் துருவி முழு விஷயத்தையும் கண்டுபிடித்து விடக் கூடாதே.

''என்னாலும் நம்ப முடியவில்லைதான். ஆனால் தினகரன் அப்படிச் செய்து விட்டாரே!'' என்றாள் அவசரமாய்.

அத்தை கைகள் இரண்டையும் குத்திக் கொண்டபடி நொடித்தாள்.

''நான் போட்ட கணக்கு எல்லாம் தப்பாய் போயிற்றே... சிங்காரி முந்திக் கொண்டாளே!'' என்றாள்.

அத்தை புதுசாய் ஏதோ சொல்ல வருவதைப் பார்த்து தூக்கி வாரிப் போட்டவளாய் நிமிர்ந்தாள் மதுமதி.

''என்ன அத்தை சொல்கிறீர்கள்?''

''ம்ஹூம்! நீ ஒரு மடைச்சிதான்! சிங்காரிக்கு இருக்கும் கெட்டிக்காரத்தனம் இல்லையே..'' என மறுபடியும் அலுத்து நொடித்தாள்.

''ஐயோ! நீங்கள் சொல்வது புரியவில்லை. புரியும்படி சொல்லுங்கள்!'' என்றாள் மதுமதி பரபரத்தாள்.

ஆனால் அத்தையின் குரலில் எரிச்சல்தான் வெளிப் பட்டது.

''இனி.. எதைச் சொல்லி, என்ன சொல்லி என்ன பிரயோஜனம்! எல்லாம்தான் முடிந்து விட்டதே!'' என்றவள் மதுமதி தொடர்ந்து குடையவும் விஷயத்தை வெளிக் கொட்டினாள்.

''வயசுப் பெண்ணான உன்னை அந்த தினகரனிடம் டியூசன் அனுப்பியதே உள்ளூர ஒரு காரணத்திற் காகத்தான்..'' என்று ஆரம்பித்தவள், மடமடவென காரணத்தைச் சொன்னதும் அதிர்ந்து தான் போனாள்.

அதாவது... தினகரன் நல்ல உத்தியோகத்தில் வேறு இருக்கிறானாம்... அவள் மதுமதிக்கும் ஏற்கனவே கல்யாணம் வரை போய் நின்று விட்ட நிலைதானே! அதனால் அப்படி டியூசன் போல் சாக்கு வைத்து இருவரையும் பழக விட்டால்... இருவருக்கும் ஒருநட்பு நெருக்கம் வந்து விடாதா! என்று ஆசைப்பட்டாளாம். அவள் நினைத்ததை சிங்காரி முந்திக் கொண்டு செய்து அவளது ஆசையை நிராசையாக்கி விட்டாளாம்!



அத்தை தனது மூக்குக் கண்ணாடியை உயர்த்தியபடி நெளித்து குழைத்துச் சொல்லக் கேட்ட மதுமதிக்கு சிரிப்புதான் பொத்துக் கொண்டு வந்தது. சரியான அப்பாவி.. என அவள் நினைத்துக் கொண்டிருக்கும் அத்தைக்குள் இவ்வளவு விஷயங்கள் இருக்கிறதா.. என திகைக்கவே செய்தாள்.

கூடவே ''நீங்கள் ஒன்றும் கவலைப்படத் தேவை யில்லை அத்தை. நீங்கள் நினைத்தது போல்தான் எல்லாம் நடந்திருக்கிறது. நீங்கள் எதிர்பார்த்த அந்த நட்பான நெருக்கம் அந்த டியூசன் மூலம் தினகரனுக்கும் எனக்கும் ஏற்பட்டு விட்டதே!' என உள்ளுக்குள் நினைத்துக் கொண்டு அத்தையிடம் பேச்சை மாற்றினாள் அவள்.

''சரி.. அதை விடுங்கள் அத்தை! சிங்காரி பிரச்சினைக்கு ஒரு முடிவு கிடைக்க வேண்டும்... அதுதான் முக்கியம்!'' என்றாள்.

அதற்கும் கவலையாய் தலையசைத்த பூர்ணம், ''ஆனாலும், இவளைப் பார்! இந்த இளம் வயதில் வயிற்றில் சுமந்து கொண்டு வேறு நிற்கிறாளே... இவளை என்ன செய்வது?'' என மறுபடியும் அரற்ற ஆரம்பித்து விட்டாள்.

ஒருவழியாய் மீண்டும் அத்தையை சமாதானப்படுத்தி அந்தப் பேச்சை மாற்றினாள் மதுமதி.

சிங்காரிதான் வருந்துபவள் போல் முகத்தை வைத்துக் கொண்டு அவர்கள் முன் நடமாடினாள்.

அதிலும் மூன்றாம் நாள் மாலை அரக்கப் பரக்க ஓடி வந்தவளைப் பார்த்ததும் மதுமதி திகைக்கவே செய்தாள்.

ஏனெனில் மிகவும் களைப்படைந்தவளாய் உடம்பெல்லாம் வியர்க்க.. வழக்கத்தை விட சற்று மெலிந்தாற் போல்.. ஒரே நாளில் அப்படி யாரால் மெலிய முடியும்?

சிங்காரி சொன்ன விஷயத்தைக் கேட்டவள் உச்சபட்ச அதிர்ச்சிக்கே போய்விட்டாள்.

இன்று அவள் கல்லூரிக்குப் போகவில்லையாம். யாரோ ஒரு தோழியிடம் தன் நிலையை தகப்பனில்லாமல் வயிற்றில் வளரும் வாரிசு பற்றியும் கூற.. அவள் இது ஆபத்து என்னுடன் வா... என அவளுக்குத் தெரிந்த ஒரு நாட்டு மருத்துவச்சியிடம் கூட்டிக் கொண்டு போய் விட்டாளாம்.. அவளும் அவளைப் படுக்க வைத்து பச்சிலைகள், கஷாயங்கள் நாட்டு மருந்து வகைகள் என என்னென்னவோ கொடுத்து வயிற்றில் இருந்த சிசுவை கலைத்து விட்டாளாம்... அப்படியே வெளியேவும் வந்து விட்டதாம்... பிரச்சினையும் தீர்ந்து விட்டதாம்!

மூச்சு வாங்க சிங்காரி சொல்லி முடிக்க மதுமதி அரண்டு போய் விட்டாள். ''அடிப்பாவி! ஒரு உயிரையே அவசரப் பட்டுக் கொன்று விட்டாயே!'' என்றாள் தாளமாட்டாத வளாய்.

ஆனால் அதற்கு சிங்காரி சொன்ன பதில் அவளை ஸ்தம்பிக்க வைத்தது. ''அக்கா, இந்த சிசு வளர்ந்து குழந்தையாய் உருவெடுத்தால் நாளை ஊர் உலகத்தில் அத்தனை பேரும் என்ன சொல்வார்கள்? அப்பன் பேர் தெரியாதவன்.. அப்பனை தின்று விட்டு வந்தவன்... ராசி யில்லாதவன் என சகட்டு மேனிக்கு சொல்லி வார்த்தை களால் தினம் தினம் கொல்லுவதை விட அவன் இப்போதே



தன்னை படைத்த இறைவனிடம் திரும்பிச் சென்று விடுவது நல்லதுதானே?'' என்றாள்.

வாயடைத்துதான் போனாள் மதுமதி.

## 32



நாட்கள் வேகவேகமாய்த்தான் ஓடியது. ஒரு பத்து நாட்களில் சிங்காரி பழைய சிங்காரிபோல் ஆகி விட்டாள். வயிற்றில் இருந்த சுமையைக் கழுவி விட்டதாலோ என்னவோ அவளுக்கும் பெரும் பாரம் இறங்கிய உணர்வு ஏற்பட்டு விட்டது.

அவசரப்பட்டு விட்டோமோ? இந்த நாட்டு மருத்து வச்சியை முன்னரே சந்தித்திருந்தால் இந்தக் களங்கத்தை அப்பாவிடமும் அத்தையிடமும் கூடச் சொல்லாமல் மறைத்திருக்கலாமே..? என்ற நினைப்பும் ஓடியது.

அதையே மதுமதியிடம் அவள் ஆற்றாமையாய்ச் சொல்ல அவள் உரைப்பது போல் அவளுக்கு எடுத்தும் உரைத்தாள். ''அது தான் இல்லை. அப்படி நீ விஷயத்தை மறைத்தால்... நீ உன் வாழ்நாள் முழுவதும் பெற்றவர் களிடம் கூட உண்மையைச் சொல்லாமல் இருந்து விட்டோமே! என ஒவ்வொரு நாளும் நினைத்து துவண்டு கொண்டிருக்க வேண்டியதுதான்! புரிகிறதா?'' என்றும் சாந்தமடைந்தாள் சிங்காரி.

தினகரனும் சிங்காரி வயிற்றைக் கழுவிய விஷயம் கேள்விப்பட்டு அதிரத்தான் செய்தான். ''என்ன இவள் உன் தங்கை? எந்த விஷயத்திலும் அவளாகவே டக் டக் என

முடிவெடுத்துச் செய்கிறாள். நீ கொஞ்சம் கண்டித்து வை...!'' என்றான் மதுமதியிடம் உரிமையோடு.

ஒருநாள் மதுமதி, சிங்காரி, தினகரன் என மூவரும் யாரும் இல்லாத சமயமாய், ஒன்று கூடி அடுத்து என்ன செய்வது என்பது பற்றி தீவிரமாய் யோசித்தார்கள்.

''மோகனும் உயிருடன் இல்லை. அவன் உருவாக்கிய வாரிசும் இல்லை. இனி என்ன? எல்லாவற்றையும் மறந்து விடு! நடந்தவைகளை ஒரு கெட்டகனவாய் நினைத்து உன் நினைவுகளில் இருந்து அழித்து விடு!'' எனத்தான் இருவரும் புத்திமதி சொல்லிப் பார்த்தார்கள்.

ஆனால் சிங்காரிதான், அதையெல்லாம் கேட்கும் நிலையில் இல்லை. மோகனுடைய நினைவுகள் அவள் உடம்போடு கலந்து ரத்தத்தோடு சேர்ந்து விட்டதாம். அவனை மறப்பது எல்லாம் அவளால் இயலாத காரியமாம். இனி தன் வாழ்க்கையை அவன் நினைவுகளோடு அவனை தினம் தினம் நினைத்தபடியே ஓட்டி விடுவாளாம். இது அவள் தீர்மானமாய் முடிவு செய்துவிட்ட விஷயமாம்!

சினிமாவில் டயலாக் பேசுவது போல்தான் விரிவாய் விளக்கமாய்ப் பேசி முடித்தாள் சிங்காரி.

''இந்தப் பேச்சை உன்னோடு மட்டும் வைத்துக் கொள். தந்தையிடமெல்லாம் சொல்லி அவர் மனதையும் நோகடிக் காதே..'' என அவளிடம் உறுதி வாங்கி விட்டு அவளை விட்டாள் மதுமதி.

தங்கையின் விரக்தியான பேச்சைக் கண்டு கலங்கிய மதுமதியின் தோள்களை ஆதரவாய் தட்டிய தினகரன்,



''கவலை வேண்டாம்.. காலப் போக்கில் எல்லாம் சரியாகி விடும்..'' என்றான்.

''அதற்கு நீங்கள்தான் உதவ வேண்டும்..'' என்றாள் மதுமதி.

''நானா... எப்படி?''

திகைப்புடன் நிமிர்ந்தவனை அழுத்தமாகப் பார்த்தாள் அவள்.

''உங்களால் முடியும்..''

''அதுதான் எப்படி?''

''அவள் சிங்காரிக்கு இனி கல்லூரிக்குச் செல்ல விருப்ப மில்லை. அங்கு எல்லோரும் அவளை ஒரு மாதிரியாக பார்ப்பதாகச் சொல்கிறாள். அதனால் அவளை அங்கு போவதை நிறுத்தி விட்டு கரஸ்பாண்டன்ஸ் மூலமாய் தனியாக டிகிரி தேர்வை எழுதி முடிக்க வைக்கலாம் என எண்ணி இருக்கிறேன். அதனால்..''

''அதனால்..?''

''அதனால் அவளை தினமும் உங்களிடம் டியூசன் அனுப்பி வைக்கிறேன்..''

''பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டுமா?''

''அது மட்டும் இல்லை... அவள்.. அவள்..''

மதுமதி தயங்க தைரியம் கொடுத்தான் தினகரன்.

''தைரியமாகச் சொல் மது..''

"அவள் வெளிக்காட்டாவிட்டாலும் உள்ளுக்குள் தனக்கு இப்படி ஆகிவிட்டது... என ரொம்பவும் உடைந்து விரக்தி யான மனநிலையில்தான் இருக்கிறாள். அவளுக்கு நீங்கள் தான் பல விஷயங்கள் பேசி புரிய வைத்து சகஜ நிலைக்குக் கொண்டு வரவேண்டும்."

கெஞ்சலாய் அவள் கேட்க சிரித்தான் தினகரன்.

"இதை நீ சொல்லித்தான் செய்வேனா? சொல்லாமலே செய்வேனே மது!" என்றபோது மனம் குளிர்ந்து தான் போனாள் மதுமதி.

ஆனால் சிங்காரியின் கலைப்பு விஷயம் அப்பாவிடமும் அத்தையிடமும் வேறு மாதிரியான விளைவுகளை ஏற்படுத்தி இருந்தது. இனி பிரச்சனையில்லை. தினகரனுட னான திருமணத்தை ஊரறிய நடத்தி விடலாம். எவ்வித பயமும் கொள்ளத் தேவையில்லை என்றபடி... தினகரனை திருமணக் காரியங்களுக்கு அவசரப்படுத்த ஆரம்பித்து விட்டனர்.

தினகரன் சமயோசிதமாய் பிடிவாதம் பிடித்து ஒரு மாத கால அவகாசத்தை உறுதியாய் வாங்கியிருந்தான். அதுவரை பொறுமையாய் இருக்கும்படி சமாதானப் படுத்தியும் வைத்தான்.

ஆனால் எல்லாவற்றையும் விட சிங்காரிதான் அடிக்கடி தடுமாறி மனதளவில் விழுந்து கொண்டிருந்தாள். "இப்படி ஆயிற்றே! என்னால் உங்கள் எல்லோருக்கும் எவ்வளவு சிரமம்? பேசாமல் நான் ஏதாவது ஆன்மிகமையத்தில் சேர்ந்து சாமியாரினி போல் ஆகி விடட்டுமா?" என்று கூட அரற்றியபடி யோசனை கேட்டாள்.



அவளை உட்கார வைத்து கிளாஸ் எடுப்பதுபோல்தான் சொன்னாள் மதுமதி. "இதோ பார், துன்பம், கஷ்டம் என்பது எல்லோர் வாழ்க்கையிலும் ஒரு முறையாவது வந்து எட்டிப் பார்த்து கடும் துயரில் ஆழ்த்தி விடும். என் வாழ்க்கையில் கூட பார்... திருமணம் வரை வந்து நின்று போக வில்லையா? அன்று உன்னைப் போல்தான் அழுது இடிந்து போன நான் இன்று சகஜமாகி சிரித்துக் கொண்டு நிற்கவில்லையா? அதனால் நீயும் நடந்த இடத்திலேயே நின்று கொண்டு வேதனையைமனதில் பிழியப் பிழிய ஓட விடுவதை நிறுத்தி விட்டு கடந்து வந்து விட வேண்டும். அதுதான் புத்திசாலித்தனம்! என் தங்கை புத்திசாலித் தங்கை! அவள் இன்னும் வாழ்க்கையில் சாதித்துக் காட்ட வேண்டியவை ஜெயித்துக் காட்ட வேண்டியவை எவ்வளவோ இருக்கிறது. அது எனக்குத்தெரியும். அப்படி அருமை அக்காவான எனக்குத் தெரியும்போது அது அவளுக்குத் தெரியாமல் இருக்குமா?"

அட்வைஸ் மழை போல் பேச ஆரம்பித்து கடைசியில் சிரிப்புடன் பேச்சை முடிக்க... அவளை அப்படியே முகத்தில் பூத்த புன்முறுவலுடன் சிங்காரியும் கட்டிக் கொண்டாள். "இந்த உன்னுடைய அபரீதமான அன்பு.. நீ.. என் மீது காட்டும் பாசம்தான்.. அக்கா.. எனக்கு மகிழ்ச்சியூட்டி தெம்பு அளிக்கிறது. நான் அடிக்கடி தலை நிமிர்ந்து நடமாட முடிவதும் உன்னால்தான் அக்கா!" என்றாள் நெகிழ்ச்சிக் குரலில்.

"அதுபோதும் எனக்கு!" என பதிலுக்கு தன்னோடு இறுக்கினாள் மகிழ்ச்சியான சகோதரி.

பின் தங்கையிடம் தினகரனிடம் டியூசன் செல்வது பற்றி பேசியபோது அவள் ஒரேயடியாய் மறுத்தாள். ''எனக்கு படிப்பெல்லாம் எதற்கு அக்கா? நான் இப்படியே சமையல் செய்து... பழைய பாத்திரங்களை தேய்த்துக் கொண்டு இருந்து விடுகிறேன்..'' என்றவள் விடாது, ''கடைசியில் அப்பா சொன்னது.. வைத்த பெயர் எனக்கு பலித்தே விட்டது பார்த்தாயா? அதான் மரமண்டை பெயர்! நிஜமாகவே இப்படி வாழ்க்கையை தொலைத்த நான் மரமண்டை தானே? சொல்லக்கா'' எனவும் அவள் தலையில் செல்லமாய் ஒரு குட்டு குட்டினாள் மதுமதி.

''இப்போதுதானே பெரிய லெக்சர் கொடுத்து இப்படி 'ரிவர்ஸ்கியர்' போட்டு பழையதை நடந்த விஷயங்களை நினைக்காதே என்றேன். அதற்குள் இப்படித் திரும்பவும் குழிக்குள் விழுகிறாயே? என்ன பெண்ணம்மா நீ..?'' என்றபடி அவள் தோள்களைப் பிடித்து ஒரு ஆட்டு ஆட்டி நேராக்கினாள்.

''இனி உனக்கு சம்மதம்தானே?'' என்றதும் மெல்ல தலையாட்டினாள் சிங்காரி.

ஆனால் டியூசனுக்கு பெரும் எதிர்ப்பு அத்தையிடம் இருந்துதான் வந்தது. ''இனி எதற்கு அவளுக்கு டியூசன்? அதுவும் அந்த தினகரனிடமா? இருவரும் நமக்குத் தெரியாமல் சேர்ந்து கூத்தடித்தது போதாதா? இனியும் அந்த கண்றாவியைத் தொடர வேண்டுமா? உன் புத்தி எங்கே போயிற்று?''

சிடுசிடுத்த அவளிடம் பொய்யொன்றைச் சொல்லித் தான் மதுமதி மடக்க வேண்டியிருந்தது.



''இதோ பாருங்கள் அத்தை, நீங்கள் சொல்வதெல்லாம் உண்மைதான். ஆனால் இப்போது தான் நாம் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டிய நேரம். என்ன இருந்தாலும் தப்பு நடந்து விட்டது. நாம் இனி தினகரனை ஒவ்வொரு நாளும் கண்காணித்தாக வேண்டும். அவன் பாட்டுக்கு சிங்காரியை நாடியது போல் வேறு யாரையும் நாட முயற்சி செய்து... நமக்கு கம்பி நீட்டமுயன்றால், நம் நிலைமை என்னாவது? யோசியுங்கள்..''

மதுமதியின் கேள்விக்கு முகம் விரிய யோசித்த பூர்ணம் பலமாய் தலையாட்டவும் செய்தாள். ''நீ சொல்வது சரிதான். தினகரன் அப்படிப்பட்ட ஆள்தான். செய்தாலும் செய்வான்!'' என்றாள் அதே நொடிப்புடன்.

அப்பாவிடம் விஷயத்தை சொன்னபோது அவர் பதிலேதும் சொல்லாமல் கைகளை மேல் நோக்கி விசிறிக் காட்டினார்.

தலைக்கு மேல் வெள்ளம் போயாயிற்று... இனி என்ன? எப்படியும் தொலையட்டும்! என்பது போன்றான சைகை.

அப்படிச் செய்யும் போதே அவரது கண்கள் பளபளப்பாகி கலங்கியது.

பார்த்த மதுமதிக்கு கண்களில் நீர் சுரந்தது.

தாயின் மறைவுக்குப் பின், இருபது வருடங்களாக ஒழுக்க சீலராய், பக்திமானாய் ஆன்மிகத்தில் மனம் முழுவதையும் திருப்பி கட்டுப்பாடான வாழ்க்கை வாழும் தந்தைக்கு இது தாங்க முடியாத வேதனைதான்!

ஆனாலும் சிங்காரி இப்படி பெற்றவரின் மனதை நோகடித்து விட்டாளே! எவ்வளவு பெரிய பழி இது!

அதே கலக்கத்துடன் தந்தையின் கரங்களை அழுந்தப் பிடித்து அவரைத் தேற்ற முயன்றாள். பதிலுக்கு வாஞ்சை யுடன் அவள் தோள்களைப் பற்றிய தில்லைநாயகம் பரிவாய் அவள் கேசத்தை வருடினார். "உன் வாழ்க்கையை சரிப்படுத்தி முடிப்பதற்குள் அவளுடைய வாழ்க்கையைப் பாழ்படுத்திக் கொண்டு வந்து நிற்கிறாளே அம்மா... நான் என்ன செய்வது?" என்றார் தழுதழுத்த குரலில்.

அதற்குப் பதிலளிக்க முடியாதவளாய் அவரது தோளில் சாய்ந்து ஆறுதல் தேடினாள் மதுமதி.

## 33



ஒருவாறாக எல்லோரையும் சமாதானப் படுத்தி சிங்காரியின் டியூசன் மறுநாள் முதல் ஆரம்பமாகியது. தினகரன் காலை கல்லூரிக்குச் சென்று விடுவதால் அதே மதிய நேர இடைவேளையைத்தான் டியூசனுக்காக ஒதுக்கியிருந்தான்.

"நீயும் சும்மாத்தானே இருக்கிறாய். நீயும் வாயேன்" என அவளையும் இழுத்தாள் சிங்காரி. மதுமதிக்கு அவள் இப்படிக் கேட்பாள் என்று தெரியும் என்பதால் முன்னரே வேறு ஒரு ஏற்பாடும் செய்திருந்தாள்.

அதாவது அவள் பயிற்சி பெறும் கம்ப்யூட்டர் மையத்தில் புதிதாய் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் வரைகலை படிப்பு ஒன்றிலும் கூடுதலாக சேர்ந்திருந்தாள். அதனால்



மதியம் பன்னிரண்டு மணிக்கு கிளம்பிச் சென்றால்... தொடர்ந்து இரண்டு பயிற்சிகளிலும் பங்கேற்று மாலை ஆறு மணிக்குத் தான் அவள் திரும்ப முடியும்.

இதையே சிங்காரியிடம் விவரித்து அவளை மட்டும் டியூசனுக்கு அனுப்பி வைத்தாள். அவள் அப்படி தான் உடன் செல்லாமல் சிங்காரியை தனித்து அனுப்பியதற்கு வேறு ஒரு காரணமும் இருந்தது.

சிங்காரி மனதளவில் விரக்தியுற்று ரொம்பவும் உடைந்து போயிருக்கிறாள். இப்போது அவளுக்கு தைரியம் கொடுத்து இன்னமும் அவளுக்கு வாழ வேண்டிய வாழ்க்கை இருக்கிறது என்பதை புரிய வைத்தாக வேண்டும். அவள் கவனத்தை எல்லாம் படிப்பில் செலுத்தி... அதன் மூலமும் அவள் வாழ்க்கையின் தோல்விகளை எல்லாம் புறந் தள்ளி சமூகத்தில் ஒரு நல்ல நிலைக்கு வர முடியும் என்பதை யெல்லாம் அவளுக்கு உணர்த்த வேண்டும்.

இப்படி அவளுக்கு புரிய வைத்து தெளிய வைக்கக் கூடிய ஒரே ஆள் தினகரன்தான்.. என நம்பினாள் மதுமதி.

அதனாலே தான் போவதைத் தவிர்த்து சிங்காரியை முன் நிறுத்தினாள். அவளுக்கு படிப்பில் சாதிக்க வேண்டும் என உறுதி வருகிறதோ... இல்லையோ.. மனதில் உறுதி வந்தால் போதும். நடந்ததை எண்ணியே நொந்து கொண்டி ருக்கும் பழக்கத்தை அவள் விட்டுவிட வேண்டும் என்பதே மதுமதியின் திட்டமாகவும் இருந்தது.

முதல் இரண்டு மூன்று நாட்கள் புத்தகக் குவியலை சுவாரஸ்யமில்லாமல் கடன் சுமை போல்தான் தூக்கிக்

கொண்டு போய் வந்தாள் சிங்காரி. மூன்றாம் நாளில் இருந்து அவளது முகத்தில் மெல்லிய மாற்றம் தென்பட்டது.

''அக்கா... தினகரனுக்கு நிறைய விஷயங்கள் தெரிகிறது. உலக ஞானம் பரவலாய் அறிந்து வைத்திருக்கிறார். எந்தவித பாடத் திட்டமாய் இருந்தாலும் சரி விரிவாய் அழகுபட விளக்குகிறார். எனக்கு நேரம் போவதே தெரியவில்லை. படிப்பிலும் சுவாரஸ்யம் வந்து விட்டது'' என தினகரன் பற்றி ஒரு நாள் பெருமிதம் பிடித்தாள் தங்கை.

''அதைத்தானே... நான் எதிர்பார்த்தேன். நான் எதிர்பார்த்த மாதிரியே நடந்திருக்கிறது..'' என்றாள் மதுமதியும் உற்சாகமாய்.

சிங்காரி அதிசயமாய்ப் பார்த்தாள்.

''அப்படியானால் இதற்காகத்தான் என்னை டியூசன் போகச் சொல்லி அனுப்பவும் செய்தாயா?''

பலமாய் தன் அழகுத் தலையை ஆட்டிய மதுமதி, ''எனக்குத் தினகரனின் தெளிவான சிந்தனையைப் பற்றி நன்றாகத் தெரியும். உன் சோர்வான நொந்துப் போன மனநிலைக்கு அவரால்தான் டானிக் போன்ற தைரியத் தைக் கொடுக்க முடியும் என்று நம்பினேன். அதேபோல் அவரும் செய்ய ஆரம்பித்து விட்டார்...'' என்றாள் முகம் முழுவதும் விரியும் புன்னகையோடு.

''ஆனாலும் பாரக்கா... ஆரம்பத்தில் நாம் அவரை எப்படி யெல்லாம் கிண்டலடித்தோம்... அதிலும் நான் ஒரு மடங்கு அதிகமாய்ப் போய்அவரை என்னவெல்லாம் பெயர் வைத்து கிண்டலடித்தேன். அதையெல்லாம் இப்போது நினைத்துப்



பார்க்கையில் வெட்கமாகத்தான் இருக்கிறது. மேலும் தினகரன் மிக மிக நல்லவர். உனக்கு ஏற்றவர் அக்கா..'' என சிங்காரி முடிக்க... மதுமதி சட்டென கன்னங்கள் சூடேற சிவந்து தான் போனாள்.

எதையோ பேசிக் கொண்டிருந்தவள் சட்டென அந்தரங்க மாய் போட்டுத் தாக்குகிறாளே... என வெட்கத்தில் அவள் தலைகுனியவும் செய்தது.

சிங்காரி அதை ரஸித்தவள் சிரிப்போடு,'' அப்புறம் இன்னொரு முக்கியமான விஷயமும் இருக்கிறது. தினகரன் அதை உன்னிடம் சொல்லவும் சொன்னார்'' எனவும், ''என்ன அது?'' என்றாள் மதுமதி.

''அவர் தினகரன் வீட்டிலும் கல்யாணப் பேச்சை நிஜமாகவே ஆரம்பித்து விட்டார்களாம். வரன் தேடட்டுமா? நீ யாரையும் பார்த்து வைத்திருக்கிறாயா?'' என நெருக்க ஆரம்பித்து விட்டார்களாம்.

''அப்படியா? அதற்கு இவர் என்ன பதில் சொன்னாராம்?'' என்றாள் மதுமதி ஆவலுடன்.

''மஹூம்!'' என பதிலுக்கு அலுத்த சிங்காரி, ''அதை என்னிடம் சொல்ல மாட்டாராம். உன்னிடம் மட்டும்தான் சொல்வாராம்...'' என்றாள் சிங்காரி குபீர் சிரிப்புடன்.

அவள் அப்படி சிரிப்பதை வெகுவாய் ரசித்துப் பார்த்தாள் மதுமதி. எது எப்படியோ, இப்படித் தன்னை கேலி செய்வது, அதிரும்படி சிரிப்பது, என எல்லாவற்றையும் ஆரம்பித்து... பழைய உற்சாகமான சிங்காரியாய் மாறி விட்டாளே.. அது.. அது நல்ல மாற்றம்தானே! எல்லாம் தினகரனால் ஏற்பட்ட

மாயம்தானே! என தினகரனை நினைத்து மேலும் பெருமிதம் கொண்டாள் அவள்.

ஆனால் சிங்காரியும் மதுமதியும் கொண்டிருந்த உற்சாக மான சூழலுக்கு எதிர்வினை போல் வீட்டில் விஷயங்கள் நடந்து கொண்டிருந்தது.

அத்தையும் அப்பாவும் சிங்காரிக்கும் தினகரனுக்கும் சீக்கிரமாகவே கல்யாணத்தை நடத்தி விட வேண்டும் என பேசிக் கொண்டு அதில் மும்முரம் காட்டினர்.

ஏனெனில் தினகரன் மனம் மாறி விடக் கூடாதாம். இதுபோன்ற விஷயங்களில் காலம் தாழ்த்தாமல் சட்டு புட்டு என உடனே செய்து விட வேண்டும்.. என அத்தை சிலாகித்த போது மதுமதிக்கு சிரிப்பே வந்தது.

ஆனால் அத்தை கூடவே, தரகர் மூலம் அப்படியே மதுமதிக்கும் நல்ல வரன் தேடும் ஏற்பாடுகளை ஆரம்பித் திருப்பதாய் சொன்னதைக் கேட்டதும் அவளுக்கு தூக்கிவாரிப் போட்டது. அதுவும் அத்தையின் திட்டப்படி மதுமதிக்கும் சரியான வரனைப் பிடித்து இருவருக்கும் ஒரே நேரத்தில் ஒரே மேடையில் கல்யாணம் செய்து வைத்து விடலாம் என்பதாம்! கேட்ட மதுமதி அப்படியே திகைத்துதான் போனாள்!

முதலில் 'எனக்கு கல்யாணமே வேண்டாம்! அந்தப் பேச்சையே விட்டு விடுங்கள்' என ஓங்கிச் சொல்லிவிட வேண்டும் என்றுதான் மதுமதி நினைத்தாள்.

ஆனால் அப்படிச் சொன்னால்... அப்பா திகைக்க மாட்டாரா? 'இது என்ன புதுக் குண்டு? அப்படியானால்



வாழ்நாள் முழுவதும் கன்னியாகவே இருந்து நீயும் எங்களை வதைக்கப் போகிறாயா?' என்று கேட்டு விட்டால் பின் பதில் சொல்ல முடியாதே!

யோசித்துப் பார்த்தவளுக்கு மனதில் அந்த எண்ணம் தோன்ற நிம்மதியானாள்.

பேசாமல் அவர்கள் அவளுக்கும் வரன் தேடட்டும். என்ன கடைசியில் வரனைக் காட்டி அவளிடம் தானே சம்மதம் கேட்க வருவார்கள்? அப்போது 'மாப்பிள்ளையைப் பிடிக்கவில்லை' என ஒற்றை வார்த்தை கூறி எல்லாவிஷயங்களையும் தடுத்து விடலாமே! பின் எதற்கு வீண் கவலை கொள்ள வேண்டும்?

அதனாலே.. மதுமதி சாந்தம் கொண்டாள். விஷயம் கேள்விப்பட்டு அவளைப் போலவே பதறிய சிங்காரி யிடமும் தன் திட்டத்தை விளக்கி அமைதிப்படுத்தினாள்.

மேலும் ஒரு வாரம் சென்றது. மதுமதி சிங்காரியின் நடவடிக்கைகளில் பெரும் மாற்றம் ஏற்பட்டிருப்பதை உணர்ந்தாள். ஒவ்வொரு நாளும் டியூசனுக்கு முன்பு போல் இல்லாமல் உற்சாகமாய் கிளம்பினாள்.

ஒருநாள் மதுமதி தன் கம்ப்யூட்டர் பயிற்சி முடிந்து சீக்கிரம் வீடு திரும்பி விட நுழைந்தவளுக்கு மாடிப் போர்ஷனில் இருந்து கேட்ட அதிரும்படியான சிரிப்புச் சத்தம் ஆச்சரியப் படுத்தியது.

உற்று கவனித்து காதை தீட்டினாள்.

தினகரனும் சிங்காரியும் பொது விஷயம் ஒன்றைப் பேசி கேலியும் கிண்டலுமாய் சிரிப்பது புரிந்தது.

தானும் இப்படித் தினகரனிடம் பேசி எத்தனை முறை விழுந்து விழுந்து சிரித்திருக்கிறோம் என்பதும் அவளது ஞாபகத்தில் ஓடியது.

அப்படி யோசிக்கையிலே.. தன்னைப் போலவே தினகரன் சிங்காரியுடன் பேசுகிறான்... தன்னிடத்தில் சிங்காரி இம்முறை இருக்கிறாள் என்பதும் உரைத்தது. கூடவே பளீரென மின்னல் ஒன்றும் அவள் மூளையில் ஒளியீட்டு மறைந்தது.

இந்த நிலை நீடித்தால்..?

இதுபோன்று தினகரனும் சிங்காரியும் தினம் சிரிக்கச் சிரிக்கப் பேசினால், மனம் குளிர பழகினால்... என்ன ஆகும்? என்ன நடக்கும்?''

அது கடைசியில் எதில் போய் நிற்கும்? எப்படி முடியும்?

ஏன் கடைசியின்.. தினகரன் மூலம் சிங்காரிக்கு ஒரு வாழ்க்கையே கிடைக்கலாமே? அப்படி ஒரு வாழ்க்கை கொடுக்க அவன் கூட முன்வரலாமே?

தன் சிந்தனை முடிந்த இடத்தைக் கண்டு அதிர்ந்துதான் போனாள் மதுமதி.

## 34



மதுமதிக்கே ஆச்சரியம்தான்! அவளாலே நம்ப முடிய வில்லைதான்!

தன் சிந்தனை ஏன் இப்படி புத்தி கெட்டுப் போயிற்று? ஏன் தறிகெட்டு அலங்கோலமாய் ஓடுகிறது என அவளே அதிர்ந்தாள்!



தினகரனுடன் சிங்காரி பழகி கடைசியில் இருவருக்கும் ஒரு வாழ்க்கை அமைந்தால் எப்படி என யோசிக்கும் அளவுக்குப் போய் விட்டாளே!

அந்த அளவுக்கு அவள் மதி கெட்டு விட்டாளா? தினகரன் யார்?

அவனுக்கும் அவளுக்கும் உள்ள அந்த 'அண்டர் ஸ்டாண்டிங்' எத்தகையது? வெறும் வாய் வார்த்தைகளோடு நில்லாமல் நெஞ்சார அணைப்பு கூட நடந்திருக்கிறதே! அந்த ஒரே அணைப்பில் இருவரும் ஒருவருக்கொருவர் எவ்வளவு விஷயங்களை புரிய வைத்தார்கள்? புரிந்து கொண்டார்கள்.

தினகரனிடம் சிங்காரிக்காக நடிக்கச் சொன்னபோது கூட அவன் சொன்ன ஒரே வார்த்தை சிங்காரிக்காக அல்ல.. உனக்காகச் செய்கிறேன் என்றுதானே!

இப்போது கூட தனக்காகத்தானே சிங்காரிக்கு டியூசன் எடுப்பது அவளுடன் பேசிப் பழகி அவன் மனநிலையில் மாற்றம் ஏற்படுத்த எல்லாம் ஒப்புக் கொண்டான்?

உண்மைதான்!

அவன் எல்லாவற்றையும் தனக்காக இந்த மதுமதிக்காக செய்திருக்கிறான்!

ஆனால் அதனால் சிங்காரியிடம் நல்ல மாற்றம் தெரிகிறதே!

மாற்றத்தை விடுவோம்!

சிங்காரியின் நிலை. அவளது எதிர்காலம்?

பட்டுப் போன அவளது வாழ்க்கையை எப்படி துளிர்க்க வைக்க முடியும்?

இனி இப்படிக் கந்தல் துணி போல் ஆகிவிட்ட அவளுக்கு யார் வாழ்க்கை கொடுக்க முன்வர முடியும்?

காதலித்தவன் செத்து விட்டான்! அவன் உருவாக்கிய வாரிசும் கலைந்து போயிற்று!

அதனால் பிரச்சினை தீர்ந்து விடுமா? நடந்தது இல்லை யென்று ஆகிவிடுமோ?

நடந்தது நடந்ததுதானே!

ஏற்பட்ட அவமானம் களங்கம் அவள் சிங்காரியின் வாழ்க்கைக்கு நிரந்தரம்தானே?

அதை எப்படி துடைத்து எறிய முடியும்?

யார் அதை மன்னித்து அவள் நிலையை புரிந்து அவளுக்கு வாழ்க்கை கொடுக்க முன்வர முடியும்?

அதற்கு பரந்த மனது வேண்டுமே?

அப்படி இப்போதைக்கு அவளுக்குத் தெரிந்து அந்த பரந்த மனம் உடையவன் தினகரன்தானே? அவனைத் தவிர வேறு யார் இருக்கிறார்கள்? வேறு யாரிடம் போய் அவள் உரிமையாய் கேட்க் முடியும்?

அதற்காக?

தினகரனை விட்டுக் கொடுப்பதா? தன் மனதில் உள்ளவனை என்னதான் அன்புத் தங்கை என்றாலும் அவளுக்காக தாரை வார்ப்பதா? இது என்ன பைத்தியக் காரத்தனம்?



ஊர் உலகத்தில் இப்படி நடக்குமா? யாராவது செய்வார் களா? சரியான லூசுதான்! நீ! என்று தானே சொல்வார்கள்!

எல்லாம் சரிதான். சுயநலமாய் நம் வாழ்க்கையும் முக்கியம்தானே... என இழுத்து விடலாம்.

ஆனால் சிங்காரி?

அவளது வாழ்க்கை... அவளுக்கென்று ஒரு எதிர்காலம்?

அது எப்படி கிடைக்கும்... அமைய முடியும்? வாய்ப்பு இல்லையே!

விஷயம் தெரிந்த யார் அவளைக் கட்டிக் கொள்ள முன்வருவார்கள்? பின் அவள் வாழ்க்கை சூன்யமாகி விடுமே! அவளும் தன் வாழ்நாள் முழுவதும் நடந்தவை களை நினைத்து தினம் தினம் நொந்து கொண்டு வாழும் நரகத்திற்குத் தள்ளப்பட்டு விடுவாளே!

துள்ளிக் குதித்து, கேலியும் சிரிப்புமாய் புன்னகை முகமாய் காட்சியளிக்கிறவள் வாடி வதங்கிய மலராய் ஆகிவிடுவாளே!

அவள் நிலை அப்படி ஆகி விட்டால்... அதைப் பார்த்த தந்தை என்ன ஆவார்? அப்படியே மனம் குமைந்து உடைந்து விட மாட்டாரா?

குடும்பத்தில் எல்லோருக்குமே...இது தீராத கவலை. வாழ்நாள் முழுவதும் விரட்டும் சோகம் என்பது புரிந்து விடுமே!

அப்படி எல்லோரும் இருக்கையில் அவள் மட்டும் தினகரனை கல்யாணம் செய்து கொண்டு சந்தோஷமாய் வாழ்ந்து விட முடியுமா?

சுயநலமாய் தன் நலனே முக்கியம் என்று அவளால்தான் இருந்து விட முடியுமா?

தீவிரமான யோசனைகள் எழுந்து ஆடாத குறையாய் அவளை ஆட்டுவித்தது.

தலைபாரம் ஏறியவளாய் அன்று முழுவதும் அப்படியே படுத்து விட்டாள் மதுமதி.

படுத்தவளைக் கண்டு பதறிய தங்கையிடம், ஒற்றைத் தலைவலி எனக் கூறி சமாளித்தாள். உடனே சிங்காரியும் தைலத்தை எடுத்து வந்து அவளை மடியில் படுக்க வைத்து அக்கறையாய் தேய்த்து விட்டாள்.

மடியில் கிடந்தபடி மெல்ல நிமிர்த்தி அவள் முகம் பார்த்தவள் என்னதான் சிங்காரி இயல்பாய் பேசிச் சிரித்தாலும் பின்னணியாய் ஒருவித சோகமும் கவலையின் ரேகையும் அவளிடம் ஓடுவதையும் கவனித்தாள்.

பின் இருக்காதா? ஒவ்வொரு நொடியும் தன் வாழ்க்கையின் இழப்பு, அந்த குற்ற உணர்ச்சி அவளைத் துரத்திக் கொண்டே தான் இருக்குமே!

சொல்லப் போனால்... நடந்த செயலை விட அதனால் ஏற்படும் வருத்தத்தில் இருந்து தப்பிப்பதுதான் கடினம்.

எல்லோரையும் போல் ஈஸியாக சொல்லி விடலாம். திரும்பிப் பார்க்காதே. பழையவைகளை நினைக்காதே... என்று!

ஆனால் ஒவ்வொரு நாளும் விடியும் போது அந்த பூதாகரமான கேள்வி கொக்கிப் போட்டு மனதை அழுத்தும் போது என்ன செய்ய முடியும்? நம் வாழ்க்கை அவ்வளவு தானா? முடிந்து விட்டதா? இப்படியே விதியை நொந்து கொண்டு தினம் தினம் புலம்ப வேண்டியதுதானா?



இப்படி இப்படித்தானே புலம்பலாய் சிங்காரியின் வாழ்க்கை அமைந்து விடும்?

அதை எப்படி சிங்காரியாய் தாங்க முடியும்?

குதூகலமும் சிரிப்புமாய் அலைந்தவளுக்கு அந்த சிரிப்பே தொலைந்து போய் விடுமே!

இதற்கு ஒரே வழி... தமக்கையின் வாழ்க்கையை சீர்படுத்துவதுதான்!

அவளுக்கென்று ஓர் வாழ்க்கை அமைந்து விட்டால் எல்லாம் சரியாகி வி டும்!

அதற்காகவா?

அவள் விட்டுக் கொடுக்க வேண்டும்.

தியாகம் செய்ய வேண்டும்!

அதுவும் தினகரனை!

அன்புத் தங்கைக்காக எது வேண்டுமானாலும் செய்யலாம் தான். ஆனால் தனக்கு அமைய வேண்டிய நல்ல வாழ்க்கையே அவளுக்காக தியாகம் செய்வது.. மிகப் பெரிய செயல்தான்!

சிங்காரியே இதற்கு நிச்சயம் ஒத்துக் கொள்ள மாட்டாள் தான்!

அவளை விடுவோம்... அவளையாவது அதட்டி உருட்டி சம்மதிக்க வைத்து விடலாம்.

ஆனால்.. தினகரன்?

அவனை எப்படி மறந்தாள்? அவள் எப்படி இதற்கு சம்மதிப்பான்?

என்ன இது முட்டாள்தனம்! உனக்கு மூளை பிசகி விட்டதா? என்றுதானே கேட்பான்.

அவனை எதைச் சொல்லி சமாதானப்படுத்துவது?

உனக்காக எது வேண்டுமானாலும் செய்வேன் என்கிறேன். அதற்காக உன்னையே தியாகமாய் செய்யச் சொன்னால் எப்படி? என்று அவன் கேட்டால் அதற்கு என்ன பதில் அவளால் சொல்ல முடியும்?

தங்கைக்காக அவள் வாழ்க்கை சீர்பட கண்டிப்பாய் அவள் ஏதாவது செய்துதான் ஆக வேண்டும்.

அவளை அம்போவென விட்டுவிட்டு ஒருக்காலும் சுயநலமாய் அவளுக்கென்று ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொள்வது அவளால் இயலாது. முடியவும் முடியாது.

அதனால்...

தங்கைக்காக... அவள். தினகரனை விட்டுக் கொடுத்துதான் ஆக வேண்டும். அவனை மறந்துதான் ஆக வேண்டும்!

ஏனெனில் இருவரையும் நன்கு புரிந்த தினகரன்தான் சிங்காரிக்கு வாழ்க்கை கொடுக்க சரியான ஆள்!



அதேபோல்... அவள் தியாகம் செய்தால்... அவள் மறந்து விட்டால், தினகரனும் மறந்து விடுவானா? மனம் மாறி விடுவானா? நீ சொல்கிறபடி சிங்காரியை ஏற்றுக் கொள்கிறேன்... எனச் சொல்லி விடுவானா?

ம்கூம்! ஒருபோதும் மாட்டான்!

ஆனால் அவள் அப்படிச் சொல்லும்படி சூழ்நிலையை உருவாக்கினால்?

திட்டம் போட்டபடி மதுமதியின் மனது வேகமாய் சிந்திக்க ஆரம்பித்தது.

## 35



மதுமதி தீவிரமாய் யோசித்தாள். முடிவெடுத்தாள். ஆனால் எடுத்தேன். கவிழ்த்தேன் என்பதுபோல் அவளால் இருக்க முடியவில்லை.

மேலும் ஒரு பத்து நாட்கள் அவகாசமெடுத்து நன்றாக யோசித்துப் பார்த்தாள். அழகான தலைக்குள் இருக்கும் அவளது சிறிய மூளையை எத்தனை முறை ஆட்டிப் பார்த்தாலும் கிளிப்பிள்ளையாய் அதே பதிலைச் சொன்னது.

சிங்காரியை இந்த நிலையில் ஏற்றுக் கொள்ள தினகரன் ஒருவனால்தான் முடியும். தங்கைக்காக நீ தினகரனை மறந்தாக வேண்டும். தியாகம் செய்தாக வேண்டும்!

ஒரு வழியாய் தூங்காமல் கொள்ளாமல் யோசித்து, 'தியாகம் செய்ய நான் ரெடி..' என தனக்குத்தானே திடமாய் உறுதிப்படுத்திக் கொண்டாள்.

அவள் தியாகம் செய்வது ஓகேதான். ஆனால் அதற்காக.. அதை மற்ற இருவரும் உடனே ஏற்றுக் கொள்வார்களா?

அதிலும் சிங்காரி சென்ஸிட்டிவ். எளிதில் உணர்ச்சி வசப்படுபவள். துடித்தே போய்விடுவாள்.

தினகரன் அவளுக்கு நேர் எதிர் ரகம்.

எனது பதில் ஒரு பெரிய 'நோ'தான். நடக்காத விஷயம். வீண் முயற்சிகள் செய்யாதே! என இறுக்கத்தோடு சொல்லி விடுவான்.

ஆக இருவரையும் சம்மதிக்க வைக்க வேண்டும்.

அதற்கான சூழலை உருவாக்க வேண்டும்.

கடினம்தான்!

ஆனால் முயற்சித்தால் வழி கிடைக்குமே!

அவள் தேடினாள்.

அவள் எதிர்பார்த்த மாதிரியே இரண்டு நாட்களில் ஒரு சரியான வழி தானாக கிடைத்தது.

தனக்கு ஒரு வரன் தேடும்படி அப்பா கல்யாண தரகர் ஒருவரிடம் சொல்லியிருக்க... அன்று அந்த தரகர் வீடு தேடி வந்தவர், "சிங்கப்பூர் மாப்பிள்ளை வரன் ஒன்று நம் மது பாப்பாவிற்கு வந்திருக்கிறது. பார்ப்போமா?" என்று விசாரிக்க ஆரம்பித்தார். உள் அறை ஒன்றிலிருந்து இதைக் கேட்டுக் கொண்டிருந்த மதுமதி பரபரப்பாகி விட்டாள்.

சிங்கப்பூர் மாப்பிள்ளையா? அப்படியானால் கல்யாணம் முடிந்ததும் சிங்கப்பூர்! யார் கண்ணிலும், முக்கியமாக



தினகரன், மதுமதி கண்களில் படாமல் சிங்கப்பூர் ஓடி விடலாமே!

அப்படி அங்கு சிங்கப்பூர் சென்று செட்டிலாகி விட்டால்.. என்ன ஆகும்? என்ன நடக்கும்?

என்ன.. இவள்.. இப்படிச் செய்து விட்டாளே.. என பெரும் அதிர்ச்சி அடைவார்கள்! அப்பாவிடமும் அத்தையிடமும் விஷயத்தை எவ்வாறு சொல்வது என தவிப்பார்கள்.

என்ன... ஒரு லெட்டரில் இருவருக்கும் விஷயத்தை எழுதி வைத்துவிட்டு,போய்விட வேண்டும். 'தினகரன், எனக்காக இவ்வளவு செய்த நீங்கள் மீண்டும் எனக்காக ஒரு தியாகம் செய்ய வேண்டும். சிங்காரிக்கு ஒரு வாழ்க்கை கொடுக்க வேண்டும். தயவு செய்து மறுத்து விடாதீர்கள்..' என கெஞ்சோ கெஞ்சென்று கெஞ்சி எழுதி வைத்து விட்டுப் போய் விட வேண்டும்.

படித்த தினகரனும் புரிந்து கொள்வான். கொஞ்ச நாட்கள் கோபமாய் இருப்பான். பின் யோசித்து மனம் மாறி நமக்காக இரக்கப்பட்டு விட்டால்? சிங்காரியை மணமுடிக்க சம்மதித்து விட்டால்..?

எல்லாம் சுளுவாகி விடமே! தீராத பிரச்சனை யெல்லாம் தீர்ந்து விடுமே?

நினைத்துப் பார்த்த மதுமதிக்கு அந்தத் திட்டம் சரியானதாய் சுவாரஸ்யமாயும் தோன்றியது.

அதையே செயல்படுத்த விரும்பினாள். அதனாலே தரகரிடம் தயங்கிய தந்தையை தனியே கூப்பிட்டு,

''சிங்கப்பூர் என்றால் என்ன? ப்ளைட் பிடித்து போய் இறங்கினால் ஊர் வந்து விடும். திரும்பவும் ப்ளைட் பிடித்தால் நம் ஊருக்கு வந்து விடலாம். இதில் தயங்க என்ன இருக்கிறது. சும்மா இந்த வரனையே விசாரித்துப் பாருங்கள். எனக்குச் சம்மதம்தான்!'' என உறுதியாய் ஒப்புதலளித்தாள்.

கூடவே தனது சிறிய பாஸ்போர்ட் புகைப்படத்தையும் தரகரிடம் கொடுத்தனுப்பினாள். நல்லவேளையாக அன்று சிங்காரி வீட்டில் இல்லாமல் வெளியே சென்றிருந்தது அவளுக்கு வசதியாகவும் போயிற்று.

மேலும் சிங்காரி வெளியே சென்றவள் தனியாக அல்ல. தினகரனோடுதான். நகரில் நடக்கும் புத்தகக் கண்காட்சி ஒன்றுக்கு சிங்காரியை அழைத்துச் சென்றிருந்தான்.

மதுமதியையும் அழைக்கத்தான் செய்தான். மதுமதி வேண்டுமென்றே கைகளை தலையில் வைத்து அபிநயித்து வழக்கமான ஒற்றைத் தலைவலி என்று சொல்லி அனுப்பி யிருந்தாள்.

இருவரும் ஜோடியாய் சிரித்துப் பேசியபடி நடந்தபோது அவளுக்கு பார்க்க சந்தோஷமாகவும் இருந்தது. ஜோடிப் பொருத்தம் கூட இருவருக்கும் சரியாகத்தான் இருந்தது என நினைத்தவளுக்கு... அந்த சிங்காரி நிற்கும் இடம் தனது இடம்.. தனக்குரியது அல்லவா? என்ற நினைப்பும் வராமல் இல்லை.

ச்சு.. இப்படி எண்ணுதல் கூடாது என அவசரமாய் அந்த எண்ணத்தை துடைத்துக் கொண்டாள் அவள்.



அதுபோல் ஞாயிற்றுக்கிழமைகளில் பார்க், பீச், நூலகம் என ஏதாவது ஒன்றுக்கு தினகரன் அழைக்கும்போதும் வேண்டுமென்றே தட்டிக் கழித்து சிங்காரியை வலியச் சென்று ஜோடி சேர்த்து விடுவாள்.

சிங்காரி மதுமதி போல் இல்லாது சளசள டைப் என்பதால் தினகரனுடன் விடாது நச்சரிப்பது போல் பேசிக் கொண்டே போவாள். மேலும் இயல்பாகவே அவளுள் குறும்பு ஒளிரும் என்பதால் பேச்சில் கேலியும் சிரிப்பும் அடிக்கடி வெளிப்படும்.

தினகரனும் அந்த கேலிக்கும் கிண்டலுக்கும் சலிப்பில் லாமல் பதிலடி கொடுப்பான். ஆனதால் இருவரது பேச்சிலும் அதிரும்படியான சிரிப்பொலி எழுந்து அடங்கும்.

அதைப் பார்த்து அவர்களை விட மதுமதிதான் பரவசமடைவாள். இருவரும் மனம் விட்டு இப்படி சிரித்துப் பேச ஆரம்பித்து விட்டார்களே! அப்படியே இருவர்களுக் கிடையே ஒரு நெருக்கம் வந்தால் நல்லதுதானே? மதுமதி யின் ஆசை, சிங்காரியை தினகரனுடன் சேர்த்து வைத்து அவளுக்கு ஒரு வாழ்க்கையை உருவாக்க வேண்டும் என்று. அவளது லட்சியம் நிறைவேறி விடும்தானே?

எல்லாம் சரியாக நடக்க வேண்டும். நான் நினைத்தது போல் அமைய வேண்டும் என்பதில் மதுமதி ரொம்பவும் கவனமாயிருந்தாள்.

முக்கியமாய் தனக்கு சிங்கப்பூர் வரனுடன் நடக்கும் கல்யாணப் பேச்சு சிங்காரி, தினகரன் காதுகளை எட்டக்

கூடாது என்பதில் குறியாய் இருந்தாள். தந்தையிடமும் அத்தையிடமும் ''இதையெல்லாம் அவர்களிடம் சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம். கல்யாணப் பேச்சு நல்ல படியாய் முடிந்ததும் நானே சொல்லி விடுகிறேன். இப்போதே இதை சிங்காரியிடம் சொன்னால்.. அவளுக்காக நான் இப்படி சீக்கிரம் சீக்கிரமாக திருமணம் செய்து கொள்வதாய் நினைத்து கவலைப்பட ஆரம்பித்து விடுவாள்...'' என விவரித்து இருவரின் வாயையும் அடைத்து விட்டாள்.

அத்தைதான் விடாது, ''என்னடி... இது.. ஊர் உலகத்தில் வேறு மாப்பிள்ளையா இல்லை? சிங்கப்பூர் மாப்பிள்ளைக்குப் போய் இப்படி தலையை பலமாய் ஆட்டுகிறாய்? அங்கு சென்று விட்டால் அடிக்கடி உன்னை நாங்கள் பார்ப்பதோ? நீ எங்களைப் பார்ப்பதோ.. முடியாத விஷயமாயிற்றே?'' என நொடித்து கவலைப்பட்ட போது அவளையும் ஏதேதோ சொல்லி சமாதானப்படுத்தினாள்.

தந்தையிடமும் விடாது, ''அந்த தரகரைப் பார்த்தீர்களா? சிங்கப்பூர் வரன் பற்றி என்ன சொன்னார்? என் போட்டோவை கொடுத்து அனுப்பியிருந்தேனே... மாப்பிள்ளைக்குப் பிடித்துப் போயிற்றா? என்றெல்லாம்'' கேள்விகள் கேட்டு நச்சரிக்க ஆரம்பித்து விட்டாள்.

மதுமதியின் ஆர்வத்தைப் பார்த்து ஆவலான தில்லைநாயகம் தரகரின் வீடு தேடியே போய்விட்டார்.

இவ்வளவு நாளும் கல்யாணமே வேண்டாம் என சண்டித் தனம் செய்து கொண்டிருந்தவள் தலையை ஆட்டுகிறாள். இதுதான் சமயம் என இருவருக்கும் ஒரே மேடையில்



கல்யாணத்தை ஏற்பாடு பண்ணி விட்டால்... பிரச்சினை தீர்ந்ததே! நாமும் சுமை நீங்கி நிம்மதியாய் ஓய்வெடுக்க லாமே.. எனவும் அவருள் ஆசை ஓடிற்று.

அதனாலே தரகரிடம் மும்முரம் காட்டி அவசரப் படுத்தினார் தில்லைநாயகம். தரகரும் பம்பரமாய் சுழலத்தான் செய்தார் எனலாம்.

மறுநாளே.. சிங்கப்பூர் மாப்பிள்ளையின் புகைப்படமும் அவரது வேலை பற்றிய விபரங்களையும் எடுத்துக் கொண்டு வீடு வந்து விட்டார் அவர்.

தாடியும் வழுக்கையுமாய் தெரிந்த அந்த சிங்கப்பூர் மாப்பிள்ளை மதுமதிக்கு கொஞ்சமும் பொருத்தமில்லை தான்! ஆனாலும் அப்படி அழகு பார்த்துக் கட்டிக் கொள்ளும் நிலையிலா அவள் இருக்கிறாள்? மாப்பிள்ளையின் போட்டோவைப் பார்த்துவிட்டு பெரிதாய் தலையாட்டத் தான் செய்தாள் அவள்!

அவர் மாப்பிள்ளையின் பெயர் செல்வமாம். பெயருக் கேற்றாற் போல் பெரும் கோடீஸ்வரராம்! சிங்கப்பூரில் பெரிய ரெடிமேடு துணிகள் ஏற்றுமதி நிறுவனம் நடத்து கிறாராம். சிறு வயதிலேயே பெற்றோரை பறி கொடுத்து விட்டதால்... சொந்த பந்தங்கள் ஏதும் கிடையாதாம்.

தானாகவே படித்து முன்னேறி சுய தொழில் ஆரம்பித்து இப்படியொரு நல்ல நிலைக்கு வந்திருக்கிறாராம்! அவருக்கும் மதுமதியை புகைப்படத்தில் பார்த்து ரொம்பவும் பிடித்துப் போய்விட்டதாம்.

மதுமதிக்கும் சம்மதம் எனில் உடன் கல்யாண ஏற்பாடுகளைச் செய்து விடலாமாம். மேலும் சிங்கப்பூரில் குடியுரிமை பெற பாஸ்போர்ட் விசா என மதுமதிக்கு இப்போதே விண்ணப்பம் செய்து எடுத்து விடவும் மாப்பிள்ளை தயாராய் இருக்கிறாராம்.

தரகர் சொன்ன அவ்வளவு விஷயங்களுக்கும் தந்தையை விட அதிகம் தலையாட்டியவள் மதுமதியேதான்!

எப்படியாவது கல்யாணத்தை முடித்து சிங்கப்பூருக்கு ஒரே ஓட்டமாய் ஓடி விட வேண்டும் என்பதே அவளது திட்டம். அந்தத் திட்டத்திற்காக அந்த சிங்கப்பூர் மாப்பிள்ளை செல்வத்தை நேரில் சந்தித்து பேசவும் முடிவு செய்தாள் மதுமதி.

## 36



மதுமதி அன்று இரவு முழுவதும் தூங்காமல் தீவிர யோசனையில் ஆழ்ந்திருந்தாள். இனிதான் அவள் கவனமாய் செயல்பட வேண்டும் என்று அவளது மனம் எச்சரித்திருந்தது.

மாப்பிள்ளைக்கு அவளது போட்டோவை பார்த்துப் பிடித்து விட்டது. கல்யாணத்திற்கு தயார் என்று கூறியாயிற்று. இனி அவள்தான் குறுக்கிட வேண்டும்.

கல்யாண வேலைகள் சீக்கிரமாய் அதே நேரம் தினகரனுக்கும் சிங்காரிக்கும் தெரியாமலே நடத்த வேண்டும். கடைசி நேரத்தில் கடைசி நிமிடத்தில் அப்படிக்



கல்யாணம் நடக்கப் போவது தெரிந்தால் கூட பரவாயில்லை. கண்டிப்பாய் முதலில் தெரிந்து விடக்கூடாது.

ஆனால் அப்படி நடைமுறைப்படுத்துவது சுலபமல்ல. வெகு கஷ்டமே என மதுமதி உணர்ந்திருந்தாள். முதலில் யோசித்தவள் இந்த மண்டபம் பிடித்து ஊர் கூட்டி கல்யாணம் செய்தால்தானே.. முன்பே தெரிய வாய்ப்பு வரும்? பத்திரிகை அடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்?

ஆனால் அதையே ரெஜிஸ்டர் மேரேஜ்.. அதாவது பதிவுத் திருமணம் என ஆக்கி விட்டால்..? எவ்வித பிரச்சினையும் இராதே. லெட்ஜர் புக்கில் இருவரும் கையெழுத்துப் போட்டு மாலை மாற்றினால் கல்யாணம் முடிந்து விடும்.

இப்படிச் செய்தால்தான் அவள் நினைத்தபடி ரகசியம் காத்தும் கல்யாணத்தை செய்ய முடியும்?

மதுமதியின் புத்தி இப்படியே போயிற்று. அதுவே சரி எனவும் அவள் முடிவு பண்ணினாள்.

ஆனால் அத்தையும் அப்பாவும் எதற்கு ரெஜிஸ்டர் மேரேஜ் எனக் கேட்கக் கூடும். அதற்கும் அவளிடம் பதில் தயாராய் இருந்தது. முதல் முறை மண்டபத்தில் மேள தாளங்களுடன் ஆரம்பித்த அவளது கல்யாணம்தானே நின்று போயிற்று?

அப்படி நின்று போன அதிர்ச்சியே அவளுக்கு மனதில் அலர்ஜி போல் இருப்பதாகவும் அதனாலே அதுபோன்று செய்யாமல் பதிவுத் திருமணம் செய்ய அவள் ஆசைப் படுவதாகச் சொல்லியும் இருவரையும் சமாதானப்படுத்திக் கொள்ளலாம்.

மேலும் இந்த விஷயத்தில் மாப்பிள்ளையின் சம்மதத்தைப் பெறவே அதற்காக மிஸ்டர் செல்வத்தை நேரில் சந்தித்துப் பேசவும் முடிவு செய்தாள் அவள்.

ஆனால் எல்லாவற்றுக்கும் முன்னதாக முக்கியமான ஒரு விஷயம் அவள் கவனிக்க வேண்டி இருந்தது.

அது.. தினகரன் விஷயம்!

தினகரன் பயங்கர புத்திசாலி!

அவளது சின்ன அசைவை வைத்துக் கூட அவள் நினைத்திருப்பதை யூகித்து விடுவான்.

அப்படி அவள் நடத்த நினைத்திருப்பதை யூகித்து விட்டால் போதுமே! எல்லாவற்றையும் ரகளை பண்ணித் தடுத்து விடுவானே?

அதனால் எல்லாவற்றையும் அவனுக்குத் தெரியாமல், அவன் கண்ணில் படாதவாறே செய்ய வேண்டும்.

அதற்கு முதலில் ஒரு அரிய வழி அவனை இங்கிருந்து அப்புறப்படுத்துவதுதான். அவளிடம் ஏதாவது சாக்கு போக்கு சொல்லி அவனது ஊருக்குப் போய் வரும்படி சொல்ல வேண்டும்.

அப்படி அவன் ஊரில் இல்லாவிட்டால் எவ்வித பிரச்சினையும் இராது. பின் சிங்காரிதான் பாக்கி! அவளையும் ஏதேதோ சொல்லி ஏமாற்றி குழப்பி விட்டால் அவளும் நம்பி விடுவாள். வெகு ஈஸியாய் நம் திட்டத்தையும் நிறைவேற்றி விடலாம்.

யோசித்த மதுமதி அதுபடியே செய்ய முடிவு செய்தாள்.



மறுநாளே தினகரனைத் தேடிப் போய் கவலையாய் சிங்காரி விஷயத்தை ஆரம்பித்தாள். அவள் நினைத்தது போலவே தினகரன் ஆவலாகி, ''என்னாயிற்று மது? எதனால் இப்படி கவலை கொள்கிறாய்?'' என்றதும் மெல்ல விஷயத்தை ஆரம்பித்தாள்.

அப்பாவும் அத்தையும் சிங்காரி விஷயத்தில் காலம் தாழ்த்தாமல் அவனுக்கு சீக்கிரமே திருமணம் செய்து கொள்ளும் படி நெருக்கடி கொடுக்க தீர்மானித்திருப்பதாயும் அதைத் தடுக்க வேண்டும். தடுத்து திருமணத்தை தள்ளிப் போட வேண்டும். அப்படித் தள்ளிப் போட்டால்தான் சிங்காரி விஷயத்தில் ஒரு முடிவெடுத்து அவளுக்கு ஏற்றாற் போல் ஒரு வரனையும் தேட முடியும் என விரிவாகவே விளக்கினாள்.

தினகரன் அதற்கு எல்லாம் புரிந்து கொண்டவனாய் தலையை வெகுவாய் ஆட்டினான். ''நீ சொல்வது எல்லாம் சரி. அதற்கு இப்போது நான் என்ன செய்ய வேண்டும்? அதைச் சொல்லு..''என்றான் அதை ஆமோதிப்போடு.

''நீங்கள் உங்கள் ஊருக்குச் சென்று உங்கள் பெற்றோரிடம் பேசி வருவதாகச் சொல்லுங்கள். பின் ஒரு வாரத்தில் திரும்பி வந்து இன்னும் ஒரு மாத காலம் கல்யாணத்திற்கு அவகாசம் வேண்டும்.. என கண்டிப் ''போடு சொல்வது போல் சொல்லுங்கள். எங்கள் வீட்டாரை சம்மதிக்க வையுங்கள்!''

மதுமதி எல்லாவற்றையும் தினகரன் நம்பும்படியாக கச்சிதமாய்த்தான் பேசினாள்.

ஆனால் தினகரன் ஒன்றும் அவள் சொல்வதை எல்லாம் நம்பும் முட்டாள் இல்லையே! கேள்வி மேல் கேள்வி கேட்டான் அவன். "இனியும் சிங்காரியின் காதலன் போன்ற நடிப்பு எதற்கு? உண்மையை உடைக்க வேண்டிய நேரம் வந்து விட்டது" என்றான், அவசரத்தோடு!

அவன் இப்படிச் சொன்னதும் பதறித்தான் போய் விட்டாள் மதுமதி.

வெண்ணெய் திரண்டு வரும் நேரத்தில் தாழி உடைந்த கதையாய் அல்லவா பின் ஆகிவிடும்!

"ஐயோ.. தினகரன்! சிங்காரி நிலைமையை கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்! பேதைப் பெண் ரொம்பவும் மனமுடைந்து விடுவாள். பின் விபரீதமாய் எதுவும் முடிவெடுத்து விட்டால் நாம் ஒன்றும் செய்ய இயலாமல் போய்விடும்.." அவள் தொடர்ந்து கெஞ்சலாய் அரற்றப் போக கைகளை மேல் உயர்த்திக் காட்டி தடுத்தான் தினகரன்.

"சரி.. உனக்காக... உனக்காகச் செய்கிறேன் போதுமா? போதும்தானே?"

அவளுக்கு திக்கென்றுதான் இருந்தது.

என்ன சொன்னான் உனக்காக? உனக்காகச் செய்கிறேன் என்றுதானே?

கடவுளே! இவனை மாற்றுவது என்பது எளிதா? முடிகிற காரியமா? இன்னும் நம்மைத்தான் தீவிரமாய் நினைத்துக் கொண்டிருக்கிறானே! -



"அதுதான்... சரியென்று சொல்லி விட்டேனே...? இன்னும் ஏன் கண்களை அகல விரித்து விழிக்கிறாய்?"

அவன் உலுக்கலாய் கேட்டதும் சம்மதத்துக்கு அறிகுறியாய் அவள் தலை மெல்ல ஆடியது.

"ம்கூம்! வெறும் தலையாட்டல் மட்டும் போதாது. நன்றாக சிரித்தபடி அந்த அழகுத் தலையை ஆட்ட வேண்டும். அப்புறம் அந்த முத்துப் பல் சிரிப்பு? அதை நான் பார்த்து ரொம்ப நாளாச்சு. திரும்ப ஒரு முறை.. ப்ளீஸ்... ப்ளீஸ்.. செய்யேன்.. கொஞ்சம் சிரியேன்.."

இம்முறை அவன் கெஞ்ச அவள் தடுமாறினாள். எல்லாவற்றையும் அவள் முடிக்க நினைக்கையில் திரும்ப அடிப்படையில் இருந்தல்லவா இவன் ஆரம்பிக்கப் பார்க்கிறான்!

வேறு வழியில்லாமல் வலிய வரவழைத்த ஒரு முத்துப்பல் சிரிப்பை சிரித்தாள்.

"ஹப்பா... இது போதும்!" என்றவன் விஷயத்திற்கு வந்தான்.

"சரி, இப்போது நான் என்னதான் செய்ய வேண்டும்.. சொல்?" என்றான்.

அவள் திரும்பவும் விவரித்தாள்.

ஒரு பத்து நாட்கள் தனது ஊருக்கு அவன் செல்ல வேண்டும். அப்பாவும் அத்தையும் நெருக்கி வரும் அவனுக்கும் சிங்காரிக்குமான கல்யாண விஷயத்திற்கு மறுப்பு சொல்லாமல் மேலும் ஒரு மாசம் தள்ளிப் போட வேண்டும்!

அவள் சொல்ல அவன் தனது கம்பீரத் தலையை படபடவென ஆட்டினான்.

“மேடம் அவர்களின் வேண்டுகோள், ஏற்கப்பட்டது. அப்புறம்... நெக்ஸ்ட்?” என்றான் புருவம் உயர்த்தியபடி.

“அவ்வளவுதான்!”

தப்பித்தோம் பிழைத்தோம் என பயத்துடன் அவள் விடைபெற்று அகலப் போனாள்.

டக்கென அவள் விரல்களைப் பற்றி வேகமாய் அவளை தன் பக்கம் இழுத்தான். பூக் குவியல் போல் நெஞ்சில் விழுந்தவளின் முகம் நிமிர்த்தி சட்டென அவள் எதிர்பாராத வேளையில் தன் இதழ்களை பொருத்தினான், விடுவித்தான்.

பின் எதுவும் நடைபெறாதது போல் விடுவிடுவென அகன்று போய்விட்டான்.

“ஐயோ!”

அவள் வெகுவாய் உள்ளுக்குள் அலறியே விட்டாள்.

என்ன இவன்? எல்லாம் முடிந்தது என்று அவள் முடிவுரை எழுதும் போது முதல் அத்தியாயத்தில் இருந்தல்லவா பாடத்தை ஆரம்பிக்கிறான்!

இவனை எப்படித் திருத்துவது?

இவன் மாறுவானா? அல்லது நாம் போடும் கணக் கெல்லாம் தவறாகி விடுமா?

அவள் திட்டப்படி அவன் அவளை மறக்க வேண்டும்! மறந்து சிங்காரியை நாட வேண்டும்!



இதெல்லாம் நடக்கிற காரியமா?

நெஞ்சு பதற யோசித்தவளுக்கு நெஞ்சே பதில் கேள்வியை எழுப்பியது.

‘ஏன் முடியாது? கொஞ்சம் யோசித்துப் பார்! இந்த தினகரன் இங்கு இந்த ஊருக்கு வந்தது.. உன்னிடம் மையல் கொண்டது எல்லாம் எதற்காக?’

‘எதற்காக?’ என்றால் அவனும் நெஞ்சிடம் எதிர் கேள்வியாய்.

‘அன்று தஞ்சாவூரில் திருமண தினத்தன்று மாப்பிள்ளை இறந்ததால் உன் கல்யாணம் நின்று.. அதனால் இடிந்து போன உன் மீது இரக்கம் கொண்டு தானே... மோகனின் நண்பனாய் இவன் உன்னைத் தேடி வந்தான்? மறந்து விட்டாயா?’ அவள் தலையசைத்தாள்.

அப்படி அவள் முதலில் உன் மேல் கொண்ட இரக்கம் தானே பின்னால்.. மையலால் தீராத மோகமாய் மாறியது.

அதேபோல.. சிங்காரியின் நிலையை நினைத்து நிச்சயம் இரக்கப்படத்தானே போகிறான்?

அந்த இரக்கம்.. அப்படியே மோகமாய்.. காதலாய் மாறுவது கூட சாத்தியம்தானே?

மேலும் சூழ்நிலை அப்படி ஒரு இக்கட்டில் தள்ளினால் தினகரன் இரக்கப்பட்டு உதவக் கூடியவன்தானே? ஏன் வீணாக நீ குழம்புகிறாய்? என்னென்னவோ மனதைச் சொல்லி சமாதானப்படுத்தினாள் அவள்.

எல்லாவற்றையும் விட அவளுக்கு ஒரு விஷயம்தான் மிகவும் தெம்பளித்தது.

அவளுக்கு அந்த சிங்கப்பூர் மாப்பிள்ளையுடன் ரெஜிஸ்டர் கல்யாணம் ஆகிவிட்டது என்பது தெரிந்த பின் தினகரனால் என்ன செய்ய முடியும்?

என்ன.. ஆத்திரம் கோபம் என உணர்ச்சிகளில் தவித்து அவளைத் தேடுவான். கேள்விகளால் நார் நாராய் உரித்துப் போட துடிப்பான். ஆனால் அவள் இங்கிருந்தால்தானே? கட்டிய கையோடு சிங்கப்பூர் பறந்திருப்பாளே!

பின் வேறு என்ன செய்வான். சிங்காரியை ஆறுதல் படுத்த வேறு வழி தெரியாது. ஏற்கனவே ஏற்பாடுகள் செய்யப்பட்டு நடந்து வரும் சிங்காரியுடனான கல்யாண வேலைகளுக்கு தலையாட்டும்படியான சூழலுக்கும் தள்ளப்படுவான்!

அது அப்படி நடந்தால் போதும்! எல்லா பிரச்சினைகளும் தீர்ந்துவிடும்.

மனக்கணக்கு போட்டவளாய் அடுத்து தன் திட்டப்படி மாப்பிள்ளையை நேரில் சந்தித்து சில விஷயங்கள் பேச முடிவு செய்தாள் மதுமதி

தரகர் மூலம் கிடைத்த முகவரியை எடுத்துக் கொண்டு மறுநாளே சந்திக்க கிளம்பி விட்டாள். சிங்கப்பூர் மாப்பிள்ளையான செல்வம் என்கிற செல்வபாண்டியன் நகரின் பிரதான சாலையில் தனது ஏற்றுமதி நிறுவன அலுவலகத்தை வைத்திருந்தான்.



அலுவலக முகப்பிலேயே 'செல்வம் எக்ஸ்போர்ட்ஸ்' என்ற பளபளப்பு போர்டு அவளை வரவேற்றது. பணியாள் போய் சொன்னதும் அவளை உள்ளே வரச் சொன்னான் அவன்.

பவ்யமாகவே நுழைந்தாள் மதுமதி.

அந்த ஏஸி ரூமின் குஷன் இருக்கையில் சாய்ந்து கிடந்தவன், அவளைப் பார்த்ததும் உற்சாகமாய் எழுந்தான். 'வாவ். வாட் எ சர்ப்ரைஸ்' என எழுந்து கூச்சலிட்டு பற்களைக் காட்டியபோது, அந்த வரிசையற்ற பற்களின் சிரிப்பில் சுவாரஸ்யமில்லாமலே அவனைப் பார்த்தாள்.

வழுக்கைத் தலை, அரை வேக்காட்டு தாடி, மங்கலான கறுப்பு நிறம், நீள சபாரி சூட் கோட்... ஆளை விட அவனது உடைதான் கம்பீரமாக இருந்தது. இந்த ஜென்மத்து மாப்பிள்ளை நமக்கு இவன்தானா? என எண்ணும்போதே வேப்பங்காய் நாவில் சுவைத்த உணர்வுதான் அவளுள் ஓடியது.

ஆனால் வேறு வழியில்லையே! சிங்காரிக்காக இதை அவள் செய்தாக வேண்டுமே!

எதிர் இருக்கையில் அவள் உட்கார்ந்து ஒரு ரெடிமேட் புன்னகையை அவள் வீச அவன்.. வாய் பிளக்கத்தான் இன்னும் பரவசமாய் பார்த்துக் கொண்டிருந்தான். ''தரகர், மணப்பெண் அழகு.. என்று ஒரு வார்த்தையில் சொன்னார். ஆனால் இங்கு ஒரு அழகு தேவதையல்லவா வந்து நிற்கிறது? வாவ்! ஐ ஆம் வெரி லக்கி!'' என அவன் மறுபடியும் சிலாகித்தபோது, அதை ரசிக்காதவளாய் விஷயத்திற்கு தாவினாள்.

''ஒரு முக்கியமான விஷயம் பேச வேண்டும்..'' என்றாள்.

''பேசுவோம்.. பேசுவோம்..''

அவன் தலை பலமாய் ஆடியது.

''அதற்கு முன் சுவையான ஒரு காபி..'' என்றபடி அவன் பட்டனை அமுக்கி காபிக்கு ஆர்டர் செய்தான். பின் கண்களை இடுக்கியபடி அவளையே ஒரு பார்வை பார்த்தவன், ''என்னைப் பிடித்திருக்கிறதா?'' என்றான்.

அவள் இம்முறை தலையை மட்டும் ஆட்டினாள்.

பலத்த குஷியடைந்தவனாய் உற்சாகமாய் கைகளைத் தட்டினான் அவன்.

''தாங்க்யூ..! வெரி வெரி தாங்க்யூ..! மிஸ் .. உன் பெயர்... மது.. மது.. மது.. மதுமதிதானே?''

''ம்ம்..'' என்றாள் அவள் சுருக்கமாய். பின் பேச்சை வளர்க்க விரும்பாதவளாய் ''விஷயத்தைச் சொல்லட்டுமா?'' என்றாள்.

''ம்ம்.. சொல்லுங்கள்.. என்ன விஷயம்?''

மதுமதி விவரிக்க ஆரம்பித்தாள். தன் தரப்பு காரணங்களைக் கூறி திட்டத்தை விரிவாய் அவனுக்கு விளக்கினாள்.

அவன் புரிந்தது போல் தலையாட்டியவன், யோசிப்பது போன்ற பாவனையில் முகத்தை வைத்துவிட்டு மறுநிமிடமே கடகடவென சிரித்தான்.



இந்தச் சிரிப்பிற்கே எழுந்து ஓடி விடலாம் போல்தான் அவளுக்கு இருந்தது. அவன் அந்தச் சிரிப்பை நிறுத்தி அதே வேகத்துடனே பேசினான்.

''இந்த ஐடியா எனக்கு ரொம்பவும் பிடித்திருக்கிறது. இது ஹைடெக் யுகம். இனியும் ஐயரை வைத்து மந்திரம் முழங்க.. மேடையை சுற்றி வந்து மூன்று முடிச்சு போடும்.. சம்பிரதாயம் எல்லாம் எதற்கு? நீ சொல்கிறபடி ரெஜிஸ்டர் ஆபீசிலேயே மாலை மாற்றிக் கொள்வோம், சரிதானே?''

அவன் திடீரென தன்னை ஒருமையில் அழைக்க ஆரம்பித்து விட்டதை உணர்ந்தாலும் சகித்துக் கொண்டவளாய் மீண்டும் ஒரு புன்னகையை சிந்தினாள்.

இதை அவனாகவே வந்து தந்தை தில்லைநாயகத்திடம் அவனது ஏற்பாடு விருப்பம் எனச் சொல்ல வேண்டும் என்றபோது புரியாமல் விழித்து நெற்றியை சுருக்கினான்.

''இது.. எனது விருப்பம்தான். ஆனால் தந்தை ஏற்றுக் கொள்ள மாட்டார். அதான் உங்கள் மூலம் சொல்கிறேன். இனி எனது விருப்பம் உங்கள் விருப்பம்தானே?' என்றபடி அவள் வேண்டுமென்றே அத்தனை பற்களையும் காட்டியபோது அவனும் பதிலுக்கு அதையே செய்தான்.

பின் விடைபெற்று கிளம்பி விட்டாள் அவள்.

அவள் அறையை விட்டு அகலும் வரை செல்வம் கண் கொட்டாமல் அவளையே பார்ப்பதை உணர்ந்தவளுக்கு ஏதோ நெருடத்தான் செய்தது.

## 37



சிங்கப்பூர் மாப்பிள்ளையான செல்வம் தாமதிக்காமல், மறுநாளே வீடு தேடி வந்து விட்டான்.

மாப்பிள்ளையே இப்படித் திடீரென எவ்வித அறிவிப்பும் இல்லாமல் வந்து விட்டாரே.. என ஒரு கணம் பதறிப் போய்விட்டார் தில்லைநாயகம்!

''வாங்கோ! வாங்கோ!'' என வரவேற்று நாற்காலி எடுத்துப் போட்டு அமரச் சொன்னபோது செல்வம் மாப்பிள்ளை மிடுக்கோடு கம்பீரமாய் அமர்ந்து கொண்டான்.

அமர்ந்தவன் எட்டிப் பார்த்தான். கண்களை அலைய விட்டுத் தேடினான். கதவு மறைவில் கொலுசுக் கால்களுடன் மதுமதி நிற்பது தெரிந்தது.

அவனது உற்சாகம் கூடி விட்டது போல் தோன்றியது. அவன் போட்டிருந்த மல்லிகை செண்ட் மணம் வீடு முழுவதும் கமகமத்தது. அதைப் பார்த்த அத்தை ''அடி நீ கொடுத்து வைத்தவள்தான்! மாப்பிள்ளை இந்த மணம் மணக்கிறாரே'' என்றாள்.

பொங்கிய சிரிப்பை அடக்கி அமைதியாகச் சிரித்தவள் காதுகளைத் தீட்டினாள்.

மிக்சரையும், சூடான காபியையும் பதம் பார்த்த கையோடு சடசடவென விஷயத்தை ஆரம்பித்து விட்டான் செல்வம்.

அவன் சொல்லச் சொல்ல அதிர்வாகித்தான் போய் விட்டனர் இருவரும்.



''என்ன மாப்பிள்ளை இப்படித் திடீரென குண்டைத் தூக்கிப் போடுகிறீர்கள்?'' என மூக்குக் கண்ணாடியை உயர்த்தியபடி அத்தை பதற, இருவரையும் சாந்தப்படுத்தி அமைதியாய் விளக்கினான் செல்வம்.

எல்லாம் மதுமதி சொல்லிக் கொடுத்த விஷயம்தான். கிளிப்பிள்ளை போல் கதையை அப்படியே ஒப்புவித்தான். மதுமதிக்கு ஏற்கனவே கல்யாண மேடை வரை சென்று முன்பு திருமணம் நின்றிருப்பதால் 'செண்டிமெண்டாக' அம்முறை வேண்டாம் எனவும் அதனாலே 'ரெஜிஸ்டர் மேரேஜ்' எனதான் முடிவு செய்ததாகவும் எடுத்துரைத்தான்.

அவன் குரல் உயர தலையை ஆட்டி ஆட்டி சொன்ன விதமே அவன் இவ்விஷயத்தில் மிகப் பிடிவாதமாய் இருப்பது போன்ற தொனியை உணர்த்த வேறு வழியில்லாமல் அதற்கு சம்மதிக்க வீட்டில் முடிவாயிற்று.

அவள் சொன்னபடி செய்து விட்டதில் மகிழ்ந்து திரும்பி மதுமதியை நோக்கி ஒரு வெற்றிப் புன்னகையை வேறு புரிந்தாள் அவள். தினகரன் இருந்த இடத்தில் இவனா? என்ற நினைப்புதான் குபீரென எழுந்து அவளைத் தடுமாறவும் வைத்தது.

அந்த நினைப்பை வலுக்கட்டாயமாய் விலக்கி அவனை பற்களைக் காட்டி வழியனுப்பி வைத்தாள்.

சிங்காரி உள்ளிருந்து வந்தவள் அப்போதுதான் விஷயம் தெரிந்து அவளை பிலுபிலுவென பிடித்துக் கொண்டாள்.

''எனக்குத் தெரியாமல் இவ்வளவு விஷயங்கள் வீட்டில் நடக்கிறதா?'' என்று அதிர்ந்தவளிடம் அவளைப் போலவே

வியப்பு காட்டி "உனக்கு மட்டுமல்ல, எனக்கும் தெரியாமல் தான்.. எல்லாம் தந்தையின் ஏற்பாடு" என்றாள்.

உதட்டைப் பிதுக்கியவளிடம் விரிவாய் விளக்கினாள்.

"தந்தையைப் பொறுத்தவரையில் உனக்கு தினகரனுடன் என எண்ணி கல்யாண வேலைகளை ஆரம்பித்து விட்டார். அதே கையோடு, தரகரிடம் சொல்லி எனக்கும் வரன் தேடச் சொல்லியிருக்கிறார். தரகர் சிங்கப்பூர் மாப்பிள்ளை என ஒருவரை இப்படி வீடு வரை கூட்டி வந்து விட்டார்.."

"ஐயோ! அப்படியானால் சிக்கல் மேல் சிக்கல் ஆகி விடுமே.. நீ எப்படி சமாளிக்கப் போகிறாய்?" என்றாள் சிங்காரி முகத்தில் கலவரத்துடன்.

"ஒன்றும் பயப்படத் தேவையில்லை." என அவள் தோள்களைத் தட்டிய மதுமதி அதே உற்சாகத்துடன், "தந்தை அவர் பாட்டுக்கு மாப்பிள்ளை வீட்டாரிடம் நன்கு சம்மதம் பேசட்டும்.. என்ன கடைசியில் விஷயம் என்னிடம்தானே வந்து நிற்கும்? என்ன மாப்பிள்ளையை பிடித்திருக்கிறதா? என கேட்கும்போது 'பிடிக்கவில்லை!' என்று ஒரே போடாக போட்டு நிறுத்தி விடுகிறேன். அதுதான் எனது திட்டமும் கூட.." என்று சொல்லியவள் தான் சொல்லியதை தங்கை முழுவதும் நம்ப வேண்டும் என்பதற்காக பெருஞ்சிரிப்பு ஒன்றையும் சிரித்து முடித்தாள்.

ஆனால் சிங்காரியின் கவலை வேறு விதமாக இருந்தது.



"இது சரியக்கா, ஆனால் என் விஷயத்தை யோசித்துப் பார்! தினகரன் இன்னும் எத்தனை நாள் இப்படி நடித்துக் கொண்டிருக்க முடியும்?" என்றாள் வருத்தமான குரலில்.

அதற்கும் மதுமதி, "உன் கவலை நியாயமானதுதான். ஆனால் இதற்கும் நான் ஒரு ஏற்பாடு செய்திருக்கிறேன். அதன்படி தினகரன் இப்போது தன் சொந்த ஊருக்குச் சென்றிருக்கிறவர் இன்னும் பத்து நாட்களில் திரும்பி வருவார். அப்படி திரும்பி வந்து நம் தந்தையிடம் இன்னும் ஒரு மாதம் திருமண ஏற்பாடுகளைத் தள்ளிப் போடும்படி கேட்டுக் கொள்வார். தந்தையும் வழியில்லாது சம்மதிப்பார். அந்த ஒரு மாத அவகாசத்தில் நாம் மறுபடியும் உட்கார்ந்து யோசித்து ஒரு நல்ல முடிவு எடுப்போம்.." என பெருமூச்சு பொங்க முடித்தாள்.

ஆனால் சிங்காரி திரும்பவும் கவலையாய் புருவம் உயர்த்தினாள். "அப்படி என்ன முடிவு எடுக்க முடியும்?" என்றாள்.

"எல்லாம் ஓர் நல்ல முடிவு. உன் வாழ்க்கையை சீர்படுத்தப் போகும் அருமையான முடிவு.." என பூடகமாய் சொல்லி விட்டு, பேச்சை மாற்ற விரும்பியவளாய், "சரி.. சரி... இது பற்றியே பேசிக் கொண்டிருந்தால்.. கவலைதான் பெருகும்.. வேறு ஏதாவது பேசுவேம்" என்றாள்.

"வேறு.. என்ன பேச?" என்றாள் சிங்காரி சலிப்புடன்.

அவளை ஏதாவது சொல்ல குஷிப்படுத்த வேண்டும் என நினைத்தவளுக்கு அத்தை பூர்ணத்தின் மகன் எழிலரசன் ஞாபகம் வந்தான்.

"சிங்காரி, இந்த அத்தையைப் பாரேன்! காக்கைக்கு தன் குஞ்சு பொன் குஞ்சு என்பதுபோல் தனது அருமை மகனுக்கு இதுநாள் வரை தான் செட்டாய் சேர்த்து வைத்திருந்த பணத்தையெல்லாம் திரட்டி நகரில் ஒரு கடையை வாடகைக்கு பிடித்து விட்டாள்.."

"என்ன கடையா? என்ன சொல்கிறாய்?" அவள் நினைத்தது போலவே சிங்காரி உற்சாகமாகி விட்டாள்.

"ஆமாம்.. பட்சணக் கடை! சீடை, முறுக்கு, அதிரசம் என அத்தை பாக்கெட் போட்டு விற்கும் அத்தனை பலகாரங் களையும் கடையில் ஷோகேஸ் போட்டு விற்பனை செய்யப் போகிறார்களாம். கடை முதலாளியாய் கல்லாவில் எழிலரசன் உட்கார்ந்திருப்பானாம். இதற்காக எழிலரசனுக்கு புதியதாய் துணி எடுத்து பேண்ட் ஷர்ட் எல்லாம் தைக்க ஏற்பாடு பண்ணி விட்டாளாம் அத்தை!"

"ஐயோ! இது என்ன கூத்து?" நம்ப முடியாத ஆச்சரியத்தில் விழுந்து விழுந்து சிரித்தாள் சிங்காரி.

'நல்லவேளை இவள் மூடை மாற்றினோம்' என்ற திருப்தியுடன் பதிலுக்கு சிரித்தபடி அங்கிருந்து அகன்றாள் மதுமதி.

மறுநாள் தினகரனுக்கு காலையில் டெலிபோன் பூத் சென்று பேசினாள். தன் சொந்த ஊரான கிராமத்தில் நேரம் போகாமல் தான் தவிப்பதாகவும் விரைவிலேயே அங்கு வர தயாராய் இருப்பதாகவும் தினகரன் கூறினான். அவனை அமைதிப் படுத்தி ஒருவாரம் கழித்த பின்னே வரும்படியும் அப்போது தான் தன் தந்தை திருமணத்தை தள்ளி வைக்கச்



சொல்லும் விஷயத்திற்கு நம்பி சம்மதிப்பார் எனவும் விளக்கினாள்.

தினகரனும் அதை புரிந்தவனாய் ஆமோதிக்க... பதட்டம் நீங்கி பேசி முடித்தாள் அவள்.

அடுத்து வந்த இரண்டு நாட்கள் அவள் மேலும் பரபரப்பாகி விட்டாள். அவள் போடும் நாடகத்திற்கான க்ளைமாக்ஸ் நெருங்கி விட்டது. அன்றும் மாப்பிள்ளை வரனான செல்வத்தை சந்திக்கக் கிளம்பினாள்.

இம்முறை யோசித்து தனது திட்டத்தில் வேறு ஒரு மாற்றமும் செய்திருந்தாள். அதை செல்வத்திற்கு விளக்கவே அவனைத் தேடிச் சென்றாள்.

அவளை அத்தனை பல்லைக் காட்டி வழக்கம் போல் வரவேற்றான் செல்வம். அவள் சொன்ன விஷயங்களை குறுக்கிடாமல் அப்படியே கேட்டுவிட்டு, "பிரமாதம்! மிகப் பிரமாதம்!" என கைகளை வேறு தட்டினான்.

"உங்களுக்கு இது அதிர்ச்சியாக இல்லையா?" என்றாள் மதுமதி வியப்புடன்.

செல்வம் சிரித்தான். "நான் ஏன் அதிர்ச்சி அடைய வேண்டும்? நான் ஒன்றும் பழைய பஞ்சாங்கமோ பத்தாம் பசலியோ இல்லையே? நான் மாடர்ன் டைப். நீ சொல்வது ரொம்பவும் சரி. ரெஜிஸ்டர் மேரேஜ் என முடிவாயிற்று. பின் ஏன் காலம் தாழ்த்த வேண்டும்? நாள் நட்சத்திரம் எல்லாம் அவசியமில்லையே? நீ சொல்வது போல்.. அடுத்த வாரமே.. ஏன் வருகிற திங்கட்கிழமையே மேரேஜை வைத்துக் கொள்ளலாமே? உனக்கு சிரமம் வைக்காமல்

நானே போன் செய்து உன் தந்தை மிஸ்டர் தில்லைநாயகத்திடம் பேசி விடுகிறேன் சரிதானே?''

செல்வம் சொல்லச் சொல்ல அவளது அதிர்ச்சி இன்ப அதிர்ச்சியாக மாறியது. இதைத் தான் எப்படி செல்வத்திடம் சொல்வது எப்படி அவனுக்குப் புரிய வைப்பது என தடுமாறிக் கொண்டிருந்தாள்.

மிகக் கரெக்ட்டாக புரிந்து கொண்டானே! என்ன ஆச்சரியம் இது!

முகம் மலர கைகூப்பி அவனுக்கு நன்றி உரைத்தாள். விடைபெற்றுக் கிளம்பினாள்.

குதூகலத்துடன் அவள் போவதை மறுபடியும் கண் இமைக்காமல் பார்த்தான் செல்வம். 'பழம் நழுவி பாலில் விழுந்தது' என்ற ஒரு பழமொழி சொல்வார்களே... அது இதுதானோ? என்ற நினைப்பு அவனுள் ஓடியது!

## 38



மதுமதிக்கு தனக்கு எப்படி இவ்வளவு தைரியம் வந்தது என பயங்கர ஆச்சரியம் தான்! எப்படி இந்த துணிச்சல்? யார் கொடுத்தது இது? என்று நினைக்கும் அளவுக்கு ஒரே வேகம்தான்!

பின் மாப்பிள்ளை செல்வத்தைச் சரிக்கட்டி கல்யாணம் செய்யும் விதத்தை, செய்யப் போகும் தேதியைக் கூட மாற்றி விட்டாளே!



இன்னும் எண்ணி மூன்றே நாட்களில் அவளுக்கு கல்யாணம்!

அவள் சொன்னதற்கு எல்லாம் பூம் பூம் மாடு போல தலையாட்டி விட்டான் செல்வம்.

எதனால்? சொந்த புத்தி என்ற ஒன்று அவனுக்கு இல்லையா? இல்லை... ஜொள் மன்னன் போல் அவள் அழகில் கிறங்கி தலையை படபடவென ஆட்டுகிறானா?

எது எப்படியோ? சம்மதித்து விட்டான். அதுபோதும்!

மேலும் இதுபோல் அவன் எப்போதும் தலை ஆட்டினால்.. அவள் வாழ்க்கை முழுவதும் அவனுடைய வழுக்கைத் தலையையும், அந்த முட்புதர் போன்ற குறுந்தாடியையும்கூட இதற்காக சகித்துக் கொள்வாளே!

அப்படியே மனதில் யோசித்துப் பார்த்தாள்.

திட்டப்படி தினகரனை ஊருக்கு அனுப்பியாயிற்று. அவன் வருவதற்குள் இந்த ரெஜிஸ்டர் மேரேஜை பண்ணி விடவே கல்யாண தினத்தை சீக்கிரம் வரும்படியாக மாற்றினாள். சிங்காரியிடம் கூட தந்தைக்காக இப்படி ஒரு பிளான் கடைசியில் நிறுத்தி விடுவேன் என்றெல்லாம் கூறி சமாளித்தாயிற்று.

இனி தந்தையும் அத்தையும்தான் இருக்கிறார்கள். அவர்களைத்தான் சமாளித்தாக வேண்டும்.

நாம் மனதில் நினைத்து திட்டமிடும் விஷயத்தை எப்படி யாவது அவர்களுக்கு புரிய வைத்தாக வேண்டும்.

அவர்கள் நிச்சயம் புரிந்து கொள்வார்கள். ஏன் மாட்டார்கள்?

ஒருகணம் தான் திட்டம் போட்டு நடத்த இருக்கும் பிளானை மனதில் ஓடவிட்டுப் பார்த்தாள்.

அதன்படி தினகரன் ஊரில் இல்லாத சமயமாய், சிங்காரிக்கும் தெரியாமல், அத்தையையும் தந்தையையும் சாட்சியாய் வைத்துக் கொண்டு செல்வத்துடன் ஆன ரெஜிஸ்டர் மேரேஜை அவள் செய்து கொள்ள வேண்டும். அதுவும் இன்னும் இரண்டு நாள் கழித்து வரும் திங்கட்கிழமையே!

அப்படி செல்வத்தை கட்டிக் கொண்டு மாலையும் கையுமாய் வந்து சிங்காரி முன் நின்றால்... அவள் பேந்தப் பேந்த விழிக்கத்தான் செய்வாள்.

அவளை சமாதானப்படுத்தி "ஒன்றும் கவலைப்படாதே. இதை நான் விரும்பித்தான் ஏற்றுக் கொண்டிருக்கிறேன். தினகரன் மூலம் உனக்கு ஒரு நல்ல வாழ்க்கை. அதற்கு நான் பொறுப்பு!" என தெளிவாய்ச் சொல்லி அவள் வாயை அடைத்துவிட வேண்டும்!

பின் தினகரனுக்கு விஷயம் போகும். அதிர்ச்சியோடு வருவான்.

தன்னைச் சூழ்ச்சி போல் செய்து ஏமாற்றி விட்டதாய்க் கூட அவன் கருதலாம்.

கோபத்தில் தாம் தீம் என குதிக்கக் கூட செய்வான்.



எப்படியாவது அவன் கையில் காலில் விழுந்தாவது அவள் மன நிலையை, அவள் எண்ணியிருப்பதை அவனுக்குப் புரிய வைக்க வேண்டும். அவனும் மனம் மாறி சிங்காரிக்கு ஒரு வாழ்க்கை தர முன்வர வேண்டும்.

இதுவெல்லாம் நடக்க வேண்டும்!

ஏன்... முயற்சித்தால் முடியாதா? நடத்தி விட முடியும் தானே?

சற்றே மனம் கலங்கி பயம் எழுந்தபோதும், தனக்குத் தானே தைரியம் சொல்லிக் கொண்டு முகம் நிமிர்ந்தாள் மதுமதி.

எல்லாம் சரியாக நடக்கும். ஆனால் தினகரன்தான் ஒத்துப் போக மாட்டான் என ஒரு மனம் கூறியது.

முதலில் பிடிவாதம் பிடிப்பான்.

மாட்டேன் என ரகளை செய்வான்.

ஆனால்... அவள்தான் வேறு ஒருவருக்கு மனைவி ஆகியிருப்பாளே! அது தெரிந்தும் அவளையே நினைத்தா ஏங்கப் போகிறான்?

ஆக.. கடைசியில் அவனும் மனம் மாறி விடுவான். அவள் நினைத்தபடி எல்லாம் நடந்து விடும்.

மறுபடியும் அவளுள் நிம்மதி பிறந்தது.

மேலும் அடுத்து வந்த இரண்டு நாட்களும் சிங்காரி வீட்டில் இருந்தால் ஏதாவது இடைஞ்சல் செய்து விடுவாள் என்ற எண்ணத்துடன் அவளை அடிக்கடி நூலகம், தோழி,

வீடு, மளிகைச் சாமான் வாங்க ஷாப்பிங் என அனுப்பி வைத்துக் கொண்டிருந்தாள்.

நாளை மூன்றாம் நாள் விடிந்தால் கல்யாணம். அவளுக்கும் செல்வத்திற்கும், ரெஜிஸ்டர் மேரேஜ். எல்லாவற்றையும் செல்வத்திடம் தெளிவாய் கூறி விட்டதால், செல்வமும் இதற்குள் எல்லா ஏற்பாடுகளையும் செய்திருப்பான்.

ஆனால் விஷயத்தை இன்னும் அப்பா, அத்தையிடம் தான் தெரிவிக்கவில்லை.

சிங்காரிக்குத் தெரியக் கூடாது என்பதால் அவளுக்கு தெரியாமலே இந்தக் கல்யாணம் நடக்கப் போகிறது.

ஆனால் அப்பா, அத்தைக்கு கண்டிப்பாக தெரியப் படுத்த வேண்டும்.

ஆனால் அது இப்போது அல்ல; அதற்கும் மதுமதி ஒரு திட்டம் வைத்திருந்தாள்.

இப்போதே விஷயத்தை இருவரிடமும் சொல்லி விட்டால்... இருவரும் உட்கார்ந்து ஒவ்வொரு கோணமாய் யோசித்துப் பார்க்க ஆரம்பித்து விடுவர்.

அவர்களை அப்படி யோசிக்க விடக் கூடாது.

சட்டென விஷயத்தைச் சொல்லி சட்டென காரியத்தைச் செய்துவிட வேண்டும்.

அதற்கு ஒரே வழி... நாளை காலை ரெஜிஸ்டர் ஆபீசுக்கு கிளம்பும்போது அவர்கள் இருவரையும் கூட்டிக் கொண்டு



கிளம்புவது, ஆட்டோவில் அப்படிப் போகும்போது விஷயத்தை உடைத்து உண்மைகளை எடுத்து வைப்பது, தங்கை சிங்காரிக்கு ஒரு வாழ்க்கை கிடைக்க வேண்டுமென்றால்... தான் இப்படிச் செய்துதான் ஆக வேண்டும் என அவர்களுக்கு புரிய வைத்து சம்மதத்தை பெறுவது... பின் உடனடியாய் செல்வத்தை பதிவு திருமணம் செய்து கொள்வது..!

திரும்பத் திரும்ப யோசித்து அவள் தெளிவு பெற்றாலும் அப்படி யோசிப்பதினால் தலையில் உள்ள மூளையே சுழன்று வெளியே வந்து விழுந்து விடும் போல் இருந்தது.

அதனால் இனி யோசிப்பது கூடாது. இதுபற்றி வேறு எந்த சிந்தனையையும் உருட்டுதல் கூடாது என்ற முடிவிற்கு வந்தபோது டெலிபோன் ஒலி கிணுகிணுத்தது.

சுவாரஸ்யமில்லாமல் ரிசீவரை எடுத்தாள். மறுமுனையில் செல்வம்!

குபீரென உற்சாகம் கொண்டவள் போல் படபடக்க ஆரம்பித்து விட்டாள். ''என்ன செல்வம் என்னாயிற்று? எல்லா ஏற்பாடுகளையும் பண்ணி விட்டீர்களா? நாளை ரெஜிஸ்டர் ஆபீஸில் எல்லாவற்றையும் சொல்லி வைத்து விட்டீர்களா? என்ன.. என்ன.. சொல்லுங்கள்!''

அவள் மூச்சு விடாமல் பேசி முடித்ததும் செல்வம் நிதானமாய் குறுக்கிட்டான். ''எல்லா ஏற்பாடுகளும் நடந்து கொண்டிருக்கிறது. பதிவுத் திருமணம் செய்ய நீ சில பேப்பர்களில் கையெழுத்துப் போட வேண்டியிருக்கிறது. உடன் கிளம்பி வருகிறாயா?'' என்றான்.

"இதோ வருகிறேன்.. உடனே!" சொல்லியபடி ரிசீவரை வைத்தாள். வழக்கமான, 'தோழியை பார்க்கச் செல்கிறேன்' பொய்யைச் சொல்லிக் கொண்டு கிளம்பி விட்டாள். அவள் அந்த மதிய வேளையில் அப்படி அரக்கப் பரக்கக் கிளம்பிப் போவதை சந்தேகத்துடன் பார்த்தாள் சிங்காரி.

## 39



மதுமதி கொஞ்சமும் யோசிக்க வில்லை.

செல்வம் சொன்னதும் இயந்திரகதியாய் கிளம்பி, ஆட்டோ பிடித்து செல்வத்தின் எக்ஸ்போர்ட்ஸ் அலுவலகத்தை நோக்கி விரைந்து கொண்டிருந்தாள்.

மணி ஆறை நெருங்கிக் கொண்டிருந்தது.

அலுவலகம் எல்லாம் முடிந்து போயிருக்கும்... இந்நேரம் போய் அவன் அழைக்கிறானே... என அவளுக்கு சந்தேகம் வரவில்லை.

போக வேண்டும்.. அந்த பேப்பர்களில் எல்லாம் அவள் கையெழுத்துப் போட வேண்டும்... சீக்கிரம் சீக்கிரமாக காரியங்கள் நடக்க வேண்டும். அவள் மாலையும் கழுத்துமாய் நின்று தியாகம் செய்து...அதனால் சிங்காரிக்கு ஒரு வாழ்க்கை கிடைக்க வேண்டும்... பட்டுப்போன அவள் வாழ்க்கை இளந்துளிர் போல் உயிர்த்தெழ வேண்டும்.

அதுதான் அவள் ஆசை! லட்சியம்! ஏன்.. வெறி கூட!



அந்த வெறியில் கண் மறைப்பவளாய் மேலும் யோசிக்க மனமின்றி ஆட்டோவிலிருந்து இறங்கினாள். அந்தப் பெரிய கட்டிடத்தின் முதல் தளத்தில் ஓரமாய் இருந்த 'செல்வம் எக்ஸ்போர்ட்ஸை' நெருங்கினாள்.

அவள் வரும் காலடி ஓசை கேட்டு படீரென கதவைத் திறந்து புன்னகையுடன் வரவேற்றான் செல்வம்.

வழுக்கைத் தலை, குறுந்தாடி, வரிசையற்ற பற்கள், முகத்தில் என்றுமில்லாததாய் ஒருவித அழுத்தம். அந்த நிலையிலும் அவளுக்கு எதுவோ ஒன்று உறுத்தத்தான் செய்தது.

ஆனாலும் மேலும் சிந்திக்க விடாதபடி செல்வம் உள்ளே கூட்டிப் போய் இருக்கையில் உட்கார வைத்தான். பேப்பர்களில் கையெழுத்துப் போட கைப் பர்ஸில் இருந்து பேனாவை எடுத்தவாறு அவள் தயாரானாள்.

முதலில் இந்தப் பழச்சாறு. பின் கையெழுத்து! என பளபளப்பான கிளாஸில் ஜூஸை நீட்டினான் செல்வம். ''வேண்டாமே..'' என மறுக்கப் போனவள், அவன் வற்புறுத்தல் கண்டு வாங்கிக் கொண்டாள்.

வாங்கி மடமடவென ஒரே மூச்சில் குடித்தாள். கிளாஸை மேஜையில் வைத்தபடி தலையை நிமிரப் போனவள் குழப்பமாய் கைகளை தலையில் வைத்தாள்.

கண் பார்வை மங்குவது போல் உணர்ந்தாள். செல்வம் கைகளைக் கட்டியபடி அவளையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த காட்சி மட்டும் கடைசியாய் அவள் கண்களில் பதிந்தது.

அதற்கு மேல் அவள் எதையும் உணரவில்லை.

நினைவிழந்தவளாய் அப்படியே மயங்கிச் சாய்ந்தாள் அவள்.

★ ★ ★

மறுபடி மதுமதிக்கு உணர்வு வந்தபோது கும்மிருட்டு.. அவள் ஒரு நாற்காலியில் உட்கார வைக்கப்பட்டு.. என்ன இது? தடித்த கயிற்றினால் நாற்காலியுடன் பிணைத்துக் கட்டப்பட்டு...

திடுக்கிட்டு திகைத்தவள் ''ஐயோ! காப்பாற்றுங்கள்!'' என கூக்குரலிட்டாள்.

அவள் அபயக் குரல் எதிரொலித்ததும் எதிர் அறையிலிருந்து சிகரெட் புகையை ஊதியபடி வெளியே வந்தது அந்த உருவம்.

அந்த இருட்டிலும் அவள் அவனை அடையாளம் கண்டு கத்தினாள்.

''செ..ல்..வ..ம்..!''

செல்வம் சிகரெட் கைகளாலே லைட்டைப் போட்டவன் வெறிச் சிரிப்பு சிரித்தான்.

''வந்தனம் மகாராணி! மகாராணிக்கு அடியேனின் வணக்கங்கள். பொறி வைக்காமலே வலிய வந்து என் வளைக்குள் மாட்டியதற்கு நன்றி!'' என்றான் விகாரச் சிரிப்பு பொங்க.

மதுமதியும் கத்தவே செய்தாள்.



''மிஸ்டர் செல்வம்... என்ன இது விளையாட்டு? முதலில் என்னை.. விடுவியுங்கள்.. இந்தக் கட்டுகளை எடுத்து விடுங்கள்'' என்றாள் அலறலாய்.

செல்வம் சிரிப்பை நிறுத்திப் பார்த்தவன், ''என்ன கட்டுகளை அவித்து விடுவிக்கவா? நல்ல பெண்ணம்மா நீ! இதைக் கட்டியதே நான்தான்! உனக்கு பழச்சாறில் மயக்க மருந்து கலந்து மயங்க வைத்தேன். நீ மயங்கியதும் நாற்காலியில் உட்கார வைத்து உள்ளறைக்கு தூக்கி வந்து கட்டுப் போட்டிருக்கிறேன். என்ன ஒரு ஒரு மணி நேரம் கும்ப கர்ணத் தூக்கம் போட்டுவிட்டு இப்போதுதான் முளித்து இருக்கிறாய். முதலில் நீ ஒன்றைத் தெளிவாய்த் தெரிந்து கொள். இந்த செல்வம் எக்ஸ்போர்ட்ஸ் நிறுவனம் மூலம் நான் ஏற்றுமதி செய்வது பொருள்களை அல்ல. உன் மாதிரியான இளம் பெண்களைத்தான்..,''

சப்புக் கொட்டியபடி அவன் பேசி முடிக்க... தான் வசமாய் மாட்டிக் கொண்ட விபரீதம் உணர்ந்து அரண்டு போய்ப் பார்த்தாள். எல்லாமே தலைகீழாய் போனது போல் தலை கிறுகிறுவென சுற்றியது.

''என்ன.. என்ன சொல்கிறீர்கள்?'' என்றாள் குரல் நடுங்க.

''புரியவில்லையா? இரு கண்ணு விளக்கமாகவே சொல்கிறேன்..'' என்றபடி அவள் பக்கத்தில் வந்து விகாரமாய் சிரித்துக் காட்டியவன் விளக்கினான்.

''நான் குறி வைப்பதே... திருமணம் தடைபட்ட அல்லது நின்று போய் தவிக்கும் இளம் பெண்களைத்தான். அப்படித் தான் தரகர் ஒருவர் மூலம் கல்யாணத் தினத்தன்று

மாப்பிள்ளை இறந்து உன் திருமணம் தடைப்பட்ட செய்தியை அறிந்தேன். உனக்கு வலை வீச தீர்மானித்து இன்னொரு தரகர் மூலம் பணத்தை கொடுத்து நல்லபடியாய் பேசி சிங்கப்பூர் அது இதுவென கதையளந்து நம்பும்படி செய்தேன். நான் விரித்த வலையில் நீங்கள் வசமாய் விழுந்ததோடு மட்டுமல்லாமல் பழம் நழுவி பாலில் விழுவது போல் நீ முந்திரிக் கொட்டையாய் ரெஜிஸ்டர் மேரேஜ் அது இதுவெனச் சொல்லி எனது வேலையை சுளுவாக்கினாய். எனக்கு ரொம்ப வசதியாய்ப் போயிற்று. சரி நாளை ரெஜிஸ்டர் மேரேஜ். உன்னைப் பதிவுத் திருமணம் செய்து ஒருநாள் மனைவியாய் அனுபவித்து விட்டு பார்ட்டிகளிடம் விற்று! விடலாம் என்று பார்த்தால் அந்த வெளியூர் பார்ட்டி இன்றே... இன்று இரவே வேண்டும் என அவசரப்படுகிறது. அதான் பார்த்தேன். உனக்கு ஒரு போன் போட்டு புளுகினேன். நான் சொன்னதை நம்பி அரக்கப் பரக்க ஓடி வந்தாய். நானும் திட்டப்படி உன்னை கட்டியும் வைத்து விட்டேன். இனி உன்னை.."

அவன் மறுபடியும் நிறுத்தி விட்டு அந்த விகாரச் சிரிப்பு சிரித்தான்.

"நீ.. நீ.. அப்படியானால்... யார்.. யார்.. நீ..?" என்றாள் அவள் தடுமாறியவளாய் மயங்கி விழும் அதிர்ச்சியோடு.

"அட.. கண்ணுவுக்கு இன்னுமா புரியவில்லை?" என்றவன் தன் வரிசையற்ற பற்களை விரித்துக் காட்டி அவளை பயமுறுத்தி விட்டு, "நான் இப்படி ஊர் ஊராய் போய் வெவ்வேறு பெயர்களில் பெண்களைத் திருமணம் செய்து வெளிநாட்டு ஆசாமிகளுக்கு அவர்களை விற்று



விடுவேன். லட்சக்கணக்கில் அவர்கள் பணம் கொடுப்பார்கள். எ...ன்னைப் பார்... உன்னின் இந்த அபார அழகிற்கு, கூட எனக்கு வெகுமதியாய் பத்து இருபது லட்சம் கிடைக்கும் தெரியுமா? அவன் பேசி முடித்து விட்டு ஸ்டைலாய் இன்னொரு சிகரெட்டை எடுத்து பற்ற வைத்தான். புகை வளையங்களாய் ஊதினான்.

யாரோ படபடவென முகப்புக் கதவைத் தட்டினார்கள்.

அவன் பிரகாசமானான்.

"வெளியூர் பார்ட்டிதான்! பணத்தோடு வந்திருப் பார்கள்!"

அவன் செல்வம் உற்சாகமாகி சிகரெட் மேலும் இழுத்து ஊதியபடி ஆவலோடு போய்க் கதவைத் திறந்தான்.

மறுகணம் -

சுவரில் அடிபட்ட பந்துபோல பின்னோக்கி அலறலாய் வந்து விழுந்தான். அவன் அங்கு -

கம்பீரமாய் முகத்தில் ஒரு குத்தும் பூட்ஸ் காலால் வயிற்றில் ஓங்கி ஒரு உதையும் விட்டபடி.. தினகரன் அங்கு நின்று கொண்டிருந்தான்!

பக்கத்தில் அந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் தனது சகாக்களுடன்!

நிம்மதிப் பெருமூச்சு விட்ட மதுமதிக்கு அந்த நிமிடமே அயர்ச்சியில் மயக்கமும் வந்தது.

கண்கள் சொருக மறுபடியும் தலை சாய்ந்தாள் அவள்.

40



மறுநாள் -

விடிந்து பல மணி நேரமாகியும் மதுமதி அயர்ச்சியில் கண் விழிக்கவில்லை.

மதுமதி மறுபடியும் மெல்ல கண் விழித்தபோது அவள் வீட்டுப் படுக்கையில் ஒய்யாரமாய் சாய்ந்தபடி,

கண்களை அகல விரித்தவள் எதிரே தெரிந்த இரண்டு உருவங்களைப் பார்த்து மறுபடியும் மயக்கம் வராத குறையாய் அதிர்ந்தாள்!

காரணம் எதிரே.. மணக் கோலத்தில் மாலையும் கழுத்துமாய் இருவர்!

எழிலரசன்.. சிங்காரி!

என்ன இது அத்தை மகன் எழிலரசனுடன் சிங்காரி ஜோடியாய்... தம்பதிகள் போல்... என்ன இது..? இங்கு என்னதான் நடக்கிறது?

அதிர்ந்து துள்ளி எழப் போனவளை ஒரு கரம் வேகமாய் அழுத்தி அடக்கியது. பார்த்தால்...

புன்னகை ததும்ப தினகரன்!

அதே சிரிப்புடன் ''நீ விரும்பிய அதே ரெஜிஸ்டர் மேரேஜ்தான்! என்ன.. உனக்குப் பதில் அவர்கள் இன்று பண்ணியிருக்கிறார்கள். முதலில் உன் வாழ்த்துக்களை அவர்களுக்கு கூறு!'' என்றான்.



நடப்பது பார்ப்பது எதையும் நம்ப முடியாமல் அவள் உடம்பு நடுங்கி கைகள் பரபரத்தது.

அந்தக் கைகளை முன் வைத்து அழுத்திப் பிடித்தாள் சிங்காரி. ''நடப்பதெல்லாம் நிஜம்தான்... நீ நம்பு!'' என்றாள் சிரிப்புடன்.

''அவசரப்பட்டு விட்டாய் சிங்காரி!''

அவளையறியாமல் வார்த்தைகள் வந்தது.

சிங்காரியோ, ''அவசரப்பட்டது நான் இல்லை. நீதான்!'' என்றாள்.

''என்ன சொல்கிறாய்?''

''கொஞ்சம் யோசித்துப் பார்! என் நிலைமை குறித்து கவலைப்பட்டு நீயே இவ்வளவு யோசித்திருக்கும் போது சம்பந்தப்பட்ட நான் யோசிக்காமல் இருக்க முடியுமா? நானும் சிந்தித்தேன். எனது சிறிய மூளையை தலைகீழாய் புரட்டி யோசித்தேன். எல்லாவற்றுக்கும் தீர்வாய் நம் எழிலரசன் மாமாதான் என் நினைவில் வந்தார். உடனே அவரைக் கிண்டல் செய்வதை விட்டுவிட்டு அவருடன் பேசிப் பழக ஆரம்பித்தேன். அவரது குழந்தைத்தனமான மனம் புரிந்தது. இந்தக் கலியுகத்தில் எவ்வித கெட்ட எண்ணமும் இல்லாமல் பால் உள்ளத்தோடு விளங்கும் அவரது உயரிய குணம் புரிந்தது. உடனே என்னையறியாமல் அவர் மீது எனக்கு காதலும் வந்து விட்டது..''

சிங்காரி முகம் சிவந்து வெட்கப்பட ''என்ன காதலா? என்ன சொல்கிறாய்? எனக்குக் கூட தெரியாமல் இது நடந்திருக்கிறதா?'' என்றாள் மதுமதி அதே பரபரப்போடு.

சிங்காரி கண்களை ரகசியமாய் சிமிட்டிச் சிரித்தாள். ''உனக்கு தெரியாதுதான்! ஆனாலும் ஒன்றல்ல... இரண்டு மாதங்கள் எங்களுக்குள் அந்தக் காதல் - நல்ல ஒரு அண்டர்ஸ்டாண்டிங் ஏற்பட்டதும் எனது பழைய நரகமான வாழ்க்கையை பற்றி ஒன்று விடாமல் எதையும் மறைக்காமல் மாமாவிடம் சொன்னேன். மாமா அதை யெல்லாம் கொஞ்சமும் பொருட்படுத்தவில்லை. நானும் உன்னை விரும்புகிறேன்.. என என்னைக் கட்டிக் கொண்டார்.''

''அப்படியா?'' என்றபடி மதுமதி திரும்பி மாமா எழிலரசனைப் பார்க்க, எழிலரசன் மாப்பிள்ளை கம்பீரமாய் தலையைக் குலுக்கிக் கொண்டவன் மதுமதி முன் வந்து, ''என்ன உங்களால் அவள் சொல்வதை நம்ப முடிய வில்லையா? அவள் சொன்னது போல்தான் நடந்தது. அவளை இப்படித்தான் நான் கட்டியும் பிடித்தேன்'' என வெட்கப் படாமல் சிரிப்புடன் எல்லோர் முன்னிலும் சிங்காரியை அணைத்துக் காட்டினான். அங்கு பெரும் சிரிப்பலை ஒன்று அடக்க முடியாத அளவுக்கு எழுந்தது.

சிரித்து முடிந்ததும் மதுமதி யோசனை தாக்கியவளாய், ''இதை ஏன் என்னிடம் மறைத்தாய்? முன்பே சொல்லி யிருக்கலாமே?'' என்றாள்.



சிங்காரி உதட்டைச் சுழித்து சிரித்தவள், ''அத்தை அப்பாவிடம் விஷயத்தைச் சொல்லி அவர்களது சம்மதத் தையும் வாங்கிக் கொண்டு சஸ்பென்சாய் உன்னிடம் விஷயத்தை உடைக்கலாம் என்று பார்த்தால்... அதற்குள் நீ அவசரப்பட்டு விட்டாய். நீயாகவே ஒரு கணக்குப் போட்டு சிங்கப்பூர் மாப்பிள்ளை.. ரெஜிஸ்டர் மேரேஜ் என்றெல்லாம் காய்களை வேகமாக நகர்த்தி யாருக்கும் தெரியாமல் பெரும் சிக்கலிலும் மாட்டிக் கொண்டாய்..''

அவள் முடிக்க.. செல்வத்துடன் நடந்தவைகளை நினைத்துப் பார்த்த மதுமதிக்கு மறுபடியும் உடம்பே நடுங்கியது. கடவுளே! தினகரன் மட்டும் தக்க சமயத்தில் வராவிட்டால் அவளது நிலைமை?

திரும்பி தினகரனை அதிசயமாகப் பார்த்தாள்.

''ஆமாம் ஊரிலிருந்த உங்களுக்கு எப்படித் தெரியும்? நீங்கள் எப்படி ஜேம்ஸ்பாண்ட் போல என்னைக் காப்பாற்ற வந்தீர்கள்?'' என்றாள் ஆச்சரியமாய்.

தினகரன் புன்னகையுடன் அவள் பக்கத்தில் வந்து அவளது நெற்றியை பரிவாய்,தடவினான்.

இருவரது கண்களிலும் தெரிந்த ஒளியைக் கவனித்த சிங்காரி மற்றவர்களுக்கு ஜாடை காட்டினாள். ''காதலர்கள் மனம் விட்டு பேசட்டும். நாம் வெளியே இருப்போம்..'' என்றாள்.

எல்லோரும் குறும்புப் பார்வையுடன் பொங்கிய சிரிப்பை அடக்கியபடி வெளியேறினர்.

காதலர்களா? காதல் விஷயம் எல்லாம் வெளியே கசிந்து விட்டதா? திடுக்கிடலுடன் நிமிர்ந்து தினகரனைப் பார்த்தாள்.

கொண்டிருந்த புன்னகையை பெரிதாக்கியவன், "போதும் அந்த அழகு விழிகளை இன்னமும் விரிவாக்கி அசடு போல் அவைகளை சிரமப்படுத்தாதே... எல்லாவற்றையும் உனக்கு விளக்குகிறேன்.." என்றபடி சொல்ல ஆரம்பித்தான் அவன்.

"நீ அந்த செல்வத்துடன் இப்படி ரெஜிஸ்டர் மேரேஜ் வரையும் பேசி ஏற்பாடுகள் செய்தது யாருக்கும் தெரியாதது தான். ஆனால் ஒரு வாரமாய் உனது அரக்கப் பரக்க நடவடிக்கைகளில் சிங்காரிக்கு லேசான சந்தேகம் வந்து விட்டது. அன்று செல்வம் கூப்பிட்டதும் நீ அலைகழிய படபடத்து கிளம்பிச் சென்றது மேலும் சந்தேகத்தை ஏற்படுத்த... அன்று நீ அப்படி கிளம்பி வருவது தெரியாமல் மறுபடியும் செல்வம் போன் செய்திருக்கிறான்.."

"என்ன செல்வம் போன் செய்தாரா?"

"ஆமாம்.. நீ என்று நினைத்து சிங்காரியிடமே பேசி ரெஜிஸ்டர் மேரேஜ் அது இதுவென உளறிக் கொட்டி யிருக்கிறான். நடக்கப் போகும் விபரீதத்தை உணர்ந்து உடனே சுதாரித்து விட்டாள் சிங்காரி. ரிசீவரை வைத்த கையோடு.. எனது போன் நம்பரைத் தேடி எனக்கு டயல் செய்து விட்டாள். அவள் விஷயத்தைச் சொன்னதும் பதறி உடனே டாக்சி பிடித்து கிளம்பி விட்டேன். இரண்டு மணி நேரத்தில் ஊருக்கு வந்து உன்னைத் தேடி செல்வத்தின் அலுவலகம் நோக்கி எனது போலீஸ் நண்பர் ஒருவர் உதவியுடன் வந்து விட்டேன். உன்னையும் பெரும் ஆபத்தில் இருந்து காப்பாற்றி விட்டேன்."



அவன் பெரும் கதையாய் சொல்லி முடிக்க... பயந்திருந் தவள் அபயம் தேடியது போல் அப்படியே நெஞ்சோடு ஒட்டிக் கொண்டாள்.

அவளை அப்படியே தன்னோடு இணைத்து அணைத்து உச்சி முகர்ந்தவன் பயத்தைப் போக்கி அவள் நடுக்கத்தை நிறுத்தினான்.

பின் விடுவித்து அவள் முகம் நிமிர்த்தியவன், "தியாகம் என்ற பெயரில் பெரிய முட்டாள்தனம் ஒன்று செய்ய இருந்தாயே.. அதைப் பற்றி கொஞ்சம் சொல்லு!" என்றான்.

"அது.. அது.." அவள் மறுபடியும் திணறினாள்.

"செய்வதைச் செய்துவிட்டு அதில் திணறல் வேறா? இதோ திணறலுக்கு மருந்து.." என அவன் தன் இதழ்களை அவளது கன்னங்களில் பதித்தான்.

"ம்ம்.. சொல்லு..."

"சிங்காரியின் நிலை.. அவளுக்கு வாழ்க்கை கொடுக்க யார் வருவார்.. என சிந்தித்துப் பார்த்தேன். பெரிய கேள்விக் குறி ஒன்றுதான் முற்றுப் பெறாமல் மனதில் எழுந்தது. அப்படியே உங்கள் ஞாபகம் வர... என் புத்தி தடுமாறியது.."

"மிகச் சரியாக சொன்னாய். புத்தியின் தடுமாற்றம் தான்... இல்லை தியாகம் செய்ய என்னை தேர்ந்தெடுப்பாயா?"

"அதுமட்டுமில்லை. இன்னொரு முக்கிய காரணமும் இருக்கிறது.."

"அது என்ன காரணமோ?" என்றான் குரலில் கேலி பரவ.

"நீங்கள் என் மீது கொண்ட அன்பு அந்த ஈர்ப்பு.. என் கல்யாணம் நின்று நிச்சயிக்கப்பட்ட மாப்பிள்ளை இறந்து போன இரக்கத்தினால்தானே... அதனால்.. அதனால்.. தானே வந்தது?"

"அப்படி இல்லை என நான் முன்பே மறுத்து இருக்கிறேனே?"

கோபப் பார்வையுடன் வெடுக்கென கேட்டவனை சாந்தப்படுத்துவது போல் மைவிழிகளைச் சிமிட்டிச் சிரித்தவள், "இருக்கலாம் ஆனால்... அந்த இரக்கம்.. கொஞ்சமாவது... இத்தனூண்டு கூட இல்லாமலா... தஞ்சாவூரில் இருந்து என் வீடு தேடி இங்கு வந்து மாடிப் போர்ஷனில் தங்கி காதல் தூது விட்டீர்கள்?" என மடக்கினாள்.



அவன் சிரிப்புடன் மெல்ல தலையசைக்க அவள் தொடர்ந்தாள். "அதேபோல் அந்த இத்தனூண்டு இரக்கம் என் தங்கையின் பாலும் உங்களுக்கு உருவாகி விட்டால் பிரச்சினை எல்லாம் தீர்ந்து விடுமே என எண்ணினேன். அதற்கு முக்கியமாய் நந்தி போல் நான் நிற்காமல் நான் யாரையாவது கட்டிக் கொண்டு போய்விட்டால்... நீங்கள் வேறு வழியில்லாது சிங்காரிக்கு ஒரு வாழ்க்கை கொடுக்க வேண்டிய சூழலும் உருவாகும் என நம்பினேன். அதனாலே தவித்த மனதை அடக்கி விட்டு தியாகம் செய்ய முடிவெடுத்தேன். அந்நேரம் பார்த்து தரகர் மூலம் இந்த சிங்கப்பூர் மாப்பிள்ளை வரன் வர.. அப்பா மூலம் பேச்சுவார்த்தைகளை நடத்தினேன். நான் எதிர்பார்த்தது போல் நடக்க ஒரு திட்டமும் தீட்டினேன். அதன்படி உங்களை இங்கு இருக்காமல் ஊருக்குப் போகச் செய்தேன். பின் செல்வத்திடம் பேசி ரெஜிஸ்டர் மேரேஜ் அது இதுவென காய்களை வேகமாய் நகர்த்தினேன். கடைசியில் செல்வம் இவ்வளவு பெரிய மோசக்காரன், அயோக்கியன் என்பது தெரிந்து புத்தி தெளிய.. அதற்குள் விஷயம் கைமீறிப் போய் வசமாய் அவனிடம் மாட்டிக் கொண்டேன்... நல்லவேளை! நீங்கள் வந்து காப்பாற்றினீர்கள். இல்லையெனில் என் கதி..?" நிறுத்திவிட்டு கலங்கத்தான் செய்தாள் மதுமதி.

அந்தக் கலக்கத்தை போக்கும்படி மதுமதி ஒரு அணைப்பு செய்து விடுவித்தான் அவன்.

அவள் திடீரென ஞாபகம் வந்தவளாய், ''அந்த செல்வம் என்ன ஆனான்? போலீஸ் பிடித்து விட்டதுதானே?'' என கேட்கவும் தினகரன் விளக்கினான்.

''நீ நினைத்தது போல் செல்வம் மோசக்காரன் மட்டுமல்ல... போலீஸ் தேடிக் கொண்டிருக்கும் பயங்கர கேடி! ஊர் ஊராய்ச் சென்று பெண்களை ஏமாற்றி திருமணம் செய்து வடநாட்டு புரோக்கர்களுக்கு விற்பது தான் அவனது தொழில். அதன்படிதான் உன்னையும் விற்க முயன்றிருக் கிறான். நல்ல வேளை சரியான சமயத்தில் நான் வந்து காப்பாற்றி விட்டேன். இந்நேரம் அவன் ஜெயிலில் கம்பி எண்ணிக் கொண்டிருப்பான். சரி அவனை விடு. இன்னொரு முக்கியமான விஷயம் உன்னிடம் கேட்க வேண்டும்... கேட்கட்டுமா?'' என்றான்.

''ம்ம்.. கேளுங்கள்...'' என்றாள் அவள் பரவசமான இதழ் விரியும் புன்னகையுடன்.

''நன்றாக யோசித்துச் சொல். நம் இருவருக்கும் இடையே ஒருவித அன்பு காதல் இருந்ததை நீ உணர்ந்தாயா..? இல்லையா?'' என்றான் ஏக்கமான குரலில்.

அவள் வில் புருவங்களை உயர்த்தினாள்.

''என்ன இப்படிக் கேட்டு விட்டீர்கள்? அதை அந்தக் காதல் உணர்வை பரிபூரணமாய் உணர்ந்ததினால்தானே.. நீங்கள் முதல் முறையாய் என்னை சட்டென இழுத்து அணைத்த போது... கோபமில்லாமல் அனுமதித்தேன். பின்



அதே போல் உங்களை நான் அணைத்ததும் கூட.. அதே காரணத்தினால் தானே? எல்லாம் புரிந்தும் புரியாததுபோல் கேட்டால் எப்படி?''

அவள் துடிப்பாய் கேட்டதும் குவிந்த அவள் இடையை இறுகப் பற்றி தன்னோடு சாய்த்தவன், ''அதாவது காதலுக் காக... அந்தக் காதலையே தியாகம் பண்ண முயன்றிருக் கிறாய்... செய்திருக்கிறாய்... அத்தோடு நில்லாமல் அந்த கோமாளிக் கூத்தை நானும் செய்ய வேண்டும் என்று எதிர்பார்த்திருக்கிறாய்.. நல்ல பெண்ணம்மா நீ!'' புகழ்வது போல் சொல்லி விட்டு அவள் தலையில் செல்லமாய் குட்டவும் செய்தான் அவன்.

அதற்கு பெரிதாய் வலிப்பது போல் பாவனையை காட்டி விட்டுச் சிரித்தவள், ''ஏன்.. எனக்காக எனக்காக.. அதைச் செய்யமாட்டீர்களா?'' என்றாள் துடுக்காய்.

அவன் தினகரன் யோசிப்பது போல் புருவம் உயர முகத்தைக் கொண்டு போனவன், மறுநிமிடமே, ''உனக்காக அதைச் செய்வேன். ஆனால் இப்போதல்ல.. அடுத்த பிறவியில்!'' என முடித்து வசீகரச் சிரிப்பு சிரித்தான்.

''ஓஹோ! இன்னமும் ஐயாவிற்கு அப்படி ஓர் ஆசை யிருக்கிறதா?'' என்றபடி குனிந்து சிரித்த அவன் தலைக் கேசத்தை படபடவென விரல்களால் கலைத்துக் காட்டியவள், ''அப்படியானால் இனி இந்தப் பிறவியில் என்னதான் செய்வதாக உத்தேசமோ?'' எனவும் கேட்டுச் சிரிக்கவும் செய்தாள்.

அவன் பதில் சொல்லாமல் அவளை அப்படியே பூக்குவியல் போல் அள்ளினான். நெஞ்சார அணைத்தான். முத்தமிட்டான். பின் விடுவித்து விட்டு, ''இப்போது நான் உனக்கு ஆசிரியர். நீ எனது டியூசன் மாணவி. எங்கே நான் செய்ததை எல்லாம் ஒரு முறை மீண்டும் எனக்குச் செய்து காட்டு..'' என்றான் குறும்பாய் விரட்டுவது போன்ற தொனியில்.

அவன் மூக்கைப் பிடித்து கிடுகிடுவென ஆட்டியவள் சிவந்த முகத்துடனே ''வெட்கப்பட்டு செய்ய மாட்டேன் என நினைத்தீர்களோ? ஆசிரியரின் சொல்லைத் தட்டாத மாணவி நான்.. இப்போது பாருங்கள்!'' என்றபடி எம்பி கரங்களால் அவனை இறுக அணைத்துக் கொண்டாள் மதுமதி.

